வரு.74 இல. 03 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்

வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமஞ்சரி

2022 ஜனவரி 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

January 16 Sunday, 2022

32பக்கங்கள் 40/-

05 கொழும்புக்கு வந்த முதலைகள்

07 ஜனாதிபதி கொள்கை பிரகடன உரை

18 ப்ரியாமணியின் பாமா கலபம்!

24 சிம்பாப்வே – இலங்கை தொடர் இன்று ஆரம்பம்

தேசிய தைப்பொங்கல் விழா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பொங்கல் தினத்தன்று அலரி மாளிகையில் நடைபெற்றது. பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷவும் பிரதமரின் இந்து விவகார இணைப்பாளர் பாபுசர்மாவும் விழாவில் கலந்து கொண்டனர்.

மீரிகம முதல் குருநாகல் வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டம் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரினால் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையின் பொருளாதாரம் இந்தியாவினால் வலுப்படுத்தல்

பஷில்– ஜெய்சங்கர் மெய்நிகர் சந்திப்பு

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் இந்தியாவின் திட்டங்கள் மற்றும் முதலீடுகள் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் மற்றும் நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவுக்குமிடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

மெய் நிகர் ஊடாக நேற்று சனிக்கிழமை நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் மேலும் பல முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக 04

மலையகத்தில் இந்திய அரசாங்கத்தின் தனி வீட்டுத் திட்டம்

ஆயிரம் வீடுகள் நேற்று பயனாளிகளிடம் கையளிப்பு

நாமல், ஜீவன், இந்தியத் தூதுவர் திறப்புகளை வழங்கினர்

ஹற்றன் சுழற்சி நிருபர் கிருஷாந்தன்

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் மலையகப் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட இந்திய வீடமைப்புத் திட்ட வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை பூரணப்படுத்தப்படுத்திய 1000 வீடுகளை பயனாளிகளுக்கு கையளிப்பதற்கான வைபவம் நேற்று (15) கொட்டகலை சீ.எல்.எப் வளாகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், 04

சீமெந்து தட்டுப்பாடு மாத இறுதியில் தீரும்

கேள்வி அதிகரிப்பினால் பற்றாக்குறை

சீமெந்துக்கான கேள்வி அதிகரித்துள்ளதாக சீமெந்து இறக்குமதியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும் தெரிவிக்கின்றனர்.

டொலர் இல்லாதமை காரணமாக சீமெந்து இறக்குமதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். முன்னைய காலத்தை விடவும் தற்போது சீமெந்துக்கான கேள்வி அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். 04

முள்ளிவாய்க்காலில் விடுதலை புலிகளின் ஆவணங்கள்!

புதைக்கப்பட்ட நிலையில் மீட்பு

முள்ளிவாய்கால் மேற்குப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலை புலிகளின் முக்கிய ஆவணங்கள் சில மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆவணங்கள் நந்திக்கடல் களப்புப் பகுதியில் மீட்கப்பட்டன. நேற்று முன்தினம் பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கமைய படையினர் இவற்றை மீட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது , தமிழீழ விடுதலை புலிகளின் முக்கிய ஆவணங்களுடன் அடையாள அட்டைகளும் உள்ளடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

"சந்திரிக்கா" நூல் வெளியீடு கொழும்பில்

அரசியல் பிரமுகர்கள் பங்கேற்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்கவைப் பற்றி எழுதப்பட்ட நூலொன்று (14) வெளியிடப்பட்டுள்ளது. 04

பொருளாதார பிரச்சினைக்கு உடனடி தீர்வு காண்பது அவசியம்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கை

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் மேலும் தாமதமடையாமல், பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் ரஜீவ் அமரசூரிய விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.நாட்டில் அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடியின் மத்தியில், சட்டவாட்சி, ஜனநாயகம் மற்றும் மக்களின் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பில் தீவிர கவனம் செலுத்தியுள்ளதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பணவீக்கம், சமையல் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு, கையிருப்பு, வெளிநாட்டவர்களுக்கு பணம் அனுப்ப முடியாமை, கடன் தரப்படுத்தலில் இலங்கை பின்தள்ளப்பட்டமை, சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு 04

போராட்டத்திற்கு சாதகமான தீர்வு

ரயில் சேவைகள் நேற்று வழமைக்கு திரும்பின

ரயில் நிலைய அதிபர்களின் பணிப் புறக்கணிப்பு கைவிடப்பட்டதையடுத்து, நேற்று (15) முதல் ரயில் சேவைகள் வழமைபோல நடைபெறுவதாக ரயில்வே திணைக்களப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டதை அடுத்து, ரயில் நிலைய அதிபர்கள் கடமைக்கு சமுகமளித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் உபதலைவரை பதவியிலிருந்து 04

புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி

பரீட்சை திணைக்களம் அறிவிப்பு

2021ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 ஆயிரத்து 943 பரீட்சை நிலையங்களில் புலமைப்பரிசில் பரீட்சையை நடத்துவதற்கு 04

எங்கள் கருத்து...

தை பிறந்தால் வழி பிறக்கும் தமிழர் பிரச்சினைக்குத்தான்..?

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழ் மக்களது மரபுவழி வந்த ஒரு முதுமொழியாகும். இதனை நம்பிக்கையுடன் இன்றும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் அனைவரிடமும் உள்ளது. ஆனால் இந்த நம்பிக்கை ஒரு விடயத்தில் மட்டும் இலங்கை தமிழர்கள் வரலாற்றில் இன்னமும் நிறைவேறாது தள்ளித் தள்ளிப் போவதுதான் வேதனைக்குரிய விடயமாக உள்ளது.

அதாவது சுமார் முப்பது வருடகால யுத்தம், அதன் பின்னர் யுத்தம் முடிவடைந்த சுமார் 12 வருடங்களுக்கும் மேலாக இனப்பிரச்சினைக்கு தீர்வு வரும் எனும் நம்பிக்கையில் பல தை மாத பிறப்புகள் கடந்து சென்று கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு தை மாதப்பிறப்புக்களின் போதும் வாழ்த்து தெரிவிக்கும் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் தலைமைகளால் அடுத்த தை மாதப் பிறப்பிற்கு முன்னதாக தமிழ் மக்களது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென மக்களுக்கு உறுதிமொழி அளிக்கப்படுகிறது.

ஆனால் அவை இன்னமும் நிறைவேறவில்லை, அல்லது நிறைவேற்றப்படவில்லை, அல்லது நிறைவேற்றப்படுவதற்கான ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை என்றுதான் கூற வேண்டும். அதுவே உண்மையும் கூட.

இந்தத் தவறுக்கு யார் காரணம்? தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கும் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' எனும் முதுமொழி பொய்யாக உண்மையில் யார் காரணம்? இதுபற்றி இனியும் நாங்கள் சிந்திக்காமல் இருந்தால் எதிர்கால சந்ததியின் வாழ்க்கையில் இது ஒரு விடை காணாத வினாவாகவே இருந்துவிடப் போகிறது. 04

அரசை விட்டு சு. க. வெளியேறுமென எவரும் பகற்கனவு காண வேண்டாம்

SLFP முக்கியஸ்தர்கள் சுரேன் ராகவன் MP, சுலைமா லெப்பை அறிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எக்காரணம் கொண்டும் அரசாங்கத்திலிருந்து விலகிக் கொள்ளாது. கூட்டுக் கட்சிகள் இடையே சிறுசிறு மனக் கசப்புகள், சச்சரவுகள் இடம்பெற்றாலும் அரசிலிருந்து வெளியேறும் எந்த ஒரு எண்ணமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இல்லை. அவ்வாறு எதிர்பார்ப்போரின் கனவு ஒருபோதும் நிறைவேறாதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளரும் நிந்தவூர் பிரதேச சபையின் பிரதி தவிசாளருமான சுலைமா லெப்பை ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இரு பிரதான கட்சிகளுக்குமிடையே நிலவி வரும் சிறு பிணக்குகளை வைத்து அரசிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறப் போகிறதென சிலர் எதிர்பார்க்கிறார்கள். அவர்களது கனவு ஒருபோதும் 04

போராட்டங்களுக்கு பலன் கிடைத்துள்ளது

ஆசிரிய சங்கம் திருப்தி தெரிவிப்பு

அதிபர் சேவை, ஆசிரிய ஆலோசகர் சேவை, ஆசிரியர் சேவை ஆகியவை தனித்தனி சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டமை தமது போராட்டத்தின் பாரிய சாதனையென ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. கடந்த வருடத்தில் சில கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியர் சங்கம் நடத்திய போராட்டத்துக்கு 04

பொரளை தேவாலய கைக்குண்டு விவகாரம்

இன்னும் ஒரு சில நாட்களில் முழு விபரமும் வெளிவரும்

அதுவரை பொலிஸ் விசாரணைகளை விமர்சிக்க வேண்டாம்

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ண

ஸாதிக் ஷிஹான்

பொலிஸாருக்கு விசாரணை செய்யும் முறைமையை கற்பிக்காமல், அவர்களது விசாரணைகள் தொடர்பில் விமர்சிக்காமல் அவர்கள் 04

அகப்படுத்தப்பட்ட சேவைகளாக அதிபர் - ஆசிரியர் சேவைகள்

அதிவிசேட வர்த்தமானி வெளியாகியது

இலங்கை அதிபர் சேவை, ஆசிரியர் ஆலோசகர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவை ஆகியவற்றை 'அகப்படுத்தப்பட்ட சேவைகளாக' பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர், பேராசிரியர் கபில பெரேராவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அகப்படுத்தப்பட்ட சேவை அறிவித்தல், கடந்த 04

விக்கல் வீராச்சாமி

ஊடகங்கல்ல வாற செய்திகள பாத்தா எல்லாமே கற்பனையா, வேணுமெண்டே சித்தரிக்கப்படுறது வெட்டவெளிச்சமா தெரியுது....

அதிலயும் சில ஊடகங்கள் அரசாங்–கத்தை வசைபாடுற அரசியல்வாதிகள தேடித்தேடி பேட்டி எடுப்பினம், இப்ப இதுதான் ஜேர்னலிஸம் போல...!!!

அலரிமாளிகையில் நடைபெற்ற பொங்கல் விழாவில்...

கொட்டகலையில் பட்டிப்பொங்கல்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவையின் ஏற்பாட்டில் கலை கலாசார மத நிகழ்வுகளுடன் கூடிய தைப்பொங்கல் சிறப்பு விழா, நிலையத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்ஹ தலைமையில் நிலையத்தில் நடைபெற்றபோது அதிதிகளாக கலந்து சிறப்பித்த டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஹாசீம் உமர், ஆலோசகர் முஸ்லிம் சலாகுத்தீன், தலைவரின் பிரத்தியேக செயலாளர் வீரசிங்கம் ஜெய்சங்கர் மற்றும் உயரதிகாரிகளையும் படங்களில் காணலாம்.

திறன் வகுப்பறையை மேம்படுத்த றோயல் கல்லூரிக்கு 2 திறன் பலகைகள் அன்பளிப்பு

ஐக்கிய இராச்சியத்தினை மையமாகக் கொண்டு இயங்கிவரும் கலாநிதி. இரத்னம் நித்தியானந்தன் தன்னார்வ தொண்டு நிறுவனமான Ratnam Foundation அமைப்பின் இணை அனுசரனையில் தமிழ் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளில் ஒன்றான, பாடசாலைகளுக்கு Smart Board வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் கொழும்பு றோயல் கல்லுளரிக்கு அண்மையில் இரண்டு Smart Boards வழங்கப்பட்டன.

திறன் வகுப்பறையை மேம்படுத்தும் முகமாகவும் வினைத்திறனாக முன்னெடுக்கும் பொருட்டு இச் செயற்பாட்டிற்கு டாக்டர். ரேவதி சத்தியநாராயணா அவர்களால் ஒரு திறன் பலகையையும் கேகாலை மாவட்டத்தின் தமிழ்க் கல்வியின் அபிவிருத்திக்காகச் கால் நூற்றாண்டு காலமாக பெரும் பணியாற்றிய கே/சென்.மேரிஸ் கல்லுளரியின் முன்னாள் அதிபரும், அக்கல்லுளரியை அபிவிருத்தி செய்து க.பொ.த உயர்வகுப்புகளை ஆரம்பித்தவருமான மாத்தளையைச் சேர்ந்த மரதன் கிருஷ்ணனின் மூத்த புதல்வரும் றோயல் கல்லுளரியின் பழைய மாணவருமான கிருஷ்ணன் திவாகரனின் நிதிப் பங்களிப்பினாலும் வழங்கப்பட்டது. நிகழ்வில், கலாநிதி.

நித்தியானந்தனின் வேண்டுகோளுக்கிணங்க, புகழ்பூத்த இரு றோயல் கல்லுளரியின் பழைய மாணவர்களான அவுஸ்திரேலியாவுக்கான முன்னாள் உயர்ஸ்தானிகரும், George Stuart குழுமத்தின் முன்னாள் தலைவருமான சோமசுந்தரம் ஸ்கந்தகுமார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்து வைத்தார். இராணுவ தலைமையக திட்டமிடற் பணிப்பாளர் பிரிகேடியர். ஷெவந் குலதுங்க, கல்லுளரியின் அதிபர் எம்.வி.எஸ். குணதிலக்க, திருமதி. இசிபாலி லியனகே, திருமதி. நர்மதா ஆகியோர்களுடன் பாடசாலைச் சமூகத்தினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய படைகளின் வருகையால் மேலும் சிக்கலடைந்திருக்கும் கஸகஸ்தான் போராட்டங்கள்

சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டதை தொடர்ந்து தனி அரசுளாக்கப்பட்ட ஐந்து மத்திய ஆசியக் குடியரசுகளில், மிகப் பெரியதும், செல்வச் செழிப்பு கொண்டதுமான பகுதி கஸகஸ்தான் ஆகும். மேற்கு ஐரோப்பாவை விடவும் பரப்பளவில் பெரிய நாடான கஸகஸ்தான். மசகு எண்ணெய், இயற்கை எரிவாயு, யுரேனியம் மற்றும் விலைமதிப்பற்ற உலோகங்களைக் கொண்ட நாடு. இன்றைய கொவிட் தாக்கம் ஏற்படுத்திய, அதிகரித்த உலகளாவிய வர்த்தக சீர்குலைவுகளினால், எண்ணை மற்றும் அது சார்ந்த எரிசக்தி பொருட்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் மந்தம் ஏற்பட்டு அந்த நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய பெரிய நிறுவனங்கள் எதுவும் இல்லாத இந்த நாட்டில், அங்கே பெருமளவில் உற்பத்தியாகும் மசகு எண்ணெய்யை வடிகட்டுதல், அதன் ஏற்றுமதி உட்பட்ட பெரும்பாலான இயற்கை வளங்கள் சார்ந்த தொழில்கள் அனைத்தையும் வெளிநாடுகளைச் சேர்ந்த பெரு நிறுவனங்களே கையாளுகின்றன. இதனால் இங்கு உற்பத்தியாகும் மசகு எண்ணெய் சார்ந்த பெட்ரோலிய பொருட்கள் அதிகளவில் வெளிநாடுகளுக்கு குறிப்பாக சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கே ஏற்றுமதியாகின்றன. இதன் வெளிப்பாடாக உள்நாட்டு மக்களுக்கு அங்கேயே உற்பத்தியாகும் இந்த பொருட்கள் கிடைப்பதில் பெரும் சிக்கல் ஆரம்பத்தில் இருந்தே இருந்துவந்தது.

எண்ணெய் பொருட்களின் உச்ச விலையை அடுத்து விலை உயர்வுக்கு எதிரான மக்களின் கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடவே, அவற்றை எதிர்கொள்ள முடியாத நாட்டின் பிரதமர் பதவி விலகிய நிலையிலும் போராட்டங்கள் தொடர்கின்றன.

முதலில் ஹானாஜென் என்ற நகரில் ஆரம்பித்த மக்கள் போராட்டங்கள் படிப்படியாக பரவி நாடு முழுவதும் வியாபித்தன. கஸகஸ்தான் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு ஏற்பட்டுள்ள வறுமை, வேலையின்மை, ஆகியவற்றை கட்டுப்படுத்த வேண்டும், வாகனங்களுக்கான எரிவாயு, சமையல் எரிவாயு உட்பட்ட அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைக்க வேண்டும், ஆளும் அரசு ராஜினாமா செய்ய வேண்டும் என்கின்ற கோரிக்கைகளுடன் மக்கள் இரவு பகலாக தெருவில் இறங்கி போராட்டங்களை முன்னெடுத்தனர், பல நகரங்களில் மக்கள் போராட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் முன்னெடுத்த முயற்சிகள் பெரும் கலவரத்தில் முடிந்து ஏராளமான உயிரிழப்புகளை ஏற்படுத்தியது. ஏற்கெனவே கஸகஸ்தானில் மக்களிடையே ஏழை பணக்கார்ரகள் என்ற சமூகரீதியான ஏற்றத்தாழ்வு அதிகமாக இருக்கும் நிலையில் இந்த அதி உச்ச விலை உயர்வு அதை மேலும் பெரிதாக்கி மக்களை கதி கலங்க வைத்துள்ளது.

நாட்டின் அதிபர் காசிம் ஜோமர்த் டோகாயேவ் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, ஆளும் அரசு அதிகாரபூர்வமாக ஆட்சியிலிருந்து இறங்குவதாக அறிவித்தும் நிலைமைகளை கட்டுப்படுத்த முடியவில்லை. நாட்டின் நிர்வாகத்தை பொறுப்பேற்றுக் கொண்ட முன்னைய அரச பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய காபந்து அரசிடம் நாட்டின் எரிபொருள், எரிவாயு போன்றவற்றின் விலைகளை உடன் குறைக்க வேண்டும் என அதிபர் உத்தரவிட்டும் நடைமுறையில் அது சாத்தியமாகவில்லை. தொடர்ந்த போராடங்கள் நாளுக்கு நாள் தீவிரமடைய ரஷ்யா தலைமையிலான, ஆர்மேனியா, பெலாரஸ், கஸகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் நாடுகளை உள்ளடக்கிய ராணுவக் கூட்டுக் குழுவான Collective Security Treaty Organization அமைப்பின் உதவியை நாடினார் அதிபர் காசிம் ஜோமர்த்.

அதுமட்டுமல்லாமல் நாட்டின் முன்னைய தலைநகரும், கஸகஸ்தானின் அதிகூடிய மக்கள் தொகையை கொண்ட மிகப்பெரிய வர்த்தக நகருமான அல்மாட்டியில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு, ஒட்டுமொத்த நாட்டின் இணையதள வசதிகள் அனைத்தும் முற்றிலும் துண்டிக்கப்பட்டு மக்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

புதியபிரதமராகஅலிகான்சமியலோ பதவிக்கு வந்தவுடன் விலைகளை குறைக்கும் நடவடிக்கையில் இறங்கி மக்களின் போராட்டத்தைத் தணிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். இதன்படி, ஏற்றம் பெற்ற விலையிலிருந்து பாதி விலைக்கு சமையல் எரிவாயு விலையைக் குறைக்கும் ஆலோசனைகளிலும் பெட்ரோல், டீசல் உட்பட்ட அத்தியாவசிய பொருட்கள் அனைத்திற்கும் விலைக் கட்டுப்பாடு நிர்ணயிக்கவும் அமைச்சரவைக் குழுவுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

கஸகஸ்தான் 1991 இல் சோவியத் ஒன்றியத்தில் இருந்து தனி நாடாக பிரிந்தது. ஆரம்பத்தில் இருந்தே அங்கே நடைமுறைப் படுத்தப்படும் தனி நபர் ஆட்சியின் அராஜகங்கள் மக்களை வெறுப்படைய வைத்திருந்தன. பெயருக்கு ஒரு அரசாங்கம் பதவியில் இருந்தாலும், கடந்த 30 வருடங்களாக அந்த நாட்டை முதலில் நர்சுல்தான் நசர்பாயேவும் பின்னர் இப்போது அவரது குடும்ப உறுப்பினரான காசிம் ஜோமர்த் டோகாயேவுமே தொடர்ச்சியாக ஆட்சி செய்து வருகின்றனர். கட்டுப்பாடுகள் பல நிறைந்த இந்த சர்வாதிகார ஆட்சி முறைமை மீது கடந்த பல வருடங்களாகவே மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பின் உச்சமும் இன்றைய மக்கள் போராடங்களுக்கு ஒரு முக்கிய காரணம் எனலாம்.

சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்த பின்னர் பொருளாதாரம் சில துறைகளில் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சி அடைந்திருந்தாலும், நாட்டின் பெரும் பகுதிகளாக இருக்கும் ஆற்றல் அற்ற பிரதேசங்களுக்கு அந்த முன்னேற்றம் போதுமான அளவு பகிரப்படவில்லை என்றே சொல்லவேண்டும். நாட்டில் வறுமை மற்றும் சமத்துவமின்மை வளரக்கூடும் என்று உலகவங்கி நிபுணர்கள் கஸகஸ்தான் பற்றிய கணிப்பீட்டில் ஏற்கனவே எச்சரிக்கை வெளியிட்டிருந்தனர்.

கஸகஸ்தானைப் பயன்படுத்தி தன் பிராந்திய செல்வாக்கை விரிவுபடுத்த முனைகிறாரா புட்டின்?

கோவை நந்தன்...

நிதிநிலையின் ஸ்திரத்தன்மை தொடர்பில் ஒரு கீழ்நோக்கிய போக்கே காணப்படுவதாக நாட்டின் பொருளாதார மதிப்பீட்டு ஆய்வாளரரான அன்டன் டபாச் தெரிவித்துள்ளார். உலகளாவிய பணவீக்க அழுத்தங்கள் 2022ம் ஆண்டிலும் தொடரும் வாய்ப்பு அதிகமாகவே உள்ளது என்பதால் கஸகஸ்தானின் பொருளாதாரத்திலும் சீரற்ற மீட்சியே நிலவும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கஸகஸ்தானின் மக்கள் போராட்டங்களில் வன்முறைகளும் வெடித்துள்ளதால் போராடங்களை கட்டுப்படுத்துவதற்கு அங்கு அனுப்பபட்ட ரஷ்ய துருப்புக்களின் மூத்த அதிகாரி ஒருவர் போராட்டத்தில் ஈடுபடும் அனைத்து "குற்றவாளிகளையும் கொலைகாரர்களையும்" அழிக்கப்போவதாக அறிவித்ததை அடுத்து நிலைமை மேலும் சிக்கலடைந்துள்ளது.

கஸகஸ்தானின் இன்றைய நிலைமைகள் தொடர்பில் குறிப்பாக யார் இந்த கலவரத்தில் ஈடுபடுகிறார்கள் என்பது குறித்து நிறைய இருட்டடிப்பு உள்ளதாக சர்வதேச ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட இணையத் தளங்கள், சமூக வலைத்தளங்கள் என்பவற்றின் மீதான தடை சுயாதீன செய்திகள் வெளியாவததை தடுக்கிறது. அங்கிருந்து வெளியாகும் செய்திகளில் ஊகங்கள், கோட்பாடுகள் மற்றும் வதந்திகளே நிறைந்து காணப்படுகின்றன. இப்படியான ஒரு கொந்தளிப்பான சூழ்நிலையை, ரஷ்ய கூட்டுப் படைகளின் வருகை மேலும் சிக்கலாக்கி உள்ளதாக அங்கிருக்கும் தமது செய்தியாளர் தெரிவித்ததாக CNN தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விலாடிமிர் புட்டின் தனது பிராந்திய செல்வாக்கை விரிவுபடுத்த கஸகஸ்தான் மக்கள் போராட்டத்தை பயன்படுத்துகிறார் அல்லது முன்னிறுத்துகிறார் என்கின்ற விமர்சனமும் முன் வைக்கப்படுகிறது. ரஷ்யாவின் தலையீடு கஸகஸ்தானின் உள் நெருக்கடியை புவிசார் அரசியலாக மாற்றும் அபாயமும் உள்ளது என்பதை மறுக்க முடியாது.

2018 இல் கஸகஸ்தானின் அரசாங்கத்தால் தீவிரவாதக் குழுவாக அறிவிக்கப்பட்ட "கஸகஸ்தான் ஜனநாயக தெரிவு" என்கின்ற எதிர்க்கட்சியின் முக்கியஸ்தரான போட்டா ஜார்டெமாலி என்பவர் இன்றைய போராட்டங்கள் இரண்டு பிரிவாக மாறக்கூடும் என எச்சரித்துள்ளார். ஒன்று, ஜனநாயக மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களுக்கான அழுத்தம். இரண்டாவது இறையாண்மைக்கானதாக இருக்கலாம் என்பதே அவரது வாதம்.

இரண்டு சக்திவாய்ந்த அண்டை நாடுகளான ரஷ்யா மற்றும் சீனா ஆகியவற்றின் உறுதியற்ற மோதல் நிலைமையும் கஸகஸ்தானில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு ஒரு முக்கிய காரணி எனவும் சொல்லலாம். கஜகஸ்தானின் எண்ணெய் ஏற்றுமதியில் கணிசமான அளவு சீனாவிற்கே விற்பனை செய்யப்படுகிறது. இதனை மறைமுகமாக விரும்பாத ரஷ்யா இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கஸகஸ்தான் அரசையும் நாட்டின் எண்ணை வளங்களையும் தம்வசப் படுத்த முயற்சிக்கிறது என்கிற கருத்தையும் மறுக்க முடியாது.

ஆனால் இவை அனைத்தும் கஸகஸ்தான் மக்களின் உண்மையான குறைகளையும் அவர்களின் உணர்வுகளையும் பிரதிபலிக்கிறதா...? என்றால் பதில் கவலை அளிப்பதாகவே அமையும். அவர்களின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது என்பதுவும் இப்போதைக்கு பதிலற்ற கேள்வியே.

சாவற்கட்டு ஞானவைரவர் ஆலயத்தில் கண்ணப்ப நாயனார் குருபூஜை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டில் (2022) இந்துச் சிறார்களிடையே நாவலர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்து முகமாக, யாழ். மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' நடைபெற்று வருகிறது.

கனடா ரொன்ரோவை வதிவிடமாகக்கொண்ட சிவஸ்ரீ பால. திருகுணானந்தக் குருக்களின் அனுசரணையுடன் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பினைச் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் மேற்கொண்டு வருகிறார்.

இந்நிகழ்ச்சித் தொடர் வரிசையில், கண்ணப்ப நாயனார் குருபூஜை நிகழ்வு சண்டிலிப்பாய், பிரதேசசெயலக இந்து கலாசார உத்தியோகத்தர் அகல்யா ஜனார்த்தனன் தலைமையில், சாவற்கட்டு அந்திக்குழி ஞான வைரவர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் மா.அனந்தலட்சுமியும், கௌரவ விருந்தினராக இந்து கலாசார உத்தியோகத்தர் ப.கயிலநாயகியும் கலத்து சிறப்பிக்கவுள்ளனர்.

கண்ணப்பநாயனார் குருபூஜை, மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'கண்ணப்ப நாயனாரின் பக்தி நெறி' எனும் தொனிப்பொருளில் சிவநெறிச் செம்மல் நித்திய பாபுதரனின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். அதனையடுத்துப் பிரதம விருந்தினர் உரையும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சியும், இந்துசமய பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படும்.

பாரம்பரியம் நிகழ்ச்சியில் ஏ.எல்.எம். அஸ்வர், எம்.எச். சிப்லி

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சி தொடரில், எதிர்வரும் செவ்வாய் (18) இரவு 8.15 மணியளவில் நேயர்களுக்கு நன்கு பரிச்சயமான பாணந்துறை அல்ஹாஜ் ஏ.எல்.எம். அஸ்வர், கொழும்பு, புதுக்கடை எம். எச். சிப்லி ஆகியோர் அதிதிகளாக கலந்துகொள்கிறார்கள்.

இவ்விரு கலைஞர்களும், அந்நாட்களில் முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகி ஜனரஞ்சகமான இளையோர் நிகழ்ச்சிகளான, இஸ்லாமிய சமயப்பாடசாலை, மருதமலர், செவ்வாய் மலர் போன்ற இளையோர் நிகழ்ச்சிகளுக்கு அதிகளவில், குரல்கொடுத்து முஸ்லிம் சேவையோடு, இணைந்து கொண்ட சிரேஷ்ட கலைஞர்களாவர்.

"அஹதியா அஸ்வர்" என நேயர்கள் மத்தியில் தன்னை அடையாளப்படுத்திக்கொண்ட, பாணந்துறை ஏ.எல்.எம். அஸ்வர், முஸ்லிம் சேவையில் நீண்ட காலமாக அஹதிய்யா நிகழ்ச்சியினை தொடராக நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

இளையோர் நிகழ்ச்சிகளில், தன் நகைச்சுவை ஆற்றலினால், பிரபலத்தினை, தேடிக்கொண்ட, எம்.எச்.சிப்லி,நேயர்கள் மத்தியில் அன்று ஒலிபரப்பாகி பெரும் வரவேற்பை பெற்ற "சுவைக்கதம்பம்" நிகழ்ச்சியினை நீண்ட காலமாக தொகுத்தளித்தமை, நேயர்களால் மறந்திருக்க முடியாது. நிகழ்ச்சியினை, முஸ்லிம் சேவை பணிப்பாளர், எம்.ஜே.ரினூஸியா தயாரித்தளிக்க, எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்கிறார்.

வருமானத்தை பகிர்ந்த பின் மக்களுக்கு மீதம் வைக்கும் கடன் சுமை

ஜனநாயகம் பொதுமக்களுடன் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தம். சிறந்த பலன் கிடைக்கும் முறையொன்றை மக்களுக்காக தயாரிக்க வேண்டும். அதுவே மக்களால் நியமிக்கப்படும் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு அளிக்கப்படும் கடமையாகும். அரசாங்கத்துக்கு உரிய பொறுப்பு விரிவானது. எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கும் கடமைகள் உண்டு. குறுகிய விமர்சனங்களுக்கு பதிலாக பலகோணங்களிலும் ஆய்வு நடத்தி முறைகளை சரிசெய்வதற்கு தூண்டுவது அவசியமாகும்.

பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்படும் விவாதங்களில் பொருளாதார மற்றும் சமூக நடத்தைகளில் இதுவரை பின்பற்றிய முறைகளில் உள்ள தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும். பாரிய பள்ளத்தில் விழும்போது இரண்டாகப் பிரிந்து ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டுவதால் நன்மைகள் கிடைக்காது. சுதந்திரமடைந்து ஏழு தசாப்த காலம் கடந்துள்ள போதும் பொறுப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரியவில்லை. பொருளாதாரம் முகம் கொடுத்துள்ள துர்ப்பாக்கிய நிலையே அதற்கு சாட்சியாகும். ஒரு பிரிவினரினதோ அல்லது தனிநபரினதோ தவறல்ல. நாம் அனைவருமே தற்போதுள்ள நிலைமையின் பங்குதாரர்களாவோம். கொள்கைகளை பின்பற்றாமல் இருப்பதற்கும் குறுகிய நன்மைகருதி சரியான முறைக்கு இடமளிக்காத நமக்கு பொருளாதார கொள்கைகள் மூலம் மறக்கமுடியாத பாடம் ஒன்றை கற்பித்துள்ளது.

புதிய அறிக்கைகள் சுட்டிக் காட்டும் விதத்தில் தேசிய வருமானமானது கடனுக்கான வட்டி மற்றும் அரச வேதன செலவு என்பவற்றிற்கு போதுமானதல்ல. கடன் வட்டிக்காக வருமானத்தில் நூற்றுக்கு 75 வீதத்தை செலவு செய்ய வேண்டியுள்ளது. அரச ஊழியர் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்துக்காக ஒதுக்கப்பட வேண்டிய பகுதி நூற்றுக்கு தொண்ணூறாகும். இந்த இரண்டு பகுதிகளுமே தேசிய வருமானத்தில் நூற்றுக்கு நூற்று அறுபது வீதம் என்னும் அதிகரித்த வீதத்தை காட்டுகின்றன. 100 ரூபாய் சம்பாதிக்கும் நபரால் ஏற்கனவே பெறப்பட்ட கடன் மற்றும் சம்பள செலவாக 160 ரூபாவை எவ்வாறு செலுத்துவது ? மலேசியாவை வளர்ச்சி பாதையில் இட்டுச் சென்ற மஹதீர் மொஹமட் சமகால அரசியல் வாதிகளுக்கு பெறுமதி வாய்ந்த ஆலோசனை ஒன்றை வழங்கியுள்ளார். நாட்டை ஆளுவதற்கு அதிகாரத்தை வேண்டுபவர்கள் குறைந்தபட்சம் சிறிய வியாபாரம் ஒன்றின் அனுபவத்தையாவது பெற்றிருக்க வேண்டும் என்று அவர் கூறுகின்றார். ஆரம்பந்தொட்டு எமக்கு தொழில் அரசியல்வாதிகள் இருந்தார்கள். மகதீர் கூறும் தகுதி இருக்கவில்லை. அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் கெட்டிக்காரர்கள். எதிர்க்கட்சியும் அரசாங்கத்தை சிரமத்துக்கு உள்ளாக்குவதற்கு சிறந்த குழுவினர். அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணைந்து பாரிய பள்ளத்தின் வாசலுக்கு நாட்டை கொண்டு வந்துள்ளார்கள். அரசியல் அனுசரனை உள்ள மூட நம்பிக்கைகளால் தலையை நிரப்பிக் கொண்டுள்ள தொழில் சங்கங்களும் இந்த அழிவுக்கு ஒரு பங்குதாரர்கள். சரியான சந்தர்ப்பத்தில் நாட்டுக்கு தேவையான வழிகாட்டல்களை காட்டுவதை தவிர்த்த நடைமுறை கருத்துகள் கொண்ட அறிவுஜீவிகள் அணியினரும் இன்றுள்ள கவலையான நிலைமைக்கு நாட்டை கொண்டு செல்வதற்கு கைகோர்த்துள்ளார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் இரண்டு முடிவுகளை எடுக்க முடியும். வருமானத்தை அதிகரிப்பதற்காக இன்னொரு சுற்று வரியை அதிகரிக்க வேண்டி நேரிடும். அது ஏழை மக்களை மேலும் சிரமத்துக்கு உள்ளாக்குவதாகும். மற்றையது அரசுக்கு வரி வருமானத்தை ஈட்டக் கூடிய வகையில் பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதாகும். புதிய கைத்தொழில் மற்றும் வர்த்தகத்தை உருவாக்கும் பின்னணியை ஏற்படுத்துவதாகும். தொழில் முனைவோருக்கு நாட்டிற்குள் உள்ள சிரமங்களை அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் அறியமாட்டார்கள். புதிதாக எதையேனும் செய்ய முயற்சி செய்யும் தரப்பாரை அதைரியப்படுத்தும் சூழலே நாட்டில் காணப்படுகின்றது. முடிவுகளை எடுக்கும் சோம்பேறித்தனம் மற்றும் காலம் கடந்த சட்டங்கள் தொழில் முனைவோருக்கு எவ்விதத்திலும் ஒத்துழைப்பு வழங்குவதில்லை. மிகவும் பாதிப்படைந்துள்ள இளைஞர் யுவதிகள் நடைமுறைகளைப் பற்றி விரக்தி அடைந்துள்ளார்கள். திறமையானவர்கள் எவ்வாறேனும் வெளி நாடுகளுக்குச் சென்று வாழ முடிவு செய்கிறார்கள். கற்ற இளைஞர் யுவதிகளின் எதிர்காலம் குறித்து எழுப்பப்படும் குரலுக்கு முன்னால் இந்நாட்டு அரசியல்வாதிகள் அளிக்கும் பதில் என்ன? கோஷங்கள் மற்றும் எதிர்ப்புகளால் நாட்டுக்கு ஏற்படும் நன்மை எதுவும் இல்லை.

கொவிட் தொற்று நிலைமைக்கு பின்னர் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும். பாரிய மீளுருவாக்கத்தை செய்ய வேண்டியுள்ளது. பொருளாதார சமூக மாற்றங்களை செய்ய வேண்டியுள்ளது. கொள்கைகளை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. கல்வி முறை, சுகாதாரம், போக்குவரத்து, நிதி உள்ளிட்ட பிரிவுகளில் உள்ள முறைகள் சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தாது. தேவையான மாற்றத்துக்கான முதலீடுகளுக்கு நிதி இல்லாத அரசாங்கம் அன்றாட இருப்பைப் பற்றி கவனம் செலுத்தி வருகின்ற நிலைமைக்கு ஆளாகியுள்ளது. கட்டமைப்பை மாற்றா விட்டால் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரும் அரசாங்கத்துக்கு கூட புதிதாக எதனையும் செய்ய முடியாது. அரசாங்கம் மாத்திரமல்ல எதிர்கட்சியும் இணைந்து பொருளாதாரத்தில் உள்ள பிரச்சனைகளை தீர்க்க மாற்றத்தை ஏற்படுத்தி புதிய திட்டங்களுக்காக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

தமிழில்: வீ.ஆர். வயலட்

இன்னும் ஒரு சில நாட்களில்...

சுதந்திரமாக விசாரணைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும். இன்னும் ஒரு சில நாட்களில் இந்த சம்பவம் தொடர்பிலான முழுமையான விபரங்களை நாட்டு மக்களும் பேராயர் கார்டினலும் கண்டிப்பாக தெரிந்து கொள்ள முடியமென பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ண தெரிவித்தார்.

அத்துடன் பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு கண்டெடுக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட சகல சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டு சட்டத்திற்கு முன்னர் கண்டிப்பாக நிறுத்தப்படுவரென்றும் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ண தெரிவித்தார். விசாரணைகள் முடிவு பெறுவதற்கு முன்னர் அது தொடர்பில் வீணான விமர்சனங்களை மேற்கொள்ள வேண்டாமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கண்டிக்கு விஜயம் செய்த பாதுகாப்புச் செயலாளர், அஸ்கிரிய மற்றும் மல்வத்து தேரர்களை சந்தித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜெயஸ்ரீ ஆசி வழங்கும் நிகழ்விற்கான அழைப்பிதழ்களை அஸ்கிரிய மற்றும் மல்வத்து தேரர்களுக்கு வழங்கும் பொருட்டு நேற்று கண்டிக்கு விஜயம் செய்திருந்த போதே அங்கு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலாளர் இங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் :

சம்பவம் ஒன்று இடம்பெற்று 24 மணித்தியாலத்திற்குள் அந்த சம்பவம் தொடர்பில் விமர்சிப்பபது சாதாரணமானது என நான் நினைக்கவில்லை.

விசாரணையொன்று நடத்துவது என்பது இலகுவான காரியமல்ல. அதனை நினைத்தவாறு 24 மணித்தியாலத்திற்குள் முடிக்கவும் முடியாது. விசாரணை ஒன்று நடத்தப்படும்போது பல்வேறு கோணங்களில் பார்க்கவேண்டிய பல விடயங்கள் உள்ளன. அந்த விசாரணைகள் மூலம் உடனடியாக தெரிந்து கொள்ளக் கூடிய விடயங்கள் உள்ளன. மேலும் தேடிக் கண்டு பிடிக்க வேண்டிய பழைய படங்கள் உள்ளன. எனவே எந்த ஒரு விசாரணைகள் தொடர்பிலும் ஒரு குறிப்பிட்ட காலம் தேவைப்படும் என நான் நினைக்கின்றேன். இதற்காக பல மாதங்கள் எடுக்கவேண்டும் என்று நான் கூறவில்லை. குறைந்தபட்சம் சில நாட்களாவது தேவைப்படும் என்று நான் நினைக்கின்றேன்.

எனவே இது சம்பவமொன்று நடைபெற்று அது தொடர்பான விசாரணைகள் முடிவு பெறுவதற்கு முன்னர் அந்த விசாரணை தொடர்பில் விமர்சிப்பது என்பது சாதாரணம் அல்ல.

தேவாலயங்கள், விகாரைகள் உள்ளிட்ட அனைத்து மத தலங்களில் பாதுகாப்பு தொடர்பில் நாங்கள் கூடிய கவனம் செலுத்தி வருகின்றோம்.

சம்பவத்தில் மேற்படி தேவாலயத்தில் கைக்குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அந்த கைக்குண்டை அங்கு வைத்த சந்தேக நபர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் பிரதிபலனாக இன்னும் பலர் விசாரணைகளுக்காக கைது செய்யப்பட உள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் பல்வேறு கோணங்களில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த சந்தர்ப்பத்தில் நான் நாட்டு மக்களிடம் ஒரு விடயத்தில் வேண்டிக் கொள்ள விரும்புகின்றேன். சம்பவம் நடைபெற்ற சில மணிநேரத்துக்குள் அல்லது 24 மணிநேரத்துக்குள் இந்த விசாரணைகளை முடிவுக்கு கொண்டுவந்து கைது செய்ய முடியுமாயின் அது ஒரு அதிசயமாவே இருக்கும்.

இந்த சம்பவம் தொடர்பில் நாட்டு மக்கள் தெரிந்ததை விட பல்வேறு விடயங்கள் நாங்கள் தெரிந்து வைத்துள்ளோம். தற்பொழுது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் அந்த விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு அது தொடர்பிலான எந்த ஒரு கருத்தையும் இப்போதைக்கு கூற முடியாது

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட சகல சந்தேகநபர்களும் சட்டத்திற்கு முன் கண்டிப்பாக நிறுத்தப்படுவார்கள் என்று நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் என்னால் உறுதிமொழி வழங்க முடியும் என்றார்.

குற்றவாளிகளைப் பாதுகாக்க முயற்சிப்பதாகவும் அதனால் சி சி ரீ வி சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கார்டினல் குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பில் என்ன கூற விரும்புகிறீர்கள் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர் :

நான் நினைக்கின்றேன் கார்டினல் எதனைக் கூறினாலும் அவர் கூறுவதை விட பல கோணங்களில் சிந்தித்து உரிய விசாரணைகளை தேவைக்கேற்ப மேற்கொள்வதற்குத் தேவையான சகல திறமைகளும் சிஐடியினருக்கும் பொலிஸாருக்கும் இருக்கின்றது. சட்டம் தொடர்பாகவும் விசாரணைகள் தொடர்பாகவும் இதற்கு முன்னர் விசாரணைகளை மேற்கொண்ட அனுபவமுள்ள அதிகாரிகளே இந்த விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். எனவே அவர்களது விசாரணைக்கு இடையூறு ஏற்படாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்

எனவே இந்த விடயத்தில் நாங்கள் அவசரப்பட முடியாது. பொலிஸாருக்கு விசாரணை செய்யும் முறைமையை கற்பிக்காமல் அவர்களது விசாரணைகள் தொடர்பில் விமர்சிக்காமல் அவர்கள் சுதந்திரமாக விசாரணைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இன்னும் ஒரு சில நாட்களில் இந்த சம்பவம் தொடர்பிலான முழுமையான விபரங்களை நாட்டு மக்களும் கார்டினலும் கண்டிப்பாக தெரிந்து கொள்ள முடியும்.

இதற்கு முன்னரும் லங்கா ஹொஸ்பிடலில் இதுபோன்ற சம்பவம் இடம்பெற இருந்தது. அந்த சம்பவம் தொடர்பிலான சகல சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர். அதை போன்று இந்த சம்பவத்திலும் தேடித்தேடி விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே சட்டத்தை பாதுகாக்கும் அதிகாரிகள் தொடர்பில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். ஏனெனில் அந்த அதிகாரிகள் மிகவும் அர்ப்பணிப்புடன் தனது விசாரணையை, பணிகளை, சேவையை முன்னெடுக்கின்றனர் என்றும் பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

பொலிஸ்மா அதிபருக்கு முடியாவிடின் அவரது கோட்டை கழட்டி விட்டு செல்லுமாறு கார்டினல் கூறியுள்ளார். இது தொடர்பில் நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள் என மற்றுமொரு உதவியாளர் வினவிய கேள்விக்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர் :

பொலிஸ்மா அதிபருக்கு கோட்டை வழங்கியவர் கார்டினல் அல்ல. எனக்கு தெரியாது. இதற்கான பலம் அவருக்கு இருக்கின்றதா என்றாலும் கருத்துக் கூறும் உரிமை அவருக்கு உண்டு. என்னைப் பொருத்தமட்டில் பொலிஸ்மாஅதிபர் இது தொடர்பிலான முழுமையான விசாரணைகளை முன்னெடுப்பது பற்றி பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் நான் அறிந்துள்ளேன் என்றும் விளக்கமளித்தார்.

மனிதநேய அடிப்படையில் இலங்கை சிறையிலுள்ள

இந்திய மீனவர்களை முன்கூட்டியே விடுவிக்க வேண்டும்

இலங்கை அரசுக்கு மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் கோரிக்கை

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

தமிழக மீனவர்களை விரைந்து விடுவிக்க இலங்கை அரசுக்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கோரிக்கை விடுத்துள்ளார். மனிதநேய அடிப்படையில் இலங்கை சிறையிலுள்ள இந்திய மீனவர்களை முன் கூட்டியே விடுவிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்நாடு மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் கைது செய்து சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இரண்டு தினங்களுக்கு முன் கோரிக்கை விடுத்து சமூக வலைதளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டிருந்தார். அந்தப் பதிவில் அவர், "இலங்கை சிறைகளில் வாடும் தமிழக மீனவர்களின் காவல் மேலும் நீடிக்கப்பட்டு இருப்பது மிகுந்த அதிருப்தியைத் தருகிறது. இலங்கை சிறையில் இருக்கும் தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் மீண்டும் இலங்கை சிறையில் உள்ள தமிழ்நாட்டு மீனவர்களை விரைவில் விடுதலை செய்யுமாறு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கை அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார். மனிதநேய அடிப்படையில் முன்கூட்டியே மீனவர்களை விடுவிக்குமாறு இலங்கை அரசிடம் அமைச்சர் ஜெய்சங்கர் கோரிக்கை வைத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் ரூ.9 கோடிக்கு உணவு உட்கொண்ட பிரமுகர்கள்!

பாராளுமன்றத்திற்கு சமுகமளிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்களின் உணவு மற்றும் குடிபானங்களுக்காக மாத்திரம் கடந்த ஆண்டு (2021) சுமார் 09 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தகவல்களை மேற்கோள்காட்டி, சிங்கள நாளிழொன்று செய்தி வெளியிட்டுள்ளது. பாராளுமன்றத்தில் செயற்படுகின்ற குழுக்களுக்கு முன்னிலையில் சமுகமளிக்கும் அரச அதிகாரிகளுக்கும் பாராளுமன்றத்தினாலேயே உணவு விநியோகிக்கப்படுவதாக தெரிய வருகின்றது. இதேவேளை, பாராளுமன்றத்தில் உணவு பொருட்களில் முன்னெடுக்கப்படுகின்ற மோசடிகள் மற்றும் வீண்விரயங்களை தவிர்ப்பதற்கு, பாராளுமன்ற செயலாளர் நாயகம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். இதன் ஒரு கட்டமாக, பாராளுமன்ற அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் பயணப் பொதிகள் எழுமாறாக பரிசோதனைக்கு உட்படுத்தப்படுமென தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அரிசி, மரக்கறி உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதையடுத்து, பாராளுமன்றத்தில் உணவு சமைக்கும் நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் பட்டிப் பொங்கல் விழா



யாழ்ப்பாணம் சந்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் கோபூசை நடைபெற்று பின்னர் கோபவனி மற்றும் கோமாதா கீர்த்தனங்கள் என்பன முறையே நடைபெற்றன.

கோபவனி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதி ஊடாக மின்சார நிலைய வீதி, யாழ் பஸ் நிலைய மேற்கு வீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதி ஊடாக ஆலயத்தை வந்தடைந்தது. கோமாதா உற்சவத்தில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சமய குருமார்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், பாடசாலை மாவர்கள் மற்றும் அடியார்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சங்கைக்குரிய கலாநிதி அஷ்ஷெய்கு முஹமது இப்றாஹிம் அல் – பாஸி (ரஹ்) ஞாபகார்த்த மஜ்லிஸ்

பேருவளை நிருபர்

ஷாதுலிய்யா தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவர் மர்ஹூம் சங்கைக்குரிய ஷெய்கு ஸஜ்ஜாத மர்ஹூம் கலாநிதி அஷ்ஷெய்ஹ் முஹம்மத் அல் பாஸி பின் அஷ்ஷெய்ஹ் முஹம்மத் இப்றாஹிம் அல் பாஸி அல் மக்கி. அஷ்ஷாதுலி (ரஹ்) அல் மக்கி அஷ்ஷாதுலி (ரஹ்) அவர்களின் 25 வருட ஞாபகார்த்த கத்தமுல் குர்ஆன் தமாம் திக்ர் மஜ்லிஸ் நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை பேருவளை சீனன் கோட்டை கன்கானம்கொடை நூரானிய்யா ஷாதுலிய்யா ஸாவியாவில் நடைபெறும்.

இது கொவிட் 19 சுகாதார வழிகாட்டலுக்கு அமைய வரையருக்கப்பட்டோரின் பங்குபற்றலுடன் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எம். எம். ஸைனுல் ஆப்தீன் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறும்.

கலீபாக்கள் உலமாக்கள், இஹ்வான்கள் பள்ளிச்சங்க உறுப்பினர்கள் நிகழ்வில் பங்குபற்றுவர்.

சாரதியின் அசட்டை காரணமாக லொறி உரிமையாளர் பலி

தெல்தோட்டை தினகரன் நிருபர்

கம்பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொழுவ, இங்குருவத்த பகுதியில் வாகனம் திருத்தும் நிலையத்தில் தனது படி லொறி ரக வாகனத்திற்கு இயந்திர எண்ணெய் மாற்றியபின் எண்ணெய்க் கசிவு ஏற்றப்படுகின்றதா என வாகனத்துக்கு அடியில் சென்று பார்த்த லொறி உரிமையாளர் லொறியின் டயரில் சிக்கி பலியாகியுள்ளார். வாகன உரிமையாளர் வாகனத்துக்கு அடியில் இருப்பதை அறியாத சாரதி வாகனத்தை இயக்கியதாலயே இவ்வாறு அவர் பலியாகியுள்ளார்.

சடலம் கம்பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கம்பளை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

"சந்திரிக்கா" நூல்...

தரிந்து தொட்டவத்த என்பவரால் தொகுக்கப்பட்டுள்ள இந்நூல், 'சந்திரிக்கா' என பெயரிடப்பட்டுள்ளது.

அடுத்த கட்ட முடிவுகள் குறித்து மின்சார சபை செவ்வாயன்று பேச்சு

மின் விநியோகத்தை தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்காக நாளாந்தம் 1,500 மெற்றிக் தொன் டீசல் மின்சார சபைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இதனிடையே, மின்னுற்பத்தி நிலையங்களை அண்மித்து திடீர் கோளாறு ஏற்பட்டமை தொடர்பில் விசாரணை செய்யுமாறு பொலிஸ்மாஅதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

போராட்டங்களுக்கு...

ஆதரவளித்த அனைத்துத் தரப்பினருக்கும் நன்றி தெரிவிப்பதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளரான மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் வரையில், அரசியல்வாதிகளின் வாக்குறுதிகள் தொடர்பில் தொழிற்சங்கங்களுக்கு சந்தேகம் இருந்ததாகவும் அவர் தெரிவித்தார். தொழிற்சங்க நடவடிக்கையை நாசப்படுத்த பலர் முயற்சித்து தமது போராட்டத்தை நிறுத்தியதாக மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார். எவ்வாறாயினும், தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையின் மூலம் அடிப்படை சம்பள உயர்வை வெற்றிகரமாக பெற்றுக்கொடுத்த ஆசிரியர்களையும் அவர் பாராட்டினார்.

அதிபர் சேவை மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் சேவையின் சம்பளத் திருத்தம் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், அவர்களின் தரத்திற்கு ஏற்ப அடிப்படைச் சம்பளங்களும் அதிகரிக்கப்படும் என்றார்.

அதிபர் சேவை, ஆசிரிய ஆலோசகர் சேவை மற்றும் ஆசிரியர் சேவை ஆகியவை தனித்தனி சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை கல்வி அமைச்சின் செயலாளர் நேற்று வெளியிட்டுள்மை குறிப்பிடத்தக்கது.

புலமைப்பரிசில் பரீட்சை...

ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், 2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை நாடு முழுவதும் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி முதல் மார்ச் 05ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. 02 ஆயிரத்து 438 பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொருளாதார பிரச்சினைக்கு ...

நிலையத்தின் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை, சில விமான நிலையங்களுக்கான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதாக வெளியாகும் தகவல்கள் மற்றும் மின்சார நெருக்கடியினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளினால் இந்த அவசர தேவை உணரப்படுவதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தின் இவ்வாறான பின்னடைவு பெரும்பாலும் நாட்டின் சட்டவாட்சிக்கும் நிர்வாகத்திற்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு மூன்று பில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ள போதிலும் அதில் எவ்வளவு தொகையை பயன்படுத்த முடியும் என்பதனை ஆராய வேண்டுமெனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்றுநோய் நிலைமையினால் அரசாங்கம் சவால்களை எதிர்நோக்கியுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்வதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த சவால்களுக்கு முகம் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு நிலையான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான தொழில்நுட்ப விசேட நிபுணத்துவம் பெற்ற உள்நாட்டு, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சுயாதீன மற்றும் பக்கச்சார்பற்ற நிபுணர்கள், நிறுவனங்களின் உதவியை பெற்றுக்கொள்ளுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ரயில் சேவைகள் நேற்று...

நீக்க ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் நடவடிக்கை எடுத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இச்சங்கம் நேற்று முன்தினம் திடீர் பணிப்புறக்கணிக்கை மேற்கொண்டது.

பதவி நீக்கப்பட்ட ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் உபதலைவரை மீண்டும் அந்தப் பதவியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டதையடுத்து, இச்சங்கம் போராட்டத்தைக் கைவிட்டது.

சீமெந்து தட்டுப்பாட்டு...

எதிர்வரும் 18ஆம் திகதி இரண்டு இலட்சம் சீமெந்து பொதிகளைத் தாங்கிய கப்லொன்று நாட்டுக்கு வரவுள்ளது. எனவே, எதிர்வரும் 22 ஆம் திகதியின் பின்னர் சீமெந்து தட்டுப்பாடு குறைவடையமென சீமெந்து இறக்குமதியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் பொருளாதாரம்...

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவு செய்துள்ளார்.

அககப்படுத்தப்பட்ட சேவைகளாக...

ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி முதல் அமுலாகுவதாகவும் அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் உள்ளிட்ட ஏனைய நிறுவன நடவடிக்கை தொடர்பான அதிகாரங்கள் மற்றும் ஏற்பாடுகள், அந்தந்த சேவைகளுக்காக தற்போது அமுலில் உள்ளவாறு தொடர்ந்தும் நடைமுறையாகும்.

குறிப்பிட்ட சேவைகளுக்கான விசேட வேதன முறைமை தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வினவி, பொருத்தமான வகையில் திருத்தம் மேற்கொள்ள முடியமென்றும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தை பிறந்தால் வழி பிறக்கும் தமிழர் பிரச்சினைக்குத்தான்..?

பேச்சு நடத்த வாருங்கள், எமக்கிடையேயான பிணக்குகளை நாமே பேசித் தீர்ப்பமென வருந்தி அழைக்கும் இன்றைய அரசாங்கத்தின் தொடரான அழைப்புக்களை கருத்திற் கொள்ளாது பாரதப் பிரதமர் மோடிக்கு ஆவணத்தை சமர்ப்பித்து இனி வரும் தை மாதப்பிறப்புக்களையும் ஏமாற்றம் தரும் மாதப்பிறப்புக்களாக மாற்ற வேண்டுமா? என்பது குறித்து சிந்திக்க வேண்டும். தீர்வுக்கான கை கூடக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்நாட்டிலேயே இருக்கின்றபோது அயல்நாடுகளில் தேடி காலத்தைக் கடத்தி மக்களை ஏமாற்றும் முயற்சிகளை தமிழ் தலைமைகள் கைவிட வேண்டும்.

சர்வதேசம் எமது பிரச்சினையைத் தீர்க்க உதவி செய்யும் என்று மேலைத்தைய நாடுகளை நம்பிக் கெட்ட உண்மைகளையும் நாம் மறந்து விடக்கூடாது.

இனி அடுத்து வருகின்ற தை மாதப்பிறப்புக்குள் அரசுடன் பேசி சமரசமான தீரவைக் காண திடசங்கற்பம் கொள்வோம். அதுவே நீண்ட காலமாகப் புரையோடிப் போயுள்ள இந்த இனப் பிரச்சினைக்கு சிறந்ததொரு தீர்வாக அமையும் என்பதே எமது கருத்தாகும்.

அரசை விட்டு சு. க. வெளியேறுமென...

நிறைவேறாது. ஏனெனில் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை சரியாக விளங்கி அவற்றை முன்னெடுத்துச் சென்று மக்களை சீரான வாழ்க்கைக்கு இட்டுச்செல்ல வேண்டும் என்பதில் இரண்டு கட்சிகளின் தலைவர்களுமே உறுதியாக இருக்கிறார்கள்.

நாடு கொரோனா பாதிப்பிலிருந்து முழுமையாக விடுபடாத ஒரு நிலையில் அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளுக்கு அதன் பங்காளிக் கட்சி எனும் வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது பூரண பங்களிப்பை முழுமையாக வழங்கி வருகிறது. கட்சி அரசியலுக்கு அப்பால் மக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசுக்கு எமது கட்சி தோளோடு தோள் நிற்கும்.

இவ்வேளையில் அரசியல் இலாபத்திற்காக அரசை இடைநடுவில் கைவிட்டு செல்வது ஆரோக்கியமானதல்ல. அரசியலை விடவும் மக்களது தேவைகளை நிறைவேற்றுவது இன்றைய அவசிய தேவையாக உள்ளதென குறிப்பிட்ட சுரேன் ராகவன் மற்றும் சுலைமாலெப்பை ஆகியோர் தமிழ் மக்களுக்கு தமது பொங்கல் மற்றும் புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

தமிழ், முஸ்லிம் மக்களது ஒற்றுமையான செயல்பாடுகள் எதிர்காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீரவைக் காண்பதற்கு பேருதவியாக இருக்கமென தெரிவித்த அவர்கள், முன்னொரு காலத்தில் வாழ்ந்தது போன்று தமிழ் முஸ்லிம் மக்கள் வடக்கு, கிழக்கு மட்டுமல்லாது முழு நாட்டிலும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து வாழ்வதன் அவசியத்தையும் வலியுறுத்தினர்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை கொண்டுள்ள இந்த அரசாங்கத்தின் மூலம் தமிழ், முஸ்லிம் மக்களது பிரச்சினைகள் பலவும் தீர்க்கப்பட்டு வருகின்றன. கொரோனா காலத்தில் இவற்றில் சில பின்னடைவுகள் ஏற்பட்டாலும் நாடு வழமைக்குத் திரும்பியுள்ளது. அவற்றை மீண்டும் வழமைபோன்று முன்னெடுத்துச் செல்ல முடியும் எனவும் அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஆயிரம் வீடுகள்...

இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது. அவ்வீடுகளுக்கான திறப்புகளும் இங்கு வழங்கப்பட்டன.

இதில் கடந்த அரசாங்க காலத்தில் மலையகப் பிரதேசங்களில் இந்திய நிதி உதவியினூடாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்கு ஆட்சி மாற்றத்தின் காரணமாக வீதி, குடிநீர், மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு குறைபாடுகள் இருந்தன.

அதனை தற்போதைய அரசு தோட்ட வீடமைப்பு அமைச்சின் ஊடாக நிதிகள் ஒதுக்கி, உட்கட்டமைப்பு வசதிகளை பூரணப்படுத்தி ஆயிரம் வீடுகளை பயனாளிகளுக்கு கையளிக்கும் வகையில் இந்த நிகழ்வு நேற்று நடைபெற்றது.

அத்தோடு, மலையக பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட ஆலயங்களுக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்வும் இதன் போது நடைபெற்றது. இதில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சரும் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, கண்டிக்கான இந்திய உதவி தூதுவர் திருமதி ஆதிரா, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஷ்வரன், இ.தொ.காவின் உப தலைவரும், பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான், வீடமைப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கொழும்புக்கு வந்த முதலைகள்

அவை நன்னீர் முதலைகளா அல்லது உவர்நீர் முதலைகளா?

மாத்தறை ஆற்றில் உள்ள முதலைகள் மனிதரை கொல்லாது என்றொரு நாடோடி பாடல் உண்டு. ஆனால் நர மாமிசம் உண்ணாத முதலைகளை இதுவரை நாம் அறிந்ததில்லை. சில வேளைகளில் ஆறு, குளம், சதுப்பு நிலங்களை அண்டிய பிரதேசங்களில் வசிக்கும் முதலைகள் மனிதர்களை இரையாக்கிக் கொண்ட சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால் கடலில் முதலை தாக்குதல் பற்றி இதுவரை யாரும் கேட்டதில்லை. ஆனால் புதுவருட ஆரம்பத்துடன் அதாவது ஜனவரி 3ஆம் திகதி கடலில் நடந்த முதலை தாக்குதல் இந்நாட்டின் முதல் தடவையாக நிகழ்ந்த சம்பவமாகும். இது பலரது நெற்றிப் புருவங்களை உயர்த்தியுள்ளது.

இச் சம்பவம் தெஹிவளை கடல் பிரதேசத்திலேயே இடம்பெற்றுள்ளது. தெஹிவளை ரயில் நிலையத்துக்கு பின்புறம் உள்ள கொடகல அருகிலுள்ள ஆழ்கடலில் சுழியோடுவதற்கு சென்ற கிருலப்பனையை சேர்ந்த சோமசிறி பீரிஸ் (ஜயந்த) என்பவரே முதலைக்கு இரையாகி துரதிருஷ்டவசமாக உயிரிழந்தார். இரத்மலானை கல்தேமுல்ல சுனாமி மீனவ கிராமத்தில் வசித்த 58 வயதான சோமசிறி பீரிஸ் 16 வருடங்களாக ஆழ் கடலில் சுழியோடி அலங்கார மீன்களை பிடித்து வாழ்க்கை நடத்துபவர். அவரின் ஒரே மகள் தக்ஷிலா தில்ருக்ஷி.

"ஒவ்வொரு நாளும் காலை 6 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்று கடலில் சுழியோடி அலங்கார மீன்களை பிடித்து வருவார். அவர் பழகுவதற்காக செய்யும் தொழில் அல்ல. அவர் படகில் செல்பவரல்ல .நீந்தியே செல்வார். ஒட்சிசன் தாங்கியும் பயன்படுத்த மாட்டார் சுழியோடுவதற்கான அங்கியையும் அதற்குத் தேவையான காலணிகளை மாத்திரமே பயன்படுத்துவார். சம்பவ தினத்தன்று காலை 10 மணிக்கே முதலை அவரை தனக்கு இரையாக்கியுள்ளது என்று பேச ஆரம்பித்த சோமசிறியின் மனைவி லட்சுமி பெரேரா.

"எனக்கு பகல் 12 மணியளவில் வீட்டிற்கு அருகில் உள்ள நண்பர் ஒருவர் நடந்த சம்பவத்தை வந்து கூறினார். நான் கணவரின் சகோதரியுடன் களுபோவில வைத்தியசாலைக்குச் சென்றேன். அங்கு அவர் மரணம் அடைந்ததை அறிந்தேன்". என்றார் மனைவி லட்சுமி பெரேரா.

இரண்டு முதலைகள் அந்த கடற்பகுதியில் நடமாடுவதாக மரணமடைந்த சோமசிறியின் உறவினர்கள் கூறுகின்றார்கள். அதனாலேயே தெஹிவளை கடல் பிராந்தியத்தில் முதலைகளை பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றார்கள். இல்லாவிட்டால் சோமசிறி போன்ற சில சுழியோடிகளுக்கு மாத்திரமல்ல கடலில் இறங்கி நீந்தும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கும் உயிர் அச்சுறுத்தல் இருக்கத்தான் செய்யும்.

"எனக்கு சுழியோடி ஒருவரை முதலை தாக்கியுள்ளதாக அழைப்பொன்று வந்தது. அவ்வேளையில் சுழியோடிகள் சிலரும் கரைக்கு வந்தார்கள். நானும் இன்னும் நான்கு பேரும் படகு ஒன்றில் ஏறி கடலுக்கு சென்றோம். சோமசிறியை ஆழ் கடலுக்குள் முதலை இழுத்துச் செல்வதை நான் கண்டேன். மீண்டும் முதலை மேலே வந்தது. நான் படகின் நங்கூரத்தை முதலையின் மேல் படுமாறு போட்டேன். அதன் பின்னர் படகை வேகமாக முன்னால் செலுத்தினேன். அப்போது அவரை முதலை விட்டுவிட்டது. முதலை அவரின் தோள்பட்டையை பிடித்திருந்தது கையை பிடித்திருந்தால் கையை இழந்தாவது அவர் தப்பியிருக்கலாம். அவரால் எதுவும் செய்ய முடியாமற்போயிற்று. நாம் பின்னர் அவரை கரைக்கு கொண்டு வந்தோம்" என கொழும்பு மாவட்ட அலங்கார மீன்கள் பிடிப்பவர்களின் கூட்டுறவு சங்கத் தலைவர் ரஞ்சித் சில்வா தெரிவித்தார்.



இந்த சம்பவத்தை நேரில் கண்ட தெஹிவளை ரயில் பாதையில் வசிக்கும் சுழியோடியான கன்உபுலிகே நந்தன குஷாந்த இச்சம்பவத்தை பின் வருமாறு விபரித்தார் :

"எனது வீடு இந்த விபத்து நடந்த இடத்துக்கு அருகிலேயே உள்ளது. முதலையொன்று நபரொருவரை பிடித்துக் கொண்டு சென்றதாக அறிந்தவுடன் நானும் இன்னும் சிலரும் அந்த இடத்துக்கு சென்றோம். அங்கு சென்றபோது சுழியோடி ஒருவர் பாவிக்கும் பாதணிகள் கரையில் இருந்து 100 மீட்டர் தூரத்தில் நீரில் மிதப்பதை கண்டோம். அதன் அருகில் முதலை ஒன்றையும் கண்டோம்.

நாம் முதலை இருந்த இடத்துக்கு உடனடியாக செல்லவில்லை. முதலை எமது படகை கவிழ்த்துவிடுமோ என எங்களுக்கு சந்தேகமாக இருந்தது. முதலை கைவிட்ட நபரை படகில் கொண்டு வரும்போதுதான் அவர் ஜயந்த என்பது தெரியும். அவ்வேளையில் மூக்கில் இருந்து சளி போன்ற திரவம் வடிந்து முகம் முழுவதும் மறைத்திருந்தது. அவரை நாம் தெற்கு கொழும்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றாலும் அவர் அங்கு கடலில் முதலை தாக்கி இறந்த முதலாவது நபராக மாறியிருந்தார்.

இச்சம்பவம் அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளது. ஏனென்றால் முதலைகள் கடலில் வசிக்கும் என்பது புதிய விடயம். ஆனால் உவர் நீர் முதலைகள் salt water crocodile எனப்படும் முதலைகள் கடலில் வசிக்கக்கூடியவை.

"இலங்கையில் இரண்டு வகையான முதலைகள் வசிக்கின்றன. ஒன்று நன்னீர் முதலை. மற்றையது உவர்நீர் முதலை. கடலுக்கு அருகில் முகத்துவாரம் மற்றும் சதுப்பு நிலங்கள் மற்றும் ஆறுகளிலும் நன்னீர் முதலைகள் வாழ்கின்றன. பானம, மாத்தறை போன்ற இடங்களில் நன்னீர் முதலைகள் அதிகளவில் நடமாடுகின்றன. நாம் ஒன்றரை வருடத்துக்கு முன்னர் உவர் நீர்முதலைகள் பற்றி கணக்கெடுப்பு நடத்தியபோது அவற்றின் எண்ணிக்கை ஆயிரத்தை அண்மித்திருந்தது.

நன்னீர் முதலைகளின் எண்ணிக்கை 7000 மாக காணப்பட்டது. நன்னீர் முதலைகள் அதிகமாக யாழ்ப்பாண பிரதேசத்திலேயே காணப்படுகின்றன.

உவர்நீர் முதலைகள் 20 அடிக்கும் அதிக நீளமான ஊர்வன வகையை சேர்ந்தவை. நன்னீர் முதலைகள் மற்றும் உவர்நீர் முதலைகளை இலகுவாக வேறுபடுத்தி அறிந்து கொள்ளலாம். நன்னீர் முதலைகளின் கழுத்தில் உள்ள செதில்கள் பாதி தேங்காய் சிரட்டையை விட பெரிய அளவாக காணப்படும். உவர்நீர் முதலைகளின் செதில்கள் பலாவின் மேற்பகுதியில் உள்ள முள் போன்று காணப்படும் என ஊர்வன தொடர்பான விசேட நிபுணர் என்சலம் த சில்வா தெளிவுப்படுத்துகிறார்.

முதலைகள் குறைந்த வெப்ப இரத்த பிராணிகளாகும். வெளிவெப்பநிலையை ஆதாரமாக பயன்படுத்தும் முதலைகள் விசேட புலம்பெயர் தன்மையைக் கொண்டவை. பகல் நேரங்களில் நீர் நிலைகளில் காணப்படும் முதலைகள், இரவு நேரங்களில் கரைக்கு வருகின்றன. அடிக்கடி நீருக்கு மேலே வந்து காற்றை சுவாசிக்கும் முதலைகள் மீண்டும் நீரின் அடியில் பயணம் செய்யும். உவர்நீர் முதலைகள் கடலில் காணப்பட்டாலும் நீண்டகாலம் அங்கு வசிக்கும் திறன் அற்றவை. அனேகமாக ஒரு முகத்துவாரத்தில் உள்நுழைந்து வேறொரு முகத்துவாரத்துக்கு செல்வதற்கு பயணப்பாதையாக கடலையே பயன்படுத்துகின்றன. நன்னீரிலும் உவர் நீரிலும் வசிக்கும் முதலைகளின் சக்தி அதிகரிப்பது நீரிலாகும். 180 பாகைக்கு தங்களது கண்களை திருப்பக் கூடிய திறன் வாய்ந்தவை. அத்துடன் தந்திரமாக இரையை கௌவ்வக் கூடியவை.

முதலைகள் நீரை சலனப்படுத்தாது வாலை இருபுறமும் அசைத்தவாறு நீந்தி செல்லும் தன்மை வாய்ந்தவை. இரைக்கு அருகில் நெருங்கும் வரை அதனை இரையால் உணர முடியாது. அதனால் அருகில் சென்று ஒரேயடியாக அவற்றை கௌவ்விக் கொள்ளும். அது மாத்திரமல்ல; நீருக்கடியில் வாலை அசைத்து தண்ணீரை கலங்கச் செய்து மீன்களையும் வேட்டையாடும் திறமை வாய்ந்தது. நீரில் நீந்தும் போது உடம்பு புராவும் நீரிலேயே மூழ்கி இருக்கும்.

இரையை நெருங்கும் போது மாத்திரம் கண்களும் மூக்கு நுனியும் நீரின் மேல் தெரியும்படி வெளியே வரும். முதலை குட்டிகள் முட்டையிலிருந்து வெளிவரும்.

அவை ஒரு தரம் இடும் முட்டைகளின் எண்ணிக்கை அவற்றின் வகைகளுக்கு ஏற்ப மாறுபடும். ஒரே தடவையில் 20 தொடக்கம் 90 வரையான முட்டைகளையிடும் திறன் வாய்ந்தவை.

"இலங்கை கடலில் உவர்நீர் முதலைகள் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன.

இந்த துரதிர்ஷ்ட வசமான சம்பவம் தெஹிவளையில் நிகழ்ந்துள்ளது. தெஹிவளை கடலுக்கு எவ்வாறு முதலை வந்ததென ஆராய வேண்டும்.

கொழும்பு வாய்கால் பாதைகளை அண்டிய பிரதேசங்களில் உவர்நீர் முதலைகள் உள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. பத்தரமுல்லை பக்கமிருந்து ஹவ்லொக் டவுன் ஊடாக பாயும் வாய்க்கால் கடலில் பாய்கிறது. இப்பாதையின் ஊடாகவே கடலுக்குள் முதலை வந்திருக்கலாம் என நாம் அனுமானிக்கின்றோம்.

இதன்போது பொரலஸ்கமுவ,பெல்

சோமசிறி பீரிஸ்

மனைவி லட்சுமி பெரேரா

பிரதேசம் கடல்மட்டத்தை விட மிகவும் ஆழமாக காணப்படுவதை கண்டோம். அப் பிரதேசங்களுக்குள் கடல் நீர் கசிந்து நீரானது உவர்த்தன்மையாக மாறியுள்ளது. உப்பு நீரில் வசிப்பதற்கு உவர்நீர் முதலைகள் மிகவும் விரும்புகின்றன. அதன் பலனாக அவற்றின் இனப்பெருக்கமும் அதிகரிக்கின்றது. பெரிய பறவைகள் முதலை குட்டிகளை உணவாகக் கொள்கின்றன. ஆனால் இப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக சதுப்பு நிலங்களில் பெரிய மரங்கள் அழிக்கப்பட்டு விட்டன. பெரிய மரங்கள் இல்லாததால் பறவைகள் வந்து தங்குவதும் குறைந்து விட்டது. அதனால் உணவுச் சங்கிலியானது பாதிக்கப்பட்டு முதலைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. அதன் காரணமாக எதிர்காலத்தில் அது பெரும் பிரச்சினையாக உருவெடுக்கலாம்" என உயிரியல் பாதுகாப்பு மத்திய நிலைய தலைவர் புபுது வீரரத்ன தெரிவித்தார்.

கடலில் முதலை தாக்கி கொல்லப்பட்ட சோமசிறியின் மரணம் இன்னுமொரு சம்பவம் என்று கருதிவிட முடியாது. இவரைப் போன்று மேலும் பல சுழியோடிகள் மீனவர்கள் மற்றும் கல்கிசை,தெஹிவளை பிரதேசங்களுக்கு நீராட வரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் முதலைக்கு இரையாகலாம். என அவர் தெரிவித்ததோடு உலகில் அவுஸ்திரேலியாவிலேயே முதலைக்கு அதிகமானோர் இரையாகின்றனர் என்ற தகவலையும் புபுது வீரரத்ன தெரிவித்தார்.

"அந்தமான் தீவுகளின் பிரதான வருமானத்துக்கான வழி உல்லாச பயணத்துறையாகும். அந்நாட்டில் வெளிநாட்டு பெண்மணி ஒருவரை முதலை ஒன்று கௌவ்வியதால் பெரும் பிரச்சனை ஏற்பட்டது. இந்திய அரசால் இப்பிரச்சனையை ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அக்குழுவின் அங்கத்தவராக என்னையும் தெரிவு செய்திருந்தார்கள்" என்கிறார் ஊர்வன தொடர்பான விசேட நிபுணர் என்சலம் த சில்வா.

தெஹிவளை கடலில் சோமசிறிபீரிஸை பலியெடுத்த முதலை 3ஆம் திகதி மாலை கடற்பரப்பின் ஊடாக பாணந்துறை நோக்கி செல்வதை வனவிலங்கு அதிகாரிகள் அவதானித்துள்ளார்கள். பம்பலப்பிட்டி சென் பீட்டர்ஸ் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள வாய்க்காலில் உவர்நீர் முதலை ஒன்றையும் கண்டுள்ளார்கள். கொழும்பு பிரதேசத்தில் நீர் கடலில் கலக்கும் வெள்ளவத்தை கால்வாய் போன்ற எந்த ஒரு வாய்க்காலின் ஊடாகவும் முதலைகளுக்கு கடலுக்குள் நுழைய முடியும் அதேபோன்று இந்த வாய்க்காலின் ஊடாக தரைக்கு வரமுடியும்.

"கடலை அவதானிக்க நாம் வனவிலங்கு அதிகாரிகளை ஈடுபடுத்தியுள்ளோம்.

அவசர நிலைமைகள் ஏற்பட்டால் நடவடிக்கை எடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் ஆயத்தமாக உள்ளது. முதலைகளை பிடித்தவுடன் நாங்கள் வனவிலங்கு பாதுகாப்பிடங்கள் அல்லது நீர் ஆதாரங்கள் உள்ள இடங்களில் விடுகின்றோம்.

சிலவேளைகளில் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் அவற்றை பிடித்துச் செல்வார்கள். பொதுமக்கள் பிடித்து கொடுக்கும் முதலைகளையும் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் கொண்டு சென்று விடுவிப்பார்கள். நாம் இதுவரை நன்னீர் முதலைகளையே விடுவித்துள்ளோம். உவர்நீர் முதலைகள் இதுவரை நாம் பிடித்து விடுவிக்கவில்லை.

இந்த முதலைகளில் உவர்நீர் முதலைகளே மிகவும் ரௌத்திரமானவை. ஆனால் இலங்கையில் அதிகமாக நன்னீர் முதலைகளே காணப்படுகின்றன" என்கிறார் வனவிலங்கு திணைக்களத்தின் பிரசார பிரிவின் தலைவர் ஹசினி சரத்சந்திர. முதலைக்கு பலியான சோமசிறி பீரிஸின் இறுதி சடங்குகள் கடந்த 6ஆம் திகதி நடைபெற்றது. அபூர்வமாக முதலை ஒன்று மனிதனை இரையாக்கும் பொழுது அது பற்றி மிகவும் பெரிதாக கதைப்பார்கள். முதலையை பிடித்துக் கொண்டு செல்லும் விதம் பற்றி ஊடகங்களில் பிரசாரம் செய்வார்கள்.

ஆனால் இது முதலைக் கண்ணீர் வடிக்க வேண்டிய விடயம் அல்ல. முதலையின் பெருக்கம் முதலைகள் நடமாடும் பிரதேசங்கள் என்பவற்றை கண்காணிப்பது அவசியம்.

ஹர்ஷா சுகதாச ...✍
தமிழில்: வீ.ஆர். வயலட்

வரலாற்றுக் காலம் தொடக்கம் தொடரும் இருதரப்பு நட்புறவு

ஒரு நாட்டினுடைய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையிலேயே அந்நாடு ஏனைய நாடுகளுடன் பொருளாதார, அரசியல், சமூக மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்புடன் செயற்படும். இந்தக் கொள்கை ஒவ்வொரு நாட்டுக்கும் அமைய வேறுபடுவதுடன், பூகோள அமைவிடமும் வெளியுறவு கொள்கையில் தாக்கம் செலுத்தும் காரணியாக அமைந்து விடுகிறது. இந்து சமுத்திரத்தின் சர்வதேச கப்பல் பாதையில் இலங்கை அமைந்திருப்பதால் பல்வேறு நாடுகள் நட்புப் பாராட்டுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக இலங்கையுடன் நெருக்கமான உறவுகளைப் பேணி வரும் நாடுகளில் ஒன்றாக சீனா அமைந்து விட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வெங்க் யீ தலைமையிலான உயர்மட்டக் குழுவினரின் விஜயம் அமைந்திருந்தது. குறித்த உயர்மட்டக்குழு உலக நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தின் ஒரு அங்கமாக கடந்த சனிக்கிழமை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது. இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் குறித்து இவ்விஜயத்தின் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

24 மணி நேரத்திற்கும் குறைவான தனது இலங்கைச் சுற்றுப் பயணத்தின் போது சீன வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோருடன் தனித்தனியான சந்திப்புகளை நடத்தினார், அத்துடன், சீன நிதியுதவியுடன் கூடிய கொழும்பு துறைமுக நகரத் திட்டப் பகுதிக்கு செல்லும் பொதுநடைபாதையான மெரினா உலாவுப் பாதையையும் அவர் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்வது சீன வெளிவிவகார அமைச்சர்களுக்கு வழமை என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டிருந்தார். ஆபிரிக்க விஜயத்தைத் தொடர்ந்து சீன_ மாலைதீவு உறவுகளின் 50வது வருட பூர்த்தியை முன்னிட்டு மாலைதீவுக்குச் சென்றதாகவும், இலங்கை_சீன அரிசி ஒப்பந்தத்தின் 65வது வருட பூர்த்தியை முன்னிட்டு இலங்கைக்கு விஜயம் செய்ததாகவும் அப்பேச்சாளர் சுட்டிக்காட்டியிருந்தார்.

1952 இல் அப்போதைய டட்லி சேனாநாயக்க அரசாங்கம் அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு மத்தியில் சீனாவுடன் அரிசிக்கு ரப்பரைப் பரிமாறிக் கொண்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க 'ரப்பர்_அரிசி ஒப்பந்தம்' இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர நன்மை மற்றும் வெற்றிகரமான வர்த்தக ஒப்பந்தமாக பரவலாகப் பாராட்டப்படுகிறது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் சீன வெளிநாட்டமைச்சரின் விஜயம்

இவ்வாறான பின்னணியில், இலங்கை அந்நியச் செலாவணிக்குத் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில், சீன வெளிவிவகார அமைச்சரின் விஜயம் அமைந்துள்ளது. கொவிட் 19க்கு முகங்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக கடன் திருப்பிச் செலுத்துதலை மறுசீரமைப்பது குறித்து சீன உயர்மட்டத் தூதுக்குழுவினருடனான சந்திப்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தியிருந்தார். சீன சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது மற்றும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு சலுகை வர்த்தகக் கடன் திட்டம் தொடங்கப்பட்டால் அது உள்ளூர் கைத்தொழில்களை சீராக இயங்கச் செய்யும் என்பது பற்றியெல்லாம் ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதேநேரம், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குமாறு சீன தூதுக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்ததாகவும், 'உலகிற்கு மேலும் சாதகமான சமிக்ஞைகளை அனுப்பவும், பங்களிக்கவும் இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் அபிவிருத்தி' பற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்தி மடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு இரு நாடுகளின் வளர்ச்சிக்கும் நன்மை பயக்கும் மற்றும் இரு நாட்டு மக்களின் அடிப்படை நலனுக்கும் உதவுகிறது. இது எந்த மூன்றாம் தரப்பினரையும் குறிவைக்காது மற்றும் எந்த மூன்றாம் தரப்பினரும் தலையிடக் கூடாது. இரு நாடுகளுக்கும் இடையே உள்ள அனைத்து சுற்று ஒத்துழைப்பு மற்றும் மூலோபாய பரஸ்பர நம்பிக்கை ஆகியவை பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு நேர்மறையான ஆற்றலை செலுத்தியுள்ளன என்ற விடயத்தை சீன உயர்மட்டத் தூதுக்குழு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பில் சுட்டிக் காட்டியிருந்ததாக சீனத் தூதுரகம் குறிப்பிட்டுள்ளது.

தடுப்பூசி திட்டத்திற்கான மேலதிக ஒத்துழைப்பு, துறைமுக நகரம் மற்றும் ஹம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்திற்கு முதலீடுகளை ஈர்ப்பது, சீனாவுக்கான இலங்கை ஏற்றுமதிகளை அதிகரிப்பது மற்றும் கலாசார ஒத்துழைப்பை மேம்படுத்துவது, குறிப்பாக பௌத்த உறவுகள் உள்ளிட்ட பல விடயங்கள் இச்சந்திப்புக்களின் போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

இருதரப்புச் சந்திப்புக்களைத் தொடர்ந்து கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 2,000 வீடுகள், பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தின் மறுசீரமைப்பு மற்றும் சிறுநீரக நோய்ப் பரிசோதனைகளுக்கான அம்பியூலன்ஸ்கள் போன்றவற்றுக்கான 800 மில்லியன் பெறுமதியான மானியம் குறித்த நான்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

சீன உயர்மட்டத் தூதுக்குழுவினர் இலங்கை வருவதற்கு முன்னர் சர்ச்சைக்குரிய உரக் கொள்வனவுக்காக சீன நிறுவனத்துக்கு மக்கள் வங்கியின் ஊடாக 6.9 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. உரக்கப்பல் விவகாரம் இரு நாடுகளுக்கும் இடையில் சிறிய தொரு மனக்கசப்பை ஏற்படுத்தியிருந்த போதும், இவ்விடயம் தற்பொழுது தீர்க்கப்பட்டுள்ளது.

இலங்கை அந்நிய செலாவணிக் கையிருப்புப் பற்றாக்குறையால் உலக நாடுகளின் ஒத்துழைப்பை எதிர்பார்த்திருக்கும் நிலையில், சீன வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் விஜயம் அமைந்திருந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறாமல் நட்பு நாடுகளிடம் உதவியைக் கோருவதற்கான முயற்சிகளில் நிதி அமைச்சர் இறங்கியிருக்கும் நிலையில், இலங்கை, சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் பக்கம் தமது கவனத்தைத் திருப்பியுள்ளது.

பி.ஹர்ஷன்...

அரசியல் அரங்கம்

அர்ஜுன்

அமைச்சுப் பொறுப்புகளைக் கொண்டிருப்பவர்கள் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் குறித்து பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என ஆளும் கட்சியின் முதற்கோலாசானும், பெருந்தெருக்கள் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார். புதிதாகச் சிந்திக்கத் தவறினால் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தைக் கொண்டு வர முடியாது போகும் எனவும் அவர் எமக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டார்.

அமைச்சுப் பதவியில் உள்ளவர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்!

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அளிக்கும் விளக்கம்

அமைச்சுப் பொறுப்பில் இருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டது ஏன்?

கே: இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதவியிலிருந்து நீக்கப்பட்டமை குறித்து நீங்கள் கருத்துக் கூற விரும்புகின்றீர்களா?

பதில்: பிரேமஜயந்த எம்.பி அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை விமர்சித்தார். இது அரசாங்கத்தின் அக்கறையைப் பாதிக்கும். இதனாலேயே அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இராஜாங்க அமைச்சர் என்ற ரீதியில் தனது எல்லைக்குள் பொறுப்புடன் செயற்பட வேண்டிய கடமை அவருக்கு உள்ளது. அரசாங்கம் மற்றும் அதன் கொள்கைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அவருக்கு உள்ளது.

நாட்டில் ஒழுக்கத்தை பேணுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும் போது, அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களிடமிருந்து புதிய யோசனைகள் முன்கொண்டு வரப்பட வேண்டும். கொவிட்19 தொற்றுநோய் தாக்கத்தின் போது கூட, ஜனாதிபதியே மக்களைப் பாதுகாப்பதற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து பணிபுரிந்தார், அமைச்சர்களோ இராஜாங்க அமைச்சர்களோ அல்ல. தடுப்பூசி வழங்கும் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்த ஐந்து அல்லது ஆறு நாடுகளில் இலங்கையும் உள்ளது.

புத்தாண்டில் நாம் புதிதாக சிந்திக்காவிட்டால், மக்கள் எதிர்பார்க்கும் வகையில் அபிவிருத்தியடைந்த இலங்கையை உருவாக்க முடியாது. அரசாங்கத்தின் திட்டத்தை யாராவது விமர்சித்து நாசப்படுத்த முயற்சித்தால், அவர்கள் முதலில் தங்கள் பதவிகளிலிருந்து விலக வேண்டும். பதவிகளையும் வைத்துக் கொண்டு விமர்சனங்களையும் முன் வைத்தால் அது சதியாகும். அவ்வாறானகர்கள் மீது ஜனாதிபதி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கே: அரசாங்கம் சரியான பாதையில் செல்ல வேண்டுமாயின் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து சில மாற்றங்களுடன் 19 ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டு வர வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இது பற்றிய உங்கள் நிலைப்பாடு?

பதில்: அரசியலமைப்பின் 19வது திருத்தத்தின் கீழ் என்ன நடந்தது என்பது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நன்கு தெரியும். அவர் குறித்து நான் கருத்துக் கூறப் போவதில்லை. தனது கட்சியின் ஆதரவாளர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இவ்வாறான கருத்துக்களை கூறி வருகின்றார். முன்னாள் ஜனாதிபதியின் கருத்து அரசாங்கத்திற்குப் பெறுமதியற்றதாகும்.

கே: அரசாங்க ஊழியர்கள், பாதுகாப்புப் படையினர் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்கள் உள்ளடங்கலானவர்களுக்கான 5,000 ரூபா கொடுப்பனவு உள்ளிட்ட 229 பில்லியன் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதி குறித்து என்ன கருதுகின்றீர்கள்?

பதில்: தேவை காணப்படும் காலகட்டத்திலேயே நிதி அமைச்சர் இந்த நிவாரணப் பொதியை அறிவித்தார். அரச ஊழியர்கள் தொடக்கம் சமுர்த்தி பயனாளிகள் வரை சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினருக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, பாதுகாப்புப் படையினர், மாற்றுத்திறனாளி பாதுகாப்பு படை வீரர்கள் மற்றும் மலையக தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோருக்கும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இது அரசின் மிக நல்ல முடிவு. இன்னல்களை எதிர்கொண்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து எதிர்க்கட்சிகள் எப்போதும் கேள்வி கேட்கின்றன. இவையெல்லாம் அரசின் நிவாரணங்கள்.

அரசாங்கம் இறுதி முடிவு எடுத்துள்ளதா?

பதில்: சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் இது குறித்து விவாதிக்கும் என நிதி அமைச்சர் கூடக் கூறியிருந்தார். சர்வதேச நாணய நிதியம் என்பது மற்றுமொரு சர்வதேச அமைப்பாகும். இதேபோல், பல சர்வதேச நாணய அமைப்புகளுடன் அரசாங்கம் கலந்துரையாடுகிறது. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடுவது ஒரு புதிய நிகழ்வு அல்ல என்று நான் நினைக்கிறேன், கடந்த காலத்தில் நாங்கள் அதைச் செய்தோம். எவ்வாறாயினும், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதா இல்லையா என்பது குறித்து அரசாங்கம் முடிவொன்று எடுக்கவில்லை.

கே: தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைக் கோருவது தொடர்பில்

கே: விவசாய அமைச்சர் முன்னர் உறுதியளித்தபடி, நாட்டில் உரத்தட்டுப்பாடு காரணமாக சேதமான பயிர்களுக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்க வேண்டும் எனக் கோரி நாட்டின் பல பகுதிகளில் விவசாயிகள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இது பற்றி விளக்க முடியுமா?

(11ஆம் பக்கம் பார்க்க)

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் 2வது கூட்டத்தொடர் 18 ஆம் திகதி ஆரம்பம்

வார இறுதி
அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் முற்பகல் 10 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும்.

அரசியலமைப்பின் 70 (1) ஆம் பிரிவின்படி பாராளுமன்றக் கூட்டத் தொடரை இடைநிறுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய கடந்த டிசம்பர் 12ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரை ஜனாதிபதி முடிவுக்குக் கொண்டு வந்திருந்தார்.

ஜனவரி 18ஆம் திகதி புதிய பாராளுமன்ற கூட்டத்தொடரின் ஆரம்ப நிகழ்வுகள் முற்பகல் 9 மணிக்கு விசேட அதிதிகளின் வருகையுடன் ஆரம்பமாகின்றன. வழமையாக இடம்பெறும் ஆடம்பரமான நிகழ்வுகள் இன்றி மிகவும் எளிமையான முறையில் ஜனாதிபதிக்குப் பாராளுமன்றத்தில் வரவேற்பு வழங்கப்படும். கூட்டத்தொடர் ஆரம்பத்தில் முதலாவது அமர்வில் முற்பகல் 10 மணிக்கு அதிமேதகு ஜனாதிபதி ஆசனத்தில் அமர்வார். அரசியலமைப்பின் 33 (2) ஆவது பிரிவானது, பாராளுமன்றத்தின் அமர்வு ஒவ்வொன்றினதும் ஆரம்பத்திலும் அரசாங்கக் கொள்கைக் கூற்றை வாசிப்பதற்கும், பாராளுமன்றத்தின் சடங்குமுறையான இருக்கைகளில் தலைமை தாங்குவதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கிறது.

1947 ஆம் ஆண்டு முதல் 50 இற்கும் மேற்பட்ட தடவை பாராளுமன்ற கூட்டத் தொடர்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டின் பின்னர் மாத்திரம் 26 தடவைக்கு மேல் கூட்டத்தொடர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆளுநர் சேர். கென்றி மொங் மாசொன் மூர் தலைமையில் முதலாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரானது வைபவரீதியாக 1947 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 14 ஆம் திகதி அன்று ஆரம்பிக்கப்பட்டது. இங்கு ஆளுநர் அவர்களின் சிம்மாசன உரை இடம்பெற்றது.

இரண்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது அமர்வில் இரண்டாவது எலிசபெத் மகாராணி அவர்களினால் 1954 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 12 ஆம் திகதி வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டு. இங்கு மகாராணியின் சிம்மாசன உரை அரசாங்கத்தினால் சபையில் வாசிக்கப்பட்டது. அதன் பின்னரான காலப் பகுதியில் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர்கள் வைபவ ரீதியாகவும், வைபவ ரீதியற்ற முறையிலும் ஆரம்பிக்கப்பட்ட பல சந்தர்ப்பங்கள் உள்ளன.

1978 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 7 ஆம் திகதி புதிய அரசியல் யாப்பு பிரகடனப்படுத்தப்பட்டதன் மூலம் ஜனாதிபதியின் சிம்மாசன உரைக்குப் பதிலாக அரசின் கொள்கைப் பிரகடன அறிக்கை வாசிக்கப்படும். தற்பொழுது அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையாகவே தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டு வருகிறது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி ஏற்றதன் பின்னர் முடிவுக்குக் கொண்டு வந்த இரண்டாவது பாராளுமன்றக் கூட்டத் தொடராக இது காணப்படுகிறது. இதற்கு முன்னர் எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை அவர் முடிவுக்குக் கொண்டு வந்து நான்காவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இந்த நிலையில் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் புதியதொரு எதிர்பார்ப்புடன் ஆரம்பமாகவுள்ளது. கொவிட்19 சவால்களை ஒட்டியதாக நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரப் பின்னடைவு உள்ளிட்ட அனைத்து சவால்களையும் சமாளிப்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் வேலைத்திட்டங்களுக்குப் புத்துயிர் அளிக்கும் வகையில் ஜனாதிபதியின் இந்தக் கொள்கைப் பிரகடன உரை அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2022ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து கூட்டத்தொடரை ஜனாதிபதி முடிவுக்குக் கொண்டு வந்திருந்தார். திடீரென பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமை தொடர்பில் பல்வேறு கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு வந்தன.

பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கு அமைய கூட்டத்தொடர் ஒன்று முடிவுக்குக் கொண்டு வரப்படும் பட்சத்தில் கோப், கோபா, அரசாங்க நிதி பற்றிய குழு போன்ற பல்வேறு குழுக்களும் கலைக்கப்படும். கோப், கோபா குழுக்களின் விசாரணைகளினால் அரசாங்கத்துக்குப் பல அசௌகரியங்கள் ஏற்பட்டிருப்பதாகவும், எனவே குறித்த குழுக்களின் தலைவர்களை மாற்றுவதை நோக்காகக் கொண்டே கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் எதிர்க் கட்சியினர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

இருந்தபோதும் ஆளும் தரப்பின் அமைச்சர்கள் பலரும் இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளனர். அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் குறித்து தேவையற்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருப்பதால் அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடன உரையை பாராளுமன்றத்தில் முன்னெடுப்பார் என அரசாங்கத் தரப்பில் கூறப்படுகிறது.

குறிப்பாக பொருளாதார ரீதியில் நாடு எதிர்கொண்டிருக்கும் சவால்களுக்கு மத்தியில் சரியான பாதையில் பொருளாதாரத்தை முன்கொண்டு செல்ல 2022ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டம் கடந்த டிசம்பர் மாதம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது. வரவுசெலவுத் திட்டத்துக்கு அப்பால் மக்களுக்குப் பல்வேறு நிவாரணங்களை கடந்த சில தினங்களுக்கு முன்னர் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அறிவித்திருந்தார். இவ்வாறான பின்னணியில் அரசாங்கத்தின் எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்கள் குறிப்பாக தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ள செயற்பாடுகளை ஜனாதிபதி மக்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் தெளிவாக விளக்கமளிப்பார்.

டொலருக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டின் காரணமாக உருவாகியுள்ள விலைவாசி அதிகரிப்பு போன்ற விடயங்களால் மக்கள் அதிருப்தியடைந்திருக்கும் சூழலில், அரசாங்கத்தின் அனைத்து வேலைத் திட்டங்களையும் விமர்சிக்கும் முயற்சிகளே எதிர்க்கட்சியினரால் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் அரசின் கொள்கைத் திட்டங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் தேவையற்ற குழப்பங்கள் நிலவுகின்றன. இவ்வாறான குழப்பங்களைத் தீர்த்து, அரசாங்கம் எதிர்வரும் காலத்தில் முன்னேறிச் செல்லவிருக்கும் பாதை தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டை மக்களுக்கு முன்வைப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை எடுத்திருப்பதாகத் தெரிகிறது.

புதியதொரு ஆண்டில் தமது கொள்கைத் திட்டங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்திக் கொடுத்து, மக்கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பையும் பெற்று தற்போதைய சவால்களை வெற்றி கொள்வதற்கான யோசனைகளை ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடன உரையின் மூலம் முன்வைப்பார் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

நாட்டின் எதிர்காலத்தை நோக்காகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சேதனப் பசளைப் பயன்பாடு உள்ளிட்ட அரசாங்கத்தின் தொலைநோக்கிலான வேலைத் திட்டங்கள் பல எதிர்க்கட்சியினரால் பிழையாக அர்த்தப்படுத்தப்பட்டு மக்கள் மத்தியில் குழப்பங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், கொவிட்19 தொற்றுநோயிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் வேலைத் திட்டங்களுக்கு எதிர்க் கட்சியிலிருந்து எவ்விதமான ஆதரவுகளும் வழங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து முன்வைக்கவுள்ள கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவார்.

அதேநேரம், ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்தை எதிர்க் கட்சிகள் கோரியுள்ளன. இதற்காக எதிர்வரும் 19ஆம், 20 ஆம் திகதிகளில் நேரத்தை ஒதுக்குவதற்கு சபாநாயகர் தலைமையில் கூடிய விசேட கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர். ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பில் விவாதத்தைக் கோரும் சம்பிரதாயம் இதற்கு முன்னரும் இடம்பெற்றுள்ளன. இந்த வரிசையிலேயே 18ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பிலும் விவாதம் கோரப்பட்டுள்ளது.

அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி ஜனாதிபதி கொள்கைப் பிரகடன உரை

கொவிட்-19 தொற்றுநோயிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் வேலைத் திட்டங்களுக்கு எதிர்க் கட்சியிலிருந்து எவ்விதமான ஆதரவுகளும் வழங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து முன்வைக்கவுள்ள கொள்கை பிரகடன உரையில் ஜனாதிபதி அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவார்

புதிய ஆண்டில் தமது கொள்கைத் திட்டங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்தி, மக்கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பையும் பெற்று தற்போதைய சவால்களை வெற்றி கொள்வதற்கான யோசனைகளை ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடன உரையின் மூலம் முன்வைப்பார் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்தை எதிர்க் கட்சிகள் கோரியுள்ளன. இதற்காக எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் நேரத்தை ஒதுக்குவதற்கு சபாநாயகர் தலைமையில் கூடிய விசேட கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்

நெருக்கடிகள் காரணமாக தோட்டங்களில் இருந்து வெளியேறுவது எமது இருப்பையே கேள்விக்குள்ளாக்கும்!

‘ ரஜினிகாந்த் ஒரு திரைப்படத்தில், மாப்பிள்ளை இவருதான். ஆனால் போட்டிருக்கிற உடுப்பு என்னுடையது என்று சொல்வார். அதுபோலவே இந்திய வீடுகள் மலையக மக்களுடையவைதான். ஆனால் அவை அமைந்துள்ள காணி அவர்களுடையது அல்ல. காணியுடன் வீடும் சொந்தமாக அளிக்கப்பட்டால் தான் அது குடியுரிமையின் அடையாளமும், அந்தஸ்தும் அதிகாரமாகவும் அமையும் ’

‘ இங்கு ஆளணிக்கான பாரிய வெற்றிடம் ஏற்படுவது திண்ணம். இது விரும்பத்தக்க ஒன்றல்ல. இந்நிலை தொடருமானால் மலையகம் என்னும் அடையாளம் சிறுகச்சிறுக சிதை வடைந்து போவதைத் தடுக்கவே இயலாது. இதுவே இனவாதிகளின் எதிர்பார்ப்பு. எற்கனவே 7 பேர்ச் காணி சொந்தமாகக்கப்படுவதைக் கண்டித்த சக்திகள் இவை. தலைமுறை தலைமுறையாக வந்தேறு குடிகளாக இச்சமூகம் இருக்க வேண்டும் என்பதே இவர்களின் ஆசை’

எந்தவொரு இனத்தினதும் சமூக அடையாளங்களாக கலை, கலாசார, மொழியியல் வெளிப்பாடும் அதன் பின்புலமாக நிலமும் நிலம் சார்ந்த வதிவிடமும் விளங்குவது இன்றியமையாதது. அதில் நிலவுடைமை என்பது தேசிய அந்தஸ்துக்கான அளவுகோல் என்று பதிவிடுகின்றார் எழுத்தாளர் மு.சிவலிங்கம்.

இன்று தினக்கூலி சமூகமாகவும் மண்ணுரிமை முகவரியற்ற மக்கள் கூட்டமாகவும் வாழும் மலையக மக்கள் இந்த அளவுகோலின் அடிப்படை அம்சத்தைக்கூட தக்கவைக்க முடியாதவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

இன்று பெருந்தோட்ட தேயிலை உற்பத்தி என்பது பாரிய வீழ்ச்சி நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. தேயிலை தரத்திலும் சரிவு. இதனால் சர்வதேச தேயிலைச் சந்தையில் சவாலுக்கு மேல் சவால்கள். இதற்குக் காரணம் தோட்டத் தொழிலாளர்கள் அல்ல என்பது மட்டும் நிச்சயம். 23 தனியார் கம்பனிகளும் அரசு தரப்பின் கீழ் நிர்வாகம் செய்யும் அமைப்புகளும் சகட்டுமேனிக்கு இத்துறையை அல்லோல கல்லோலப்படுத்திக் கொண்டிருக்கின்றன. முறையான பராமரிப்பு இன்றி தேயிலைக் காணிகள் காடுகளாகி வருகின்றன. அடுத்துவரும் தலைமுறை இத்துறையை அண்டிவிடாதபடி அதன் செயற்பாடுகள் இருக்கின்றன.

உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லை. உயிருக்கு உத்தரவாதம் கிடையாது. பாதுகாப்பு நடைமுறைகள் எதுவும் கையாளப்படுவது இல்லை. மேலதிக வருமானம் தேடிக் கொள்ள மாற்று வழிமுறைகள் ஏதும் இனம் காணப்படவில்லை. விவசாயம் செய்யலாம் என்றால் நிலவசதி இல்லை. இது 200 வருடகால வரலாறு கற்பித்துக் கொண்டிருக்கும் யதார்த்தம். இதில் மாற்றம் காண எதுவுமே செய்ய லாயக்கில்லாத தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளும் சுய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள மட்டுமே போராடிக் கொண்டிருக்கின்றன. கரிசனை காட்ட வேண்டிய ஆட்சிக்கு வரும் அனைத்துத் தரப்பும் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தான் நடந்து கொள்கின்றன.

சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் மீது காட்டப்படும் பச்சாதாபம் பரம்பரை பரம்பரையாக பாடுபடும் பாட்டாளி சமூகத்தின் பால் காட்டப்படுவது இல்லை. இன்றைய நிலையில் குறுந்தேயிலை விவசாயிகள் உற்பத்தியில் சாதனை படைப்பது என்னவோ உண்மைதான். அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டியதும் சரிதான். அதேநேரம் உற்பத்திக்கு ஆதாரமாக இருப்பவர்களை அலட்சியப்படுத்துவது என்ன நியாயம்?

1973களிலேயே சிறுநில தேயிலை உற்பத்தியாளர்கள் என்னும் பிரிவு உதயமானது. தேசியமயம் என்ற பெயரில் தனியார் வசமிருந்த அனைத்துத் தோட்டங்களையும் அரசாங்கமே சுவீகாரம் செய்தது. இதில் ஆங்கிலேயருக்கும் தமிழருக்கும் சொந்தமான தோட்டங்களும் அடக்கம். இது உள்நோக்கம் கொண்ட செயற்பாடாகவே இன்னும் கருதப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் நலன் கருதி ஆயிரக்கணக்கான ஹெக்டெயர் நிலப்பரப்பு துண்டாடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டன. இதன் மூலம் தோற்றம் பெற்றவர்களே சிறுதோட்ட உரிமையாளர்.

இதர சமூகத்துக்குக் காணிப்பகிர்வு இடம் பெற்றபோது அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் மலையக மக்கள் குறித்து மருந்துக்கும் யாருமே கவலைப்படவில்லை, கவனமெடுக்கவும் இல்லை. இவ்வாறு பெருந்தொட்டக் காணிகள் கையகப்படுத்துவதை எதிர்த்து மக்கள் நடவடிக்கைகளில் ஈடுபடவே செய்தார்கள். இதன் முதலாவது பதிவு 1942களில் கேகாலை மாவட்டம் புளத்கொஹுபிட்டிய தோட்டத்திலேயே இடம்பெற்றது. 500 ஏக்கர் தேயிலைக் காணியை அபகரிக்க எடுக்கப்பட்ட முயற்சி. காணி கபளீகரத்தை எதிர்த்து 1970களில் நுவரெலியா மாவட்டம் டெவன் தோட்டத்தைச் சேர்ந்த சிவனு இலட்சுமணன் உயிர்த்தியாகம் செய்தமை உச்சத்தைத் தொட்டது.

ஆனால் அவ்வப்போது ஆட்சிபீடம் ஏறுபவர்கள் பார்வை என்னவோ பெருந்தோட்டக் காணிகளைப் பறித்து எடுப்பதிலேயே விழுகின்றன. இதேநேரம் பெருந்தோட்ட மக்களுக்கு குறைந்த பட்சம் 20 பேர்ச் காணியைப் பெறும் உரிமை இருக்கின்றது என்பதே ஆய்வாளர்களின் கருத்து. இதற்காக காணி சீர்திருத்தச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ் வாய்ப்பு இருக்கின்றது. நகரசபை, பிரதேச சபை விதிகளுக்கமையவும் காணி விநியோகம் செய்ய இடமிருக்கின்றது. ஆனால் மனம்தான் இல்லை. இதனால் வாய்ப்புகள் மறுதலிக்கப்படுகின்றன. எனவேதான் தமது இருப்பிடங்களை தக்கவைத்துக் கொள்ளக்கூட போராட வேண்டிய இக்கட்டான நிலையில் இம்மக்கள் காணப்படுகின்றார்கள்.

பன். பாலா ...✍

இன்று இம்மக்களின் தனிவீட்டுத் திட்டத்துக்காக தலா 7 பேர்ச் நிலம் மட்டுமே ஒதுக்கப்படுகின்றது. கம்பனி தரப்பின் இறுக்கமான போக்கால் ஏராளமான இடையூறுகள். தவிர ஒரு தரப்பை பிறிதொரு தரப்பு குறை சொல்லும் போக்கே காணப்படுகின்றது. குடுமிப்பிடி சண்டைகள் வேறு. முன்னைய ஆட்சி மலையக மக்களின் தனிவீட்டுத் திட்டத்துக்காக 7 பேர்ச் காணி என்று அறிவித்தபோது இது எம்மாத்திரம் என்று ஏளனம் செய்தது இ.தொ.கா. அன்று அமரர் ஆறுமுகன் தொண்டமான் இருந்தார். இன்று அவர் மகன் ஜீவன் தொண்டமான் இருக்கிறார். அவரும் 7 பேர்ச் காணி எந்த மூலைக்கு என்று எள்ளி நகையாடுகிறார். எனவே அவர் தனி வீட்டுத் திட்டத்துக்காக 20 பேர்ச் காணியைப் பெறுவதோடு அதை உரிமையாக்கியும் தருவாரா?

உண்மையில் 7 பேர்ச் காணி என்பது போதுமானதல்ல என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. இதைவிட அதிகமான நிலப்பரப்பில் இம்மக்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். ஏற்கனவே கம்பனி நிர்வாகங்கள் இதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தவே செய்கின்றன. 7 பேர்ச் மட்டுமே இவர்களுக்குச் சொந்தமென்றானால் மக்கள் பயன்படுத்தும் விவசாய காணிகளை மீள ஒப்படைக்குமாறு கம்பனி தரப்பு கோரினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இதேவேளை அரசாங்க காணியிலோ பெருந்தோட்டக்கம்பனிகள்கைவசமுள்ளகாணியிலோ வீடுகள் அமைக்கப்பட்டால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை. காணியும் வீடும் சட்டப்படி சொந்தமாக்கப்படல் வேண்டும். அப்படி நடந்தால் மட்டுமே நிலவுடைமை என்ற கனவு மெய்ப்படுத்தும். சமூக ஆய்வாளர் மு. சிவலிங்கம் கூறுவதுபோல தேசிய அந்தஸ்துக்கான அளவுகோல் ஸ்திரப்படும்.

இளம் தலைமுறையினர் தோட்டத் தொழில் மீது ஈடுபாடு காட்ட விரும்பவில்லை. இதனிடையே வகை தொகையின்றி பலர் வெளியிடங்களை நோக்கி வேலைதேடி ஓட வேண்டிய நிர்ப்பந்தம். இங்கு ஆளணிக்கான பாரிய வெற்றிடம் ஏற்படுவது திண்ணம். இது விரும்பத்தக்க ஒன்றல்ல. இந்நிலை தொடருமானால் மலையகம் என்னும் அடையாளம் சிறுகச்சிறுக சிதைவடைந்து போவதைத் தடுக்கவே இயலாது. இதுவே இனவாதிகளின் எதிர்பார்ப்பு. எற்கனவே 7 பேர்ச் காணி சொந்தமாகக்கப்படுவதைக் கண்டித்த சக்திகள் இவை. தலைமுறை தலைமுறையாக வந்தேறு குடிகளாக இச்சமூகம் இருக்க வேண்டும் என்பதே இவர்களின் ஆசை.

இந்தியாவை நம்பி நம்பியே நாசமாகிப் போனது மலையக மக்களின் எதிர்காலம். இந்தியாவிலிருந்து அன்று அடிமைத் தொழிலாளர்களாக பல நாடுகளுக்கும் ஆங்கிலேயரால் அழைத்துச் செல்லப்பட்டவர்களின் தலைமுறையினருக்கு ஏதாவது இடையூறு என்றால் தட்டிக்கேட்கத் தயங்காத இந்தியா, இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களின் நலன் குறித்து கிஞ்சித்தும் கரிசனை காட்டியதே இல்லை. இன்று 14 ஆயிரம் வீடுகளை அமைக்க நிதி உதவி வழங்கும் இந்திய நாடு அதற்கான நிலம் உரித்தாக்கப்படுவது பற்றி பேசியதே இல்லை. ஒரு திரைப்படத்தில் ரஜினி சொல்லுவார் மாப்பிள்ளை இவருதான், ஆனால் அவர் போட்டிருக்கிற உடுப்பு என்னோடது என்று. இதேபோலவே வீடமைப்பு விவகாரமும். வீடு உங்களுடையது ஆனால் அது அமைந்திருக்கும் நிலம் எங்களுடையது என்னும் நிலை.

நிலமும் வதிவிடமும் சட்டப்படி உரித்தாக்கப்பட வேண்டும். இதுவே புத்திஜீவிகளின் வலியுறுத்தல். இதனை உறுதி செய்வதற்கு உந்துசக்தியாக பெருந்தோட்ட மக்களின் வெளியேற்றம் தடுத்து நிறுத்தப்படுவது முக்கியம். இத்துடன் பெருந்தோட்டப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு தொழில் பேட்டைகளை அமைப்பதால் இளைஞர் சமூகத்தை எளிதாக ஈர்த்துக்கொள்ள இயலும். இடப்பெயர்வுகளையும் கட்டுப்படுத்தலாம். சமூக மாற்றத்தின் அடையாளம் தோட்டங்களை விட்டு வெளியிடங்களுக்கு புலம் பெயர்தலாக இருக்கவே முடியாது. இதனை மலையக இளைஞர்கள் புரிந்துகொண்டு செயற்பட வேண்டியது காலத்தின் தேவை.

மலையகக் கல்வி மறுமலர்ச்சி ஒரு பாய்ச்சலுக்கு தயாராக வேண்டும்

‘ அரசாங்கத்தின் கொள்கை மாற்றங்கள் தொடர்ந்து சிறுபான்மையினருக்குச் சாதகமாக அமையாதபோது பாரிய நெருக்கடிகளை எதிர்காலத்தில் சந்திக்க நேரிடலாம் ’

‘ தங்களுடைய கட்சியின் செல்வாக்கு எந்தப் பிரதேசத்தில் அதிகமாக இருக்கின்றதோ, அந்த பிரதேச பாடசாலைகளையாவது அபிவிருத்தி செய்தாலே மலையகப் பாடசாலைகள் ஓரளவு வளர்ச்சி பெற்றுவிடும் ’

மலையக சமூகத்திற்கு கிடைக்க வேண்டிய கல்வி வாய்ப்புக்கள் இலங்கை சுதந்திரமடைந்து 30 வருடங்களுக்கு பின்னரே கிடைத்தது. இக்கல்வியின் வாய்ப்புக்களை மலையகம் முழுமையாக பயன்படுத்திக் கொண்டதா என்பதை பின்நோக்கிப் பார்த்தால் இன்னும் பூரணமாக பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை அறியலாம். இம்மக்கள் ஒரு காலத்தில் மூன்றாவது தேசிய இனமாக இருந்திருக்கின்றார்கள்.

இவர்களுக்கு பல சந்தர்ப்பங்களில் கல்வி வாய்ப்புக்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் கூட இன்று ஓரளவு நிலைமைகள் மாறிவருகின்றன. எனவே இந்த சந்தர்ப்பத்திலாவது மலையக கல்வி அபிவிருத்திக்காக ஒரு கல்விப் புரட்சியை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இப்புரட்சியை ஆரம்பிப்பது யார்? எங்கிருந்து தொடங்குவது? இது யாருடைய பொறுப்பு? எனப் பல்வேறு கேள்விகள் எம் மத்தியில் இருந்தாலும் கூட மலையகத்தில் ஒரு கல்விப் புரட்சியை அல்லது மறுமலர்ச்சியை உடனடியாக உருவாக்க வேண்டும் என்பது மட்டும் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது.

இன்று இலங்கையில் வாழும் ஏனைய சமூகங்களோடு ஒப்பிடும்போது மலையக மக்கள் பொதுக் கல்வி, உயர் கல்வி, பல்கலைக்கழக கல்வி, சுகாதாரம், சௌக்கியம், அரசாங்கத் தொழில் வாய்ப்புகள், சுயதொழில் வாய்ப்புகள், சிறுவர் போஷணை, வீடமைப்பு, சமூக நலன்கள், நிலவுரிமை, போக்குவரத்து, தொழில்பயிற்சிகள், சிறுவர் உரிமைகள், சிறுவர் பராமரிப்பு, தாய் சேய் நலன், சம்பள உயர்வு, சமூக உரிமைகள், கலை கலாசார பண்பாட்டு விழுமியங்கள், அரசியல் உரிமைகள், சமூக பொருளாதார காரணிகள், வாழ்க்கைத் தரம், விளையாட்டு என அனைத்து விடயங்களிலும் தேசிய மட்டத்தைவிட பின்தங்கிய நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். ஒரு சமூகத்தின் கல்வி வளர்ச்சி பின்தங்கிய நிலையில் இருக்கும்போது மேற்கூறிய அனைத்து பிரச்சினைகளும் ஒரு நச்சு வட்டத்தைப் போன்று தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த 21 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழும் ஏனைய சமூகங்களும் உலக மாற்றத்திற்கு ஏற்ப தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். எனவே மலையக சமூகமும் ஏனை சமூகங்களோடு போட்டிப் போட்டு வாழ்வதற்கு தங்களை தயார்படுத்திக் கொள்ளவேண்டும். அத்துடன் உலக மாற்றத்திற்கேற்ப தங்களை முன்னேற்றிக் கொண்டு வாழ்கின்ற ஒரு வாழ்வியல் கலாசாரத்தை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

தங்கி வாழ்கின்ற கலாசாரத்தை முற்றாக விடுவதற்கு முயலவேண்டும். இனியும் நாம் அரசாங்கத்திடம் அதிகமான சலுகைகளைத் தொடர்ந்து எதிர்பார்க்க முடியாது. அரசாங்கத்தின் கொள்கை மாற்றங்கள் தொடர்ந்து சிறுபான்மையினருக்குச் சாதகமாக அமையாதபோது பாரிய நெருக்கடிகளை எதிர்காலத்தில் சந்திக்க நேரிடலாம்.

மலையகத்தின் வரலாறு 200 வருடங்களை கடந்த போதும் இன்று வரையும் மலையகத்திற்கென ஒரு கல்வி அபிவிருத்திக்குழு முறையாக உருவாக்கப்படவில்லை. சில கட்சிகளின் முயற்சியால் தேர்தல் காலங்களில் சில புத்திஜீவிகளை அழைத்து கலந்துரையாடலை நடாத்தி சில விடயங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் தேர்தலின் பின்னர் அவை கைவிடப்பட்டு விடுவதே வழமை.

மலையகச் சமூகத்தை சேர்ந்த புத்திஜீவிகளான, வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், இலங்கை நிருவாக சேவை தரம் 1, 11, 111 உத்தியோகத்தர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அதிபர்கள், தொழில்தருனர்கள், மற்றும் அரச துறை உத்தியோகஸ்தர்கள், சமூகத்தை வழிநடத்தக் கூடிய சமூகத் தலைவர்கள் போன்றோர் மலையகச் சமூகம் இன விகிதாசாரத்திற்கேற்ப உருவாக்கியுள்ளதா? என்பதை பார்க்கும்போது இன்னும் நாம் குறைவான மட்டத்திலேயே இருக்கின்றோம் என்பது மட்டும் உண்மை.

இனிமேலும் தாமதிக்காது மலையக அரசியல் கட்சிகள், தமக்கு கிடைக்கின்ற நிதியில் ஒரு குறிப்பிட்ட தொகையை கட்சி, ஜாதி, மதம், பிரதேசம் போன்ற பேதங்களை பார்க்காது மலையகத்தின் கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்க வேண்டும்.

இதன் மூலமாக ஒரு புதிய வேலைத் திட்டத்தை ஏற்படுத்தி மலையகத்தில் ஒரு கல்வி மறுமலர்ச்சியை (புரட்சியை) ஏற்படுத்த வேண்டும். 2015ஆம் ஆண்டை மலையகத்தின் கல்வி ஆண்டாக பிரகடனப்படுத்தி ஒரு வேலைத்திட்டத்தை அனைவரும் சேர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

மலையகத்தில் கல்வித் துறைக்கான ஒரு பொது தகவல் வளநிலையம் இதுவரை உருவாக்கப்படவில்லை. உதாரணமாக, மலையகத்தைச் சேர்ந்த எத்தனை மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இருக்கின்றார்கள் என்பதற்கு கூட சரியானத் தகவல்கள் இல்லை. இதேபோல் பாட ரீதியான ஆசிரியர்களின் விபரங்கள், பாடங்களுக்கு பற்றாக்குறையான ஆசிரியர்களின் விபரங்கள், இடைவிலகிய மாணவர்கள், பாடசாலைக்குச் செல்லாத மாணவர்கள், தொழிலற்றவர்கள், வெளிநாட்டில் வேலை செய்வோரின் விபரங்கள், மலையகப் பாடசாலைகளின் தனிப்பட்ட வளர்ச்சிக்கான பதிவுகள், உயர்கல்வி பெற்றவர்களின் தகவல்கள் போன்ற எந்த விடயங்களுக்கும் முறெளயன பதிவுகள் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இரா. சிவலிங்கம் ...✍

ஆனால் இலங்கையில் ஏனைய சமூகங்களில் இவ்விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருவதை நாம் உணர வேண்டும். மலையக மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கென அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் பல மில்லியன் ரூபா முறையான திட்டங்கள் வகுக்கப்படாததால் மீண்டும் திரைசேரிக்கு செல்கின்ற துர்ப்பாக்கிய நிலை தொடர்கின்றன.

இந்த விடயங்களுக்கு அரசாங்கத்தையோ, மக்களையோ குறைசொல்ல முடியாது. இதன் முழுப் பொறுப்பையும் சம்மந்தப்பட்டவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்று எம் மத்தியில் பிரதேச சபை, மாகாண சபை, பாராளுமன்ற அமைச்சர்கள், பாராளுமன்ற பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற போதிலும் இருப்பினும் இன்னும் போதியளவு தேசியப் பாடசாலைகள், மலையகத்திற்கான பொதுநூலகம், மலையகத்திற்கான பல்கலைக்கழகம் உருவாக்கப்படவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது.

இன்றைய மலையகக் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டவர் சௌமியமூர்த்தி தொண்டமானே. தொடர்ந்து அவரின் கனவை நனவாக்க வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும். மலையகப் பிரதேச பாடசாலையின் மனித பௌதிக தேவைகளை பொருத்தமானவர்களை நியமித்து அவர்களின் ஊடாக ஆய்வு செய்த பின்னர் அதற்கேற்ப தங்களுடைய வேலைத்திட்டங்களை குறிப்பிட்ட வருடத்தில் முன்னெடுக்க வேண்டும். சகல மலையக குழுக்களும் (கட்சிகளும்) கல்வி அபிவிருத்திக்குப் போட்டி போட்டுக் கொண்டு வேலைத்திட்டங்களைச் சேய்வதற்கு முன்வர வேண்டும். குறிப்பாக தங்களுடைய கட்சியின் செல்வாக்கு எந்தப் பிரதேசத்தில் அதிகமாக இருக்கின்றதோ, அந்த பிரதேச பாடசாலைகளையாவது அபிவிருத்தி செய்தாலே மலையகப் பாடசாலைகள் ஓரளவு வளர்ச்சி பெற்றுவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

இனிவரும் காலங்களில் குறைந்த வெட்டுப் புள்ளியை தேசிய பரீட்சைகளில் எதிர்பார்க்காத நிலை உருவாக்கப்பட வேண்டும். உதாரணமாக, ஸ்ரீபாத தேசியக் கல்வியற் கல்லூரிக்கு கூட எதிர்வரும் காலங்களில் பட்டதாரிகள் மட்டுமே உள்வாங்கப்படுவார்கள் என்ற நிலைப்பாடுகள் அரசாங்கத்தால் கொண்டு வரப்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது எமது சமூக மாணவர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

ஒரு சமூகத்தின் விடியலுக்கு கல்வி முக்கியம். அத்துடன் ஒரு சமூகத்திற்கு இருக்கின்ற பழிச்சொல்லில் இருந்தும் நாம் விடுபட வேண்டும். பின்தங்கிய ஒரு சமூகத்தின் சமூக இடம்பெயர்வுக்கு கல்விதான் அடித்தளம் அதனை உருவாக்குவதற்கு மலையகம் சார்ந்த அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா அமைப்பாளராக கிருஸ்ணசாமி சந்திரசேகரன்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா அமைப்பாளராகவும், ஊடக செயலாளராகவும் மற்றும் முகாமையாளராகவும் முன்னாள் நுவரெலியா மாநகர பிரதி முதல்வர் கிருஸ்ணசாமி சந்திரசேகரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனத்தை முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன வழங்கிவைத்தார்.

நுவரெலியாவைச் சேர்ந்த சந்திரசேகரன் குருத்தலாவ சென். தோமஸ் கல்லூரியின் பழைய மாணவன். இவர் கடந்த 2002ஆம் ஆண்டு முதன் முறையாக நுவரெலியா மாநகர சபையின் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து கடந்த 2006 ஆம் ஆண்டு நுவரெலியா மாநகர சபை பிரதி நகர முதல்வராக தெரிவுசெய்யப்பட்டார். கடந்த 2011ஆம் ஆண்டு நுவரெலியா மாநகரசபையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அன்று ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் மூன்று உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அந்த மூவரில் சந்திரசேகரும் ஒருவராக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் கடந்த 2003 ஆம் ஆண்டு நுவரெலியா மாநகர சுகாதார பிரிவில் சிகிச்சை பெற வருகை தரும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு தனது சொந்த செலவில் சத்துள்ள உணவு (பசும்பால், கடலை, பயறு) வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்த்து வைத்தார். இத்திட்டம் இன்றும் நடைபெற்று வருகின்றது.

அதேபோல நுவரெலியா மாநகரசபை எல்லைக்குள் உள்ள ஐந்து பெருந்தோட்டங்களிலுமுள்ள லயன் வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர்களுக்கு தனித்தனியாக நுவரெலியா மாநகரசபையால் வழங்கப்படும் குழாய் குடிநீர் விநியோகம் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்.

சிறந்த சமூக சேவையாளரான இவர், நுவரெலியா ஹாவா எலிய ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய சீத்தா எலிய சீதையம்மன் ஆலய பரிபாலன சபை மற்றும் நுவரெலியா இந்து கலாசார பேரவை என்பவற்றின் ஆயுட்கால உறுப்பினராவார். இவர் நுவரெலியா கால்பந்தாட்ட லீக்கிலும் உபதலைவராக இருந்து கால்பந்தாட்ட வீரர்களை ஊக்குவித்துள்ளார்.

இவர் நுவரெலியா மாநகர சபை பிரதி நகர முதல்வராக இருந்த காலத்தில் ஜப்பான் நாட்டு கிரவுன் கோல்ப் கழகத்தின் ஆதரவுடன் இலங்கையில் முதன் முறையாக கிரவுன் கோல்ப் விளையாட்டை ஆரப்பித்து வைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாரளையூரான் ...✍

மட்டக்களப்பு நிர்வாகம் மாற்றி அமைக்கப்பட வேண்டும்

அரச அதிபர் முதல் பிரதேச செயலர் வரை மாற்றம் அவசியம் என்கிறார் ஹாபிஸ் நஸீர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான **ஹாபீஸ் நஸீர் அஹமட்** தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு தற்போது அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி வருகின்ற ஹாபீஸ் நஸீர் அஹமட் தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய செவ்வி.

கேள்வி : ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தற்போது அரசாங்கத்தின் பக்கம் வந்து விட்டீர்கள். இதனால் உங்களால் சாதிக்க முடிந்தது என்ன?

பதில் : எப்போதும் இல்லாதவகையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அமைந்திருந்தது. இந்நிலையில் பாரிய நெருக்கடியான காலகட்டத்திற்குள் முஸ்லிம் மக்கள் உள்ளார்கள். 1983 கலவரத்திற்கு முன்னரும், அதன் பின்னருமாக தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட நிலை போல், 2019ம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு வெடிப்புக்கு முன்னரும், அதன் பின்னருமாக முஸ்லிம் மக்களின் நிலை தொடர்பில் பார்க்கலாம். பாரிய வெறுக்கப்படக்கூடியதொரு ஆபத்தானதாக இருந்த காலகட்டத்தில், எமது அரசியல் தீர்மானங்களை நாங்கள் எடுக்க வேண்டிய காலகட்டத்தில் இருந்தோம். இதனைவிடவும் வெறுப்பான, கசப்பான சூழலை குறிப்பாக, வடகிழக்கிற்கு வெளியே இருக்கின்ற முஸ்லிம் மக்கள் கடக்க வேண்டியிருந்தது. அது மாத்திரமல்லாமல் முஸ்லிம்களுக்கு விரோதமான குறிப்பாக மதரசா, பள்ளிவாசல்களைக் குறைத்தல், பர்தா, புர்க்கா, உள்ளிட்ட பல விடயங்களைக் கருத்திற்கொண்டு பல சட்டங்கள் கூட இயற்றப்பட்டிருக்கலாம். காணிப்பிரச்சினை, எல்லை நிர்ணயம், ஜனாசாக்களை அடக்கம் செய்தல் போன்றவற்றை கருத்திற்கொண்டுஅரசாங்கத்தை ஒரு நடுநிலைக்குக் கொண்டு வரவேண்டிய பொறுப்பும் எமக்குள்ளது. அதைத்தான் நாங்கள் செய்துள்ளோம்.

அபிவிருத்திக்கு அப்பால் உரிமை சார்ந்த விடயங்களை வைத்து இந்த முடிவை எடுத்தேன். அபிவிருத்தி தாமாகவே எப்போதும் வந்துகொண்டே இருக்கும். எதிர்ப்பு அரசியலை இலேசாக மேற்கொள்ளலாம். ஆனால் அதனால் பாதிப்படைவது சமூகம்தான். அதற்குச் செல்லாமல் இராஜதந்திர ரீதியில் ஒரு முடிவை எடுத்துள்ளோம்.

கேள்வி : நீங்கள் அரசுக்கு ஆதரவு வழங்கி வருவதனால் உங்களை கட்சியிலிருந்து நீக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதுதொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?

பதில் : கட்சியின் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளோமே தவிர கட்சியிலிருந்து நீக்கப்படவில்லை. அதற்கு நாங்கள் பதிலளித்துள்ளோம். அதன்படி எமது எதிர்கால நடவடிக்கைகள் தொடரும்.

> **‘ தமிழ் பிரதேசங்களுக்கு முஸ்லிம் பிரதேச செயலாளர்களையும் முஸ்லிம் பிரதேசங்களுக்கு தமிழ் பிரதேச செயலாளர்களையும் ஏன் நியமிக்க முடியாது? என்று கேள்வி எழுப்புகிறார் நஸீர்!’**

கேள்வி : உரிமை அல்லது அபிவிருத்தி சார்ந்த விடயங்களுக்காக அரசுக்கு ஆதரவு தெரிவிக்கின்றீர்கள் என குறிப்பிடுகின்றீர்களே, அவ்வாறானால் இந்த விடயங்களில் உங்கள் கட்சி ஆதரவு நிலைப்பாட்டில் இல்லையா?

பதில் : இது அவரவர் பார்வையைப் பொறுத்தது. ஆனாலும், அரசு பக்கம் நாங்கள் மாறுகின்றபோது கட்சி தலைமையின் அனுசரணையுடன் இத்தீர்மானத்தை எடுத்தோம். கட்சித்தலைமையின் தர்மசங்கட நிலமையையும் நாங்களும் புரிந்துகொண்டு, அவருடைய அனுசரணை மாத்திரமின்றி அவரது முழு அங்கீகாரத்துடன்தான், 20வது திருத்தச் சட்டத்திற்கு வாக்களிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இதனை எனது நாடாளுமன்ற உரையிலும் தெரிவித்துள்ளேன்.

கேள்வி : முஸ்லிம் காங்கிரசிற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குமான உறவு எவ்வாறு உள்ளது.?

பதில் : எங்களுக்கிடையில் எவ்வித முரண்பாடுகளுமில்லை. த.தே.கூட்டமைப்பில் இருக்கின்ற மூத்த சபை உறுப்பினர்களாக இருந்தவர்களும் காணிப் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்கள். எனவே எமது உறவு அன்று தொடக்கம் இன்றுவரை அவ்வாறுதான் இருக்கின்றது.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் திருப்பி அனுப்பப்படும் வரை நான் யாழ்ப்பாணத்திற்குப் போகமாட்டேன் என சிவசிதம்பரம் ஐயா தெரிவித்திருந்தார். அவ்வாறான தலைமைகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்தனர். அது இன்னும் இருக்கின்றது. ஆனால் கூட்டமைப்புக்குள் புதிதாக வந்த ஒரு சிலருக்கு பக்குவம் இல்லை.

> **‘மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோருவதற்கான அருகதை தமிழ் தேசிய கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மக்கள் காங்கிரசுக்கு கிடையாது!’**

உறுப்பினர் சாணக்கியனுக்கு முஸ்லிம் எம்.பிக்களைப் பற்றி நாடாளுமன்றத்தில் பேசுவது வேலை. முஸ்லிம்களை தூரப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் யாரோ அவரை இயக்குகின்றார்கள். முஸ்லிம்களுக்கு காணிப்பிரச்சினை உள்ளது. அதனைத் தீர்க்கவேண்டும் என சந்திரகாந்தன் எம்.பியும் நாடாளுமன்றில் பக்குவமாக தெரிவித்துள்ளார். இதனை சாணக்கியன் எம்.பி, நாங்கள் நாடகம் ஆடுவதாக கொச்சப்படுத்தும் வகையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கேள்வி : முஸ்லிம் மக்களின் இத்தகைய காணிப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?

பதில் : குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இப்பிரச்சினையை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரசியல் தலைமைகள் நினைத்தால் உடனே தீர்த்து விடலாம். பிரதேச செயலகங்களுக்கு முஸ்லிம்கள் யாரும் சென்று தொழில் முயற்சிகளுக்கு காணி கேட்டால், இனவாதமாகப் பார்க்கப்படுகின்ற நிலைமை உள்ளது. இது முற்றிலும் பிழையானது.

கேள்வி : நீங்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்களில் ஒருசில தொழில் பேட்டைகள் அமைக்கப்பட்டன, அங்கு தமிழ் இளைஞர் யுவதிகள் தொழில் செய்தாலும், தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் தொழில் பேட்டை அமைப்பது தொடர்பில் உங்களது முயற்சி தொடர்கின்றதா?

பதில் : நாங்கள் மாகாண சபையில் இருந்தபோது தொழிற்பேட்டை அமைக்கும் திட்டத்தை நீண்டகால நோக்குடன் முன்னெடுத்திருந்தோம். முதலாவது ஏறாவூரில் அமைக்கப்பட்டது. அதில் 90 வீதமானவர்கள் தமிழ் பிள்ளைகள்தான் வேலை செய்கின்றார்கள். அடுத்ததாக சம்மாந்துறையில், தமிழ் முஸ்லிம் எல்லைப் பகுதியிலும், தமிழ் மக்கள் வாழும் மூதூர் பகுதியிலும் அமைத்துள்ளோம். தொடர்ந்து நாங்கள் ஆட்சி செய்திருந்தால் 15 தொழிற்பேட்டைகள் அமைத்திருப்போம். அதற்கிடையில் மாகாணசபை கலைக்கப்பட்டு விட்டது.

கேள்வி : மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

பதில் : மகாணசபைத் தேர்தலை நடாத்துமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் தேசியக்கூட்டமைப்பு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்டோருக்கு அருகதை இல்லை. ஏனெனில் மாகாண சபைகளைக் கலைப்பதற்கு அவர்கள் ஆதரவு தெரிவித்தார்கள்.

இது 13ஆவது திருத்தத்தை அவர்களே குழிதோண்டிப் புதைத்தார்கள். இதனால் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிட்டுள்ளது. இது தொடர்பாக தற்போதைய அரசாங்கத்தைப் பிழை சொல்வதற்கு யாருக்கும் தகுதி இல்லை.

கேள்வி : வருகின்ற மாகாணசபைத் தேர்தலில் நீங்கள் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவீர்களா?

பதில் : அப்போதைய நிலைமைகளைப் பொறுத்துத்தான் முடிவெடுக்க வேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரசும் சரியான புரிந்துணர்வுடன் ஆட்சியமைக்கலாம்.

கேள்வி : கடந்த நல்லாட்சி பற்றி என்ன கருதுகின்றீர்கள்?

பதில் : நல்லாட்சியில் ஏதுவும் நடைபெறவில்லை. யாப்பு மாற்றம் 100 நாட்களில் வரும் என்றார்கள். அந்த ஆட்சியில் எதுவும் நடைபெறாது என்று அதன் பின்னராவது அனவருக்கும் விளங்கியிருக்க வேண்டும்.

கேள்வி : உங்களுக்கு அமைச்சுப் பதவி கிடைக்கவுள்ளதாக கருத்துக்கள் வெளிவருகின்றன. அதன் உண்மைத்தன்மை என்ன?

பதில் : பதவிகளைப் பற்றி நான் ஒரு இடத்திலும் பேசவில்லை, அது தொடர்பில் எந்த அக்கறையும் இல்லை. பதவிகளுக்கு அப்பால் முஸ்லிம்களுடைய இருப்பிட பாதுகாப்பு, உத்தரவாதம் போன்றவற்றைப் பெற்று அதனைப் பலப்படுத்த வேண்டிய தேவை எங்களுக்கு உள்ளது. வெறுமனே ஐக்கிய தேசியக் கட்சி, அல்லது தொலைபேசி சின்னம் என போகவேண்டிய தேவை முஸ்லிம்களுக்கு தற்போதையநிலையில்பொருந்தாத விடயமாகும்.

கேள்வி : மட்டக்களப்பு மாவட்டதிலுள்ள காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்ன செய்யலாம்?

பதில் : மட்டக்களப்பிலுள்ள நிர்வாகம் மாற்றப்படல் வேண்டும். நிருவாகிகள் அவர்களுடைய விடயங்களை மறைப்பதற்கு அரசியல்வாதிகளைப் பயன்படுத்துகின்றார்கள். அனைவரும் காணி வியாபாரம் செய்கின்றார்கள். இன ஐக்கியம் அவசியப்படும் இடத்தில் இனவாதத்தை மூட்டிவிடுகின்றார்கள்.

எனது பார்வையில் அரசாங்க அதிபரிலிருந்து பிரதேச செயலாளர் வரைக்கும் மாற்றம் அவசியம். ஏன் தமிழ் பிரதேசங்களுக்கு முஸ்லிம் பிரதேச செயலாளர்களையும், முஸ்லிம் பிரதேசங்களுக்கு தமிழ் பிரதேச செயலாளர்களையும் நியமிக்க முடியாது. இவ்வாறான மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

நேர்கண்டவர்: வி. சக்திவேல்

உள்ளூராட்சி சபைகளின் நீடிப்பில் உள்ள பின்னணிகள்!

உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் ஒருவருடம் நீடிக்கப்பட்டுள்ளதை அரசாங்கத்தின் பலவீனமாக அல்லது பயமாகப் பார்ப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். இன்றைய நிலைமைகள் சில இவ்வாறு இவர்களை சிந்திக்க வைக்கின்றன. இவ்வாறு ஒருவருடம் நீடிக்கப்பட்டமை இது இரண்டாவது தடவையாகும். 1994 இல் ஒருவருடம் இச்சபைகள் நீடிக்கப்பட்டிருந்தன. அரசாங்கத்தின்வசம் அதிக சபைகள் இருந்தால், தேர்தலை நடத்த முடியாத நிலை நிலவினால் அல்லது தவணைக் காலங்களில் மக்கள் பணிகளை முன்னெடுக்க முடியாதிருந்தால் இவ்வாறு சபைகள் நீட்டப்படுவது வழமை. இது மாகாண சபைகளுக்கும் பொருந்தும். எந்த அனுமதிகோரலோ, சர்வஜன வாக்கெடுப்போ நடத்தாது ஒத்திவைக்கப்படுவது இவையிரண்டும்தான். இருந்தாலும், மாகாண சபைகள் இவ்வாறு நீடிக்கப்பட்டதில்லை.

1987 இல் உள்ளூராட்சி சபை அறிமுகப்படுத்தப்பட்டாலும் 1994 இல்தான் முதலாவது தேர்தல் நடத்தப்பட்டது. நாடு அன்றிருந்த நிலைமை கருதி ஒருவருடம் நீடிக்கப்பட்ட இந்த உள்ளூராட்சி சபைகளுக்கு, அதற்குப் பின்னர் 2006 இல் தேர்தல் நடத்தப்பட்டிருந்தது.

கிழக்கை புலிகளின் பிடியிலிருந்து மீட்டதை சர்வதேசமயப்படுத்தவும், சிவில் நிர்வாகத்தில் அரசுக்கும் மக்களுக்கும் இருந்த ஆர்வத்தை வெளிக்காட்டும் நோக்கிலும்தான், இந்த தேர்தல் 2006 இல் நடத்தப்பட்டது. வடக்கில் இராணுவ நடவடிக்கை முற்றாக முடிவுறாத சூழலில், அன்றைய அரசு இந்த தேர்தலுக்கு அவசரப்பட்டதிலுள்ள அர்த்தம், ஜனநாயகத்தை மக்களிடம் ஒப்படைத்துள்ளதாகக் காட்டும் ராஜதந்திரம்தான்.

இப்போது, ஏன் இச்சபைகளின் பதவிக் காலங்கள் நீடிக்கப்பட்டன? கொரோனா

காலத்தில் இரண்டு வருடங்கள் முடங்கியிருந்த செயற்பாடுகளை முன்னெடுக்கத்தான்.

பொருளாதாரம் வீழ்ந்துள்ள சூழலில், 5092 உறுப்பினர்களுக்கு சம்பளம் வழங்குவதை தவிர்த்து, நிவாரணம் வழங்கலாமே. அரசியற் களத்தில் இப்படியும் சில தர்க்கங்கள்.

எப்படித்தான் பேசினாலும், இச்சபைகள் நீடிக்கப்பட்டதில் சில நியாயங்கள் இருக்கவே செய்கின்றன. மொத்தமாக உள்ள 340 உள்ளூராட்சி சபைகளில், 241 சபைகளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கைப்பற்றியதால், இச் சபைகளை ஒரு வருடமாக நல்லாட்சி அரசாங்கம் கண்டு கொள்ளாதிருந்தது.

ஸ்ரீலங்கா பொதுஜன சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயக கட்சி, தேசிய காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகிய கட்சிகளுக்கும் இந்த சபைகளுக்கும் எந்த தொடர்பும் கிடையாது. 2018 இல் நடந்த இத்தேர்தலில் பெற்றுக்கொண்ட வெற்றியை நினைவூட்டித்தானே உள்ள காலத்தை கடத்த வேண்டும்.

அத்திவாரமும் அடிமட்டமும் உறுதியாக இருப்பதால், அரசாங்கத்தின் கோபுரமும் உறுதியாகத்தானிருக்கும். இதற்காகத்தான் இந்த நீடிப்போ?ஆனாலும், தென்னிலங்கையில் இக்கட்சி வசமுள்ள சபைகள் கவிழ்க்கப்படுவதும் அல்லது உறுப்பினர்கள் விலைபோவதும் அரசாங்கத்தின் பலவீனமா? இல்லை, நல்லாட்சி அரசாங்கம் 2017 இல் அறிமுகப்படுத்திய புதிய சட்டங்களின் குறைபாடுகளா?

விகிதாசாரம் முப்பது வீதம், வட்டாரத்திலிருந்து எழுபது வீதம், இதற்குள் 25 வீதம் பெண் பிரதிநிதித்துவம் என்றெல்லாம், ஜனநாயகத்துக்குள் எண்கணிதத்தை நுழைத்திருப்பதால் வந்தவைதான் இவை.

ஒரு சபையில் இருபது பேரை தேர்ந்தெடுக்க 12 பேரை வட்டாரத்திலும், 08 பேரை விகிதாசாரத்திலும் தெரிகின்றனர். சிறிய கட்சிகளைப் பலப்படுத்தும் இந்த முறையில், ஜனநாயகம் பலமிழப்பது கண்டுகொள்ளப்படவில்லை.

அதிக வட்டாரங்களை வெல்லும் கட்சிகள் மிகக் குறைந்த ஆசனங்கள் பெறும் நிலையே இதிலுள்ளன. அதுவும், விகிதாசாரத் தேர்வில் வரும் ஆசனங்கள் போனஸ் ஆசனம் என்றும் அழைக்கப்படுகிறது.

இங்கே, 12500 வாக்குகள் பெற்று 12 வட்டாரங்களையும் வென்ற கட்சிக்கு ஒரு போனஸ், எந்த வட்டாரத்தையும் வெல்லாத கட்சிகளுக்கு நான்கு மற்றும் மூன்று போனஸ் ஆசனங்கள் செல்கின்றன. விகிதாசார எட்டு ஆசனங்களும் வட்டார ஆசனங்களுடன் சேர்த்து இருப்பதால் (20) வகுக்கப்படுவதுதான் இதிலுள்ள குறைபாடு.

எனவே, வட்டார வெற்றிக்கேற்ப (12) ஆசனங்களும், வீதாசார வெற்றிக்கிணங்க எட்டு (08) ஆசனங்களும், மொத்த வாக்குகளால் வகுக்கப்படல் அவசியம். அவ்வாறு செய்யின், விகிதாசார எட்டு ஆசனங்களில் ஐந்தை பெரிய கட்சி பெற்று மொத்தமாக (17) ஆசனத்தை கைப்பற்றுமே! இப்போது (13)ஐத்தானே வெல்லக் கிடைக்கிறது.

ஏனைய ஏழும் வெவ்வேறு கட்சிகள் பெறுவதால் அவைதான் தீர்மானிக்கும் சக்தியுமாகின்றன. சிறிய கட்சிகளைப் பலப்படுத்தப் புறப்பட்டு, பெரிய கட்சிகளை பணிய வைத்துள்ளது இவ்விநோத முறைமை.

இதனால், கட்சிகளின் கொள்கைகள் காற்றில் பறந்து, தனிப்பட்ட பழிவாங்கல்கள் படமெடுக்கின்றன.

தலைமையை மீறிச் செயற்படல், பணத்துக்கு விலைபோதல் போன்ற செயல்களுக்கும் இது வழிவகுத்துள்ளது. மட்டுமல்ல, வடக்கில் ஒரு பிரதேச சபையை ஒரேயொரு உறுப்பினர் ஆட்டிப்படைக்கிறார். 21 உறுப்பினருள்ள ஒரு சபையில், ஆட்சியமைப்பதற்கு ஒரு அணியை உருவாக்குவதில் மிகச்சிரமப்பட நேரிடுகிறது. இங்கு செல்வாக்கிலுள்ள இரு கட்சிகள் சம அளவில் தலா ஏழு ஆசனங்களை வென்றதால், இரண்டு, ஒன்று என குறைந்த ஆசனங்களை பெற்ற கட்சிகள்தான் ஆட்சியைத் தீர்மானிக்கின்றன. சிலபெரிய கட்சிகள் இதனால் ஆட்சியையும் இழந்து, ஒரேயொரு உறுப்பினருள்ள கட்சிக்கு தவிசாளர் பதவியும் சென்றிருக்கிறது. இதுதான் ஜனநாயகத்தை சீரழிக்கிறது.

சுஜப் எம். காசிம்- ..✍

சினிமினி பேசும் படம்

- கே. ஈஸ்வரலிங்கம்

கர்ணனுக்கு 58 ஆண்டுகள்

தமிழ்த்திரையின் வரலாறு படைத்த மாபெரும் காவியமான நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வள்ளல் "கர்ணனா"க பாத்திரமேற்று நடித்த பிரமாண்ட படைப்பான "கர்ணன்" திரைப்படம் வெள்ளித் திரைக்கு வந்து வசூலை அள்ளித் தந்து 58 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

(14.01.1964.....14.01.2022)

1964 இல் 40 லட்சம் ரூபா செலவில் தயாரிக்கப்பட்டது. இப்போது இதன் மதிப்பு 500 கோடி. பத்மினி பிக்ஸர்ஸ் சார்பில் பி.ஆர்.பந்துலு அவர்களின் தயாரிப்பு இயக்கத்தில் வெளியான வெற்றிப்படம் "கர்ணன் ". மகாபாரத காவியத்தில் மிக முக்கிய கதாபாத்திரமான கர்ணனை, அதுவரை ஹிந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளமொழிகளில் எவரும் தயாரிக்கவோ அப்பாத்திரத்தில் துணிந்து எந்த நடிகரும் நடிக்கவோ தயங்கிய நிலையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அசாத்திய துணிவுடன் நடித்தார்.பாண்டவர்களுக்கு அநீதி இழைக்கும் கௌரவர்களின் தலைவனான துரியோதனனுக்கு உயிர் நண்பனாக கர்ணன் பாத்திரம் அமைந்தமையினால் அக்காலத்தில் தைரியமாக இப்பாத்திரத்தில் எந்த முன்னணி நடிகரும் நடிக்க முன் வராத தருணத்தில் இப்பாத்திரத்தின் இயல்பான தன்மையை நன்கு உள்வாங்கிக் கொண்ட நடிப்பின் இமயம் சிவாஜி கணேசன் துணிந்து நடித்து இப்படத்தில் கர்ணனாகவே வாழ்ந்து காட்டினார். இந்திய சினிமா வரலாற்றை "கர்ணன்"திரைப்படத்தை தவிர்த்து எழுத முடியாது. இப்படத்தில் ஆரம்பத்தில் கிருஷ்ணராக நடிக்க தேர்வானவர் ஜெமினி கணேசனே. சிவாஜி கணேசனின் வேண்டுகோளுக்கிணங்க ஜெமினி கணேசன் ஒதுங்கவே அப்பாத்திரத்தில் ராமர்,கிருஷ்ணர் வேடத்திற்கென்றே பிறந்தவராகக் கருதப்படுகின்ற என்.டி.ராமராவ் நடித்தார்.இவரை பிடிவாதமாக தேர்வு செய்தவர் சிவாஜி கணேசனே. தெலுங்கு திரையுலகில் வேலைப்பளு மிகவும் அதிகமாக இருந்ததனால் என்.டி.ராமராவ் ஆரம்பத்தில் நடிக்க மறுத்தார். பின் சிவாஜி கணேசனின் விடாப்பிடியால் "கர்ணன்" படத்தில் கிருஷ்ணர் வேடத்தில் நடிக்க காலத்தை ஒதுக்கிக் கொடுத்தார் என்.டி.ராமராவ்.

சிவாஜிக்கு இணையாக என்.டி.ராமராவிற்கு இப்படத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. படத்தில் என்.டி.ராமராவ் வரும் கட்டத்திலிருந்து உச்சக்காட்சி வரை சிவாஜிக்கு இணையாக இவர் பயன் படுத்தப்பட்டு உரிய கௌரவம் ஆற்றினார் சிவாஜி கணேசன். படத்தின் இறுதிக் கட்ட காட்சியில் "மரணத்தை எண்ணி கலங்கிடும் விஜயா"மற்றும் "உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது"போன்ற காலத்தால் அழியாத பாடல்களை என்.டி.ராமராவ் சீர்காழி கோவிந்த ராஜனின் கணீர் குரலில் பின்னணி பாடுவதாக அமைத்தார் இயக்குனர் பி.ஆர்.பந்துலு. .இந்நிகழ்வால் நெகிழ்சியடைந்த என்.டி.ராமராவ் சிவாஜி கணேசனின் பெருந்தன்மையை பல மேடைகளில் கூறி பெருமையடைந்தார்.வேறு நடிகர்களாக இருப்பின் தன்னை முன்னிலைப் படுத்தி மற்றவர் திறமையை மழுங்கடித்திருப்பர். ஆனால் சிவாஜி கணேசனுக்கு சக நடிகர்களின் திறமையை ஆர்வமுடன் வரவேற்கும் பண்பு நிறையவே உண்டு. "கப்பலோட்டிய தமிழன்"படத்தில் எஸ்.வி.சுப்பையாவின் பாரதியார் வேடத்தை உயர்ந்த எண்ணத்துடன் திரையில் அனைத்து காட்சிகளும் இடம் பெற உத்தரவிட்டார்சிவாஜி. அது போல் "திருவிளையாடல் "படத்தில் தருமியாக நாகேஷ் நடித்த அனைத்து காட்சிகளும் திரையில் இருக்கும்படி செய்தவர் சிவாஜி கணேசன். "கர்ணன்" படத்தில் பெரும்பாலான காட்சிகள் ராஜஸ்தான் மாநிலத்தில் சரித்திரப் புகழ் மிக்க மாளிகைகளும், கோட்டைகளும் கொண்ட ஜெய்ப்பூரில் படப்பிடிப்பு நடத்தினார் பி.ஆர்.பந்துலு. தேர்கள்,போர்க் கருவிகள் உட்பட அனைத்தையும் சென்னையிலேயே தயார் செய்து ரயில் மூலம் ஜெய்ப்பூர் கொண்டு சேர்த்து படமாக்கினார். போர் காட்சியில் ராஜஸ்தான் மாநில துணைப் பொலிஸார்களையும், ஆயிரக்கணக்கான துணை நடிகர்களையும் நடிக்க வைத்தார் பந்துலு. மகாபாரத போர் நடைபெற்ற அதே குருஷேத்திரத்தில் "கர்ணன் "திரைப்பட போர்க்காட்சியும் படமாக்கப்பட்டது. இக்காட்சியில் 80

யானைகளும்,400 குதிரைகளும் பயன் படுத்தப்பட்டன. இப்படத்தின் அனைத்து பாடல்களும் கவியரசு கண்ணதாசன் எழுதியவைகளே. இதற்காக பெங்களூரு உட்லண்ட்ஸ் ஹோட்டலில் இரண்டே நாட்கள் தங்கியிருந்து எல்லாப் பாடல்களையும் எழுதி முடித்தார் கவியரசு . இது வட நாட்டில் இடம் பெற்ற ஓர் புராண இதிகாச காவியம் என்பதால் ஷெனாய்,புல்புல்தாரா போன்ற வாத்யங்களை படம் முழுக்க பயன்படுத்தி இப்படத்தின் வெற்றிக்கு வழு சேர்த்தனர் மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன் ராமமூர்த்தி ."இரவும் நிலவும்"பாடல் காட்சியில் சிவாஜி கணேசன் நடக்கும் ராஜநடை அவருக்கேயுரிய தனித்துவம். வில்வித்தை அரங்கிலே தனக்கேற்பட்ட அவமானத்தை தன் விழிகளின் மூலம் வசனமின்றி துயரத்தை வெளிபடுத்தியிருப்பார் சிவாஜி. ஏழு குதிரைகள் பூட்டிய சூரியபகவானை கர்ணன் மலர் தூவி வழிப டும் போது சிவாஜியின் கம்பீரம் மிக்க தோற்றம் பிரமிப்பானது.

தேவேந்திரனிடம்(எஸ்.வி.ராம்தாஸ்) கவச குண்டலங்கலை அறுத்து தானமாக அளிக்கும் காட்சியில் சிவாஜி முத்திரை பதிக்கின்றார்.

கௌரவர்களின் சபையில் கிருஷ்ணர் தூது வரும்போது விதுரரின் (வி.எஸ்.ராகவன்) தாயாரைப் பற்றி துரியோதனன் அவதூறு வார்த்தைகளை அள்ளி வீச,விதுரர் கண்கலங்கி அவமானப் படும்போது, சிவாஜியின் துடிப்பு நிறைந்த முகபாவம் உணர்ச்சி மிகுந்ததாக அமைந்திருக்கும்.

சினங் கொண்ட விதுரர்,விஷ்ணு பகவான் தனக்களித்த"உலகை அழிக்கும் ஆற்றல் கொண்ட வில்லினை" இரண்டாக முறித்து உடைத்தெரியும் கட்டம் அபாரம். தன் மருமகன் ஓர் தேரோட்டி என அறிந்த சந்திரசைல தேச மன்னன் கனகன் (ஓ.ஏ.கே.தேவர்)தன் மகளான சுபாங்கியை(தேவிகா) மீண்டும் தன் தேசத்திற்கு அழைத்து வரும் கட்டத்தில் சிவாஜியும்,ஓ.ஏ.கே.தேவரும் பேசிக் கொள்ளும்வசனங்கள்அனல்கக்கும்,அங்கிருக்கும் சிம்ம பொம்மையினை தன் கரத்தால் உடைத்து துகள்களாக்கி கோபத்தில் பற்களை நற நறவென கடித்தபடி சிம்மம் போல் சிவாஜி கர்ஜனை செய்யும் கட்டம் அமர்க்களம்.பரசுராமரிடம் வில் வித்தை (ஆர்.பாலசுப்பிரமணியம்)பயில்கின்ற போது கர்ணன் காட்டும் குருபக்தி நெகிழ்சியானது.

ராட்ஷத வண்டு கர்ணனின் தொடையைத் துளைக்கும் போது வலியைத் தாங்கி கொண்டு,தன் மடியில் உறங்கும் குருவானவரின் உறக்கத்திற்கு ஊறு வராத வண்ணம் முகபாவத்தில் காட்டுகின்ற நடிப்பு அருமை.சுபாங்கி (தேவிகா), தேரினைச் செலுத்தும் போது குதிரைகள் மிரண்டோடும்காட்சியில்கர்ணன்தேரைத்தடுத்துநிறுத்தி சுபாங்கியை காக்கும் கட்டமும்,பின் இருவரும் பேசும் காதல் உரையாடல்களும் தென்றல் தவழுவதாக அமைந்திருக்கும்.

துரியோதனன்(எஸ்.ஏ.அசோகன்) மனைவி பானுமதியுடன் (சாவித்திரி) பகடை விளையாடும் போது ஆட்டத்தின் உத்வேகத்தில் அவளின் மடியைப் பிடித்து கர்ணன் இழுக்க,அந்த மேகலையில் இருந்த முத்துக்கள் அறுந்து சிதறிக்கிடக்கும் நேரத்தில் சிவாஜி தன் உணர்ச்சி மிகு நடிப்பை வியாபிக்கும் தன்மை பூரிப்பு நிறைந்த காட்சியாகும்.யுத்தத்துக்கு வீரர்களை நியமிக்கும் காட்சியில் படைத்தளபதி பீஷ்மர்(ஜாவர்சீதாராமன்),"கடைத்தொகுதியில்பெரும் கூட்டத்தோடு கூட்டமாக நின்று போர் புரியும் அட்த ரதனாக கர்ணனை நியமிக்கின்றேன்"எனக்கூறி கர்ணனை புறக்கணிக்கும் போது, கர்ணன் வெகுண்டெழுந்து உடை வாளையுருவி மீண்டும் ஆக்ரோஷத்துடன் வாளை உறையில் இடுவதும்,"பீஷ்மர் உயிரோடு இருக்கும் வரை நான் போர்க்களம் புகேன் இது சத்தியம் "என சூழுரைத்து கோபத்துடன் நடந்து வாளை மேசை மீது வைக்கும் கட்டமும் படு உத்வேகம். இப்படத்தில் குந்திதேவி(எம்.வி.ராஜம்பா) கர்ணனை சந்திக்கும் காட்சி முக்கியத்துவம் வாய்ந்தது. மஞ்சத்தில் இருவரும் பாசப்பிணைப்பால் ஒன்றித்து வசனம் பேசும் காட்சியை ஒளிப்பதிவாளர் வி. ராமமூர்த்தி அழகாக மஞ்சத்தைச் சுற்றி வலம் வந்த விதத்தில் படமாக்கியது அபாரம்.குழந்தையாக தன்னை கங்கையில் ஏந்தி வந்த பேழையைக் குந்திதேவியிடம் காட்டி கர்ணன் பேசும் வசனங்கள் படத்தின் சிறப்பான கட்டமாக வலுவுற்றிருக்கும். "சக்தி"கிருஷ்ணசாமியின் வசனங்கள் "கர்ணன்" படத்திற்கு சிறப்புச் சீர் செய்தன. "உள்ளத்தில் நல்ல உள்ளம்" பாடலின் போது அர்ஜுனனின் (ஆர்.முத்துராமன்) கணைகளால் கர்ணனின் உடல் துளைக்கப்பட்டு, ரணமாகித் தவிக்கும் கட்டத்தில் கர்ணன் இடும் முனங்கல் சப்தத்தை பாடலுடன் இணைத்து

சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்த ஒலிப்பதிவாளர் டி.எஸ்.ரங்கசாமியின் அனுபவம் நேர்த்தியானது. இப்படத்திற்கு பின்னணி இசை வழங்கிய விஸ்வநாதன் ராமமூர்த்தியின் திறமையான யுக்தியும் பாராட்டுக்குறியது. தன் மார்பைத் துளைத்திருக்கும் காண்டீபனின் கணையை அகற்றி,வழியும் குருதியை கிருஷ்ணனுக்கு (என்.டி.ராமராவ்) தத்தம் அளித்து தான் செய்த தர்மத்தின் பலன் அனைத்தையும் தானம் வழங்கும் காட்சியில் சிவாஜி கணேசன் குற்றுயிராக விழிகள் கலங்கி நடிக்கும் காட்சி திரையரங்குகளில் அனைவரையும் விழி கலங்க வைத்திருக்கும். கர்ணன் இறக்கும் தருணத்தில் கிருஷ்ண பகவான் விஷ்வரூபம் எடுத்து கர்ணனுக்கு முக்தி பேறு அளிக்கும் காட்சி அற்புதம்.சகுனியாக நடித்துள்ள பழம்பெரும் நடிகர் முத்தையாவின் நடிப்பு அருமை.

பீஷ்மர் வேடம் ஜாவர் சீதாராமனுக்கு வெகு பொருத்தம். கிருஷ்ணனாக பாத்திரமேற்ற என்.டி.ராமராவின் வருகைக்குப் பின் "கர்ணன்" படம் அமர்க்களப்படுகின்றது.

கௌரவர்கள் சபையில் தூதராக கிருஷ்ணர் தோன்றும் காட்சிகளிலும், கௌரவர்கள் வீற்றிருக்கும் அரண்மனை மண்டபங்களும்,

துரியோதனனின் அந்தப்புர அமைப்புகளும்,

கர்ணனின் அங்க தேசத்து அரண்மனை நிர்மானிப்பும்,சிற்ப வேலைப் பாடுகளும், வில் வித்தைப் போட்டி நடக்கும் அரங்கமும், நேர்த்தியாக அமைக்கப்பட்டிருக்கும் தேர்களும்,ஏழு குதிரைகளுடன் சூரிய பகவான் அமர்ந்திருக்கும் ரதமும் மிகுந்த பொருட் செலவில் ரம்மியாக நிர்மானம் செய்யப்பட்டிருக்கும்.இப்பணிகளை சிறப்புடன் மேற்கொண்ட ஏ.நாகரத்தினம்,

கே.ஜி.வேலுச்சாமி ஆகிய கலைஞர்கள் வரவேற்புற்குரியவர்கள்.இப்படத்தில் என்.டி.ராமராவிற்கு கிருஷ்ணர்

வேட ஒப்பனையிட்டவர் இயக்குனர் பி.வாசுவின் தந்தை ஒப்பனை மேதை பீதாம்பரம் அசல் கிருஷ்ணரே நேரில் வந்தது போல என்.டி.ராமராவ் காட்சியளிப்பார்.சிவாஜி கணேசனுக்கு ஒப்பனை செய்தவர் சிவாஜியின் ஆஸ்தான ஒப்பனையாளர் ஆர்.ரெங்கசாமி.சிவாஜி கணேசன் அணியும் ராஜ உடைகளும்,

ஆபரணங்களும் சிவாஜிக்கு கம்பீரமாக பொருந்தியிருக்கும்.ஒவ்வொரு காட்சிகளையும் அணுவணுவாக செதுக்கியுள்ளார் பி.ஆர்.பந்துலு.யுத்தம் தொடங்கும் முன் பீஷ்மரையும்,

துரோணரையும்,கௌரவ சகோதரர்களையும் எப்படி என் அம்புகளால் எதிர்ப்பேன் என பாசத்தால் அர்ஜுனன்(முத்துராமன்) மதிமயங்கி காண்டீபத்தை கீழே வைக்க.. அப்போது கிருஷ்ணர்(என்.டி.ராமராவ்) அர்ஜுனனுக்கு கீதோபதேத்தை உபதேசிக்கின்றார்.அதன் சாராம்சத்தை கவியரசு கண்ணதாசன் தன் வைர வரிகளில் "மரணத்தை எண்ணிக் கலங்கிடும் விஜயா"என கீதையின் தத்துவத்தை உணர்த்தும் விதமாக அமைத்த ரத்தின வரிகள் இக்காட்சிக்கு மிகப்பொருத்தமாக அமைந்தது. அர்ஜுனனின் கணைகளால் துளைக்கப்பட்டு அம்புப் படுக்கையில் பீஷ்மர் (ஜாவர் சீதாராமன்) ரணமாகி மரணத்துடன் போராடும் கட்டம் தத்ரூபமாக அமைந்த காட்சி. இக்கட்டம் ஜாவர் சீதாராமனின் பண்பட்ட நடிப்பினை புடம் போட்டு காட்டுகின்றது.

1964களில் இன்றைய காலங்களில் இருக்கும் கணிணி தொழில் நுட்பங்கள் போல் நவீன வசதிகள் அற்ற அக்காலகட்டத்தில் "கர்ணன்"போன்ற புராண இதிகாச சரித்திர படங்களை எவ்வளவு கடின உழைப்பிற்கு மத்தியில் உருவாக்கியிருப்பர் என்பதை தற்காலத்தவர்கள் உணரந்து பார்ப்பது அவசியமாகிறது.

"பாகுபலி"போன்ற படங்கள் எடுக்கப்பட்ட வசதிகள் அக்காலத்தில் இருந்திருப்பின்"கர்ணன்"திரைப்படம் "பென்ஹர்","டென் கமன்ட்மென்ட்ஸ்" போன்ற ஹொலிவுட் படங்களின் சிறப்புக்கு மேலாக சர்வதேச அளவில் பேசப்பட்டிருக்கும்.

இப்படத்தின் நீளம் கருதி "மகாராஜன் உலகை ஆளுவார் "என்ற அருமையான பாடல் நீக்கப்பட்டது.

ஆயினும் இசைத்தட்டுகளில் பதிவாகி வெளியானது.இப்படத்தில் இடம்பெற்ற அத்தனை பாடல்களும் பெரும் சிறப்பு கொண்டது. 1964 இல்

சிவாஜி கணேசனின் மகள் தேன்மொழியும்,

என்.டி.ராமராவின் மகள் புரந்தரேஷ்வரியும் சென்னையில் ஒரே பள்ளித்தோழிகள். "கர்ணன்" படத்தில் புரந்தரேஷ்வரியின் அப்பா என்.டி.ராமராவ் கர்ணனைக் கொன்றுவிட்டார் என வருந்திய பள்ளி மாணவிகள் புரந்தரேஷ்வரியுடன் பேசுவதை நிறுத்தி விட்டார்களாம். விடயத்தை புரந்தரேஷ்வரி என்.டி.ராமராவிடம் கூற மறுநாளே பள்ளிக்கு வந்த என்.டி. ராமராவ் நடிப்பிற்காகவே அவ்வாறு செய்ததாக கூறி மன்னிப்புக் கேட்டு மாணவிகளை சமாதானப்படுத்தினார்.

இப்படம் தெலுங்கு, ஹிந்தி,மொழிகளில் டப்பிங் செய்யப்பட்டு வெளியாகி வெற்றி பெற்றது.கர்ணனும்,மக்கள் திலகம் எம்ஜியாரின் "வேட்டைக்காரனு"ம் 14.01.1964 இல் ஓர் தைப்பொங்கல் நாளில் ஒன்றாக.வெளியானது. இரண்டு படங்களுமே அமோக வெற்றி பெற்றது. சமீபத்தில் டிஜிட்டல் வடிவில் "கர்ணன்"புதுப் பொழிவுடன் வெளியாகி அமோக வெற்றி பெற்று சாதனை படைத்தது. மொத்தத்தில் தமிழ் சினிமாவில் "கர்ணன்"படம் ஓர் வரலாறு போற்றும் சரித்திரம்.....!

இப்படத்தில் யாரும் சிவாஜி கணேசனைக் காணவில்லை....!

கர்ணனைத் தான் கண்டனர்.....!

எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...✍

சாதனைகள் படைத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கார்மேகம்

17ஆவது நினைவு தினம்

தமிழகம் திருச்சி துறையூரைப் பூர்வீகமாகவும் மலையக கொட்டகலை கல்மதுரை தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கொண்ட எனது தந்தை இலங்கையிலும் இந்தியாவிலும் பத்திரிகை சேவையில் ஆற்றிய பணிகள் அளவிட முடியாதவை. அவரது பத்திரிகை இலக்கிய பணிகள்பற்றி இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் துறைசார்ந்தவர்கள் நன்கறிவர்.

அவருக்குள் எப்பவும் ஒரு தேடல் இருந்து கொண்டே இருந்தது. அந்த தேடல்களின் விளைவே, அவரின் "ஈழத் தமிழர் எழுச்சி" மற்றும் "கண்டி மன்னர்கள்" போன்ற வரலாற்று பெட்டகங்கள்.

அவர் ஒரு பெயர்பெற்ற பத்திரிகையாளராகவும், எழுத்தாளராகவும் குறிப்பாக, தான் பிறந்து வளர்ந்த மலையகத் தமிழ் மக்களின் மேம்பாட்டில் பெரிதும் ஆர்வம் கொண்டவராகவும் விளங்கினார். இன்றைய காலக்கட்டத்தில் அம்மக்கள் பிரஜா உரிமை பெற்றவர்களாக, நாட்டின் அரசியல் நீரோட்டத்தில் பங்குகொள்ளும் வாய்ப்புகளைப் பெற்றிருக்க, அந்த உரிமைக்காக பத்திரிகை மூலம் தனது கருத்துகளை மட்டுமன்றி, மலையக இளைஞர்களது உணர்வுகளையும் கருத்துக்களையும் தூண்டி மலையக மக்களிடையே முச்சிக்கு வித்திட்டவர்.

இந்திய வம்சாவளி மக்களையும் அவர்கள் குடியேற்றப்பட்ட இடங்களையும் குறிப்பிட பயன்படுத்தும், என்னால் அச்சில்கூட ஏற்ற தயங்கும் சொற்சொடர்கள், "மலையக மக்கள், மலைநாடு என்று உருமாற்றம் பெற்றபோது, வரிக்குவரி மலையகம், மலையகம் என்றெழுதி மக்கள் மனதிலே இச்சொல்லை ஆழமாக பதியச்செய்தது இவரின் எழுத்துக்களே. 1960களில் வீரகேசரி மலையக மக்களின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு ஆரம்பித்து வைத்த "தோட்ட மஞ்சரி" எனும் விசேட பகுதி இவரின் சமூகப்பணிக்கு அரியதோர் களமாயிற்று.

"கார்வண்ணன்" என்ற புனைப்பெயரில், உரிமைகள் ஏதும் அற்று முடங்கிக்கிடந்த மலையக இளைஞர் சமுதாயத்தை தமது அரிய கட்டுரைகள் மூலம் விழிப்புறச் செய்தார். அங்குள்ள படித்த இளைஞர்கள் மற்றும் கல்விமான்கள் அரசியல்வாதிகளை அணுகி அவர்களையும் அப்பகுதியில் பல்வேறு படைப்புகளை எழுதவைத்ததன் மூலம் ஏற்படுத்திய விழிப்புணர்ச்சியை மலையக சமூகம் மறக்காது. மலையக எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறுகதைப் போட்டிகளை முன்னின்று நடத்தி இன்றைய மலையகத்தின் புகழ்பூத்த மூத்த எழுத்தாளர்களாக இனம்காணப்பட்டவர்கள் அனைவரும் இவரால் ஊக்கப்படுத்தப்பட்டவர்களே. தனது மலையக சமூகத்தின் மேம்பாட்டுக்காக பத்திரிகைத்துறையை பயன்படுத்துவது தனது அடிப்படைக் கடமைகளில் முதன்மையானது என்ற உணர்வுடனேயே அவர் செயற்பட்டார். அம்மக்களின் நலன்களுக்காக அரசு மட்டத்திலும் பல நிறைவான பணிகளை முன்னெடுத்தார்.

இன்றைக்கு மலையக மக்கள் படிப்பிலும் உயர் பதவிகளிலும் முன்னிலையில் இலங்கையின் முக்கியத்துவம் பெற்றிருக்க முன்னெடுத்தவர்களில் எனது தந்தையும் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறார். மலையக மக்களின் தனித்துவமான பெருந்தலைவராக விளங்கிய காலஞ்சென்ற சௌமியமூர்த்தி தொண்டமானுடன் நெருங்கிய உறவைப் பேணினார். அவரின் அரசியல் ஆலோசகராகவும் எனது தந்தை விளங்கினார்.

□தினமணி நாளிதழில் முதல் பக்கத்தில் அரைப்பக்க அளவில் அவரது கட்டுரைகளே பெரும்பாலும் இடம் பிடித்துவிடும். சென்னை பத்திரிகையாளர் சங்கத்தின் (ஆயனசயள ருாழைா ழக துழரசயெடளைவ) தலைவராகவும் அவர் இருந்தார்.

இலங்கை இந்திய அரசியல் விவகாரங்கள் பற்றி அதிகம் ஞானமுள்ள அதிலும் ஒரு பத்திரிகையாளராக அவர் இருந்ததால் இலங்கை வாழ் இந்தியர்களுக்கும் இந்தியாவில் வசிக்கும் இந்திய வம்சாவளியினருக்கும் அந்தந்த நாட்டில் கிடைக்கவேண்டிய உரிமைகளுக்காக குரல்கொடுக்க அவருக்கு இலகுவாக இருந்தது.

இலங்கையில் இந்திய வம்சாவளியினரான மலையக மண்ணின் தலைமகன் என்றழைக்கப்படும் அமரர். இரா. சிவலிங்கமும், அமரர் எஸ். திருச்செந்தூரனுடன் இணைந்து கோத்தகிரியில் அமைத்த மலையக மக்கள் மறுவாழ்வு மன்றத்தின்மேல் அவருக்கு ஒரு மாறாத பிடிப்பு இருந்தது. அடிக்கடி கோத்தகிரிக்கு பயணிப்பார். அந்த அமைப்பின் செயல்பாடு பற்றியும் தாயகம் திரும்பியோர் பற்றியும் தினமணி கதிரில் கட்டுரைகள் எழுதினார்.

முரளி கார்மேகம்...✍

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் மக்களுக்கு தமிழகத்தில் கிடைக்கக்கூடிய பல்வேறு வாய்ப்புகள் பற்றி அறியத்தருவார். தமிழகத்தின் கல்விக்கூடங்கள் கல்லூரிகளில் எவ்வாறு அனுமதி பெறுவது என்று மாணவர்களுக்கு வழிகாட்டும் வழிகாட்டியாக இருந்தார்.

அவர்களும் அநியாயமாக சிறைப்பிடிக்கப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். மலையக மக்கள் மன்ற நிர்வாகிகளும் அதில் அடங்குவர். இப்படியான நிலையில் இப்பிரச்சினையை வெளிஉலகம் அறிந்துகொள்ளும் வகையில் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவர உரிய நடவடிக்கை எடுத்ததுடன் இந்த அடக்குமுறைக்கு எதிராக தங்களின் கடுமையான எதிர்ப்பையும் அரசுக்கு தெரிவிக்கவும் முன்னின்றவர்.

தமிழக மண்ணில் அரசு உதவிகள் பெறுவதற்கு சாதிச்சான்று அவசியமான ஒன்றாகும். அக்காலத்தில் தமிழகத்தில் தாயகம் திரும்பிய மக்களுக்கு சாதிச்சான்று பெறுவது மிகப்பெறும் பிரச்சினையாக இருந்துவந்த காலத்தில் அப்போது தமிழக அரசின் மறுவாழ்வுதுறை ஆணையராக செயலாற்றி வந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி கிருஸ்துதாஸ்காந்தி சந்தித்து, சாதிச்சான்று பெறுவதற்கு மக்கள்படும் இன்னல்களை விளக்கமாக எடுத்துக்கூறி, அவர் மூலமாக ஆணை பிறப்பித்து இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தியதில் என் தந்தையின் பங்கு அளப்பறியது.

லலிதா ஜுவல்லர்ஸ் நிறுவனர் அமரர். கந்தசாமியும் எனது தந்தையும் மாறாத நட்புறவு கொண்டவர்கள். கந்தசாமி அவர்கள் தலைவராகவும், எனது தந்தை பொதுச்செயலாளராகவும் இணைந்து செயல்பட்ட "இந்திய பரம்பரை இலங்கையர் பேரவை" என்ற அமைப்பு மலையக மற்றும் இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகளுக்காக மட்டுமே ஏற்படுத்தப்பட்டது. மிகக்குறுகிய காலத்திற்குள்ளாகவே, அடுத்தடுத்து பதவி உயர்வுகளுடன் டில்லி, பம்பாய், மதுரை என பணிமாற்றம் பெற்று இந்தியாவின் முக்கிய நகரங்களில் பணியில் அமர்த்தப்பட்டார். அவரது திறனையும், பண்பையும் அங்கீகரித்த தினமணி பத்திரிகை நிர்வாகம் அவரை டெல்லியிலுள்ள நாடாளுமன்றத்திற்கான சிறப்பு செய்தியாளராக நியமித்து கௌரவப்படுத்தியது. இலங்கை இந்தியப் பத்திரிகையாளர் நட்புறவுச் சங்கத்தின் தலைவராகவும் அவர் விளங்கினார்.

இலங்கையில் 23 வருட பணியில் எட்டமுடியாத புகழையும் பெருமையையும் தமிழகத்தில் மிகக்குறுகிய காலத்திலேயே அடைந்த சாதனையாளர் இவர்.

250 கிலோ கேரளா கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது; கூலர் வாகனமும் கைப்பற்றல்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா ஈரட்டைப் பகுதியில் 250 கிலோ கேரளா கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவரை நேற்று இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

வன்னி இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து (15) பிற்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு நோக்கி பயணித்த கூலர் ரக வாகனம் ஒன்றை இராணுவத்தினர் சோதனையிட்ட போதே கேரளா கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா ஈரட்டைப் பெரியகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கூலர் ரக வாகனத்தை இடைமறித்து சோதனை மேற்கொண்ட இராணுவத்தினர் லொறியில் இருந்து 250 கிலோவுக்கும் அதிகமான கேரளா கஞ்சாவை 123 சிறிய கஞ்சா பொதிகளாக்கி வாகனத்தின் பின்புறம் உள்ள இரகசிய பெட்டியொன்றில் வைத்திருந்ததை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் கீரிமலை பகுதியை சேர்ந்தவர் எனவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட கஞ்சாவையும் வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக இராணுவ புலனாய்வு அதிகாரிகள், ஈரட்டை பெரியகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அமைச்சுப் பதவியில் உள்ளவர்கள்...

(06ஆம் பக்கத் தொடர்)

பதில்: விவசாயிகளின் ஒரு கிலோ நெல்லுக்கு 75 ரூபா உத்தரவாத விலை தருவதாக உறுதியளித்துள்ளோம். இந்த உரப்பிரச்சினைகள் மற்றும் விவசாயிகள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் அனைத்தும் இந்தப் பயிர்ச்செய்கைக் காலத்தில் முடிவுக்கு வரும். இன்னும் ஓரிரு வாரங்கள் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். திட்டத்தின் வெற்றி மற்றும் தோல்வியின் அடிப்படையில் நாம் முடிவுகளை எடுக்க முடியும். விவசாயிகள் ஆதரவற்றவர்களாக மாறுவதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம். விவசாயிகளின் நலன்களைக் காக்க முடிவெடுத்தால், அவற்றைச் செயற்படுத்த அரசு தயக்கம் காட்டாது.

கே: வெளிநாட்டுக் கையிருப்பு இழப்பு மற்றும் பொருளாதார வீழ்ச்சியடையும் என்ற ஊகங்கள் உள்ளன. நிலைமையை சமாளிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

பதில்: நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக ஐ.தே.கவும் எதிர்க்கட்சியும் கூறுகின்றன. எனினும், எங்களின் வெளிநாட்டுக் கையிருப்பை அதிகரிக்க முடிந்துள்ளது. எதிர்க்கட்சிகள் வெறும் அரசியல் பிழைப்புக்காக முன்வைக்கும் தற்காலிக கோஷங்கள் என்று நான் எப்போதும் கூறுவேன். இந்த ஜனாதிபதியும் அரசாங்கமும் ஆட்சியில் இருக்கும் வரை நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்ல இடமளிக்க மாட்டோம். கொவிட்19 தொற்றுநோய்க்கு மத்தியிலும், ஒவ்வொரு சவாலையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு, மக்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்த்து நாட்டை முன்னேற்றுவோம்.

கே: மக்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்கத் தவறினால் அரசாங்க உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் அமரத் தயாராக வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார அண்மையில் தெரிவித்திருந்தார். அத்துடன், அரசாங்கத்தின் உறுப்பினர்கள் சிலரும் சர்ச்சைக்குரிய கருத்துகளை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியிருந்தனர். இது விடயத்தில் அரசுக்குள் முரண்பாடுகள் உள்ளனவா?

பதில்: அவர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.க்கள், முதிர்ச்சியடையாதவர்கள். முதிர்ச்சியுள்ள அரசியல்வாதிகள் இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வார்களானால், அதன் பின்னணியில் மறைமுகமான நிகழ்ச்சி நிரல் இருக்கலாம். எனினும், புதிய எம்.பிக்களின் அரசியல் அனுபவமின்மை காரணமாக அவர்களின் இந்தக் கருத்துக்களை நாம் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. மூத்தவர்கள் முன்னுதாரணமாக நடந்து கொள்ளாத போது, புதியவர்களின் தவறுகளைத் திருத்துவது கடினமாக இருக்கும்.

புதியவர்கள் முதிர்ச்சியடைந்தால், அவர்கள் அதே தவறை மீண்டும் செய்ய மாட்டார்கள். அமைச்சுப் பொறுப்புக்களை வைத்திருக்கும் மூத்த உறுப்பினர்கள் சர்ச்சைக்குரிய அறிக்கைகளை வெளியிடும் போது நாம் கவனமாக இருக்க வேண்டும், ஏனெனில் அவர்களுக்கு மறைமுக நோக்கங்கள் இருக்கலாம். எனவேதான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்தவை அவரது அமைச்சுப் பதவியில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

கே: கோப், கோபா மற்றும் அரசாங்க நிதி பற்றிய குழு ஆகியவற்றை மறுசீரமைப்பதற்கே பாராளுமன்றக் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக சிலர் ஊகங்களை வெளியிட்டிருந்தனர். இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்: நாங்கள் அதை திட்டவட்டமாக மறுக்கிறோம். முன்னாள் அரசாங்கம் செய்த பல மோசடிகள் மற்றும் ஊழல்களை நாம் விசாரிக்க வேண்டும். நாங்கள் எதையும் மறைக்க விரும்பவில்லை. ஜனாதிபதி தனது பதவிக் காலத்தில் மோசடி மற்றும் ஊழலுக்கு இடமளிக்க மாட்டார். கோப், கோபா குழுக்கள் ஊடாக எந்தத் தவறையும் விசாரிப்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அவர்கள் ஆட்சியில் இருந்த போது என்ன செய்தார்கள் என்பதை நாங்கள் விசாரிப்போம் என எதிர்க்கட்சிகள் அச்சமடைந்துள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளாக, அவர்கள் மீது நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இந்த முறைகேடுகள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு அரசாங்கத்தின் பின்வரிசை உறுப்பினர்கள் பலரும் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். எவ்வாறாயினும், இந்த விசாரணைகள் எந்தவித அரசியல் தலையீடும் இன்றி நடத்தப்படும்.

வேலைவாய்ப்பு

நாட்டில் பிரபல கொருகேட்டட் கட் போட் தயாரிப்பு மற்றும் அச்சிடல் தொழிற்சாலையான எக்ஸ் பெக் கொருகேட்டட் கார்ட்போர்ட் நிறுவனத்தின் உற்பத்தி அலகினை விஸ்தரிப்பதற்கு கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு புதிய ஆட்கள் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர்.

- **பயிற்சிபெறும் மெஷின் ஒப்பரேட்டர் (ஆண்)**
- **உதவியாளர்கள் (ஆண்)**

18-35 வயதுக்கு உட்பட்டோர் எழுத, வாசிப்பதற்கு ஆற்றல் உள்ள ஆரோக்கியமான ஒருவராயின். இவைதவிர உணவு உட்பட ஏராளமான சலுகைகளுடன் உங்களுக்கு சிறந்த வேலைவாய்ப்பு.

மேற்குறித்த வெற்றிடங்களுக்கு அனுபவம் மற்றும் திறமைக்கேற்ப சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தேசிய அடையாள அட்டை, பிறப்பு சேவைச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ் மற்றும் 2 வரை பகைப்படங்களுடன் நேற்முகத்தேர்வுக்கு வரவும்.

EX PACK Your carton Your way

பிரிவு பொறுப்பாளர் – மனிதவளம்
எக்ஸ் பெக் கொருகேட்டட் கார்ட்போர்ட் நிறுவனம்
இல.79, பட்டலிய வீதி, கோனவல, களனி
தொலைபேசி: 0114 891 891 | 077 39 48148 | 077 7668198

இலங்கை வங்கி

விலைமதிப்புள்ள சொத்துக்களின் விற்பனை

ஆதன இலக்கம்	நகரம்	ஆதனம் அமைந்திருக்கும் இடம்	ஆதன வகை	அளவு
417	[illegible]	[illegible]	காணியுடன் கட்டப்பட்ட	[illegible]
447-3	[illegible]	[illegible]	காணியுடன் கட்டப்பட்ட	[illegible]
451	[illegible]	[illegible]	காணியுடன் கட்டப்பட்ட	[illegible]
456	[illegible]	[illegible]	தரிசு நிலம்	[illegible]
457	[illegible]	[illegible]	காணியுடன் கட்டப்பட்ட	[illegible]
459	[illegible]	[illegible]	காணியுடன் கட்டப்பட்ட	[illegible]
474	[illegible]	[illegible]	காணியுடன் கட்டப்பட்ட	[illegible]
484	[illegible]	[illegible]	தரிசு நிலம்	[illegible]
485	[illegible]	[illegible]	காணியுடன் கட்டப்பட்ட	[illegible]

மேற்குறிப்பிட்ட சொத்துக்கள் தொடர்பாக விலைகூறல்களை முன்வைக்க ஆர்வமுடைய நபர்களுக்கு (முதல் தரப்பினருக்கு மட்டும்) அழைப்பு விடுக்கின்றோம்.

விண்ணப்பங்கள் 2022.01.31 ஆம் திகதி வரை மட்டுமே விநியோகிக்கப்படும். அத்தோடு மீளளிக்கப்படாத 7,000.00 ரூபாவுக்கான வைப்பொன்றையும் மீளளிக்கப்படும் 90,000.00 ரூபாவுக்கான வைப்பொன்றையும் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் வைப்பிலிடவும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை, குறித்த சொத்துக்கள் தொடர்பான இலக்கத்தோடு 'PROP/01/2022' என்று பெயரிடு சீல் வைக்கப்பட்ட உறையிட்டு 2022.02.01 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன் பின்னரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். விண்ணப்பதாரிகள் கோரும் திறக்கப்படும் 2022.02.01 ஆம் திகதியில் இங்கு சமுகமளிக்குமாறும் அழைப்பு விடுக்கின்றோம்.

விண்ணப்பதாரிகளின் விலைகூறல்களை நிராகரிப்பது அல்லது முன்னுரிமை இலங்கை வங்கியின் உரிமையாகும்.

மேலதிக விபரங்களை கேளை நாட்களில் பின்வரும் தொலைபேசி இலக்கங்களை அழைத்து பெறுக் கொள்ளலாம்.

இலங்கை வங்கி, வைப்பிலிடப்பட்ட சொத்து பிரிவு
3 ஆம் மாடி, தலைமையகம், 'இலங்கை வங்கி சதுக்கம்'
இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

தொலைபேசி: உதவி பொது முகாமையாளர்
(தொகுதி அலுவலர் பிரிவு - 011 236 8080/011 220 3410
சிரேஷ்ட முகாமையாளர் - 011 232 1170/011 220 3429/076 962 7068
உதவி முகாமையாளர் - 011 220 3430/071 841 8898
மின்னஞ்சல் முகவரி: mgrforeclosed@boc.lk

தயவுசெய்து www.boc.lk என்ற இணையதளத்திற்குச் சென்று அங்கு Special Notices என்பதன் கீழுள்ள Foreclosed Properties for sale என்னும் பகுதியைப் பார்வையிடவும்.

1975 BOC www.boc.lk
இலங்கை வங்கி BOC தொழில் வல்லமை

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

"வாழ்க்கையை மாற்றியமைக்கும் கற்றல் அனுபவத்திற்காக"

தினவரவு மாணவர்களுக்கான பட்டப்படிப்பு கற்கை நெறிகள் 2021/2022 (முழுநேரம்)

கட்டண அடிப்படையில் / கட்டணமின்றி
பட்டப்படிப்பை தொடர்வதற்கு பொருத்தமான தகைமையுடைய பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் - இரத்மலானையில் வழங்கப்படுகின்ற கற்கை நெறிகள்

பட்டப்படிப்பு கற்கை நெறி (கட்டண அடிப்படையில்)	காலம்	கபொத உ / தரம்
பாதுகாப்பு மற்றும் உபாய கற்கைப் பீடம்		
விஞ்ஞானமாணி உபாய கற்கை மற்றும் சர்வதேச உறவுகள் பட்டம்	03 வருடங்கள்	எந்தவொரு பிரிவும்
பொறியியல் பீடம்		
விஞ்ஞானமாணி பொறியியல் பட்டம் (சிறப்பு) (Aeronautical, Biomedical, Civil, Electrical & Electronic, Electronic & Telecommunication, Mechanical, Mechatronic, Naval Architecture & Marine)	04 வருடங்கள்	கணிதம்
சட்டப்பிரிவு		
சட்டமாணிப்பட்டம் (L.L.B)	04 வருடங்கள்	உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/ வணிகம் அல்லது கலை
முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் மற்றும் மானிதவியல் பீடம்		
விஞ்ஞானமாணி முகாமைத்துவ மற்றும் தொழிநுட்பவியல் பட்டம்	03 வருடங்கள்	உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம்
விஞ்ஞானமாணி முறைசார் செயற்பாட்டு வழங்கல் முகாமைத்துவ பட்டம்	03 வருடங்கள்	உயிரியல் விஞ்ஞானம்/ கணிதம்/வணிகம்
விஞ்ஞானமாணி சமூக விஞ்ஞானப் பட்டம்	03 வருடங்கள்	எந்தவொரு பிரிவும்
விஞ்ஞானமாணி தரவு அறிவியல் தொடர்பாடல் பிரயோகப்பட்டம்	03 வருடங்கள்	உயிரியல்/கணிதம் /வணிகம்/ தொழிநுட்பம் அல்லது *கலை பிரிவு *நிபந்தனைகளுக்கு உட்பட்டது
பிற மொழிகளைப் பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் இளங்கலைப்பட்டம் (TESOL)	03 வருடங்கள்	எந்தவொரு பிரிவும்
கணனி பீடம்		
விஞ்ஞானமாணி கணனி விஞ்ஞான பட்டம் (சிறப்பு)	04 வருடங்கள்	கணிதம்
விஞ்ஞானமாணி மென்பொருள் பொறியியல் பட்டம் (சிறப்பு)	04 வருடங்கள்	கணிதம்
விஞ்ஞானமாணி கணனி பொறியியல் பட்டம் (சிறப்பு)	04 வருடங்கள்	கணிதம்
விஞ்ஞானமாணி தரவு அறிவியல் மற்றும் வணிகப்பகுப்பாய்வு (சிறப்பு)	04 வருடங்கள்	கணிதம்

பட்டப்படிப்பு கற்கை நெறி	காலம்	கபொத உ / தரம்
இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்		
தாதிய விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) (கட்டண/கட்டணமின்றி)	04 வருடங்கள்	உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம்
இயன் மருத்துவ விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு)	04 வருடங்கள்	உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம்
மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு)	04 வருடங்கள்	உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம்
கதிர் வீச்சியியல் விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு)	04 வருடங்கள்	உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம்
கதிர் வீச்சு சிகிச்சை விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு)	04 வருடங்கள்	உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம்
மருந்தகவியல் விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு)	04 வருடங்கள்	உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம்
தொழிநுட்ப பீடம்		
கட்டிட சேவை தொழில்நுட்பம் தொடர்பான பொறியியல் தொழிநுட்பமாணி பட்டம் (சிறப்பு)	04 வருடங்கள்	*கணிதம் அல்லது *தொழிநுட்பவியல் பிரிவுகளுக்கு உட்பட்டது
கட்டுமான தொழில்நுட்பம் தொடர்பான பொறியியல் தொழிநுட்பமாணி பட்டம் (சிறப்பு)	04 வருடங்கள்	*கணிதம் அல்லது *தொழிநுட்பவியல் பிரிவுகளுக்கு உட்பட்டது
உயிர் மருத்துவ உபகரணங்கள் அமைப்பு தொடர்பான தொழிநுட்பமாணி பட்டம் (சிறப்பு)	04 வருடங்கள்	*கணிதம் அல்லது *தொழிநுட்பவியல் பிரிவுகளுக்கு உட்பட்டது

சூரியவெவ தெற்கு வளாகத்தில் நடைபெறும் கற்கை நெறிகள்

பட்டப்படிப்பு கற்கை நெறி (கட்டண அடிப்படையில்)	காலம்	கபொத உ / தரம்
சூழலியல் மற்றும் விண்வெளி அறிவியல் பீடம்		
வாஸ்து விஞ்ஞானம்	05 வருடங்கள்	உயிரியல் விஞ்ஞானம் / கணிதம் அல்லது கலைப்பிரிவு
விஞ்ஞானமாணி அளவியல் விஞ்ஞானம் (சிறப்பு)	04 வருடங்கள்	கணிதம்
விஞ்ஞானமாணி மதிப்பீட்டு ஆய்வு பட்டம் (சிறப்பு)	04 வருடங்கள்	கணிதம்
கணனி பீடம்		
விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம் (சிறப்பு)	04 வருடங்கள்	உயிரியல் விஞ்ஞானம் / கணிதம் வணிகம் அல்லது கலைப்பிரிவு
விஞ்ஞானமாணி தகவல் அமைப்புகள் (சிறப்பு)	04 வருடங்கள்	உயிரியல் விஞ்ஞானம் / கணிதம் வணிகம் அல்லது கலைப்பிரிவு

* 2019 அல்லது 2020 இல் கபொத உயர்தரத்திற்கு தோற்றிய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
* 2020 அல்லது 2021 இல் கேம்ரிச் மற்றும் எடெக்சல் உயர்தரத்திற்கு தோற்றிய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

Z புள்ளி (Z Score) 1.8 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைக் கொண்ட பொறியியல் விஞ்ஞானமாணி, கட்டிடக்கலையியல் மற்றும் தொழிநுட்பமாணி பட்டம் மற்றும் தொடரும் மாணவர்களுக்கு முழுமை பரிசில் வழங்கப்படும்.

- தெற்கு வளாகம் சூரியவெவயில் பதிவுசெய்யப்பட்ட மாணவ மாணவியர்களுக்கான தங்குமிட தங்குமிடம் நியாயமான விலையில் வழங்கப்படும்.

இலவசமாக மடிக்கணனி
(பதிவு செய்யும் அனைத்து மாணவர்களுக்கும்)

கற்கைநெறி கட்டணங்களுக்கான வங்கிக் கடன் வசதிகள் செய்து தரப்படும்.

உங்களது தகைமைகளை பரீட்சிப்பதற்கும் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு
www.kdu.ac.lk எனும் இணையத்தளத்திற்கு பிரவேசியுங்கள்

பரீட்சார்த்திகள் ஒன்லைன் (Online) மூலமாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
விண்ணப்பிக்க பிரவேசியுங்கள் - www.kdu.ac.lk

2022 ஜனவரி 23 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

பதிவாளர்
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலான, 10390, இலங்கை.

தொலைபேசி : +94 112635039, 112632028 Ext. : 459, 460
மின்னஞ்சல் : kdudayscholar@kdu.ac.lk

இலங்கையின் கடன் மீளச் செலுத்தும் ஆற்றலை கேள்விக்குறியாக்கியுள்ள கடன் தரமிடல் நிறுவனம்

புதுவருடம் பிறந்த கையோடு இலங்கை சர்வதேச ரீதியில் மற்றுமொரு நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கிறது. கடந்த 12ஆம் திகதி S&P என அழைக்கப்படும் ஸ்டாண்டர்ஸ் அன்ட் புவர்ஸ் (Standards and Poors) என்னும் சர்வதேச கடன் தரமிடல் நிறுவனம் இலங்கையின் நீண்டகால இறைமைக்கடன் தரமிடலை CCC+ என்ற மட்டத்தில் இருந்து அடுத்த மட்டமாகிய CCC மட்டத்திற்கு தரமிறக்கி அறிவித்துள்ளமை இலங்கையைக் கலக்கத்தில் தள்ளியிருக்கிறது.

ஆனால் இலங்கையின் நீண்டகால இறைமைக்கடன் தரமிடலை கீழ்நோக்கிய S&P நிறுவனம் குறுங்காலக் கடன் திருப்பிச் செலுத்தும் ஆற்றல் நிலை பற்றிய தரமிடலைத் தொடர்ந்தும் C என்ற மட்டத்தில் வைத்திருப்பதையும் குறிப்பிடலாம். 2021 ஆம் ஆண்டு முடிவடைந்த போது டிசம்பர் 31 திகதி இலங்கையின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு 3.1 பில்லியன் டொலர்களாக அதிகரித்திருப்பதாக அறிவித்த இலங்கை மத்திய வங்கியானது, கடன் தரமிடல் நிறுவனங்களின் இலங்கை பற்றிய தரமிடலை விமர்சித்து அவற்றின் மூக்கில் ஒரு குத்து விட்டிருந்தமையும் நினைவிருக்கலாம்.

எவ்வாறாயினும் இலங்கையின் அடுத்துவரும் 12 மாதங்களுக்கான கடன் மீளச்செலுத்தும் ஆற்றல் நிலை இடரபாயமிக்கதாக உள்ளதாகவும் இதுவரை எதிர்வு கூறப்படாத ஏதேனும் நல்ல விடயங்கள் நடந்தாலே தவிர இலங்கை தான் பெற்ற கடனை மீளச் செலுத்தாமல் விடுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்துச் செல்வதாகவும் S&P நிறுவனம் சுட்டிக்காட்டுகிறது. இதனால் அதன் எதிர்வுகூறல் எதிர்க்கணியமாக உள்ளதாக அதன் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வெளிநாட்டு கடன் பொறுப்புகள் அதிகரிப்பதன் காரணமாகவும் நிதி வசதிகளை பெற்றுக்கொள்வதில் நிலவும் தடைகள் காரணமாகவும் இலங்கையின் வெளிநாட்டுத்துறை நிலைமைகள் தொடர்ந்தும் நலிவடைந்து செல்வதாக அந்நிறுவனம் கூறுகிறது. அடுத்துவரும் காலாண்டுகளில் முதிர்ச்சிடையவுள்ள இறைமைக்கடன் முறிகள் மீதான செலுத்தல்கள் மற்றும் சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கு குறைநிலை காரணமாகவும் இலங்கையின் அந்நியச் செலாவணி ஒதுக்குகள் மீது மேலும் அழுத்தங்களை உருவாக்கும் என S&P நிறுவனம் எதிர்வு கூறுகிறது.

இலங்கையின் தளம்பலான வெளிநாட்டுத்துறை நிலை அத்துடன் விரிவடையும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை அரசாங்கத்தின் பாரிய கடன் பெறுகை அதிகமான வட்டி செலுத்தல்கள் கடப்பாடுகள் போன்ற

'கொரோனா கொள்ளை நோயினால் உலக நாடுகள் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆயினும் இலங்கையில் இச்சவாலுக்கு மத்தியிலும் ஏற்பட்டுவரும் நேர்க்கணியமான அபிவிருத்திகளை அந்நிறுவனம் கருத்தில் கொள்ளவேயில்லை என மத்தியவங்கி கவலையடைகிறது. மத்தியவங்கி வெளியிட்ட ஆறுமாத கால பாதை வரைவு மற்றும் 2022 இற்கான அரசாங்க வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளிலுள்ள சிறந்த விடயங்கள் பற்றியெல்லாம் தரமிடல் நிறுவனம் கரிசனை காட்டவில்லை என அது சாடுகிறது'

காரணங்களால் அடுத்துவரும் 12 மாதங்களில் உரிய காலத்தில் கடன் சேவை மேற்கொள்ளும் ஆற்றல் இலங்கைக்கு கடினமானதாக மாறக் கூடும் என அது கருதுகிறது.

அண்மையில் அரசு அறிவித்த 1.2 பில்லியன் டொலர் பெறுமதியான நிவாரணப்பொதி அரசாங்கத்தின் ஏற்கனவே பெரும்கடன் சுமையோடு கூடிய பலவீனமான நிதி நிலைமையினை மேலும் மோசமடையச் செய்துள்ளதாக குறித்த கடன் தரமிடல் நிறுவனம் கருதுகிறது. அத்துடன் நாட்டின் பொருளாதாரம் மீட்சியடையும் தன்மையானது தொடர்ந்து செல்லும் கோவிட் 19 பெருங்கொள்ளை நோய் காரணமாகவும் வெளிநாட்டுத்துறை நிதி அழுத்தங்கள் காரணமாகவும் சவால் நிலையை எதிர்கொள்வதோடு நுகர்வோரின்நடத்தைகளையும்பாதிக்கும். அதாவது நாட்டில் மக்களின் நுகர்வு நடத்தைகள் குறைவடையும். அது நாட்டின் முதலீட்டு சாத்தியங்களை பாதிக்கும் எனவும் மேற்படி நிறுவனம் எதிர்வு கூறுகிறது. இவற்றின் விளைவாக 2021 ஆண்டில் 3 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி வீதம் 2022 இல் 2.2 சதவீதமாக வீழ்ச்சியடையும் எனவும் எதிர்வு கூறியுள்ளது.

இந்தக் கடன் தரமிடல் நடவடிக்கைக்கு இலங்கை மத்திய வங்கி உடனடியாகவே காட்டமாக எதிர்வினை காட்டியது. தெளிவான வகையில் கடன் தரமிடல் நிறுவனங்கள் இலங்கை வெளிநாட்டுக் கடன்கள் முதிர்வடைந்து மீளச்செலுத்தவேண்டிய காலம் அண்மிக்கும் வேளைகளில் கடன் தரமிடல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் கடனை மீளச் செலுத்துவதற்குரிய வளங்களை உரியவகையில் ஏற்பாடு செய்துள்ள நிலையிலும் அதுவரையில் இலங்கை எந்தக் கடனையும் மீளச் செலுத்தாமல் விடாத நிலையிலும் இவ்வாறு தரமிறக்கலை மேற்கொள்வது பொருத்தமற்ற நடவடிக்கை எனவும் இலங்கை அதிகாரிகள் இலங்கையின் பொருளாதார மற்றும் நிதி நிலைமைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து மேற்படி கடன் தரமிடல் நிறுவனத்திற்குத் தெளிவூட்டலை மேற்கொண்டுள்ள போதிலும் அவற்றையெல்லாம் கருத்திற்கொள்ளாது வெறுமனே அந்நியச் செலாவணி கையிருப்புகளை மாத்திரம் கருத்திற் கொண்டு இவ்வாறான தரமிறக்கலை அந்நிறுவனம் மேற்கொண்டுள்ளதாகவும் மத்திய வங்கி கூறுகிறது. இலங்கை தொடர்ந்தும் தனது கடன் கடப்பாடுகளை உரியவாறு நிறைவேற்ற உறுதிப்பாட்டுடன் உள்ளதாகவும் அது அறிவித்தது.

கொரோனா கொள்ளை நோயினால் உலக நாடுகள் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆயினும் இலங்கையில் இச்சவாலுக்கு மத்தியிலும் ஏற்பட்டுவரும் நேர்க்கணியமான அபிவிருத்திகளை அந்நிறுவனம் கருத்தில் கொள்ளவேயில்லை என மத்தியவங்கி கவலையடைகிறது. மத்தியவங்கி வெளியிட்ட ஆறுமாத கால பாதை வரைவு மற்றும் 2022 இற்கான அரசாங்க வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளிலுள்ள சிறந்த விடயங்கள் பற்றியெல்லாம் தரமிடல் நிறுவனம் கரிசனை காட்டவில்லை என அது சாடுகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

உக்ரைனுடனான போரை தவிர்க்கும் வகையிலான அமெரிக்க – ரஷ்ய இராஜதந்திர நகர்வுகள்

உக்ரைனை மையப்படுத்தி மேற்கு நாடுகளுக்கும் ரஷ்யாவுக்குமான முரண்பாடு தீவிரமடைந்து வருகிறது. அத்தகைய தீவிரத்தை தணிக்கும் உத்திகளை மேற்கும் நேட்டோவும் முதன்மைப்படுத்தி ஜெனிவாவில் நீண்ட சந்திப்புக்களை ரஷ்யாவுடன் கடந்த 10ஆம் திகதியிலிருந்து மேற்கொண்டு வருகிறது. இத்தகைய உயர்மட்ட பேச்சுக்கள் நிகழும் ஒரே சந்தர்ப்பத்தில் ரஷ்ய துருப்புக்கள் முன்னாள் சோவியத் குடியரசுகளில் ஒன்றான கஸகஸ்தானின் அழைப்பின் பேரில் தரையிறக்கப்பட்டுள்ளது. தென் ஐரோப்பிய நாடான அல்பேனியாவுக்குள் அமெரிக்கா இராணுவ முகாம் அமைத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அல்பேனியா, உக்ரைன், கஸகஸ்தான் போன்ற நாடுகள் அமைந்துள்ள இப்பிரதேசம், முன்னாள் சோவியத் யூனியனின் செல்வாக்கு மிக்க பிராந்தியமாகவும் சோசலிச கொள்கையை இறுக்கமாக பின்பற்றுதல்களை கொண்ட பிராந்தியமாகவும் காணப்பட்டது. மேற்குறித்த அனைத்து நாடுகளும் சோவியத் யூனியனின் சோசலிச வீழ்ச்சிக்கு பின்னர் தனியரசுகளாக மாறின.

அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளின் நலன்களுக்கு இசைவான நாடுகளாக காணப்படுகின்றன. ரஷ்யாவின் ஜனாதிபதியாக விளாடிமீர் புட்டின் ஆட்சிக்கு வந்த பின்னர் இந்நாடுகள் மீதான மேற்குலக ஏகாதிபத்திய அணுகுமுறை நெருக்கடிக்குள்ளாகியதுடன் அந்நாடுகளை நோக்கிய நேட்டோவின் விஸ்தரிப்பு படிப்படியாக குறைவடைகின்ற நிலையும் ரஷ்யாவின் மேலாதிக்கமும் வளர்ச்சியுற்று வருகின்றதை அவதானிக்க முடிகிறது.

கோவிட் தொற்றுக்கு பின்னர் இப்பிராந்திய நாடுகளில் இராணுவ மேலாதிக்கமும், சர்வாதிகார ஆட்சிமுறைகளும் மீளவும் கட்டமைக்கப்படும் சூழல் ஒன்றை காணமுடிகிறது. அதன் வரிசையில் பைலோரஷ்யா (பெலாரஷ்) முதன்மை உதாரணமாக அமைந்திருந்தது. எனவே இத்தகைய சூழலிலே நேட்டோவுக்கும் ரஷ்யாவுக்குமான மோதல் கிரிமியா கைப்பற்றப்பட்டதிலிருந்து அதீத நெருக்கடியை ஏற்படுத்த வழிவகுத்திருக்கிறது. அது மட்டுமன்றி உக்ரைன், கஸகஸ்தான் ஆகிய இரு நாடுகளிலும் ரஷ்ய துருப்புக்களின் அணுகுமுறை ரஷ்யா மீளவும் முன்னாள் சோவியத் யூனியனின் கட்டமைப்பை நோக்கி நகர்வதற்கான திட்டமிடல்களை வெளிப்படுத்துவதாகவே ஊகிக்கப்படுகின்றது. புவிசார் அரசியல் கோட்பாட்டாளர் மக்கின்டர் குறிப்பிடுவது போல் ரஷ்யா உலகத்தின் இருதய நிலமாக தொடர்ந்தும் தன்னைப்பேணி கொள்ள முயல்வதாகவே தெரிகிறது. அதற்கான அடிப்படை ரஷ்யாவின் புவிசார் அமைவிடமேயாகும்.

இதேநேரம் அல்பேனியாவுக்குள் இராணுவ தளம் அமைத்திருக்கும் அமெரிக்கா ஐரோப்பாவின் தென்பகுதியை தனது செல்வாக்கிற்குள் கொண்டு வருவதற்கான பிரதிபலிப்பாகவே அல்பேனியா விடயத்தை நோக்க வேண்டியுள்ளது. எனவே இப்பிராந்தியத்தில் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளும் அவற்றின் இராணுவ கட்டமைப்பான நேட்டோவும் 1990களுக்கு பின்னரான காலப்பகுதியில் ஏற்பட்ட மாற்றத்தின் தொடர்ச்சியை பேணுவதற்காக போராடுகின்ற அதே சமயம், 1990களுக்கு முன்னரான தனது இருப்பை தக்கவைத்து கொள்வதற்கான முயற்சியில் ரஷ்யா ஈடுபட்டுள்ளது.

இதேநேரம் ரஷ்யாவின் எல்லையோரத்தில் உக்ரைனை அண்டிய பகுதியில் ரஷ்யா குவித்துள்ள ஒரு இலட்சம் வரையிலான படைவீரர்கள் நேட்டோவுக்கும் அதன் அணிசார் நாடுகளுக்கும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனை தடுத்து நிறுத்தும் விதத்திலேயே ரஷ்யாவுடனான இராஜதந்திர உரையாடல்களை மேற்கொண்டு வருகிறது. ஜெனிவாவில் ரஷ்ய அமெரிக்க தரப்பிடையே உக்ரைன் விவகாரம் தொடர்பில் நிகழ்ந்த உரையாடலில் உக்ரைன் மீது தாக்குதல் நடாத்துவதற்கு எவ்வித எண்ணமுமில்லையென ரஷ்யாவின் துணை வெளியுறவு அமைச்சர் செர்கே ரியாப்கோவ் தெரிவித்துள்ளார்.

இவ்வுரையாடலில் அமெரிக்க தரப்பில் துணை வெளிவிவகார அமைச்சர் பெண்டிமர் கலந்து கொண்டுள்ளார். சுமார் 7 மணிநேரம் நீடித்த இச்சந்திப்பில் இருதரப்பினரும் பதற்றத்தை குறைக்கும் முயற்சிகளை தொடர்வதாக ஒப்புக்கொண்டனர். இருநாட்டின் துணை வெளியுறவு அமைச்சர்களும் ஊடகங்களின் முன் கருத்து தெரிவிக்கையில், ரஷ்யா தரப்பு உக்ரைனை தாக்கும் திட்டமோ அல்லது நோக்கமோ தங்களிடம் இல்லை என்றும் இதை தங்களது சக ஊழியர்களுக்கு விளக்கியிருப்பதாகவும் ரஷ்யர்கள் தங்கள் அமெரிக்க சகாக்களிடம் தெரிவித்திருப்பதோடு துருப்புக்கள் மற்றும் போர்ப்பயிற்சிக்கான அனைத்து நடவடிக்கைகளும் ரஷ்ய எல்லைக்குள் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றது என்றும் கூறியுள்ளது.

எனவே இது தொடர்பாக எந்தவொரு தீவிரமான சூழ்நிலையும் எழாதெனவும் அதற்கு பயப்படுவதற்கு எந்தக் காரணமும் இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க வெளியுறவுத்துறை

துணைச்செயலளார் குறிப்பிடும் போது ஒவ்வொரு தரப்பின் பாதுகாப்பு கவலைகளையும் நன்கு புரிந்து கொள்வதை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட வெளிப்படையான மற்றும் நேரடியான விவாதங்களே இவை என தெரிவித்தார்.

இதேநேரம் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ரஷ்ய துருப்புக்கள் உக்ரைன் எல்லைக்கு அருகில் இருப்பதாக நம்பப்படுகிறது. இது ஊடுருவல் மற்றும் மேற்கு நாடுகளின் எச்சரிக்கைகள் பற்றிய அச்சத்தை ஏற்படுத்துகிறது. ரஷ்யா உக்ரைன் மீது தாக்குதல் நடாத்தினால் பொருளாதார தடை விதிக்கப்படுமென அமெரிக்கா எச்சரித்துள்ளது. ரஷ்யாவுடன் மேற்கு நாடுகள் மோதலில் ஈடுபடுமானால் ஏற்படக்கூடிய அபாயங்களை குறைத்து மதிப்பிட வேண்டாமெனவும் ரஷ்யா அமெரிக்காவிற்கு தெரிவித்துள்ளது. எனவே இப் பேச்சுவார்த்தை ஒரு ஆரோக்கியமான தீர்வை எட்டாத போதும் இருதரப்பும் பேசுவதற்கானதொரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்யா போர் நிலைமைகளுக்கு அப்பால் உரையாடல் தந்திரோபாயத்தையும் மேற்குடன் மேற்கொண்டு வருகிறது. கடந்த காலத்தில் எட்டு கோரிக்கைகளை முன்வைத்து மேற்குடன் உரையாடுவதற்கான களத்தை திறந்த ரஷ்யா, அதனை ஆரோக்கியமாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது. இராஜதந்திரம் பற்றிய உரையாடலை முன்வைத்த பிஷ்மார்க் குறிப்பிடுவது போல் வாய்ப்புக்களை பயன்படுத்துவதில் புடின் சிறப்பாக செயலாற்றுகிறார்.

மேற்குலக மற்றும் நெட்டோ ரஷ்யாவுடன் மோதுவதும் முரண்பாடுகளை எதிர்கொள்வதும் சீனாவின் நகர்வுகளுக்கு வாய்ப்பான களத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக தைவான் விடயத்திலும் தென் சீனக்கடல் பகுதியிலும் இந்துசமுத்திர நாடுகள் மத்தியிலும் மேற்கிற்கும் சீனாவிற்குமான இழுபறி அண்மைக்கால கட்டங்களில் அதிக முக்கியத்துவத்தை ஏற்படுத்தியிருந்தது. இதில் நேரடியான எச்சரிக்கைகளும் பதில் நடவடிக்கைகளும் மேற்கும் சீனாவும் எதிர்கொண்டு வந்தன. ஆனால் ரஷ்யாவினுடைய நகர்வு அல்லது ரஷ்ய-சீன கூட்டமைப்பு தமது பிராந்தியங்களையும் இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்புக்களையும் மேற்குக்கு எதிராக திசை திருப்பப்படுகின்றபோது மேற்கு நெருக்கடிக்குள் தள்ளப்படும் சூழலை எதிர்கொள்ளலாம். மேற்கின் மீதான இருமுனைத் தாக்குதல் திறன் கொண்ட நாடுகளாக ரஷ்யாவும் சீனாவும் காணப்படுகின்றன. எனவே இப்போக்கு மாறிமாறி நிகழ்கின்ற போது ரஷ்யாவும் சீனாவும் ஆரோக்கியமான வளர்ச்சியை அடைவதனை அவதானிக்க முடிகின்றது. அதேநேரம் சீனாவின் பட்டி மற்றும் சாலை முன்முயற்சியின் விஷ்தரிப்புக்கள் பலப்படுதையும் இந்த பசுபிக் நாடுகளை மேற்கு நாடுகளால் முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலாத நிலையும் காணப்படுகிறது.

'உக்ரைனுடனான போரை தவிர்க்கும் வகையில் ரஷ்யா இராணுவ ரீதியிலும் அரசியல் இராஜதந்திர உத்திகளிலும் தந்திரோபாயமான நகர்வுகளை செய்வதிலும் வெற்றிகரமாக விளங்குகின்றது. அதேநேரம் ரஷ்யா ஒரு யுரேசியன் நாடாக காணப்படுவதால் ஐரோப்பாவின் செல்வாக்கும் அனுசரணையும் ரஷ்யாவிற்கு அவசியமானவை'

எனவே, கோவிட்டிற்கு பின்பான உலகம் மேற்கு எதிர் சீனா-ரஷ்யா என்ற பரிமாணம் வலுவான சூழலை ஏற்படுத்தி வருகிறது. இதில் ரஷ்யா இராணுவ ரீதியிலும் அரசியல் இராஜதந்திர உத்திகளிலும் தந்திரோபாயமான நகர்வுகளை செய்வதிலும் வெற்றிகரமாக விளங்குகின்றது. அதேநேரம் ரஷ்யா ஒரு யுரேசியன் நாடாக காணப்படுவதாக ஐரோப்பாவின் செல்வாக்கும் அனுசரணையும் ரஷ்யாவிற்கு அவசியமானவை. ரஷ்யாவின் புவிசார் அமைவிடம் மைய நாடுகளாலும் விளிம்பு நாடுகளாலும் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதனால் அந்நாடுகளை அரவணைப்பதுவும் ஒத்து இயங்குவதும் தவிர்க்க முடியாத அம்சமாக விளங்குகின்றன. இதனால் தான் இராணுவ நகர்வுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை விட அரசியல் இராஜதந்திர பாய்ச்சல்களுக்கு ரஷ்யா அதிகம் முக்கியத்துவம் அளிக்கிறது. ஆனால் அமெரிக்காவும் அல்லது அமெரிக்கா தலைமையிலான அணியை அங்கீகரிப்பதும் ரஷ்யாவுக்கான நெருக்கடியாகும்.

கஸகஸ்தானில் ஏற்பட்டுள்ள ஆட்சிக்கு எதிரான போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருகின்ற வகையில் ரஷ்யா எடுத்திருக்கும் இராணுவ நடவடிக்கையானது பிராந்திய நாடுகள் மத்தியில் பாதுகாப்பு சார்ந்த ஒத்துழைப்பாகவே பார்க்கப்படுகிறது. இதனால் ரஷ்யாவின் எழுச்சி என்பது தவிர்க்க முடியாதது மட்டுமன்றி முன்னாள் சோவியத் யூனியனின் வாய்ப்புக்களை நோக்கி ரஷ்யா மட்டுமல்ல அதன் குடியரசுகளும் கிழக்கு ஐரோப்பிய ஆட்சியாளர்களும் சிந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மேற்குலகு ரஷ்யாவுடன் மோதிக்கொள்ளும் சந்தர்ப்பமானது சீன நலன்களை ஏனைய பிராந்தியங்களில் விரிவாக்கம் செய்வதற்கான சூழலாகவே தெரிகிறது.

நூல் அறிமுகம்

நூல்:- மலையகக் கவிதைகளும் மக்களும்
நூலாசிரியர் : கலாநிதி ஸாதியா பௌஸார்

பக்கங்கள்: 210
விலை 850

மலையக கவிதை இலக்கிய ஆய்வுத் துறையில் கலாநிதி ஸாதியா பௌஸர் எழுதிய 'மலையகக் கவிதைகளும் மக்களும்' எனும் ஆய்வு நூலின் வரவின் மூலம் துறைசார்ந்த சாதனையாளராகவும் தமது புலமைத் தடத்தினை ஆழப்பதித்த பெருமைக்குரியவர்.

தான் பிறந்த மலையக மண்ணின் மீது கொண்டுள்ள பாசமும் அறிவு அனுபவங்களுடன் மலையத்தில் துன்பப்படும் மக்கள் மீது பரிவுடன் தமது பார்வையை செலுத்தி அம்மக்கள் பற்றி பாடுபொருளாகக் கொண்டு படைத்த கவிஞர்களுடைய பாடல் வரிகளையும் வலிகளையும் எடுத்தாய்வு செய்து மலையக கவிதை இலக்கியத்திற்கென ஒரு காத்திரமான நூலை வெளிக்கொணர்ந்துள்ளார் கலாநிதி ஸாதியா பௌஸர். இதன் பயனாக இதுவரையிலும் கிடைக்கப்பெறாத மலையகப் படைப்பாளிகளுக்கு முக்கியத்துவமும் அங்கீகாரமும் வழங்கப்படுகின்ற ஆரோக்கியமான சூழல் இன்று எழுந்துள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறைத் தலைவி கலாநிதி ஸாதியா பௌஸர் அவர்கள் மலையகம் பற்றி ஆய்வு மேற்கொண்டு வெளியிட்ட இந்நூலானது மலையகக் கவிஞர்கள் மனித குலத்தை நேசிக்கும் பண்பையும் மக்கள் படும் துயரத்தையும் அவர்களது வாழ்க்கை கோலத்தையும் பல கோணங்களில் ஆராய்ந்து மலையக மக்கள் பற்றிய கூர்மையான மதிப்பீடொன்றை திறன்படச் செய்துள்ளார். இதற்கும் மேலாக தமிழ் இலக்கியத் துறையில் பல்வேறு ஆற்றல் படைத்த ஒரு சிறந்த ஆய்வாளர் என்பது நாமறிந்ததே!

இந்நூலாசிரியர் தமது முன்னுரையில் 'தமிழ் இலக்கியத்தை யாழ்ப்பாணம் தமிழ் இலக்கியம், கிழக்கிழங்கை தமிழ் இலக்கியம், தென்னிலங்கைத் தமிழ் இலக்கியம் என்பது போல், பிரதேச ரீதியிலான இலக்கியமாக நோக்குவதை விட அடக்கப்பட்ட சமூகத்தின் குரலாக நோக்குவதே பொருந்தும். இவ்வாய்வில் மலையக மக்கள் மலையக மலையக இலக்கியம் முதலிய பதங்கள், பிரதேச அடிப்படையிலின்றி, இந்தியாவில் இருந்து பெருந்தோட்டச் செய்கைக்காக அழைத்து வரப்பட்ட மக்களையும் அவர்களது பிரச்சினைகளைப் பிரதிபலிப்பனவாக அமைந்த இலக்கியங்களையுமே குறித்து நிற்கின்றன. மலையகத்தைச் சேர்ந்தவர்களால் அவர்களது பிரச்சினைகள், வாழ்வியல் அம்சங்கள் முதலியவற்றைப் பற்றி எழுதப்பட்ட கவிதைகள், மலையகம் சார்ந்தோரால் மலையகம் தொடர்பாக எழுதப்பட்ட கவிதைகள் ஆகிய இரண்டையும் மலையக கவிதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன' என்று நூல் பற்றிக் குறிப்பிடுகிறார்.

கலாநிதி ஸாதியா பௌஸர் இவர் தனது தமிழ் சிறப்புக் கலைமாணி, முதகலைமாணி, முதுத்தத்தவமாணி, கலாநிதிப் பட்டங்களைப் பேராதனைப் கல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டவர். பல்வேறு நூல்களினதும் சஞ்சிகைகளினதும் ஆசிரியரான இவர் தமிழ் இலக்கியம், மலையக தமிழ் இலக்கியம், தொடர்பான பல்வேறு கட்டுரைகள் அவ்வப்போது எழுதி வருகிறார். இவர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

மலையக கவிஞர்களுடைய எதிர்கால எழுத்துத் துறைக்கு இந்நூல் பயனுள்ளதாக அமையும். மலையக மக்களுடைய சமூக, அரசியல், அன்றாட வாழ்க்கை, தொழில், கல்வி, சுகாதாரம் போன்ற இன்னோரன்ன எல்லா விடயங்களையும் அலசி ஆராய்வது மகிழ்ச்சியை அளிக்கிறது. அவரது முயற்சி பாரட்டத்தக்கது.

இக்பால் அலி

கல்முனையில் நடைபெற்ற ஐக்கிய காங்கிரசின் 17வது பேராளர் மாநாடு!

நூருள் ஹுதா உமர்

ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் 17வது வருடாந்த பேராளர் மாநாடு அக்கட்சியின் தலைவர் கலாபூஷணம் முபாரக் அப்துல் மஜீத்தின் தலைமையில் கல்முனையில் நேற்று (15) சனிக்கிழமை நடைபெற்றது.

கட்சிக்கு அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய பல்வேறு நிர்வாகிகள் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டதுடன், புதிய நிர்வாகிகள் பலருக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கி இந்த பேராளர் மாநாட்டில் 17 புதிய தீர்மாணங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. கடந்த இரண்டு வருடங்களாக நாட்டில் இன மோதல்கள் ஏற்படாமல் தேசிய பாதுகாப்பில் கவனம் செலுத்தும் பொதுஜன பெரமுன அரசுக்கு ஐக்கிய காங்கிரஸ் கட்சி நன்றி செலுத்தல் தொடர்ந்தும் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுப்பதுடன் ஜனாதிபதியின் நல்ல திட்டங்களை முன்னெடுப்பதற்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தல்.

2. இனப்பிரச்சினைக்கான தீர்வாக கொண்டு வரப்பட்ட 13 வது திருத்த சட்டம் தோல்வியடைந்து விட்டதால் மாகாண சபைகளை கலைத்து மாவட்ட சபைகளாக மாற்றும் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். அவற்றுக்கு பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும்.

3. அரச ஊழியர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கியமைக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கட்சி நன்றி தெரிவிக்கிறது.

4. பாடசாலைகளில் நிலவும் சமய ஆசிரியர் தட்டுப்பாட்டை நீக்க வேண்டும். இஸ்லாம் சமய ஆசிரியர்களாக மௌலவிமார் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும்.

5. திகாமடுல்ல தேர்தல் மாவட்டம் என்பது மிகப் பெரிய மாவட்டமாக இருப்பதால் தேர்தல் காலத்தில் கட்சிகளும் வேட்பாளர்களும் பொது மக்களை சந்திப்பதில் பல கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். ஆகவே கல்முனைத்தொகுதி, சம்மாந்துறை, பொத்துவில் ஆகியவற்றை இணைத்து கல்முனை தேர்தல் மாவட்டம் அறிவிக்கப்பட வேண்டும்.

6. கிழக்கு மாகாணத்தில் நிலவும் வீடில்லா பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் வீட்டுத்திட்டங்கள் வழங்க வேண்டும்.

7 சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கட்டப்பட்ட நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தை சுனாமியால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட கரையோர மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

8. முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தில் புதிதாக சில சரத்துக்களை கொண்டுவர முடியுமே தவிர இருக்கும் சட்டத்தில் எத்தகைய திருத்தமும் தேவையில்லை.

9. வடக்கையும் கிழக்கையும் இணைக்க எடுக்கும் எத்தகைய முயற்சியையும் எமது கட்சி வன்மையாக கண்டிக்கிறது. அதேபோல் வடக்கிலும் கிழக்கிலும் அரச உதவியுடன் வேறு மாகாணத்தை சேர்ந்தோர் குடியேற்றப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

10. பாராளுமன்ற தேர்தல்களுக்கு முன் மேலும் சில தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும். அக்கரைப்பற்று, கிண்ணியா, காத்தான்குடி போன்றவை தேர்தல் தொகுதிகளாக்கப்பட வேண்டும்.

கொழும்பு காயத்திரி சித்தர் ஸ்ரீ ஸ்ரீ முருகேசு மகரிஷி ஆத்மயோக ஞானசபாவின் பீடாதிபதி சித்தா புருசா சுவாமி ஸ்ரீ சங்கரானந்தா ஜீ கொழும்பு மாநகரசபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்கவின் சமய, சமூக பணிகளை பாராட்டி கௌரவிக்கும் முகமாக ஆத்ம சபாபதி என்னும் அதிஉயர் விருதை சபாவின் உமாஜினி மைந்தன் வழங்குவதையும், சுவாமி ஜீ அவர்களையும் படத்தில் காண்க. பட உதவி : எம். மகேஷ்

பசறை கல்வி வலயத்திற்குட்பட்ட வெரலபத்தன தமிழ் வித்தியாலயம் ஏற்பாடு செய்த ஆரம்ப பிரிவு மாணவர்களிடையே ஆங்கில மொழி அறிவை விருத்திசெய்யும் நோக்குடன் நடாத்தப்பட்ட 'ஆங்கில சொல் உச்சரிப்பு' போட்டி அண்மையில் நடைபெற்றது. பசறை கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்கள் திருமதி. பர்வீனா, சுரேஸ் ஆகியோர் நடுவர் குழாமில் பங்கேற்று வழிப்படுத்தினர். நிகழ்வில் மடுல்சீமை தமிழ் தேசிய பாடசாலை அதிபர் நிகழ்ச்சித்திட்ட பொறுப்பாசிரியர்கள் திருமதி. சகாயமேரி, ரவி ஆகியோரும் அயல்பாடசாலை ஆசிரியர்களும் பங்கேற்று மாணவர்களை வழிப்படுத்தினர். போட்டி முடிவில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டமைக் குறிப்பிடத்தக்கது. தகவலும் படமும் : நடராஜா மலர்வேந்தன்

அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவி பாகிஸ்தான் பயணம்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவி நிசார் பாதிமா சாறா பாகிஸ்தான் லாகூர் University of Central Punjab நான்கு வருட உயிரியல் இரசாயனம் பட்டக் கற்கை நெறியை மேற்கொள்வதற்காக புலமைப்பரிசில் பெற்று பாகிஸ்தான் பயணமானார். கடந்த 2020ம் ஆண்டு க.பொ.த உயர்தரம் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவி நிசார் பாதிமா சாறா ஏ, பி, சி சித்தி பெற்றிருந்தார். இதன் அடிப்படையில் அவர் புலமைப் பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் ஆரம்பக்கல்வி முதல் உயர் தரக் கல்வி வரை பெற்றுக் கொண்ட மாணவி பாதிமா சாறா, கடந்த 2015ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் ஏ தரச் சித்திபெற்று பாடசாலைக்கும், அக்கரைப்பற்று மண்ணுக்கும் பெருமை சேர்த்தார்.

இரத்தத்தில் கலந்த சாக்கடை

ரூபஷாலினி ராஜ்குமார்

நகர்ந்திடும் நாட்கள்
நாட்காட்டியின் கணக்குகளாய் மட்டும்..
நல்லதொரு நாள்
என் நாட்காட்டியில் மட்டும்
அச்சிடப்படாமலே அச்சுப்பிழையாய் வெளிவந்ததோ?

அதிகாலை ஆதவன்
நேரம் தவறாமல்
நேர்மையின் சுடராய் சுட்டெரிக்க...
என் வானில் மட்டும்
உன் ஆயுள்
கல்லறைக்கு செல்லும் கால் தடமாக...?

குளிர் நிலவின்
மோக ஒளியில்
யாவும் மயங்கிட...

அதன் கருப்பு நிழல் மட்டும்
என் மொட்டை மாடியில்
தனித்தே தலையணை கேட்கிறதே?

ஐ விரல்கள் கூட்டுச்சேர்ந்து
எனக்கு துணையாய்
கைகுலுக்குமென நினைக்கையில்
எதிரே சுட்டு விரல்
என்னை நோக்கி சூழ்ச்சிக்கிறதே?

சந்தோச கோப்பையில்
நிரம்பி வழியும் ஒரு துளி கூட
என் வாசல் திசையறியாமல்
பொங்கி வரும் நுரையிலேயே
என் நுரையீரலும் நின்றிடுதே?

மலர் பாதையில் நடந்தாலும்
என்றோ தொலைந்த
ஒற்றை முள்
என் பாதம் தேடி
இரத்தக் கோலமிடுதே?

உண்மையின் வாய்கள் ஊமையாகுதே?
நேர்மையின் செவிகள் செவிடுமாகுதே?
நம்பிக்கையின் கைகளும் முடமாகுதே?
இரத்த ஓட்டத்தில் சாக்கடையும் கலக்குதே...
நித்தம் ஊடுருவி
இதயச்சுவற்றின் நாசி வழி சென்று
மாசு பண்ணி
துடிக்கும் துடிப்பை விடிமாக்குதே?

"பொருள் " தான் ஆதாரமென்ற
நிலை மாறுமோ ?
இல்லை
என் "பொருளாதார நிலை "
மாறுமோ ?

விரதம்

இணுவில் வாகீசன்

விரதம் என்றால் என்ன
பள்ளிப் பாடம் எழுத
விடை கேட்டான் மகன்
மூன்று வேளை உண்பவர்கள்
ஒரு சில நாட்களில்
எம்மைப்போல்
ஒருவேளை உண்பது
என்றால் ஏழைத்தாய்

நான்

மஜினா உமறு லெவ்வை
மாவடிப்பள்ளி

நீங்கள் சிரித்தால்
நானும் சிரித்துக்
கொள்வேன்
நீங்கள் பேசினால்
நானும் பேசிக்
கொள்வேன்

நீங்கள் கோபப்பட்டால்
நானும் கோபப்படுவேன்
நீங்கள் அழுதால்
நானும் அழுவேன்
என சொல்லுவதற்கு
நான் கண்ணாடி விம்பமல்ல

அப்படியொரு
பொய்யினைச் சொல்லி
உங்களை ஏமாற்றும்
மனமும் என்னிடமில்லை

மாறாக
நீங்கள் சிரிக்காவிட்டாலும்
சிறு புன்னகையோடு
கடந்து செல்வேன்
நீங்கள் பேசாவிட்டாலும்
கண்களின் ஒற்றைப்
பார்வையால் பேசிச் செல்வேன்

நீங்கள் கோபப்பட்டாலும்
மௌனமாய் நின்று கொள்வேன்

நீங்கள் அழுதாலும்
கவலை தீர
சிறிதளவேனும்
பிரார்த்தித்துக் கொள்வேன்

இருக்கும் வரை
நல்லமனதோடு
வாழ்ந்துவிட்டுச் செல்ல
வேண்டுமென்ற ஒற்றைக்
காரணத்திற்காகவாவது
நான் இப்படி இருக்க வேண்டுமல்லவா..

இவர்கள் எப்பேற்பட்ட மனிதர்கள்

மயிலிறகு மனசு
சிபானா அஸீம்

என்னிடம்
இருப்பதை விட
தன்னிடம்தான்
அதிகம் என்றார்கள்

நீ உடுத்தும்
உடையை விட
நான் உடுத்துவதே
அழகென்றார்கள்

உன்னை விட
நான்தான்
தரமாய்
வாழ்கிறேனென்றார்கள்

சரிதான் போவென
வாழ்த்திவிட்டு

உலகியலிலிருந்து
விலகி நின்று

கன்னாபின்னாவென்று
எழுத்துக்களால்
கொஞ்சம்
உளறத்தொடங்கினேன்

உன்
உளறலைவிட
என் உளறல்கள்தான்
சரியென்கிறார்களே

நீ இப்போதுதான்
உளறத்தொடங்கியிருக்கிறாய்

நான் எப்போதோ
பைத்தியமாகிவிட்டேன்
என்கிறார்கள்

அது
மட்டுமா?

நான்
துயரத்திலிருக்கிறேன்
என்றால்

நான்
உன்னைக்காட்டிலும்

நான்
அதிக
துயரத்திலிருக்கிறேன்
என்கிறார்கள்

எப்பேற்பட்ட மனிதர்கள்
இவர்கள்

இப்போதைக்கு

நான்
கொஞ்சம்
மூச்சை வெளித்தள்ள

இடமிருந்தால்
போதும்.

உண்பவனுக்கு ஒரு பொங்கல் உழவனுக்கு மூன்று பொங்கல்

ம. பொன். நவநீதன்

கங்குல் வறுத்துக்
கதிரவன் வெளிக்கும்முன்
உகவையோடுழவன்
வீடுவீடாய் விழித்தெழுவான்!

செங்கல்விடுப்பைச்
செப்பமாய் மூட்டி
பானையை அடுப்பிலேற்றிப்
பாங்குறப் பொங்கிமுடிப்பான்!

கதிர்விளைத் தறுக்கக்
கதிரொளி வழங்கிய அக்
கதிரவ சாமிக்கே தன்
பொங்கலைப்படைத்துப் பணிவான்!

கள(ம்) வயலில் தன்னுடன்
உழுதுவிதைக்க உதவிய
கலப்பைமாட்டையும் போற்றி
பொங்கிப்படைத்துப் பணிவான்!

கதிரவன் தந்தைபோலும்,
காளைமாடுகள் தோளர்களாக,
கள(ம்) வயல்நிலம்
உழவனின் "தாய்" எனப் பொங்கல்!

கதிரவப் பொங்கல்!
காளைப் பொங்கல்!
களநிலப் பொங்கல்! – என
உழவனுக்கு மூன்று பொங்கல்!

தேவியே பொறுப்பு

ரதிதேவி,மானிப்பாய்

இந்த உடல்
சில வேளைகளில்
சுகத்தை அனுபவிக்கிறது
ஆரோக்கியத்தை அனுபவிக்கிறது
சில வேளைகளில்
நோயை, புண்ணை அனுபவிக்கிறது

இந்த உடல்
சில வேளைகளில்
கட்டுக்கோப்பாக, பளிச்சிடும் தோலுடன்
அழகுற்றுக் காணப்படுகிறது
இந்த உடல்
சில வேளைகளில்
அதன் விகிதாசாரத்தை இழந்து
வண்டியும் தொந்தியுமாய்
அழகிழந்து காணப்படுகிறது

இந்த உடலை
அவளிடம் ஒப்படைத்து விட்டேன்
இந்த உடல்
அழகுற்றிருந்தாலும்
அழுகி உக்கி இருந்தாலும்
அதற்கு அவளே பொறுப்பு

என் மனத்தையும்
அவளிடம் ஒப்பித்துவிட்டேன்
மனம்
சில சமயங்களில்
கருணை, மன்னிப்புத்தன்மை,
காதல், நட்பு
போன்ற அழகான உணர்ச்சிகளால்
அழகுற்றிருக்கிறது

மனம்
சில சமயங்களில்
வக்கிரம்,வன்மம்
பொறாமை,கோபம்
போன்ற அசிங்கமான உணர்ச்சிகளால்
அழகிழந்து இருக்கிறது

எது எவ்வாறாயினும்
இந்த மனத்தையும்
அவளிடம் ஒப்படைத்துவிட்டேன்
அதில் பணிவு தோன்றினாலும்
பக்தி தோன்றினாலும்
அகங்காரம் தோன்றினாலும்
ஆணவம் தோன்றினாலும்
அவளே பொறுப்பு

அனைத்தும்
அவளிடம் ஒப்படைத்தாகி விட்டது
இனி வீற்றிருந்து
வியந்து பார்பதைத் தவிர
செய்வதற்கொரு காரியம்
இவ் ஜெகத்தினில் அன்று

தைப்பொங்கல்

கவிக்குயிலன்
சேனையூர்.

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்யும்
உன்னதத் திருநாள்
தைப்பொங்கல்:

அழஅழகாய் மாக்கோலம்
புள்ளிவைத்துப் போடுவதும்
பழமையான வளக்கமாகும்
உழவர்பொங்கல் திருநாளில்:

புத்தரிசிப் பால் பொங்கல்
கொத்துமாவிலை மஞ்சலுடன்
வெற்றிலை பாக்கு பழங்களுடன்
பக்தியோடு படைத்திடுவர்:

கரும்பும் விரும்பும் அவல் கடலை
கற்கண்டும் படையலிட்டு
கதிரவனை வழிபடும்
அற்புதத்திருநாள் தைப்பொங்கல்:

தைபிறந்தால் நல்வழிபிறக்கும்
தமிழர் பொன்மொழிபலிக்கட்டும்
மெய்யாகி மேதினி தளைக்க
வையம் மகிழவைப்போம் பொங்கல்:

பொங்கலோ பொங்கல்...!

கவிக்கிறுக்கன்
இணுவில்

மண்ணிலே பானை செய்து
மண்ணிலே விளைந்த அரிசியை
பால்தனிலே இட்டு
பால் பழங்கள் வைத்து
ஊர் முழுக்க கொண்டாடுகின்றதே
வான் முழுதும் உலவும்
சூரியனே இன்று மட்டும்
வீட்டுக்கூரையடிக்கு வா !

கொலைக்காரி நீ...

சக்கரவர்த்தி, கொழும்பு

கண்களால் கொல்லும்
கொலைக்காரி நீ...
கல்லூரி முதல் இன்று வரை
உயிர் விட்டவர்களோ ஏராளம்...
நான் உன்னருகில்
இருப்பதாலோ என்னவோ...
குற்றுயிராய் வாழ்கிறேன்
இன்னும்.....!

அருமையைத்தாராய்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

தாயாய் தந்தையாய் தரணியே வியப்புற
பதியாய் நதியாய் பாரே சிறப்புற
மலராய் தளிராய் மானிலம் மணம்பெற
மலையாய் மழையாய் தாரணி வளம்பெற
சேயாய் சிறுமியாய் உலகம் களித்திட
சிறுவரும் பெரியோரும் சிந்தை மகிழ்ந்திட
தைமகளே நீ தைரியமாய் பிறந்து
அனைத்துமாய்த்திகழ்ந்து அருமையைத் தாராய்!

வனப்பான வாழ்வைத் தேடி

ஜாஹிரா அமீன் – ஏறாவூர்

எங்கள் தேசமெங்கும்
அக்கினி சுமந்த
மழை மூட்டினாய்

நீ பொழிந்த
அக்கினிச்சுவாலை
அடியறுத்தது
எங்கள் வம்சத்தை

உன் சுவாலையில்
கருகி உருக்குலைந்த
உயிர்கள் ஏராளம்

வானம் வெளுத்த மமதையில்
நீ பொழியாவிட்டாலும்
உன் தூறல்களில்
நாங்கள் நனைகின்றோம்

உன் தூறலில் நனைந்த
எங்களை
புது நாமம் சூட்டி
அழைத்தாய்....
விஷேட தேவையுடையோர்

எங்கள் உரிமைக்குரல்
சர்வதேசம் வரை ஒலித்தது
உரிமைச்சாசனமும்
சட்டதிட்டங்களும்
ஏடுகளில் புதைக்கப்பட்டிருக்கிறது

சமத்துவம் தேடி முகங்கள்
தேசம் முழுக்க அழைகிறது
வேலைவாய்ப்பு மறுத்து
முத்திரை குத்துகிறது
முதலாளி வர்க்கம்

பாலியல் லஞ்சம் கேட்டு
பலயீனமாக்க துடிக்கிறார்கள்
பணக்கார முதலைகள்

யானையை மிஞ்சிய பலமும்
குதிரையை விஞ்சிய சக்தியும்
ஒளியை மிகைக்கும் வேகமும்
எங்கள் மனங்களில்
பரவிக் கிடக்கிறது
எங்களை வாழவிடுங்கள்

சிதைவுற்ற உருக்களாய்
மாறா வடுக்களைச் சுமந்து
வாழ்க்கையென்னும் போராட்டத்தில்
வனப்பான வாழ்வைத் தேடி

தாய் பாசம்

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

வயலோர வாய்க்கால் சத்தம்
வாஞ்சையாய் அவளை இழுக்க
முகம் துளிர்த்த
வியர்வைத் துளிகளை
அழுத்தித் துடைத்தவள்
அமர்ந்தாள் வயல் வரம்பில்

வீசும் காற்றின் மெல்லிய இம்சை
அவள் வியர்த்த உடலுக்கு
சுகமான இதம் தர
பொட்டலம் பிரிக்கிறாள்
வயிற்றைக் கொஞ்சம்
உணவால் நனைக்க
களைப்பில் நொந்து போனவள்

ஒரு பிடி உணவை
மென்று உண்ண
உன் குழந்தை அழுகிறான்
எனும் ஒலி காற்றில் பறந்து
அவள் செவிகளில் ரீங்காரமிட
பசியெல்லாம் பறந்தே போனது
உண்டதும் மறந்தே போனது
அத்தனையும் தன்
குழந்தையின் அழைப்பின் பின்

ஓடிப் போய் அள்ளிச்
சென்று அணைத்தெடுக்கிறாள்
தன் சேயை
பசி தன்னை வறுத்துவதாய்
அவன் அழ
இவளோ பசி மறந்த நிலையில்
அவனுக்கு ஊட்டுகிறாள்
தன் உதிரத்தைப் பாலாக

தாய்ப் பாசத்துக்கும் ஏதிங்கு எல்லை!!

போதையின் பாதையில் செல்வதை நிறுத்து

றுசைனா ஹாசீம்
அக்கரைப்பற்று02

பாதம் போகும் பாதையெல்லாம்
பயணிக்கும் மாணாக்கரே
நீங்கள் ஏன் போதையின்
பாதையில் பயணம் செய்கின்றீர்?

வஞ்சம் கொண்ட நெஞ்சம்
கொண்டோர்க்கு வாய்ப்பாகிப்
போன வாழ்க்கையில் இங்கு
பிஞ்சு உள்ளங்கள் சீரழிவதேனோ?

காசு ஒன்றையே தான்
கனவாய் கொண்டவர்கள்
ஆசை வார்த்தை சொல்லி
ஆளை மயக்குகின்றனரோ?

சினேகிதர்களையும் கூட
சீர் தூக்கிப் பார்த்தே
தேர்ந்து எடுக்க வேண்டிய
கால கட்டம் இதுவன்றோ?

பாசம் காட்டி உங்களின்
நெஞ்சை பாழடிக்கும்
பாவிகளின் சதிவலையில்
சிக்கிக் கொண்டீர்களோ?

இலட்சிய கனவோடு
இதய சுத்தியோடு
பண்பாய் இருந்து நாமும்
படிக்க வேண்டிய காலம்

பாவிகளின் சதிவலையில்
உங்கள் எதிர்காலம் சீரழியலாமோ?
எண்ணித் துணிய வேண்டும் கருமம்
எதிலும் உணர்ந்து ஒழுகுதல் வேண்டும்

பள்ளிப் பருவத்து மாணவர்களே
மற்றவர் எண்ணி நகையாக இடமளியாதீர்
சின்னஞ் சிறு நெஞ்சுக்குள் பென்னம் பெரிய
கனவு உருவாக வேண்டியகாலம்

சிந்தியுங்கள், செயற்படுங்கள்
வாழ்க்கையை சீர்தூக்கி
பார்த்து செயற்படுத்துங்கள்
வாழ்க வளமுடன்

போதையின் கோரப்பிடி

ஷபானா ஆதம் லெப்பை
(ஓட்டமாவடி)

மதியால் உலகை வெல்லும்
வயதில் மதி மயங்கி விலை
கொடுத்து வினை விதைப்பவனே....

கானல் சுகத்துக்காகக்
காலத்தைக் கரைப்பவனே...

போதைத் தோல் போர்த்தி
அருகிலிருப்பவருக்கு அவஸ்தையைத்
தீனியாய்ப் போடும் பேதையே.....

உயிர்க் கொல்லியை உறிஞ்செடுத்து
உயிரை மாய்க்கத் துடிக்கும்
துஷ்டனே...

தாயையே தாரமாக பார்க்கும்மளவு
புத்தி மழுங்கியவனே...

தன் துணைவி வீதியில் வீற்றிருக்க
அவள் கையிலோ பால் குடி மாறா
பச்சிளம் பாலகன் பசியால் பதறித்துடிக்க...

அதையும் அறியா அறிவிலி
நீ உன்கையிலோ நான்...
நான் தான் போதை

வெளியே வா மனிதா என்னால்
இன்னலைத் தவிர வேறதுவும்
இல்லை உனக்கு எழுந்துடு...
மாயக்கண்களைத் திறந்து...
என்னிலிருந்து விலகிடு...

அறம் பேசும் அரசு எங்கே..?
உன் குடிமக்கள் என்னால்
குடியிழக்க அனுமதி கொடுக்குறாயோ
நீ... நீயும் விழித்திடு என்னாலான
அனைத்தையும் உடைத்திடு....

எதிர்கால மாமனிதனை உருவாக்கி
வல்லரசாக வையகத்தில் நீ
வலம்வர வேண்டுமானால்
என்னை ஒழிக்க துணிந்தெழு....

AN EXCELLENT OPPORTUNITY TO JOIN ONE OF THE LARGEST RETAILERS IN THE SOUTH PACIFIC REGION.

CPL Group is based in Port Moresby, Papua New Guinea and is one of the leading retailers in the Pacific region. Founded in 1987, CPL Groups consists of supermarkets, hardware shops, pharmacies, cafes, and clothing stores.

We are looking for outstanding candidates to join our organization.

1. Pharmacists (Registered/ Licensed)

· Minimum of 5 years of working experience post registration or licensing.
· Valid and current pharmacy practicing license issued by local governing body or authority.

2. Business Analysts

· Persistence and creativity in identifying and extracting data and information from published sources.
· Ability to search for information creatively and cost-effectively, and juggle multiple quick-turnaround projects under tight deadlines.
· Superior written and verbal communication skills.
· Excellent strategic thinking, understanding of business research and analysis.

3. Category Managers/Procurement Managers

· 5 – 7 years of category management experience for pharmaceutical, digital, food and non- food, health and beauty, and other specialist products.
· Sound knowledge of industry and consumer trends regarding product and category.
· Creating and developing long term plans of the category and exit were unsuccessful.
· Building and driving relationships with key vendors both locally and internationally.
· Carrying out range reviews, pricing, and promotions.
· Collaborating with stakeholders to expand product category.
· Developing strong working relationships not limited to buying, marketing, and merchandising.

4. Senior Manager - Supply Chain

· 12- 15 years logistics experience of which 3 or more years of senior or leadership managerial experience with a reputable brand.
· Should have experience in the in the FMCG industry, and pharmaceutical logistics including cold chain management preferred.
· Professional qualification and memberships in logistics and transportation, preferred but not mandatory.

5. Wholesale Manager – Pharmaceutical products

· 10 Years of experience in pharmaceutical product sales with a reputable brand.
· Effective promotions to medical professionals while developing an excellent PR with all the customers.
· Plan & organize products focused meeting for the target medical professionals.
· Work strategically to increase awareness and usage of products.

All candidates applying should have excellent command of both spoken and written English and should possess effective interpersonal and communication skills.

If you are an "out of the box thinker," highly organized with attention to detail, and someone with an outgoing and confident personality who is comfortable with building new working relationships, we want to hear from you.

We are looking for team players with positive attitudes towards learning and applying new skills and appreciating other cultures.

An attractive remuneration package will be offered based on position applied and experience. All roles will come with accommodation, return air fares to place of hire, insurance, and other attractive benefits.

To apply for any of the above roles, send a copy of your most updated resume and a cover letter with position applied in subject to

careers@cpl.com.pg

CPL Group is an equal opportunity employer.

CPL GROUP
SINCE 1987

City Pharmacy | Stop & Shop IGA | HARDWARE HAUS | jack's of PNG | PROUDS | Real REWARDS

www.cpl.com.pg

திருகோணமலை மாவட்டத்தில் (Trincomalee District) விவசாய / தொழிற்சாலைக்கு உகந்த காணி தேவை.

திருகோணமலை (Trincomalee) மாவட்டத்தில் 10 ஏக்கர் அல்லது மேற்பட்ட விவசாய/ தொழிற்சாலை காணி அதிகளவு நீர் தினமும் தேவையேற்படுவதால் பெரிய ஆறுகளுக்கு அருகில் விரும்பத்தக்கது.

திருகோணமலை (Trincomalee) மாவட்டத்தில் காணி பலட்டடி சேனை (Palattadichchenail) மல்லிகைத்தீவு (Malikaitheevu) ,வானல (Wanela), கங்குவேலி (Kankuveli), சுண்டன் காடு (Chundankadu), வெருகல் (Verugal) , சன்கன்குலி (Sunkankuli), கந்தளாய் (Kantale), ஆகிய இடங்களில் இருப்பது நன்று.

திருகோணமலை (Trincomalee) மாவட்டத்தில் மேற்கூறிய இடங்களில் பெரிய ஆறுகளுக்கு அருகில் அல்லது திருகோணமலை(Trincomalee) மாவட்டத்துக்கு அருகாமையில் காணிகள் இருப்பின், தயவு செய்து விபரங்களை முடியுமான படங்களுடன் எதிர்பார்க்கும் விலையை insafmubarak@hotmail.com அல்லது 0742073431 மூலம் Mr.Insafஜ தொடர்பு கொள்ளவும்.

Foster Real Estate Limited Colombo

NIMDOOS

மருந்தாக்கங்களின் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு

இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

விலைமனுக்களுக்கான அழைப்பு

சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

Bid Ref.: SPMC/01/2022 - 2022 மார்ச் 2 ஆம் திகதியன்று முடப்படும்

மருந்தாக்கல் மூலப் பொருட்களின் பெறுகை

1. 2022 மார்ச் 2 ஆம் திகதி மு.ப. 10 மணி வரையும் இலங்கை, இரத்மலானை, கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபன பெறுகைக் குழு தலைவரினால் மருந்தாக்கல் மூலப் பொருட்களின் வழங்கலுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

	உருப்படி	அளவு (கிலோ கிராம்)	மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (இ.ரூபாவில்)
01.	Amoxicillin Trihydrate BP (compacted)	27,000.00	20,000.00
02.	Ascorbic Acid BP	6,000.00	3,000.00
03.	Atorvastatin Calcium IP	3,000.00	15,000.00
04.	Carbamazepine BP	1,500.00	5,000.00
05.	Cetirizine Dihydrochloride BP	200.00	500.00
06.	Cloxacillin Sodium BP	18,000.00	25,000.00
07.	Diltiazem Hydrochloride USP	500.00	2,500.00
08.	Enalapril Maleate USP	300.00	2,500.00
09.	Famotidine USP	1,000.00	3,500.00
10.	Folic Acid BP	150.00	2,500.00
11.	Frusemide BP	1,500.00	4,000.00
12.	Gliclazide BP	8,000.00	25,000.00
13.	Losartan Potassium BP	7,000.00	18,000.00
14.	Metformin Hydrochloride BP	18,000.00	5,000.00
15.	Phenoxymethylpenicillin Potassium (compacted) BP	2,000.00	4,000.00
16.	Spironolactone USP	200.00	2,500.00
17.	Verapamil Hydrochloride BP	650.00	3,500.00
18.	Di Basic Calcium Phosphate (Dihydrate) USP	2,000.00	500.00
19.	Colloidal Silicon Dioxide USP/USNF	180.00	500.00
20.	DC Lactose (Lactose Anhydrous USNF/USP)	5,000.00	1,500.00
21.	Lactose Monohydrate BP/USP/ (100 Mesh)	2,000.00	500.00
22.	Lactose Monohydrate BP/USP/ (200 Mesh)	40,000.00	4,000.00
23.	Magnesium Stearate BP	2,000.00	500.00
24.	Microcrystalline Cellulose USNF/BP	10,000.00	1,500.00
25.	Micro crystalline Cellulose USNF/PH/ EUR/JP (PH 200 LM)	4,000.00	1,000.00
26.	Pre-gelatinized Maize Starch	2,000.00	500.00
27.	Sodium Citrate BP	300.00	500.00
28.	Sodium Starch Glycolate BP/USNF	3,000.00	1,000.00
29.	Stearic Acid BP (Grade 50)	400.00	500.00
30.	Zinc Stearate BP/USP	200.00	500.00

2. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களில் நகல் பிரதி மற்றும் மூலப் பிரதியென இரு பிரதிகளில் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு பதிவுத்தபாலில் தலைவர், பெறுகைக் குழு, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவள தோட்டம், இரத்மலான, இலங்கை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

3. பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து 2022 சனவரி 18 ஆம் திகதியிலிருந்து 2022 மார்ச் 01 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள முகவரியிலிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
   - இலங்கை, இரத்மலானை, கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபன திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல்.
   - SPMC இன் கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணத்தில் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்துதல்.

4. விலைமனுக்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளினால் நிர்வகிக்கப்படுவதனால் விலைமனுதாரர் அவரது சார்பாக முகவரொருவரை, உபமுகவரொருவரை, பிரதிநிதியொருவரை, பெயர் குறிப்பிடப்படுப ரொருவரை அமர்த்துவாராயின், அப்படியான பொது ஒப்பந்தத்தின் போது பொது ஒப்பந்த சட்ட 10 ஆம் பிரிவிற்கமைவாக பதிவு செய்த பின்னர் அவ்வாறான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழை இக்கேள்வி தொடர்பான எந்தவொரு கொடுக்கல் வாங்கல் வேளையிலும் அல்லது விலைமனுக்கோரலின் காலப்பகுதியின் எக்கட்டத்தின் எந்தவொரு நடவடிக்கையின் போதும் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் இரத்மலானை SPMC இல் திறக்கப்படுவதுடன் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

6. விலைமனுக்கோரல் ஆவணங்களை SPMC இல் இலவசமாக பரீட்சிக்கலாம்.

7. மேலதிக தகவலை 2623298 என்ற தொலைபேசி எண்ணினூடாக SPMC திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளர் இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

   www.spmclanka.lk என்ற எமது இணையதளத்தில் விலைமனுக்களின் விபரங்களை பார்வையிடலாம்.

வெளிநாட்டு முதன்மையாளர்கள் எமது இணையதளத்திலிருந்து விலைமனுவை பதிவிறக்கம் செய்யலாம். (உள்ளூர் முகவர்களினால் பிரதிநிதிப்படுத்தப்படாதவர்களின் முன்வைப்புகள் விலைமனுவின் கொடுப்பனவுக் கட்டணமாக அ.ஐ.டொலருக்கு நிகரான பெறுமதி/பெறுமதிகளுக்கான வங்கிவரைவொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்)

தலைவர்,
பெறுகைக் குழு,
அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,
இல.: 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை:
கந்தவள தோட்டம்,
இரத்மலானை, இலங்கை.

தொலைபேசி : (00) 94-11-2635353/(00) 94-11- 2637574 / (00) 94-11-2623298
மின்னஞ்சல் : spmclanka@sltnet.lk
இணையதளம் : www.spmclanka.lk
தொலைநகல்: : (00) 94-11- 2634771, 2626621

இலங்கையின் கடன் மீளச் செலுத்தும் ஆற்றலை...

(12ஆம் பக்கத் தொடர்)

இலங்கைக்கெதிராகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் இதுபோன்ற தரமிடல் நடவடிக்கைகள் அந்நியச் செலாவணி உட்பாய்ச்சல்களை அதிகரிப்பதற்கு இலங்கை அதிகாரிகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் தடையாக அமைந்து காலதாமதங்களை ஏற்படுத்துவதோடு முதலீட்டாளர்களின் நம்பகத் தன்மையைப் பாதித்து சாத்தியமான இலங்கைக்குள் வரவேண்டிய முதலீட்டு உட்பாய்ச்சல்களைக் குறைப்பதனால் நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்புகளை படிப்படியாகக் கட்டியெழுப்பும் நடவடிக்கை பாதிக்கப்படுவதாகவும் அறிவித்தது.

அத்தோடு S&P நிறுவனம் கூறிய எதிர்பார்க்கப்படாத நல்ல சம்பவங்கள் ஏதும் நடந்தாலன்றி கடன் மீளச் செலுத்தாமல் விடும் இடர்கள் அதிகரிக்கும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் ஏனெனில் இலங்கைப் பொருளாதாரம் மீட்சியடைவதற்கான சமிக்ஞைகள் உறுதியாகத் தென்படுவதாகவும் குறுங்கால நிதிவசதிகளை இருபக்க ரீதியிலும் இருதரப்பு அரசாங்கங்களுக்கு இடையிலும் ஏற்பாடு செய்துள்ளதோடு பரிமாற்றுக் கடன் வசதிகளையும் ஏற்படுத்தி செலாவணிப் பற்றாக்குறைக்குத் தீர்வுகாண முயற்சித்துள்ளதாகவும். இலங்கை ஊழியர்களின் பணவனுப்பல்களை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பலனளிக்க ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள மத்திய வங்கி, இலங்கையின் வெளிநாட்டு சொத்து ஒதுக்குகள் அதிகரிக்கும் சாத்தியங்கள் பிரகாசமாக உள்ளதாகவும் நம்புகிறது. எனவே அண்மைக்கால அபிவிருத்திகளைக் கருத்திற் கொள்ளாமல் இத்தரமிறக்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டுகிறது.

ஆனால் இதற்கு முன்பும் பலதடவைகள் கடன் தரமிடல் நிறுவனங்கள் இலங்கையின் தரமிடலை கீழ் நோக்கி நகர்த்தியபோது இலங்கையின் எதிர்வினைகள் இதேபோலவே இருந்தமையையும் ஆனபோதிலும் குறித்த நிறுவனங்கள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை என்பதையும் அவதானிக்கலாம். குறித்த நிறுவனங்கள் தனிப்பட்ட ரீதியில் இலங்கை மீது காழ்ப்புணர்வடைய வாய்ப்பில்லை. S&P நிறுவனத்தின் அறிக்கையை நோக்குமிடத்து வெறுமனே அந்நியச் செலாவணிக் கையிருப்புக்களின் அளவை மாத்திரம் கருத்திற்கொண்டு தரமிடலை மேற்கொண்டதாகத்தெரியவில்லை. முறையான ஆய்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகவே கருதவேண்டியுள்ளது. ஆனால் இலங்கை அரசாங்கம் நேர்க்கணியமான அண்மைக்கால அபிவிருத்திகள் எனக்கருதியவற்றை அந்நிறுவனம் தமது குறிகாட்டிகள் மற்றும் ஆய்வுகளின் படி நம்பத்தகுந்தவையாக கருதாமல் விட்டிருக்க இடமுண்டு. 6 மாதகால பாதை வரைவு மற்றும் 2022 பாதீட்டு முன் மொழிவுகள் குறித்த விமர்சனங்கள் உள் நாட்டிலேயே அதிகளவில் காணப்படும் நிலையில் சர்வதேச கடன் தரமிடல் நிறுவனங்கள் அவற்றின் நடைமுறைக்கிடும் சாத்தியங்களை நிராகரித்திருக்கக் கூடிய வாய்ப்பிருக்கிறது.

இனிவரும் காலப் பகுதிகளில் சர்வதேச தரமிடல் நிறுவனங்களின் அழுத்தங்களைக் கருத்திற் கொள்ளாது முதலீட்டாளர்களை நேரடியாக சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கை பற்றிய உண்மை நிலைமையை உணர்த்தி இலங்கைக்குள் அவர்களை வரவழைக்கும் முயற்சியில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபடவேண்டும் எனவும் மத்திய வங்கி ஆலோசனை கூறியுள்ளது. அப்படியானால் இதுவரை அதிகாரிகள் என்ன பணியினை செய்து கொண்டிருந்தார்கள் என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழத்தானே செய்யும்.

அதுமட்டுமன்றி சர்வதேச ரீதியில் இயங்கும் முதலீட்டாளர்கள் ஒரு அரசாங்கத்தின் அதிகாரிகள் கூறுவதை நம்புவார்களா அல்லது சர்வதேச ரீதியில் இயங்கும் கடன் தரமிடல் நிறுவனங்களின் தரமிடல் பெறுபேறுகளை நம்புவார்களா என்பதை பகுத்தறிவான வாசகர்களே தீர்மானித்துக் கொள்ளலாம். எவ்வாறாயினும் மத்தியவங்கி தனது புதுமுயற்சியை மேற்கொண்டு பார்க்கலாம். அது வெற்றி பெறும் பட்சத்தில் இலங்கைக்கு நல்லது தானே!

காஸ் விநியோகிக்கும் நிறுவனத்திற்கு
சாரதி உதவியாளர் தேவை.
கவர்ச்சியான சம்பளம், மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
0778332451

வெற்றிடங்கள்

ஸ்டே நெசுரல்ஸ் (பிரைவட்) லிமிட்டட் - மாத்தளை

உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனமான எமது நிறுவனத்தின் உற்பத்திப் பிரிவிற்கு உதவியாளர்கள் (Production Helpers) சேர்த்துக்கொள்ளப்படுவர்.
அடிப்படை சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுடன் 26,000 - 40,000 இடைப்பட்ட மாதாந்த சம்பளம்
ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியின் அங்கத்துவ மற்றும் சலுகைகள்
சீருடை மற்றும் வேறு நலன்புரி வசதிகள்
ஜனவரி 18 முதல் சகல வார நாட்களிலும் காலை 09 முதல் நேர்முகத் தேர்வு கீழ் உள்ள முகவரியில் நடைபெறும்
இல. 45, அம்பன் கங்கவத்த வீதி, கவட்டயாமுன, மாத்தளை.
076 0089432, 070 2509343, 066 2053054.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

ஆய்வுகூட உபகரணங்களை வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்கான பெறுகை அறிவித்தல்

(Contract No.: NDL/MA/Eq-B/2021)

01. தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடத்தின் அதனொரு பிரிவொன்றிற்காக பின்வரும் ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகைக்காக தகுதியும் மற்றும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சுகாதார அமைச்சின் ஆதிக்கவரம்பின் கீழ் செயற்படும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

Serial No.	Equipment	Quantity
01.	UV-Visible Spectrophotometer	02
02.	Fourier Transform Infrared Spectrophotometer	01
03.	Digital Polarimeter	01
04.	HPLC System	01
05.	Apparatus to measure sub-visible Particle Parenteral	01
06.	Digital Camera	01
07.	Hot Plate with Magnetic Stirer	06
08.	Centrifuge	02
09.	Water Distiller	01
10.	Atomic Absorption Spectrophotometer	01
11.	Dry Block Heater	02
12.	Direct Mercury Analyzer with accessories & a Compatible Balance	01
13.	Cooled Incubator	01
14.	pH meter with printer	01
15.	Friability Test Apparatus	01

02. விலைமனுக்கோரலானது இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் பெறுகை வழிகாட்டிகளில் வரையறுக்கப்பட்டவாறான தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையை பாவித்து நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள தகைமைத் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்யும் அனைத்து தகுதியுள்ள விலைமனுதாரர்களும் பங்குபெற்றலாம்.

03. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-10, நொரிஸ் கெனல் வீதி, 120 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூட பணிப்பாளரிடமிருந்து பெற்று 2022 சனவரி 18 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகும் வகையில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களான மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள முகவரியிலுள்ள தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூட அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம். (தொலைபேசி: 2687741/3/4. தொலைநகல்: 2689704). ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் கீழேயுள்ள 4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

04. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 10,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்தி பெற்றுக் கொண்ட பணவைப்புத் துண்டுடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். 2022 சனவரி 18 ஆம் திகதிக்கும் 2022 பெப்ரவரி 9 ஆம் திகதிக்குமிடையில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கொழும்பு-02, டபிள்யூ ஏ டி இராமநாயக்க மாவத்தை, 72 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கணக்காளரிடமிருந்து (தொலைபேசி: 011-2303157) ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். இலங்கை வங்கியின் 78088835 என்ற கணக்கிலக்திற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பெயரில் பணக்கொடுப்பனவுகள் வழங்கப்படல் வேண்டும்.

05. உங்கள் விலைமனுக்கோரல்களை தயவு செய்து 2022 பெப்ரவரி 9 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கொழும்பு-02, டபிள்யூ ஏ டி இராமநாயக்க மாவத்தை, 72 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியிலுள்ள கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Procurement for Laboratory Equipment"** என்ற சொற்கள் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படும்.

06. விலைமனுக்கோரல் ஆவணத்தின் விலைமனுக்கோரல் தரவுத் தாளில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளவாறான உருமாதிரியை பாவித்து வங்கி உத்தரவாதப் பாங்கில் விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

07. விலைமனுப்பிணையானது விலைமனுக்களின் செல்லுபடியாகும் காலத்திற்கு அப்பால் 28 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

08. விலைமனுக்கள் அவைகளை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியிலிருந்து 91 நாட்கள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

09. மேலேயுள்ள 4 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியின் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அலுவலகத்தில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

10. விலைமனுக்களை தயாரித்தல் அல்லது அவைகளை ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எவ்வித ஆகுசெலவுகள் அல்லது எந்தவொரு செலவினங்களுக்கும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையானது பொறுப்பேற்காது.

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு,
தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை,
120, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு-10.

2022 சனவரி 16 ஆம் திகதியன்று.

நீர்வள மேம்பாட்டுக்காக மட்டக்களப்பில் மூன்று புதிய அணைக்கட்டுகள்

கால்வாய் அமைப்புக்கு காணிகளை விட்டுக் கொடுக்காவிட்டால் நீர்வழங்கலில் சிக்கல் ஏற்படும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை நீருக்கு பஞ்சமில்லை, எமது நாட்டில் மலைப் பிரதேசங்களிலிருந்து ஓடிவரும் ஆறுகளும் சிற்றோடைகளும் அருவிகளும் இங்கே வந்து இறுதியாக கடலோடு சங்கமிக்கின்றன. இதனால் எமது மாவட்ட மக்களுக்கு எந்தப் பிரயோசனமும் ஏற்பட்டதில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழையை நம்பி விவசாயம் செய்வோர் அனேகர் இருக்கிறார்கள். அவர்களின் விவசாய நிலத்திற்குப் பக்கத்திலேயே நீர் நிரம்பிய சிற்றாறுகளும், நீரோடைகளும் ஓடிக் கொண்டிருக்கின்றன. இந்த நீரையும், விவசாயத்தையும் கண்ணுற்ற மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம். இதனை மாற்றியமைக்க எண்ணம் கொண்டது. அதன் விளைவாகவே இந்த கல்வட்டை, புது முன்மாரிச் சோலை, நிகால் அணைக்கட்டு என்பவைகளாகும். நிகால் அணைக்கட்டு கந்தன் குடா ஆற்றிலிருந்தும், கல்வட்டை அணைக்கட்டு நவகிரி ஆற்றிலிருந்தும், புதுமுன்மாரிச்சோலை அணைக்கட்டு சில்லிக்கொடியாற்றிலிருந்தும் நீரைப்பெற்று அவ்வப்பகுதி விவசாயிகளுக்கு நீர் வழங்கி வருக்கின்றன.

இந்த மூன்று ஆறுகளும் வற்றாதவை. இறைவனால் வழங்கப்பட்ட இயற்கைச் சக்திகளை மனிதர்கள் அணைபோட்டு மறிப்பதே மனித மூளை. இங்கு இது பாவிக்கப்பட்டதால் 2000 ஏக்கர் நிலங்கள் இருபோக நெற்செய்கைக்கு உள்வாங்கப்பட்டிருக்கின்றன. 600 நெற்செய்கை விவசாயக் குடும்பங்கள் நன்மையடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைவிட மாடு வளர்ப்பாளர்கள், தோட்டப் பயிர்ச்செய்கையாளர்கள் என்று கூட்டிப்பார்க்கும்போது சுமார் 1000 குடும்பங்கள் நன்மையடையும். இவைகளை கட்டி முடிப்பதற்கு முன்னின்று உழைத்தவர் அப்போது பதவிவகித்த நீர்ப்பாசன பொறியிலாளர் பத்மதாஸன். அவர் இப்போது பதவி உயர்வுபெற்று தலைமைக் காரியாலயத்தில் பணியாற்றுகிறார்.

இந்த அணைக்கட்டுக்கள் பாரிய சவால் நிறைந்தவை. அணைகளை கட்டி முடிப்பதற்கு நிர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எந்திரி நிஹால் சிறிவர்த்தனவின் பங்களிப்பு பெருத்த உதவியாக இருந்தது. அவருக்கு நன்றி செலுத்தும் முகமாக அணைக்கட்டுக்களில் ஒன்றான கந்தன் குடா அணைக்கட்டுக்கு நிகால் அணைக்கட்டு என்று விவசாயிகளால் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. நன்றி மறப்பது நன்றன்று என்ற ஔவையாரின் வாக்கை விவசாயிகள் மறக்கவில்லை

இவ் அணைக்கட்டு கட்டப்படுவதற்கு முன்னர் இந்த விவசாயிகள் என்ன செய்தார்கள், தங்களது நெல் வயவ்களுக்குத் தேவையான நீரை எப்படி பெற்றார்கள் என்பதை இப்பகுதியின் அகத்தியர் விவசாய அமைப்பைச் சேர்ந்த ரஜனி விவரித்தார்.

நாங்கள் முன்பு காலபோகம் சிறுபோகம் என்று நெற்செய்கையில் இறங்கினாலும், பாரிய அளவில் செய்வதில்லை. அதற்கான காரணம் நீர் பற்றாக்குறைதான். நெற்செய்கை மற்றைய தோட்டப்பயிர்களை போன்றதல்ல. எமது வயல்களிலுள்ள ஒவ்வொரு வரவையிலும் ஆகக் குறைந்தது 23 அங்குல உயரத்திற்கான நிரைத் தேக்கி வைத்திருத்தல் வேண்டும். கிருமி நாசினி பாவிக்கும்போது நீரை அகற்ற வேண்டும், அது பாவித்த பிறகு பழையபடி நீரைத்தேக்க வேண்டும். இதனை வைத்துப் பார்க்கும் போது நீர்ப்பாசனம் எங்களது கைக்குள் இருக்க வேண்டும். இதற்காக நாங்கள் இந்த அணைக்கட்டை இந்த ஆற்றில் இருக்கும் மண்ணை எடுத்துக் கட்டுவோம்.

பட்டிருப்பு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதம நீர்ப்பாசன பொறியியலாளர் திருமதி கீதா, எமக்குத் தேவையான இயந்திர சாதனங்களை எந்தவித கட்டணமுமின்றி இலவசமாக வழங்குவது ஒரு சாதாரண நடைமுறை.

அந்த இயந்திர சாதனங்களின் உதவியோடும் எமது விவசாயிகளின் ஒன்றுபடுத்தப்பட்ட உடல் உழைப்போடும் அவை கட்டி முடிக்கப்பட்டு நீர்ப்பாசனம் இடம்பெறும். நெற்கதிர்கள் முற்றிச் சிவக்கும் தறுவாயில் நாமாக இந்த அணைக்கட்டை உடைத்து விடுவோம். நெற்கதிர்கள் அறுவடைக்குத் தயாரான நிலையில், எமது வயல்களுக்கு நீர் தேவைப்படாது. அனேகமாக திடீரென மழை பெய்தாலோ அல்லது ஆற்றில் நீர் மட்டம் கூடினாலோ அணைக்கட்டு உடைப்பொடுத்துவிடும்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் அணைக்கட்டை மீண்டும் கட்ட வேண்டிய நிலை ஏற்படும். இந்த நிலை எம்மால் தவிர்க்க முடியாத ஒன்று. சில சந்தர்ப்பங்களில் இந்த அணைக்கட்டை கட்டவதற்கு காலதாமதமாகினால் எங்களுடைய வேளாண்மைகள் சாக்காட்டை சந்திக்க வேண்டிவரும். இப்படியான சந்தர்ப்பங்களை நாம் சந்தித்திருக்கிறோம். இவ்வாறான கதைகள் எங்களுக்கு புதியதல்ல. இவ்வணைக்கட்டை மண்ணால் கட்டும் நிகழ்வானது இன்றோ நேற்றோ ஏற்பட்டதல்ல. எங்களது மூதாதையர்களிடமிருந்து எங்களுக்கு கிடைத்தவை. இப்போது மண்தோண்டி இயந்திரங்கள், மண் ஏற்றி இறக்கும் இயந்தி சாதனங்கள் என்று எமக்கு மத்தியில் எவ்வளவோ வகையான இயந்திர சாதனங்கள் இருக்கின்றன. அவை எமது உடலுழைப்பை குறைத்துவிட்டன. அந்தக்காலத்திலிருந்த விவசாயிகள் தங்களது உடல் உழைப்பினால் தானே இதனை கட்டி முடித்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கிறோம். அவர்களின் உடற்பலம், மனோபலம், ஒற்றுமை, புத்திக் கூர்மை என்பன இப்பாரிய இயந்திர சாதனங்களுக்கு இணையானது எனலாம். அணைக்கட்டை கட்டினாலும் அங்கு உயர்ந்து நிற்கும் நீரை வயல்களுக்கு பாய்ச்சுவதற்கு கால்வாய்களும், மதகுகளும் அவசியமானவை. அது பாரிய செலவை ஏற்படுத்தப் போவதில்லை. குறிப்பிட்ட வாய்க்கால்களை அமைப்பதற்கு காணிச் சொந்தக்காரர்கள் தங்களின் காணிகளின் ஒரு துண்டுக் காணியை வாய்க்கால்கள் அமைப்பதற்கு விட்டுக் கொடுக்க வேண்டும். யானையை வாங்கிவிட்டோம் அதனை கட்டி மேய்க்கும் அங்குசத்தை வாங்குவதற்கு தாமதிப்பதா என்ற கேள்வி விவசாயிகளின் மத்தியில் இருக்கிறது.

விவசாயிகள் எல்வோரையும் பொதுநலவாதிகளென்றோ அல்லது புத்திசாலிகளென்றோ நாம் ஒட்டுமொத்தமாக கருதிவிட முடியாது. ஒரு அபிவிருத்தி ஏற்படும்போது, சில விட்டுக் கொடுப்புகள் இருக்கத்தான் வேண்டும். காணிச் சொந்தக்காரர்கள் தங்கள் காணியின் ஒருபகுதியை கால்வாய் நிர்மாணத்திற்காக விட்டுக் கொடுக்காத போது கால்வாய் அமைக்கும் பணி முற்றுப் பெறப் பொவதில்லை. ஆகையால் இந்தப் பெரிய அணைக்கட்டை கட்டி முடித்த தினால் கிடைக்க விருக்கும் நன்மையை விவசாயிகள் அனுபவிக்க முடியாது. நன்மையயை அனுபவிக்க இருக்கும் விவசாயிகள் அந்த நன்மையை பெறுவதற்கு ஒரு சில விட்டுக் கொடுப்புகளை செய்வதில் தவறில்லையென மட்டக்களப்பு மாவட்ட நிர்ப்பாசன பணிப்பாளர் என்.நாகரெட்ணம் தெரிவிக்கிறார்.

நீர்ப்பாசன அணைக்கட்டைத் தவிர நெல் வயல்களுக்கு மத்தியில் இரு வீதிகளை மத்திய அரசின் மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் நிர்மாணித்துக் கொடுத்திருக்கிறது. இதனால் நெற் செய்கையாளர்கள் தங்கள் விளைபொருட்களை நெல் வயலிலிருந்து ஏற்றிச் செல்வதற்கும். அதே போன்று வயல்களுக்கு உள்ளீடுகளை கொண்டு செல்வதற்கும் அவ்வீதிகள் பெரிய வசதிகளை வழங்குகின்றன

மத்திய நீர்ப்பாசன திணைக்களம் வெல்லா வெளியூடாக மட்டக்களப்பு வாவியில் வந்து சங்கமிக்கும் இந்த ஆறுகளை கட்டி மறித்து இன்னும் அதிகமான நெற்காணிகளுக்கு நீர்ப்பாசனம் வழங்கி அவைகளை இருபோக நெற்செய்கைகளுக்கு உள்வாங்க வேண்டும். இது எமது விவசாயிகளுக்கு செய்கின்ற பாரியளவிலான நன்மையாகும்.

இன்னொரு வகையில் பார்க்கும்போது தேசிய மட்டத்தில் நெல் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து தேசிய உற்பத்திக்கு பங்களிப்புச் செய்வதாக முடியும். இவ்விடயத்தில் மாவட்டப் பணிப்பாளர் என். நாகரெட்ணம் நடவடிக்கைகளை துரிதப்படுத்தி வெற்றி காண வேண்டும் என்பது இப்பகுதி விவசாயிகளின் பொதுவான கருத்தாக இருக்கின்றது.

எஸ்.எஸ். தவபாலன் ...✍

படங்கள் : புளியந்தீவு குறூப் நிருபர்

போதைப் பொருளுக்காக பெண்ணைக் கொலை செய்த 22 வயது இளைஞன்

சடலத்தை முதலை ஆற்றில் வீசிய சந்தேக நபரும் மனைவியும்

கிளிநொச்சியில் கடந்த டிசம்பர் மாதம் 26ம், 27ம் திகதிகளில் இரண்டு கொலைச் சம்பவங்களும் கடந்த புத்தாண்டு தினத்தில் ஒரு கொலைச் சம்பவமும் என ஒரு வாரத்துக்குள் மூன்று கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. அதாவது பூநகரி கௌதாரிமுனைப் பகுதியில் உள்ள சுற்றுலா தளத்தில் ஞாயிறு விடுமுறையை கழிப்பதற்காக வந்த இரண்டு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலின் போது கத்தியால் குத்தி இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இதே நேரம் அன்றைய தினத்தில் இலண்டனிலிருந்து இலங்கைக்கு வந்து கிளிநொச்சி உதய நகரில் வசித்து வந்த 67 வயதுடைய மூதாட்டி ஒருவரும் வெட்டி படுகொலை செய்யப்பட்டு அவரது சடலம் சுமார் 18 கிலோ மீட்டர் தூரத்துக்கு அப்பால் கொண்டு சென்று ஆற்றில் போடப்பட்டிருந்தது.

புத்தாண்டு தினமான ஜனவரி முதலாம் திகதி இரவு 730 மணிக்கு அதிக மக்கள் நடமாட்டம் உள்ள பரந்தன் சந்திப் பகுதியில் இளைஞர் ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இவ்வாறு அடுத்தடுத்த கொலை சம்பவங்கள் கிளிநொச்சியில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதா? அல்லது போதைப் பொருள் பாவனைகளின் அதிகரிப்புக்கள் தான் கொலைகளுக்கு காரணமா? என்று பல கேள்விகள் எழுந்துள்ளதுடன் மக்கள் மத்தியில் அச்சத்ததையும் பயப்பீதியையும் ஏற்படுத்தி இருக்கின்றது.

இந்தக் கொலைகளின் பின்னணியில் கூடுதலான மதுபாவனை அல்லது போதைப் பொருள் பாவனை என்பனவே காரணமாக இருந்ததாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து உணரமுடிகின்றது. இதில் இரண்டு கொலைச் சம்பவங்கள் வாய்த்தர்க்கம் முற்றி கொலையாக மாறியது. மாறாக இலண்டனில் இருந்து வந்த 67 வயது மூதாட்டியின் கொலை தொடர்பில் பல்வேறு திடுக்கிடும் தகவல்களும் கொலையாளி கொலைக் குற்றத்தை மறைப்பதற்கு அடுத்தடுத்து மேற்கொண்ட செயற்பாடுகளும் எல்லோரிடத்திலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலண்டனில் மகனுடன் வசித்து வந்த இராசேந்திரம் இராசலட்சுமி (வயது 67) என்ற பெண் இலங்கைக்கு திரும்பி வந்த நிலையில் கிளிநொச்சி உதயநகர் பகுதியில் உள்ள தனது காணியை பராமரிப்பதற்காக அம்பாள்குளம் பகுதியில் வாடகைக்கு வீடொன்றை எடுத்து தங்கியிருந்துள்ளார். தனியாக வசித்து வந்திருந்த நிலையில் சம்பவம் இடம்பெற்ற தினத்தில் வங்கிக்கு சென்று திரும்பியதாகவும், அதன் பின்னர் அன்று பி.பகல் 3.00 மணி முதல் 6.00 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் அவர் காணாமல் போயுள்ளார். குறித்த பெண் இவ்வாறு காணாமல் போயுள்ள விடயம் மாலை 7.20 மணியளவிலேயே உறவினர்களுக்கு தெரியவந்துள்ளது. குறித்த பெண் காணாமல் போயுள்ளமை தொடர்பில் வீட்டு உரிமையாளரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்று கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது இப்பெண் தங்கியிருந்த வீட்டில் இரத்தக் கறைகள் காணப்பட்டதால் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இப்பெண்ணுக்கு வேலைகளை செய்து கொடுப்பவராகவும் அன்று வங்கிக்கு சென்று திரும்பியதாக தெரிவிக்கப்படும் அம்பாள்குளம் பகுதியையை சேர்ந்த 22 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவம் தொடர்பில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றது.அவரது வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு சம்பவ இடத்திலிருந்து சுமார் 18 கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஸ்கந்தபுரம் ஆற்றின் மரப்பாலத்தடியில் பொதி செய்யப்பட்ட நிலையில் சடலம் மீட்கப்பட்டது.

இராசலட்சுமி

இந்த ஆற்றுப்பகுதியில் அதிகளவான முதலைகள் காணப்படுகின்றமையால் முதலைப்பாலம் என்றும் அந்தப்பகுதி குறிப்பிடப்படுகின்றது. விலங்குகளின் கழிவுகள் கொட்டப்படுவதால் அதிகளவான முதலைகள் இந்த ஆற்றில் காணப்படுகின்றன. பெண்ணின் சடலத்தை அழித்து விடலாம் என்ற எண்ணத்தில் இந்த ஆற்றில் சடலம் வீசப்பட்டு இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. அண்மைக் காலமாக இப்பகுதியில் வீதி புனரமைப்பு இடம் பெற்றதன் காரணமாகவும் கனரக வாகனங்களின் மூலம் வீதி செப்பனிடும் பணிகள் முன்னெடுக்கும் போது ஏற்பட்ட நில அதிர்வுகள் காரணமாக இந்தப் பகுதிகளில் முதலைகளின் நடமாட்டம் குறைந்துள்ளன.

முதலையாற்றில் சடலம்

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது போதைப்பொருள் வாங்க பணம் இல்லாததால் பணத்திற்காகவே வயோதிப பெண்ணை கொலை செய்ததாக வாக்குமூலம் அளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் ஒட்டுத்துண்டுகளை துணியில் சுற்றி குறித்த பெண் மீது தாக்குதல் மேற்கெண்டதாகவும் தெரிவித்துள்ளார். குறித்த சந்தேக நபரிடமிருந்து 2 சோடி காப்புக்கள், தங்க சங்கிலி உட்பட்ட ஆபரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சடலத்தை கொண்டு சென்று ஆற்றில் வீசுவதற்கு துணைபுரிந்த அவரது மனைவியும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தி இரு சந்தேக நபர்களும் விளக்கமறியலில் வைக்ப்பட்டுள்ளனர்.

சம்பவ தினத்தில் வங்கிக்குச் சென்று திரும்பிய பெண் வீட்டில் தனிமையில் இருந்தபோது ஒட்டுத் துண்டுகளையும் கற்களையும் துணியில் சுற்றி கடுமையாக தாக்கி அவரை கொலை செய்திருக்கிறார். அவரிடமிருந்த பொருட்களையும் கொள்ளையிட்ட பின்னர் பெண்ணினுடைய சடலத்தை பார்சலாக கட்டி மனைவியின் உதவியுடன் அதனை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்று ஆற்றில் போட்டிருக்கிறார் இவர்.

சந்தேக நபர் அண்மையிலேயே திருமணம் செய்திருக்கிறார். அவரது மனைவியும் கொலைக்குற்றத்தை மறைப்பதற்கு துணையாக இருந்து இருக்கின்றார் என்ற குற்றத்திலும் அவரும் கைது செய்யப்பட்டுள்ளார். போதைப் பொருளுக்கு அடிமையாகும் போது ஒரு மனித உயிரையே காவு கொள்ளும் அளவிற்கு இன்றைய சமூகம் மாறி இருப்பது வேதனைக்குரியதாகும். ஒரு விலைமதிப்பற்ற மனித உயிரை படுகொலை செய்து போதைப் பொருளை வாங்க வேண்டும் என்ற மன நிலைக்கு 22 வயதுடைய இந்த நபர் தள்ளப்பட்டுள்ளார் என்பது ஒரு அதிர்ச்சி அளிக்கக்கூடிய சமிக்ஞை.

பெண்மணி வசித்த வீடு

ஐது பாஸ்கரன் ...✍

படங்கள்: பரந்தன் குறூப் நிருபர்

ராஷ்மிகா மந்தனாவின் சம்பளம் இத்தனை கோடியா?

தென்னிந்தியாவில் முன்னணி ஹீரோயின்களில் ஒருவராக வளர்ந்து இருக்கிறார் ராஷ்மிகா மந்தனா. சமீபத்தில் வெளிவந்த 'புஷ்பா' படம் பெரிய ஹிட் ஆகி இருக்கும் சூழலில் அவர் அந்த படத்திற்காக ராஷ்மிகா வாங்கிய சம்பளம் பற்றிய விவரம் வெளியாகி இருக்கிறது.

'புஷ்பா' முதல் பாகத்திற்கு மட்டும் ராஷ்மிகா மூன்று கோடி ரூபாய் சம்பளம் வாங்கி உள்ளாராம். மேலும் புஷ்பா இரண்டாம் பாகத்திற்கும் அதே தொகையை அவர் பெறப் போவதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இதனால் அதிக சம்பளம் வாங்கும் நடிகையாகவும் ராஷ்மிகா மாறி இருக்கிறார்.

நயன்தாரா ஒரு படத்திற்கு நான்கு கோடி வரை சம்பளம் கேட்பதாக சமீபத்தில் தகவல் வந்ததும் உங்களுக்கு நினைவிருக்கலாம்.

சமீபத்தில் ஒரு பேட்டியில் ராஷ்மிகாவிடம் அவரது சம்பளம் பற்றி கேட்டபோது அவர் சற்று எரிச்சலாக பதில் அளித்தார். நீங்கள் இப்படி செய்தி போடுவதால் தான் என் வீட்டில் வருமான வரித் துறை ரெய்டு வருகிறார்கள் எனத் தெரிவித்து உள்ளார்.

50ஆவது நாளை தொட்ட 'மாநாடு' திரைப்படம்!

தமிழ் சினிமாவின் முன்னணி நட்சத்திர நடிகர்களில் ஒருவராக விளங்கும் நடிகர் சிலம்பரசன் மீண்டும் திரையுலகில் தான் ஒரு முன்னணி கதாநாயகன் என நிரூபிக்கும் விதமாக கம்பேக் கொடுத்த திரைப்படம் 'மாநாடு'. அனைத்து தரப்பு ரசிகர்களும் கொண்டாடும் விதமாக இயக்குனர் வெங்கட் பிரபுவின் இயக்கத்தில் வெளிவந்த 'மாநாடு' திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்று மெகா ஹிட் ஆனது.

பல தடைகளையும் தாண்டி ரசிகர்களை வந்து சேர்ந்த 'மாநாடு' திரைப்படத்தை V ஹவுஸ் புரொடக்சன்ஸ் சார்பில் தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி தயாரித்தார். மிடுக்கான காவல் துறை அதிகாரியாக வில்லன் கதாபாத்திரத்தில் S.J.சூர்யா மிரட்ட, மறுபுறம் இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜாவின் பின்னணி இசையும் படத்தொகுப்பாளர் பிரவீன். KLன் படத்தொகுப்பும் மாநாடு படத்திற்கு பக்கபலமாக அமைந்தது.

தொடர்ந்து வெற்றிகரமாக திரையரங்குகளில் ஓடிக் கொண்டிருக்கும் 'மாநாடு' திரைப்படம் தற்போது 50 நாட்களை கடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் 'மாநாடு' படத்தின் 50ஆவது நாளை முன்னிட்டு படக்குழுவினர் ட்விட்டரில் தங்களது மகிழ்ச்சியை பகிர்ந்து வருகின்றனர்.

இதுகுறித்து நடிகர் சிலம்பரசன் தனது ட்விட்டர் பக்கத்தில், "நன்றி, அனைவருக்கும் நன்றி" என பதிவிட்டுள்ளார். இயக்குனர் வெங்கட் பிரபு, "அனைத்து ஊடக நண்பர்கள் மற்றும் சினிமா காதலர்கள் மற்றும் சிலம்பரசனின் ரசிகர்கள் அனைவருக்கும் நன்றி" என தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

விஜய்சேதுபதி படத்தில் ஷிவானி!

விஜய் டிவியில் ஒளிபரப்பாகி வந்த 'பகல் நிலவு' தொடரின் மூலம் சீரியலில் ஹீரோயினாக அறிமுகமானவர் ஷிவானி நாராயணன். இந்த தொடரில் தனது நடிப்பால் தமிழ் இளைஞர்களின் கனவுக்கன்னியாக உருவெடுத்தவர் ஷிவானி நாராயணன்.

சீரியல் நடிகைகளில் தனக்கென்று தனியொரு ரசிகர் பட்டாளத்தையே ஷிவானி பெற்றுள்ளார். பிக்பாஸ் தொடரின் நான்காவது சீசனில் இவர் முக்கிய போட்டியாளராக பங்கேற்றார். பிக்பாஸில் இருந்து வெளியேறிய பின்னர் சில படங்கள் மற்றும் ஆல்பம் பாடல்களில் நடித்து வருகிறார் ஷிவானி.

கமல் நடிக்கும் விக்ரம் படத்தில் விஜய்சேதுபதிக்கு ஒரு ஜோடியாக நடித்து வருகிறார் ஷிவானி. தற்போது தான் நடிக்கும் புதிய படத்தில் இருந்து ஒரு ஷூட்டிங் ஸ்பாட் புகைப்படத்தை பகிர்ந்துள்ளார் ஷிவானி. பொன்ராம் இயக்கத்தில் தயாராகும் படத்தில் நடிப்பதாக தெரிவித்துள்ளார். இது விஜய்சேதுபதி நடிக்கும் VJS 46 படமா இல்லை வேறு புதிய படமா என்ற தகவல் விரைவில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விறுவிறுப்பாக வெளிவரப்போகும் சிவகார்த்திகேயனின் 'டான்'

'இன்று நேற்று நாளை' இயக்குனர் ரவிக்குமார் இயக்கத்தில் தயாராகி வரும் சிவகார்த்திகேயனின் 'அயலான்' படம் ரிலீசுக்கு தயாராகி வருகிறது. 'அயலான்' படத்தின் போஸ்ட் புரொடக்ஷன் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதனை அடுத்து இவர் நடிக்கும் 'டான்' படத்தை லைகா ப்ரொடக்ஷன்ஸ் மற்றும் சிவகார்த்திகேயன் ப்ரொடக்ஷன்ஸ் இணைந்து தயாரிக்கின்றனர்.

இந்த படத்தை அறிமுக இயக்குனர் சிபி சக்ரவர்த்தி இயக்குகிறார். அனிருத் இந்த படத்திற்கு இசையமைக்கிறார். இப்படத்தில் ஹீரோயினாக டாக்டர் படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடித்த பிரியங்கா மோகன் நடிக்கிறார். எஸ்.ஜே.சூர்யா, சமுத்திரக்கனி, சூரி, முனீஸ்காந்த், காளி வெங்கட், பாலா சரவணன், RJ விஜய், சிவாங்கி உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர்.

இந்த படத்தில் சிறப்பு தோற்றத்தில் இயக்குனர் கௌதம் மேனன் நடித்துள்ளார். இந்த படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் மற்றும் முதல் பாடல் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றிருந்தது. இந்த படம் பெப்ரவரி மாதம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த படத்தின் DI கலர் கரெக்ஷன் வேலைகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாக படத்தின் ஒளிப்பதிவாளர் தெரிவித்துள்ளார்.

ரசிகர்களின் கவனத்தை ஈர்க்கும் ப்ரியாமணியின் பாமா கலபம்!

இயக்குனர் இமயம் பாரதிராஜாவால் தமிழ் திரை உலகில் அறிமுகப்படுத்தப்பட்ட நடிகை ப்ரியாமணி. எந்த கதாபாத்திரமாக இருந்தாலும் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தி ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தவர். முன்னதாக தமிழில் இயக்குனர் அமீரின் 'பருத்திவீரன்' திரைப்படத்திற்காக ப்ரியாமணி தேசிய விருது பெற்றார்.

தமிழ் மட்டுமல்லாது மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி என இந்தியாவின் பல மொழிகளிலும் பல திரைப்படங்களில் நடித்துள்ள ப்ரியாமணி அனைத்து மொழிகளிலும் சிறந்த நடிகைக்கான ஃபிலிம்ஃபேர் விருதுகளை பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து ப்ரியாமணியின் திரைப்படங்கள் பல மொழிகளின் திரையுலகிலும் அடுத்தடுத்து வெளிவரத் தயாராகி வருகின்றன.

முன்னதாக தெலுங்கில் ராணா டகுபதி உடன் இணைந்து விரட்ட பர்வம் மற்றும் தெலுங்கு, கன்னட மொழிகளில் தயாராகி வரும் சைனைட் ஆகிய படங்களில் முன்னணி கதாபாத்திரத்தில் நடித்து வரும் ப்ரியாமணி இயக்குனர் அட்லி இயக்கத்தில் இந்தியில் ஷாருக்கான் கதாநாயகனாக நடிக்கும் புதிய படத்திலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். மேலும் தமிழில் கொட்டேஷன் கேங் திரைப்படத்திலும் நடித்து வருகிறார்.

இதனிடையே வித்தியாசமான கதாபாத்திரத்தில் ப்ரியாமணி கதாநாயகியாக நடித்துள்ள பாமா கலபம் திரைப்படம் நேரடியாக aha Original OTT தளத்தில் ரிலீசாக உள்ளது. SVCC DIGITAL சார்பில், போகவள்ளி பப்பிநீடு & சுதீர் எடரா இணைந்து தயாரித்துள்ள 'பாமா கலபம்' படத்தை இயக்குனர் அபிமன்யு எழுதி இயக்கியுள்ளார். தமிழ் நடிகர் ஜான் விஜய் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

ஒளிப்பதிவாளர் தீபக்குமார் ஒளிப்பதிவு செய்துள்ள 'பாமா கலபம்' திரைப்படத்திற்கு பிரபல இசையமைப்பாளர் ஜஸ்டின் பிரபாகரன் இசை அமைத்துள்ளார். நகைச்சுவை த்ரில்லர் திரைப்படமாக தயாராகியிருக்கும் இப்படத்தின் வித்தியாசமான ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் தற்போது வெளியாகியுள்ளது. பெண் தெய்வங்கள் போல எட்டு கைகளோடு ப்ரியாமணி இருக்கும் இந்த ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த

மன்னாரில் உள்ள கழுதைகளின் தற்போதைய நிலை...

மன்னார் மாவட்ட மக்களால் அதிகளவாக அருவருக்கப்படும் விலங்காகவும் அவமதிக்கப்படும் விலங்காகவும் விளங்குவது கழுதைகளே! ஆகும்.

ஏனைய மாவட்டங்களில் (மன்னார் கழுதைகள்) என மன்னார் மாவட்டத்தை அடையாளப்படுத்தும் அளவுக்கு பிரசித்தி பெற்றவை இக் கழுதைகள்.

மன்னாரில் உள்ள பிரதான வீதிகள் உள்ளடங்களாக அனைத்து இடங்களிலும் உடனடியாக அடையாளம் காணக்கூடிய விலங்காக கழுதைகள் விளங்குகின்றன.

வீதிகளில் வீசப்படும் பொலித்தீன்களையும், குப்பைகளையும் உண்டு வாழும் இவ் விலங்கின் பொருளாதார மதிப்பு மன்னார் மக்களுக்கு புரியாமல் போனது கவலையே. கழுதை சகிப்புத்தன்மைக்கு பெயர் பெற்றது.

கழுதைகளின் தாக்குப்பிடிக்கும் திறன் ஏனைய விலங்குகளை விட அதிகமாகும். எனவே இவை கரடு முரடான பகுதிகளில் மிகுந்த சுமைகளை தூக்கிச் செல்ல பயன்படுத்தப்படுகிறது. இன்னமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பெரும்பாலான காட்டுக் கழுதைகள் 100 சென்றி மீற்றர் முதல் 142 சென்றி மீற்றர் உயரம் வரை வளரக்கூடியவை. ஆனாலும் வீடுகளில் வளர்க்கப்படும் கழுதைகள் 90 இல் இருந்து 142 செ.மீ உயரம் வரை வளரக் கூடியவை. பொதுவாக கழுதைகள் மிதமான பாலை நிலங்கள் மற்றும் வறண்ட வெப்பம் நிறந்த பகுதிகளில் வாழக் கூடியவை.

அதை விட இவை குதிரைகளை விட குறைவான உணவையே உட்கொள்கிறது. பல நாடுகளில் தற்போது வரை கழுதைகளை பயன்படுத்தி கட்டட வேலைகள், போக்குவரத்து, எனப் பல பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இன்னும் சில நாடுகளில் தற்போது வரை திருமணத்தின் போது கழுதைகள் சீதனமாக வழங்கப்படும் வழக்கமும் காணப்படுகின்றது.

பண்டைய கால மத சடங்குகளுக்கும் கழுதைகள் பயன்படுத்தப்பட்டன. பண்டைய எகிப்தின் பெண் ஆட்சியாளரான கிளியோபட்ரா தனது அழகை பராமரிக்க கழுதைப் பாலில் குளிப்பார் எனவும் கூறப்படுகிறது. மேலும் விலங்குகளில் கழுதை மிகவும் புத்திசாலியான விலங்காகவும் பண்டைய காலங்களில் கருதப்பட்டது.

எல்லாவற்றையும் விட முக்கியமாக கழுதை பால் குறைந்த புரதமும் கொழுப்பும் காணப்படுவதுடன் லக்டோஸும் கொண்டது என ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு வேளாண்மை ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. மேலும் கழுதை பாலில், விற்றமின் A,B1,B2,B6 விற்றமின் D விற்றமின் E உள்ளது. கழுதை பாலில் இருந்து தயாரிக்கப்படும் சோப், கிறீம் மற்றும் இதர பொருட்களுக்கு சில நாடுகளில் நல்ல சந்தை மதிப்பு உள்ளமை சிறப்பம்சமாகும்.

அதே நேரம் கழுதைப் பால் அழகு சாதன பொருட்கள் மற்றும் மருத்துவ துறைக்கு பயன்படுத்தப்படுகின்றது. ஏனெனில் கழுதைப்பால் உடலில் காணப்படும் செல்களை குணப்படுத்துவதாகவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பண்பு கொண்டுள்ளது என்றும் குறிப்பிடப்படுகிறது.

அதே நேரம் கழுதை பாலின் சந்தை மதிப்பு லீற்றருக்கு 12 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் வரை இலங்கை மதிப்பில் கணிப்பிட கூடியதாக உள்ளது. இவ்வாறான பின்னணியில் மன்னார் மாவட்டத்தில் நீண்ட காலமாக பரவல் அடைந்திருந்த கழுதைகளின் எண்ணிக்கை அண்மை காலமாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

பராமரிப்பற்ற தன்மை விபத்துக்கள்,உணவு இன்மை,நோய்த் தாக்கம் உட்பட பல காரணங்களால் இந்த கழுதைகளின் இனம் பெருக்கம் மற்றும் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இந்த நிலையில் கழுதைகளுக்கு புனர்வாழ்வளிக்கும் முகமாகவும் அவற்றின் ஊடாக பயனுள்ள கல்வி செயற்பாடுகளை முன்னெடுக்கும் முகமாகவும் பிறிஜிங் லங்கா நிறுவனத்தின் அனுசரனையுடன் மன்னார் ஓலைத்தொடுவாய் தாயிலான் குடியிருப்பு மக்களும் இணைந்து மன்னாரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கழுதைகள் மருத்துவமனை மற்றும் கல்வி மையம் பலரையும் கவர்ந்துள்ளது.மன்னார் தலைமன்னார் பிரதான வீதி, சின்னக்கரிசல் தாயிலான் குடியிருப்பு பகுதியில் கழுதைகளுக்கான மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அவைகளை பராமரிப்பதற்கான மருத்துவமனை ஒன்றும் அதன் அருகில் கழுதைகள் தொடர்பான ஆய்வுகள் மற்றும் கல்வி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டு 5 வருடங்களுக்கு மேலாக வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றது.

இந் நிலையத்தின் ஊடாக மன்னாரில் காயமடைந்த மற்றும் புறக்கணிக்கப்பட்ட கழுதைகளை பராமரிக்கும் திட்டம் மேற்கொள்ளப்படுவது டன் அவ்வாறான காயமடைந்த கழுதைகள் பரிசோதிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு அதனை பழக்கப்படுத்தி பயனுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் திட்டமும் மேற்கொள்ளப்படுகின்றது.

அத்துடன் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கும் கழுதைகள் தொடர்பான தெளிவுபடுத்தல் வழங்கக்கூடிய கற்றல் நிலையம் ஒன்றும் இந் நிலையத்தில் செயற்பட்டு வருகின்றது.

ஆறு வகையான இனங்களை சேர்ந்த கழுதைகள் இங்கு பராமரிக்கப்படுவதுடன் இங்கு பயிற்றுவிக்கப்பட்ட கழுதைகளை கொண்டு மனநலம் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதும் அவதானிக்கத்தக்கது.

கழுதைகள் அதிகம் காணப்படுவதால் மன்னாரில் தற்போதுவரை கழுதைகள் புறக்கணிக்கப்பட்ட விலங்காகவே கருதப்படுகிறது. அவற்றை பயனுள்ள விலங்காக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மேற்கொள்ளா விடத்து புகைப்படங்களிலே கழுதைகளை எமது எதிர்கால சந்ததியினர் காண வேண்டிய நிலை வரும் என்பதே நிதர்சனம்.

மன்னார்
எஸ். றொசேரியன் லெம்பேட்...✍

ஆ. புவியரசன்

சமூக மாற்றத்திற்கு கரம் கொடுக்கும் 'மலையக விழிகள்' அமைப்பு

மலையக சமூகம் அரசியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியாக மாற்றமடைய வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு பல சிவில் சமூக அமைப்புகளும், தன்னார்வ நிறுவனங்களும் தோட்டப் பகுதிகளில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

பதுளை மாவட்ட சொர்ணா தோட்ட பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கந்தேகெதர பகுதியை தளமாகக் கொண்டு கடந்த வருடத்தின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதே 'மலையக விழிகள்' அமைப்பு.

இவ்வமைப்பானது நம்நாட்டிலிருந்து வாழ்வாதாரம் தேடி மத்தியகிழக்கு தொழிக்குச் சென்றுள்ள நம்மவர்களின் எண்ணக்கருவில் உதயமாகியுள்ளது. மலையக மாணவர்களின் கல்விக்கு கரம் கொடுப்போம், வறுமை கோட்டிற்கு கீழ் பசி, பட்டினியால் வாடும் மக்களின் வறுமையைப் போக்குவோம் மற்றும் விசேட தேவையுடைய, தொற்றா நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் சுக நலன்களில் பங்கெடுப்போம் போன்ற கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வமைப்பானது சமூகப் பணி ஆற்றி வருகின்றது.

இவ்வமைப்பின் தலைவராக குகன் செயற்படுவதோடு, செயலாளராக பிரசாந், பொருளாளராக நேசராஜன் ஆகியோரும் இணைப்பாளர்களாக மூர்த்தி, கிறிஸ்டோபர், விஜயா மற்றும் புவனேஸ் ஆகியோரும் ஆலோசகர்களாக அதிபர் கனகரட்ணம், கிருஸ்ணா ஆகியோரும் செயற்பட்டு வருகின்றனர். குறித்த ஒரு வருட காலத்திற்குள் நூறு வேலைத்திட்டங்களை ஊவா, மத்திய மாகாணங்களில் மேற்கொண்டுள்ளது. இதுவரை 30 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, கொவிட் தொற்று நிலவிய காலப்பகுதியில் பாடசாலைகளுக்கு தொற்று நீக்கிகளும் வழங்கப்பட்டன. வறுமை கோட்டின் வாழும் மக்களுக்கு இதுவரை 50 வேலைத்திட்டங்களில் உலர் உணவுப் பொதிகள் மத்திய, ஊவா மாகாணங்களில் வழங்கப்பட்டுள்ளன.

தவிர, விசேட தேவையுடையவர்களுக்கு சக்கர நற்காலிகள், சிறுநீரக கோளாறினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ செலவிற்கான நிதியுதவிகள் என்பன தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. அமைப்பின் நூறாவது செயற்றிட்டம் அண்மையில் கந்தேகெதர, சார்ணியா தமிழ் மகா வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்டது.இதன்போது கந்தேகெதர பகுதியின் கல்வி வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையாற்றிய ஓய்வுநிலை அதிபர் வை.தேவராஜா மற்றும் அவரது துணைவியார் ஓய்வுநிலை அதிபர் திருமதி. சந்திரா தேவராஜா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வெளிநாடுகளில் வாழும் அமைப்பின் உறுப்பினர்களின் பிள்ளைகளுடைய பிறந்தநாள் கொண்டாட்டங்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு உதவிகள் வழங்கப்படுவதோடு, கொண்டாடப்படுகின்றமை சிறப்பம்சமாகும். எதிர்காலத்தியில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்க பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் சுயதொழிலை ஆரம்பிப்பதற்கான மூலாதாரங்களை பெற்று கொடுத்து பொருளாதார ரீதியாக வளமான சமூகத்தை கட்டியெழுப்ப உள்ளதாக அமைப்பினர் தெரிவிக்கின்றனர். சமூக மாற்றத்திற்கு கரம் கொடுத்து மலையகத்தில் எழுச்சியை ஏற்படுத்த புறப்பட்டுள்ள மலையக விழிகள் அமைப்பினரின் அபிலாசைகள் வெற்றிபெற நாமும் ஒத்துழைப்பு நல்கி வாழ்த்துவோம்.

தினகரன் வாரமஞ்சரி

BUDGET ADZ

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

போட்டோ குறும் விளம்பரம்

De hydrator இயந்திரம் குறைந்த விலைக்கு மற்றும் நம்பிக்கையான நிறுவனத்தில் விற்பனைக்குண்டு. N.C. இன்ஜினியரிங் (பீவிடி) எல்டிடீ, பிலியந்தல. **info@ncengineering.lk/www.ncengineering .lk**
011 5 882 077 / 077 2 357 502 / 076 66 31 887

Susuki Wagon R FZ 2018.. CBC XXXX.. Safty Package. Low milage. 54/75...
Tel - 0727 545 800

வீரமஞ்சரி BUDGET ADZ

பல்வேறு நிறங்களிலுள்ள டிசூ பேப்பர்

இந்தியாவின் 2 ஆம் இலக்க தரத்திலுள்ளது

20 x 30 அங்குலம்
8 நிறங்களில் உண்டு
ஒரு ரீமின் விலை 350 ரூபா
10,000 ரீம்கள் உள்ளன
மொத்த விலைக்கு மாத்திரமே.

சை:பி ட்ரேடிங் கம்பனி
0112 44 07 93
96, புதிய சோனகத் தெரு, கொழும்பு-12.

Advertise Here

வீரமஞ்சரி BUDGET ADZ

11.8cm (Height) x 8cm (Width)
Rs. 3,000/- +VAT

Contacts :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

தினகரன் வாரமஞ்சரி

திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும

classified@lakehouse.lk

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு
100/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) **000000377**

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்

அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342

தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

வர்த்தகம்

207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

கண்டி பெறுமதியான கட்டிடம் விற்பனைக்கு 06 மாடிகள் (20 பேர்ச்) கண்டி குண்டசாலை குடியிறுப்பு பிரதேசம். 1800 ச.அடி பிரதான வீதிக்கு முகப்பாக 80 அடி அகலம் பிரதான வீதிக்கு சமாந்தரமாக தரை அடங்கலாக 06 கடைகள், மேல்மாடி 07 கடைகள் 02 வெவ்வேறான மண்டபங்கள் நிலக்கீழ் மாடிகள் உண்டு. 02 வெவ்வேறான மண்டபங்கள் களஞ்சியத்துடன் குடியிறுப்பு அறை பிரதேசங்கள் மாதாந்த வருமானம் 04 இலட்சம். (வங்கிக் கடனுடன்) Rs1200 மில்லியன் சகல வசதிகளுடன் தரகர்கள் வேண்டாம். 0777 438169, 0777 282147. 001222

வேலைவாய்ப்பு

308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

முன்னணி கம்பனிக்கு சந்தைப்படுத்தல் அதிகாரிகளை சேர்த்துக்கொள்கிறது. கொழும்பு புறநகர் 45 வயதிற்குக் கீழ் சம்பளம் கமிஷன், போனஸ், மெடிக்கல், தொ.பேசி, வாகனங்கள் உள்ளடக்கம். இருபாளாரும் விண்ணப்பிக்கலாம். இன் ஹவுஸ் மார்கடிங் 0776300429, 0773928246 003372

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கம்பஹாவில் அமைந்துள்ள வீட்டில் வேலைக்கு நடுத்தர வயது பெண் மற்றும் ஹாட்வெயார் இற்கு 18 45 வயது ஆண் தேவை. 076 7351561 003702

வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் அட்டென்டன்கள் தேவை. 16 இலிருந்து 35 வரையும் அனுபவம் தேவையில்லை. நல்ல சம்பளம் மற்றும் வேலை நிபந்தனைகள் தொடர்பு 75/1, W.A. சில்வா மாவத்தை, கொழும்பு 6 259 11 69, 2555410, 077 452447 மற்றும் 075 5091379 ஆகிய இலக்கங்களை அழைக்கவும். 085863

320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கண்டி ஹோட்டலுக்கு தங்கி வேலை செய்யக்கூடிய முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரம் உள்ள ரூம்போய் மற்றும் ஸ்டுவடின் செய்யக்கூடிய இளைஞர்கள் தேவை. 071 8398923 003154

கொழும்பு முன்னணி கேக் உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு சுமார் 04 வருட அனுபவமுள்ள (DESSERT) கேக் தயாரிப்பாளர் தேவை. சம்பளம் ரூபா 50,000 இற்கு மேல். அழைக்கவும்: 0770330353. 002882

மாத்தளை பேக்கரி மற்றும் ஹோட்டலுக்கு. சோர்ட்டிஸ் பாஸ், சாதாரண ஊழியர்கள் தேவை. பெண்களுக்கு பாதுகாப்பான தங்குமிட வசதிகள் உண்டு. (சிங்களம் பேசக்கூடியவர்கள்) 0703687372 003403

321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

கேகாலை றப்பர் தோட்டத்திற்கு பால் வெட்டுவதற்கு திறமையான குடும்பம் அல்லது தனி நபர்கள் தேவை. உயர்ந்த சம்பளம் அழையுங்கள். 071 2213018. 003839

325 தொழில்துறை பொது

கொழும்பில் அமைந்துள்ள, நம்பகமான, நவீன ஆண்கள் சலூனிற்கு ஆண் பார்கள் தேவை. தங்குமிடம் வழங்கப்படும். 0771847085, 0771234500, 0113459427. 002434

கொழும்பு சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு ஆண்/பெண் பொலிசார், இயந்திர இயக்குநர் தேவை. கூடுதல் சம்பளம் இன்றே அழையுங்கள். 0772771022 003192

விற்பனை உதவியாளர் பள்ளியை விட்டு வெளியேறுபவர் விரும்பத்தக்கது. நேரில் வந்து பேசவும். இல. 05, குவாரி வீதி, கொழும்பு 12. (0756740280). 084325

SPA ஆயுர்வேத அரச பதிவு செய்த நிறுவனத்திற்கு பயிற்சி பெற்ற/பெறாத 18 35 வயதிற்கு. இடைப்பட்ட சிங்களம் பேசக்கூடிய கவர்ச்சியான தெரபிஸ்ட்கள் தேவை. ஒரு நாள் சம்பளம் ரூ. 10,000/ உணவு, தங்குமிடம் இலவசம். சேவைக் காலம் பகல் மற்றும் இரவு என தேர்ந்தெடுக்கலாம். Full Time / Part Time தேவை. இதற்காக தெரபிஸ்ட்களை தொடர்பு படுத்துபவர்களுக்கு ரூ. 10,000/ சேவைக் கட்டணம். எம்மால் செலுத்தப்படும். Shakya Herble SPA (Pvt) Ltd. மாலபே, கொட்டாவ, மஹரகம, நுகேகொட, கடுவளை, தலவத்துகொட. 0704404040 003708

077 9975547 பாதுகாப்பு வெற்றிடம் நீர்கொழும்பு சபுகஸ்கந்த பேலியகொட, வத்தளை, அத்துருகிரிய, வந்துருமுல்ல ராஜகிரிய கொஹுவல, நுகேகொட மொரட்டுவ, மஹரகம, பெப்பிலியான, பிலியந்தலை, ஹொரகெடிய, கோனபல, கோபின்ன, ஹொரண, இங்கிரிய, பாதுக்க, கொழும்பு, அஹுங்கல்ல, பாணந்துறை, கட்டுகுருந்த, களுத்துறை, அலுவலகம் 076 3155331/ 070 6655531/ 071 8653781/ 071 8653778/ 076 8171053 சபுகஸ்கந்த 071 8653779 நுகேகொட 071 8379981 கொழும்பு 071 8653780 பாணந்துறை 070 4545051 ஹொரண 070 2513418 ராஜகிரிய 071 2125238. 003835

0 77 9 9 7 5547, 0 71 8 6 5 3778 நட்சத்திர தர ஹோட்டலுக்கு சிவில் உடையில் பாதுகாப்பு அதிகாரிகள் துரிதமாக சேர்த்துக் கொள்ளல் உணவு இலவசம். (10 மணி நேரம்) இற்கு 1750, 1450 கொழும்பு 0 71 8653780 அலுவலகம். 071 3155331/ 070665 5331/ 0760989129/ 076 8171053. 003832

காணி/தோட்டம்

607 எஸ்டேட் விற்பனைக்கு

கண்டி மாவட்டத்தின் ஹஸலக்க 900 ஏக்கர் ஐந்து உறுதிகளைக் கொண்ட பயிர் செய்கைக்கு பொருத்தமான காணி உடன் விற்பனைக்கு. 390 இலட்சம் 0770506043, 0114278066 003600

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

16.34 காணியுடன் வீடு விற்பனைக்கு இரத்மலானையில் அழகிய குடியிறுப்புப் பிரதேசம் தொடர்பு 076 0786655, 070 2778616 003229

621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

80 பேர்ச் மிகவும் பெறுமதியான காணி விற்பனைக்கு. கண்டி குண்டசாலை கென்டோஸ் சொக்லேட் கம்பனிக்கு முன்னால் பிரதான பாதைக்கு 100 மீற்றர் தூரத்தில் சதுரவடிவ தரைமட்டமான வெற்றுக் காணி முதியோர் இல்ல கட்டிடத் தொகுதி களஞ்சியம், ஹோட்டல், வியாபரத்திற்கு தனியார் வைத்தியசாலைக்கு மிகவும் பொருத்தமானது. 01 பேர்ச் 10 இலட்சம். விலைகளை பேசித்தீர்க்கலாம். இடைத்தரகர்கள் தேவையில்லை. வாயிற்கதவுடன் சுற்றிவர மதில். தொடர்புகள் 0777 282147, 077 5486262 001224

623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

நுவரெலியா 27 பேர்ச் வாகனத்தில் செல்லக்கூடிய காணி சாந்திபுரவில் சகல வசதிகளுடன் நகரத்திற்கு பத்து நிமிடங்கள். 0778028828, 0773304450. உடனடி விற்பனை. 003080

641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

தெஹிவளையில் 2 படுக்கையறைகள் 1 குளியலறை, கார் நிறுத்துமிடம் வாடகைக்கு. தொலைபேசி 077 3309337 003270

தெஹிவளை கொங்கோட் தியெட்டருக்கு சமீபமாக இரண்டு மாடி வீடு இரண்டு அட்டச் குளியல் அறை இரண்டு சாதாரண குளியல் அறை கொண்ட நாலு படுக்கை அறை இரண்டு சமையல் அறை கொண்டது. இரண்டு சிறிய குடும்பம் பாவிக்கலாம். அஹ்மத் 0777303828. 002290

வெள்ளவத்தை மெனிங் பிளேஸ் 24/18/1/1 முகவரியில் 59ஆம் ஒழுங்கை 02 படுக்கையறைகளுடன் நவீன வீடு வாடகைக்கு உண்டு. 076 1263828 003548

மணமகள்

வயது 43, உயரம் 5'2" தொழில் செய்யும் சகோதரிக்கு தகுதியான மணமகன் தேவை. சீதனம் உண்டு. விபரங்களை அனுப்பவும். எம்மதமும் சம்மதம். B173782

Repeat Your Ad For Better Offers

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7278948 ரமணி - 011 2 129347
பியுமி - 011 2 429383 கயனி - 011 2 429342/343

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

கேள்வி அறிவித்தல்

எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான கீழ்க்காணும் மரங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தோட்டம் மற்றும் முகவரி	தொலைபேசி இலக்கம்	பிரிவு	துறைசார் இலக்கம்	மரவகைகள் மற்றும் மரங்களின் எண்ணிக்கை	
பெந்தோட்ட வத்த எல்பிட்டிய	091-4943051	பெந்தோட்ட	9.71Ha	றப்பர்	3,794
		ஓபாத	7.97 Ha		1,442
		அத்துகோரள கந்த	3.74 Ha		947
		பிரகதி	7.29 Ha		1,639
எல்விட்டியவத்த எல்பிட்டிய	091-4943032	கிராகொட	3 (5.00 Ha)	றப்பர்	1,143
		எல்பிடிகந்த	5 (3.53 Ha)		958
		மேல்	T/12	எல்பீசியா	14
தல்கஸ்வெல வத்த தல்கஸ்வெலி	091-4943025	கல்லிந்த	CN/02		01
		மத்திய	O/06		06
			T/03		01
		கீழ்	T/04		04
		தெற்கு	R/02	றப்பர்	1,838

சகல கேள்வி விண்ணப்பங்களும் முறையாக தயாரித்து உறையொன்றில் இட்டு பொறியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"மரங்களுக்கான விலைமனுக்கள் கோரல்"** என குறிப்பிட்டு பிரதம நிறைவேற்று அதிகாரி, எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனி, 09ஆம் மாடி, எயிட்கின் ஸ்பென்ஸ் கோபுரம் இல. 01, இல. 305, வொக்ஷோல் வீதி, கொழும்பு-02 என்ற முகவரிக்கு 2022 ஜனவரி 31 பிற்பகல் 4.00 இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் 2022 ஜனவரி 31 வரை வாரத்தின் வேலை நாட்களில் (வார இறுதி மற்றும் விடுமுறை தவிர்த்து) காலை 8.30 முதல் 4.00 வரை மீளளிக்கப்படாத ரூ. 1,000.00 (ரூபா ஆயிரம்) தொகையை மற்றும் மீளளிக்கப்படும் ரூ. 5,000.00 (ரூபா ஐந்தாயிரம்) பிணை, ஒன்றை எல்லாப் பகுதிகளிலும் மரங்களுக்காக வைத்து, குறித்த தோட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

குறித்த மரங்களை பரீட்சித்தல், 2022 ஜனவரி 31 வரை வாரத்தின் வேலை நாட்களில் (வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினம் தவிர்ந்த) காலை 8.30 முதல் 4.00 வரை குறித்த தோட்டத்தின் பிரதி பொது முகாமையாளர்/ சிரேஷ்ட முகாமையாளர்/ முகாமையாளரின் அனுமதியின் கீழ் இடம் பெறலாம்.

பூர்த்தி செய்யப்பட்டகேள்வி விண்ணப்பங்கள் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும்,

முழுமையான உரிமை எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனிக்கு உரியது,

பிரதம நிறைவேற்று அதிகாரி,
எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனி,
09ஆம் மாடி, எயிட்கின் ஸ்பென்ஸ் கோபுரம் இல. 01,
இல. 305, வொக்ஷோல் வீதி, கொழும்பு-02.
தொ.பே. - 011-4693000

நீர்ப்பாசன அமைச்சு

மகாவலி நீர்ப் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டம் (MWSIP)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்டது (ADB)

ஆலோசனை சேவை

ஒப்பந்த அடிப்படையில் MWSIPஇன் திட்ட முகாமைத்துவ பணிமனையின் கீழ்க்காணும் ஒப்படைக்காக இலங்கைப் பிரஜைகளான பொருத்தமான தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

திட்டமுகாமைத்துவ பணிமனை (AMU) கொழும்பு

சுயாதீன சுற்றுச்சூழல் பாதுகாப்பு கண்காணிப்பு நிபுணர் -01 (உள்ளக ஆலோசகர்)
(ஒப்பந்த இல. MI/MWSIP/ADB/3268-SRI/Ind.Consultant/CS-03/Env.Mon/NCB/2021/048)

A) வேளையின் நோக்கம்

ADB மற்றும் இலங்கை அரசாங்கத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக MWSP இன் கீழ் மூன்று கட்டுமானத் திட்டங்களின் காலமுறை மதிப்பாய்வுகளை (ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும்) சுயாதீன கண் காணிப்பு மேற்கொள்ளல் ஆலோசகர் PMU மற்றும் ADBக்கு இரு ஆண்டு கண் காணிப்பு அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல் 2022 இன் 1ஆம் காலாண்டில் தொடங்கி 2024இன் 4ஆவது காலாண்டு வரையிலான 3 வருட காலத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக இரண்டு மாதங்கள் வீட்டு அலுவலகம் மற்றும் களத்தின் அடிப்படையில் உள்ளீடு இருக்கும்.

B) வேலை சுயவிபரம்

- மூன்று துணைத் திட்டத்தளங்களிலும் சுற்றுச் சூழல் மேலாண்மைத்திட்டம் மற்றும் ஒழுங்கு முறைத் தரங்களுடன் ஒப்பந்ததாரர் இணங்குவதை உறுதி செய்ய அவ்அப்போது தள வருகைகளை மேற்கொள்ளல்
- PMU மற்றும் PIV இன் சுற்றுச் சூழல் மேலாண்மை அமைப்புக்களை மதிப்பாய்வு செய்து பதிவுகள் பராமரிக்கப்படுவதையும் பயனுள்ள கண் காணிப்பு மேற்கொள்ளப்படுவதையும் உறுதிப் படுத்தல்
- தளத்தில் கிடைக்கும் கண்காணிப் பதிவுகளுடன் சரிபார்ப்பை உறுதி செய்ய தேவையான மாதிரிகளை மேற்கொள்ளல்
- தேசிய பாதுகாப்பு விதிமுறைகளுக்கு இணங்குவதை சரிபார்க்க முக்கிய அரசு நிறுவனங்களை (CEA, DWC போன்றவை) அனுகுதல்
- எந்த இணக்கமின்மைக்கும் PMU ஆலோசணை மற்றும் சுற்றுச் சூழல் செயற்திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்
- குறை தீர்க்கும் பொறிமுறையானது (GRM) தேவையான நோக்கங்களை பூர்த்தி செய்கிறதா என்பதை மதிப்பிடுதல் மற்றும் சுற்றுச் சூழல் பிரச்சினைகள் தொடர்பான பொது புகார்கள் திறம்பட திர்க்கப்படுதல்
- EIAS (NWPCP & NCPCP க்கு)/IEE (MLBCRP க்கு) அல்லது EMP அடையாளம் காணப்படாத சுற்றுச் சூழல் பாதிப்புக்களை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துறைத்தல்
- EA மற்றும் ஒப்பந்ததாரர்கள் CEAஇன் ஒப்புதல் நிபந்தனைகளுக்கு இணைங்குவதை உறுதி செய்தல்

C) தகைமைகள் மற்றும் அனுபவம்

சுற்றுச் சூழல் விஞ்ஞானம்/ முகாமைத்துவம் அல்லது சமமான பட்டத்தில் ஓர் முதுமாணிப் பட்டம்
மற்றும்
சுற்றுச் சூழல் பாதிப்பு மதிப்பீடுகளைத் தயாரிப்பதிலும் சுற்றுச் சூழல் மேலான்மைத் திட்டங்களை செயல்படுத்துவதிலும் 15 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம் முன்னுரிமை பலதரப்பு வளர்ச்சி வங்கி நிதியுதவி கட்டுமானத் திட்டங்களுக்கானது

மேலதிக தகவல்களுக்கு
www.mwsip.lk → information → vacancies ஐ தயவு செய்து பார்வையிடவும்.

D) கொடுப்பனவுகள்

சமமான இக்குகளுக்காக இலங்கையின் உள்ளூர் (தேசிய) ஆலோசகர்களாகும் நடைமுறையில் உள்ள சந்தை விலைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கொடுப்பனவுகள் அமையும். அத்துடன் கீழ்க்காணும் பட்ஜட் வரிகளில் பேசித் தீர்க்கலாம்.

1) மாதாந்த வேதனம்
2) வெளிக்கல வேலை
3) அறிக்கை தயாரித்தல்

E) விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் மற்றும் மூடப்படும் திகதி:-

கல்வி, அனுபவம் மற்றும் ஏனைய தகைமைகளின் பிரதிகளுடன் இரண்டு உறவினரல்லாத பரிந்துரைப்பவர்களுடன் தயாரிக்கபபட்ட முழு சுயதரவுகளுடனான விண்ணப்பங்களை 2022.01.28ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

திட்டப் பணிப்பாளர்,
மகாவலி நீர்ப் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டம் (MWSIP)
திட்ட முகாமைத்துவப் பணிமனை (PMU)
இல. 493 1/1, T.B. ஜாயா மாவத்த,
கொழும்பு -10.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் ஒப்படையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். அரசாங்க சேவை/நியதிகள் சபைகள்/ கூட்டுத்தாபனங்கள் அல்லது ஏனைய அரச நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் முறையே தமது நிறுவனத் தலைமையூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படின் விண்ணப்பதாரியை முழு நேரம் விடுவிக்க முடியுமா என்பதை தலைமை குறிப்பிடல் வேண்டும்.

அநுர திஸாநாயக்க,
செயலாளர்,
நீர்ப்பாசன அமைச்சு,
இல. 500, T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு -10.

சுற்றுலாத்துறை அமைச்சு

இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

IFB	IFB No.	Pre-bid Meeting	Submission of Bids
Implementation and maintenance of the fully automated examination system for flight crew **(FCL) (ESPL)**	IFB/SP/2022-03	2022 பெப்ரவரி 8 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு	விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2022 மார்ச் 09 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி என்பதுடன் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
Implementation and maintenance of the fully automated examination system for **(AML) (ESPL)**	IFB/SP/2022-04	2022 பெப்ரவரி 8 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு	விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2022 மார்ச் 09 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி என்பதுடன் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
Implementation and maintenance of the fully automated examination system for **(ATC) (ESPL)**	IFB/SP/2022-05	2022 பெப்ரவரி 8 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு	விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2022 மார்ச் 09 ஆம் திகதியன்று பி.ப. 2.45 மணி என்பதுடன் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

1. மேலேயுள்ள பெறுகைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.
2. விலைமனுக்கோரல் சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் செயற்பாடு மூலம் நடாத்தப்படும்.
3. விலைமனுக்களின் தகுதிக்காக பின்வரும் ஆகக் குறைந்த தகைமை தகவுத்திறனுக்கு விலைமனுதாரர்கள் அமைந்தொழுகல் வேண்டும்.
   - நிகரான செயற்றிட்டங்களை செயற்படுத்துவதில் உள்ளூர் விலைமனுதாரர்/ முதன்மையாளர் உள்ளூர் ஆதரவு மற்றும் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - ISO/IEC 20000-1:2011 என்ற அல்லது தக்க வைத்திருத்தல், தாபித்தல், அமுல்நடாத்தல், பராமரித்தல் மற்றும் தொடர்ச்சியாக சேவை முகாமைத்துவ முறைமையொன்றை மேம்படுத்தலுக்கான தகைமை சான்றிதழின் இறுதிப் பதிப்பு அல்லது நிகரான சான்றிதழை கொண்டுள்ள அமைப்பொன்றாகவிருத்தல்.
   - விலைமனுதாரர்கள் அவ்வாறான/நிகரான செயற்றிட்டங்களை கையேற்று நடாத்தியவற்றில் அவர்களின் கடந்தகால அனுபவம் மற்றும் ஆதாரம் ஆகியவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. 2022.01.19 ஆம் திகதிக்கும் 2022.03.08 ஆம் திகதிக்குமிடையிலான காலகட்டத்தில் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ஒவ்வொரு விலைமனுவிற்கும் பெசேவ நீங்கலாக ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை (1500 ரூபா) மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவண தொகுதியொன்றை மேலேயுள்ள முகவரியிலிருந்து கையேற்றுக் கொள்ளலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
5. தகுதியுள்ள விலைமனுதாரர்கள் இந்த விலைமனு தொடர்பான மேலதிக தகவலை கட்டுநாயக்க, மினுவாங்கொட வீதி, 152/1 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை சிவில் போக்குவரத்து அதிகாரசபையின் சூழல் ஆராய்ச்சி மற்றும் செயற்றிட்டங்கள் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 011 2358824). மேலே குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
6. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையிலுள்ள புகழ்வாய்ந்த வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட ஐம்பதினாயிரம் இலங்கை ரூபாவிற்கு (50,000 இ.ரூபா) விலைமனுப் பிணைத் தொகையிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு குறையாத காலத்திற்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. மொத்த ஒப்பந்தப் பெறுமதியின் 10% இற்கான பெறுமதிக்கு இலங்கை சிவில் போக்குவரத்து அதிகாரசபையின் பெயரில் நிபந்தனையற்ற செயற்பாட்டு உத்தரவாமொன்றை சமர்ப்பிக்கும்படி சித்திகரமான விலைமனுதாரர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார். கம்பனியானது திருப்திகரமான சேவையொன்றை வழங்கத் தவறின் இலகுவில் ரொக்கப் பணமாக மாற்றக்கூடிய செயற்பாட்டு உத்தரவாத பெறுமதியை கையகப்படுத்தும் உரிமையை சிவில் போக்குவரத்து அதிகாரசபையானது கொண்டுள்ளது.
8. பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுகள் தொழில்நுட்பம் மற்றும் நிதியிடல் முன்மொழிவுகள் என அடையாளமிடப்பட்டு அதிகாரம் பெற்ற நபர்களினால் கையொப்பமிட்டு உத்தியோகபூர்வ இலட்சினை பதிக்கப்பட்டு இரு தபாலுறைகைகளில் ''நிதியிடல்'' மற்றும் ''தொழில்நுட்பம்'' என தனித்தனியாக அடையாளமிடப்பட்டு அவ்வாறான இரு தொகுதிகளையும் அடக்கியுள்ள தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் "IFB No……. " என குறிப்பிடப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள முகவரியில் நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை,
இல. 152/1, மினுவாங்கொட வீதி,
கட்டுநாயக்க.

பாதுகாப்பு அமைச்சு
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

விலைமனுக்கோரல்

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டு வளாகத்தில் முன்மொழியப்பட்ட விரிவாக்கத்தின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானப் பணி

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/RP&SERVICE/ 2574/2021

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டு வளாகத்தில் முன்மொழியப்பட்ட விரிவாக்கத்தின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானப் பணிக்கான தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் 2022.01.17 ஆம் திகதியிலிருந்து 2022.02.14 ஆம் திகதி வரை மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.15.00 மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத ரூ.20,000/-கட்டணத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொருளாளரிடம் செலுத்தி பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

3. மனு ஆவணங்களை மேற்குறிப்பட்டுள்ள முகவரியில் 2022.01.17 முதல் 2022.02.14 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.15.00 மணி வரை சரிபார்க்கலாம் (தொலைபேசி : 011-2632430 / 0710219449 / 0710219384 தொலைநகல் 011-2632430)

4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. 2022.02.15 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்

6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் பணிப்பாளர் (ஏற்பாடியல்), இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி : 011-2632430 / 0710219449 / 0710219384 தொலைநகல் 011-2632430 மற்றும் **www.kdu.ac.lk/ocls/tender-notices** பார்வையிடலாம். விலைமனுக் கோரல்)

தவிசாளர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு,
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை, இலங்கை.

அமெரிக்க தூதரகம், கொழும்பு

மின் பொறியியலாளர் (OBO) இரண்டு வருடம் நிரந்தரம் [ஆண் / பெண்]

இந்த பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், இருணம உறவு என்பனவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது.

தெரிவு செய்யப்படும் மின் பொறியியலாளர், புதிய தூதரக காரியாலய வளாகத்தில் நிர்மாணப் பணிகளுக்கான பொறுப்புடன் கூடிய வெளிநாட்டு கட்டட செயற்பாடுகள் (OBO) பிரிவின் நிர்மாண முகாமையாளர்/மேலைத்திட்ட பணிப்பாளரின் கீழ் செயற்பட வேண்டும். அத்துடன் நிர்மாணப் பணிகள் இடம்பெறும் பருதியின் அனைத்து பணிகளையும் சோதனை செய்தல், கண்காணித்தல், திட்ட வரைபு மற்றும் ஏனைய நிர்மான திட்டங்களை மதிப்பீடு செய்தல், கொழும்பிலுள்ள புதிய தூதரக காரியாலய வளாகத்தில் மேற்கொள்ளவேண்டிய மாற்றங்களுக்கான பணிப்புரைகளை விடுத்தல் மற்றும் செலவினங்களின் மதிப்பீடுகளை தயாரித்தல் போன்ற கடமைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் பதவியை வகிப்பவர்கள் சிறந்த வகையிலும் சுயாதீனமாகவும் செயற்பட வேண்டும்.

வேலை நேரம் வாரத்தில் 40 மணித்தியாலங்கள் மாதச்சம்பளம் 334,782/-

1. **கல்வி:** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மின் பொறியியலாளர் பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
2. **தொழில் அனுபவம்:** பாரியளவிலான குடியிருப்பு அல்லது வணிக மட்டத்திலான அறிவிருத்தி திட்டங்களில் கட்டட நிர்மாணம் மற்றும் மறுசீரமைப்புகளுக்கு இணைவாக மின் பொறியியலாளராக குறைந்தபட்சம் 5 வருடங்கள் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அதில் இரு வருடங்கள் நிர்மான திட்ட முகாமையாளர் மற்றும் கண்காணிப்பு மட்டத்தில் சேவையாற்றியிருத்தல் வேண்டும்.
3. **மொழித்திறன்:** மட்டம் IVல் (சரளமாக) ஆங்கிலம் வாசித்தல், எழுதுதல், பேசுதல் திறன்கள் அவசியம்.
(இந்த ஆற்றல் பரிசீலிக்கப்படும்)
மட்டம் IVல் (சரளமாக தொழில் அறிவு) சிங்களம் அல்லது தமிழ்மொழி வாசித்தல், எழுதுதல், பேசுதல் திறன்கள் அவசியம்.
4. **தொழில் அனுபவம்:** தேசிய கட்டட மற்றும் நிர்மான தரங்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு சட்டங்கள் தொடர்பிலான அறிவைக் கொண்டிருத்தல். அனுமதி பெறுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காக உள்ளூர் அரசாங்க கட்டமைப்பு மற்றும் அதிகார வரம்புகளை அறிந்திருத்தல் வேண்டும். மின் செயற்பாடுகளை கணக்கிடு செய்தல் மற்றும் அளவுகோல்களை தயாரித்தல், பொறியியல் வரைபுகள் மற்றும் விவரக்குறிப்புகளை தயாரிப்பதில் தொழில் ரீதியான அனுபவத்தைக் கொண்டிருத்தல்.
5. **திறன்கள் மற்றும் ஆற்றல்:** (Word, Excel, Power Point, Outlook) ஆகிய தொகுப்புகளின் பயன்பாடு மற்றும் இணையத்தள பயன்பாடு தொடர்பில் சிறந்த தொழில் அறிவைக் கொண்டிருத்தல். Microsoft project மற்றும் Primavera போன்ற கட்டட நிர்மாணங்களை முகாமைத்துவம் செய்யும் மென்பொருட்களை கையாளுவதற்கு தொழில் ரீதியான திறன் மற்றும் அனுபவம் இருத்தல் வேண்டும். மின் பொறியியல் செயற்பாடுகளின் செலவினங்களை மதிப்பீடு செய்தல் உட்பட தர இணக்கப்பாடுகளுக்கேன இலத்திரனியல் வேலைகளை மதிப்பாய்வு செய்வதற்கு திறனைக் கொண்டிருத்தல். புகைப்படக்கருவி, மின் பரிசோதனை மீட்டர், ஒளிவீட்டு உபகரணங்கள் மற்றும் அளவு நாடா போன்றவற்றை பயன்படுத்தல் மற்றும் ஆவணப்படுத்துவதற்கான திறனைக் கொண்டிருத்தல்.

விண்ணப்பிக்கும் முறை:

மேலதிக விபரங்களுக்கு https://lk.usembassy.gov/embassy/jobs/ என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாக இலத்திரனியல் ஆட்சேர்ப்பு விண்ணப்ப பத்திரம் [ERA] மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.

தேவைப்படும் ஆவணங்கள்:

விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை மின்னணு பிரதிகளுடன் இலத்திரனியல் ஆட்சேர்ப்பு விண்ணப்ப பத்திரம் மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- கல்விச்சான்றிதழ்.
- சேவைகால அனுபவ சான்றிதழ்.
- பிரஜாவுரிமையை சான்றுப்படுத்தும் ஆவணங்கள். (அடையாள அட்டை / கடவுச்சீட்டு / வேறு ஆவணங்கள்).

நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
உங்கள் விண்ணப்பங்கள் 2022 ஜனவரி 27 ஆம்திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கப்பெற வேண்டும்.
தெரிவு செய்யப்படுபவர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

பெறுகை அறிவித்தல்

இலங்கை இராணுவம்

2022ஆம் வருடத்தில் இலங்கை இராணுவத்திற்கு பொருட்களை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் / இறக்குமதியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரல்

1. 2022ஆம் வருடத்தினுள் பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை இராணுவத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் கோரப்படுகின்றன.
   அ. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களினால் சகல பொருட்களும் இலங்கை இராணுவத்தின் ராகம யுத்தோபகரண களஞ்சியசாலை அல்லது இராணுவ துணிகள் களஞ்சியசாலைக்கு போக்குவரத்து செய்து ஒப்படைத்தல் வேண்டும்.
   ஆ. இதற்கு ஆர்வம் காட்டும் வழங்குநர்கள் வேலை நாட்களில் முற்பகல் 1000 மணித்தியாலம் முதல் பிற்பகல் 1500 மணித்தியாலம் வரை உருப்படிகளுக்கு முன்னால் தரப்பட்டுள்ள திகதிகளில் ஸ்ரீ ஜயவர்தனபுர இராணுவத் தலைமையகத்தில் அமைந்துள்ள யுத்தோபகரண சேவை பணிப்பாளர் சபையிடமிருந்து அந்த விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் ஒவ்வொரு கேள்வி இலக்கத்திற்காகவும் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணத்தை ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம், இலங்கை இராணுவ நிதிப் பணிப்பாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரர்களினால் முறையாக கையொப்பமிடப்பட்ட விலைக்கோரல்களை உத்தியோகபூர்வ முத்திரையைப் பதித்ததன் பின் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2022ஆம் வருடத்தில் (பொருள் வகை) விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்'' கேள்வி இலக்கம் (DOS/2022/.....) திகதி மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரம் என்பவற்றைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

தொ. இல.	கேள்வி அடையாள இலக்கம்	விபரங்கள்	உள்நாடு/ வெளிநாடு (NCB/ ICB)	அளவு		விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம்	விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம்	மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா)
1	DOS/2021/4500	கேஸ் ரைஸ் ஸ்டீமர் (50 Kg)	NCB	20	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.22 வரை	2022.02.23 (மு.ப. 11.00)	3,500.00
2	DOS/2021/4501	உறைநிலை குளிர்சாதனம் (20 சதுர அடிகள்)	NCB	20	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.22 வரை	2022.02.23 (மு.ப. 11.00)	3,500.00
3	DOS/2021/4502	குளிர்சாதனப்பெட்டி (8 சதுர அடிகள்)	NCB	25	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.22 வரை	2022.02.23 (மு.ப. 11.00)	3,500.00
4	DOS/2021/4503	போத்தல் குளிரூட்டி (14 சதுர அடிகள்)	NCB	20	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.22 வரை	2022.02.23 (மு.ப. 11.00)	3,500.00
5	DOS/2021/4504	மின்சார நீர் கொதிகலன் (25 லீற்றர்)	NCB	50	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.22 வரை	2022.02.23 (மு.ப. 11.00)	3,500.00
6	DOS/2021/4505	வளிச்சீராக்கி 18000 Btu/Hr (Wall Mounted Non Inverter Split Type Air Conditioner)	NCB	30	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.22 வரை	2022.02.23 (மு.ப. 11.00)	3,500.00
7	DOS/2021/4506	வளிச்சீராக்கி 24000 Btu/Hr (Wall Mounted Non Inverter Split Type Air Conditioner)	NCB	25	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.22 வரை	2022.02.23 (மு.ப. 11.00)	3,500.00
8	DOS/2021/4507	வளிச்சீராக்கி 36000 Btu/Hr (Ceiling Suspended Non Inverter Split Type Air Conditioner)	NCB	25	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.22 வரை	2022.02.23 (மு.ப. 11.00)	3,500.00
9	DOS/2021/4508	புகைப்படப் பிரதி இயந்திரம் (Light Duty)	NCB	100	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.24 வரை	2022.02.25 (மு.ப. 11.00)	12,500.00
10	DOS/2021/4509	புகைப்படப் பிரதி இயந்திரம் (Heavy Duty)	NCB	30	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.24 வரை	2022.02.25 (மு.ப. 11.00)	12,500.00
11	DOS/2021/4510	மரக்கறி வெட்டும் கருவி	NCB	25	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.24 வரை	2022.02.25 (மு.ப. 11.00)	12,500.00
12	DOS/2021/4511	மின்சார இறைச்சி வெட்டும் கருவி	NCB	25	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.24 வரை	2022.02.25 (மு.ப. 11.00)	3,500.00
13	DOS/2021/4512	புல் வெட்டும் இயந்திரம் (Heavy Duty)	NCB	100	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.24 வரை	2022.02.25 (மு.ப. 11.00)	3,500.00
14	DOS/2021/4513	இரும்புப் பெட்டகம் (100 - 125 KG)	NCB	20	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.24 வரை	2022.02.25 (மு.ப. 11.00)	3,500.00
15	DOS/2021/4514	வெகியும் கிளீனர் (Heavy Duty)	NCB	20	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.24 வரை	2022.02.25 (மு.ப. 11.00)	3,500.00
16	DOS/2021/4515	மின்சார ரைஸ் குக்கர் (2 லீற்றர்)	NCB	50	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.24 வரை	2022.02.25 (மு.ப. 11.00)	1,000.00
17	DOS/2021/4516	மின்சார ரைஸ் குக்கர் (5 லீற்றர்)	NCB	50	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.24 வரை	2022.02.25 (மு.ப. 11.00)	1,000.00
18	DOS/2021/6066	வர்ண தொலைக்காட்சிப் பெட்டி LED 43" (அன்டனா சகிதம்)	NCB	140	எண்ணிக்கை	2022.01.21 முதல் 2022.02.24 வரை	2022.02.25 (மு.ப. 11.00)	12,500.00

2. குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தேசிய போட்டி ரீதியில் மற்றும் சர்வதேச போட்டி ரீதியில் விலைக்கோரல்கள் இடம்பெறும்.
3. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்களை பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு முடிவுறுத்தப்படும் காலம் முடிவடைதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளல் காலம் முடிவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தேசிய அடையாள அட்டை மற்றும் சேவை இடத்தின் கடிதத்துடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
யுத்த உபகரண முதன்மை கட்டளைப் பிரிவு,
இராணுவ முகாம், செலிங்கோ கட்டிடம்,
இல. 167/30, அவிசாவளை வீதி, ஒருகொடவத்த.

4. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு வழங்குநர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தொழில்நுட்ப மதிப்பீடுகளின் போது இயைபுடைய தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.
   அ) திருப்திகரமான வினைத்திறன் அறிக்கை சகிதம் சமமான கொள்ளளவுடைய அரச / தனியார் நிறுவனங்களுக்கு மேற்படி உருப்படிகளை வழங்குவதில் இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
   ஆ) நிதிய இயலுமை
   இ) திருப்திகரமான வரி செலுத்தல் அறிக்கைகள், போதுமான உற்பத்தி இயலுமை, போதுமான களஞ்சிய வசதிகள்
   ஈ) வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி அல்லது கடந்த மூன்று வருடங்களுக்கான செயற்பாட்டு அறிக்கையுடனான கூட்டிணைப்புச் சான்றிதழ்
5. விலைக்கோரல் ஆவணங்களுடன் வெட் பதிவிலக்கத்தை வெளிப்படுத்துதல் கட்டாயமாகும். விலைமனுதாரர் வெட் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தால் அதை உறுதி செய்வதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திடமிருந்தான கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்தத் தேவைப்பாட்டை வழங்காத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
6. முழுமையற்ற மற்றும் தேவையான ஆவணச் சாட்சிகள் இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் கொள்வனவு செய்யும் அளவைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளார்.
7. உடன்படிக்கையில் கைச்சாத்திடும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களுக்கு பதிவுத் தபாலில் அறியத்தரப்படும்.
8. வெளிநாட்டு வழங்குநர்களுக்கு கடன் கடிதங்கள் மூலமும் உள்நாட்டு வழங்குநர்களுக்கு காசோலைகள் மூலமும் கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.
9. ஆவர்முள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு பொதுவான பொருட்கள்: 0112987534 இயந்திரோபகரணங்கள் 0112987532 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக விடயப்பொறுப்பு அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இராணுவத் தளபதி,
இலங்கை இராணுவத் தலைமையகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 344

01	02	03	04	05	06
07		08		09	10
		11	12		13
14	15		16	17	
18		19	20	21	22
23		24	25	26	

பெயர் .....
வகுப்பு .....
பாடசாலை பெயர் .....
பாடசாலை முகவரி .....
.....
....
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

இடமிருந்து வலம்

(01) உழவர் திருநாள் எனப் போற்றப்படுகின்ற இந்துப் பண்டிகை. தமிழர் திருநாள் என்றும் இப்பண்டிகையைக் கூறுவர்.
(09) மீனவர்கள் நன்னீர்நிலைகளிலும், கடலிலும் மீன்பிடிப்பதற்கு பலவிதமான உபகரணங்களைப் பயன்படுத்துவர். அவற்றில் பிரதானமான மீன்பிடி உபகரணம் இது. (தலைகீழான சொல்)
(11) திரவங்களை எடுத்துக் கொண்டால் அவற்றின் சிறு சொட்டு இது.
(14) மூவிடப் பெயர்களில் ஒன்றான தன்மைப் பெயர்ச் சொல்லில் பன்மை இது. (தலைகீழான சொல்)
(16) வீதிகளில் கழிவுநீர் வடிந்தோடும் இடம்.
(19) படைப்பாளிகளால் படைக்கப்படுகின்ற கவிதை, கட்டுரை, கதை போன்ற ஏதாவது படைப்பை இவ்வாறு கூறலாம்.
(24) மக்கள் ஒழுக்கவிழுமியத்துடன் வாழ்வதற்கான சீரான வழியைக் காட்டுகின்ற மார்க்கம். கடும் சீற்றம் கொண்டெழுவதையும் இச்சொல்லால் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)

மேலிருந்து கீழ்

(01) ஓரிடத்தில் இருந்து இன்னுமொரு இடத்துக்கு பயணம் செய்வதற்கான வீதி (வழி) இது. (தலைகீழான சொல்)
(03) கிளி, மைனா, ஆந்தை போன்றவற்றின் வாழ்விடம்.
(05) மான்களில் பெண் இனத்தை பிணை என்பர். ஆண் இனத்தின் மரபுப் பெயர் இது.
(06) ஆண்கோழியைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(12) நாம் உணவுக்குப் பயன்படுத்துகின்ற காய்கறிகளில் இதுவும் ஒன்று. காய் பச்சை நிறம், கனிந்தால் சிவப்பு நிறம். (தலைகீழான சொல்)
(14) பாம்புகளில் கொடிய நச்சு கொண்ட இனம் இது. உலோகம் ஒன்றும் இப்பெயரில் உள்ளது. (தலைகீழான சொல்)
(17) பெற்றோருக்கு இவன் பெரும் சொத்து. (தலைகீழான சொல்)
(19) இல்லை என்பதன் எதிர்ப்பதம்.

போட்டி இல. 344
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல.834.
கொழும்பு

குறுக்கெழுத்துப் போட்டி இல. 343

விடைகள்

இடமிருந்து வலம்
01. அரவம் 07. தனயன் 11. மனனம்
17. பால் 19. மூடை 21. கவி
23. பசு 25. மான்

மேலிருந்து கீழ்
01. அகம் 03. வதனம் 04. மனம்
05. தென்றல் 17. பாகன் 19. மூசு
20. படை

தற்போதைய சூழ்நிலை காரணமாக குறுக்கெழுத்துப் போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கப்படாது என்பதை எமது சிறார்களுக்கு அறியத் தருகின்றோம். ஆனாலும் ஆர்வம் கொண்ட சிறார்களுக்காக குறுக்கெழுத்துப் போட்டிகள் தொடர்ந்தும் இடம் பெறும். (ஆர்)

குறளமுதம் :
தவஞ்செய்வார் தம்கருமம் செய்வார்மற்று அல்லார்
அவஞ்செய்வார் ஆசையுள் பட்டு.

தெளிவுரை :
தவம் செய்கின்றவரே தமக்குரிய கடமையைச் செய்கின்றவர் ஆவர்; அவர் அல்லாத மற்றவர் ஆசை வலையில் அகப்பட்டு வீண் முயற்சி செய்கின்றவரே.

மனிதனின் கண்கள்

நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் பார்ப்பதற்கு நாம் நம் கண்களை எப்படி உபயோகிக்கின்றோம் என்பதைப் பற்றி எப்பொழுதாவது யோசித்திருப்போமா? நமது கண்கள் சிக்கல் நிறைந்த ஓர் உறுப்பாகும். கண் சாதாரணமாக ஒரு றம்புட்டான் பழத்தின் அளவுடையதாகும். கண்ணின் நிறப்பகுதி கதிராளி எனப்படும் கண் பல படையான அடுக்குகளைக் கொண்டுள்ளது. கதிராளியின் பின்னால் வில்லை இருக்கிறது. இது கண்ணின் மிக ஆழமான படையில் அதாவது விழித்திரையில் வெளிச்சத்தை விழச் செய்கிறது.

ஒவ்வொரு விழித்திரையும் ஏறத்தாழ 127 மில்லியன் கோல் கலங்களையும் கூம்புக் கலங்களையும் பெற்றிருக்கும். கோல் கலங்கள் கறுப்பு, வெள்ளை, சாம்பல் நிறங்களையும் பொருட்களின் வடிவத்தையும் இனம்கண்டு இருளில் பொருட்களைப் பார்ப்பதற்கு எங்களுக்கு உதவுகின்றன. ஒவ்வொரு கண்ணிலும் சுமார் 120 மில்லியன் கலங்கள் உண்டு. கூம்புக் கலங்கள் நிறமாலையின் நிறங்களைக் காணும். இவை செயல்படுவதற்கு வெளிச்சம் அவசியம்.

நமது கூம்புக் கலங்கள் சரியாக வேலை செய்யாத போதுதான் நிறக் குருட்டுத் தன்மை ஏற்படுகின்றது. இந்த நிலை ஏற்பட்டால் நிறங்களுக்கிடையில் உள்ள வித்தியாசத்தைப் பார்க்க முடியாது. விசேடமாக சிகப்பு, பச்சை. பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளே அதிகளவில் நிறக் குருட்டுத்தன்மை உள்ளவர்களாக இருக்கின்றார்கள். நமது கண்கள் எல்லாவற்றையும் தலைகீழாகவே கண்டபோதும் காட்சியை சரியான பக்கத்திற்கு திருப்பும்படி நமது மூளை கண்களுக்கு கட்டளையிடுகிறது.

ஏ.எச். அப்துல் அலீம்,
தரம் 08 சி, அலிகார் தேசிய கல்லூரி,
ஏறாவூர்.

சிறுவர் உலகுக்கு வாழ்த்துகள்..!

சிறுவர் உலகம்
சிங்காரத் தோப்பு
சிந்தைக் கினிய
சித்திரம் சிறுகதை
சிரிக்கும் மழலையர்
சான்றோர் அறிவுரை
சொற்சமர் விடுகதை
சிறப்பாய் ஏந்திய
சிறுவர்க் குகந்த
சிறுவர் கதம்பம்
சிறுவர் உலகம்
சிறப்புடன் வெளிவர
சிந்தைக் குளிர
என் வாழ்த்துகள்...!

சாரணா கையூம்,
பதுளை.

நாடுகளின் புனை பெயர்கள்

இருண்ட கண்டம்	-	ஆபிரிக்கா
முத்துத் தீவு	-	பாஸ்ரியன்
முடிவில்லா நகரம்	-	ரோமாபுரி
மரகதத் தீவு	-	அயர்லாந்து
உலகின் கூரை	-	திபெத்
சூரிய உதய நாடு	-	ஜப்பான்
புயலடிக்கும் நாடு	-	சிகாகோ
கங்காரு நாடு	-	அவுஸ்திரேலியா
ஆயிரம் ஏரிகள் நாடு	-	பின்லாந்து
ஐரோப்பாவின் நோயாளி	-	துருக்கி
தங்க கம்பளி பூமி	-	ஒஸ்திரியா
உலகின் சர்க்கரை கிண்ணம்	-	கியூபா
பொற்கோபுர நாடு	-	மியன்மார்
நைல்நதியின் கொடை	-	எகிப்து

அ.ற. பாத்திமா அம்றா,
தரம் 09,
மட்/மம/ஸாவியா மகளிர் வித்தியாலயம், காத்தான்குடி.

கருமை நிறக் காக்கையாரே..!

கருமை வண்ணக் காக்கையாரே
காலையானதும் எங்கும் கரைகிறாய்
விருந்து ஒன்றைக் கண்டதும்
விரைவாய் உறவை அழைக்கிறாய்!

ஒற்றுமைக்கு வலிமை இருந்து
மனித குலத்தை திருத்திட
இறைவன் உன்னைப் படைத்தானோ
முன்மாதிரி நிகழ்ச்சித் திட்டமாய்

சுத்தம் எங்கும் செய்கிறாய்
நல்ல தொண்டன் ஆனாய்
சின்ன குயில் குஞ்சுக்கு
வளர்க்க இடமும் கொடுக்கிறாய்

பகிர்ந்து உண்ணும் கலையை
எங்கு சென்று கற்றீரே
கற்கும் சிறுவர் எம்மிடம்
கருத்தை விதைத்து உயர்த்துகிறாய்..!

என்.எம். பஹட்,
தரம் 05, தி/கிண்/யூசுப் வித்தியாலயம்,
பூவரசந்தீவு. கிண்ணியா.

வாத்து

குவா குவா வாத்து
குள்ளக் குள்ள வாத்து
சாய்ந்து சாய்ந்து போகும்
சின்னச் சின்ன வாத்து!

சேற்றில் ஓடும் வாத்து
சப்பை மூக்கு வாத்து
ஆற்றில் நீந்தும் வாத்து
அழகு வெள்ளை வாத்து

ஸாதிக் பாரிஸ்,
மள்வானை.

கொழும்பு 07, டி.எஸ். சேனநாயக்க கல்லூரியின் இந்து மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட வாணிவிழா அண்மையில் கல்லூரியின் அலஸ் மண்டபத்தில் நடைபெற்றது. கொவிட் சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல் விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதி மற்றும் கல்லூரி அதிபர் உட்பட பிரமுகர்கள் வரவேற்கப்படுவதையும் பிரதம அதிதியாக கலந்துகொண்ட உடுவை எஸ். தில்லைநடராஜா, கல்லூரி அதிபர் உபஷாந்த உடுமுகாந்திரம் அவர்களால் கௌரவிக்கப்படுவதையும் தமிழ்ப்பிரிவு அதிபர் திருமதி யோ. சிவபாலன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் .....
பிறந்த திகதி .....
வகுப்பு .....
பாடசாலை .....
.....
.....
வகுப்பாசிரியர் கையொப்பம்

வர்ணப் புகைப்படம்

மாணவர் கழகம்
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல.834 கொழும்பு.

இவ்வார மழலை

யாஷ்வி,
புவனேஷன் - விமர்ஷனி
கொழும்பு - 15.

எஸ். திவ்யானி,
தரம் 12, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.

பி. தனுஸ்கர்,
தரம் 12,
கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.

நிந்திய கமலேந்திரன்,
தரம் 05,
மட்/அரசடிப் பிள்ளையார் கனிஷ்ட வித்தியாலயம்,
மட்டக்களப்பு.

மேவர்ஷா ரங்கநாதன்,
தரம் 02,
மட்/வின்சென்ற் தேசிய பாடசாலை,
மட்டக்களப்பு.

விளையாட்டு

சிம்பாப்வே–இலங்கை அணிகள் மோதும்

மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் இன்று பல்லேகலவில் ஆரம்பம்

சுற்றுலா சிம்பாப்வே அணிக்கு எதிராக மூன்று போட்டிகள் கொண்ட தொடர் இன்று கண்டி பல்லேகல விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இலங்கை அணியில் அண்மையில் முடிவுற்ற எல்.பி.எல். தொடரில் சிறப்பாகச் செயற்பட்ட ஜெனித் லியனகே, வேகப்பந்து வீச்சாளர் நுவன் துஷார, கலன துஷார, காமில் மிஷார, சாமிக குணசேகரவும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இலங்கை அணியின் ஆரம்ப அதிரடி வீரர் குசல் ஜனித் பெரேராவும், சுழற்பந்து வீச்சாளர் வனிது ஹஸரங்கவும் காயம் காரணமாக இத்தொடரிலிருந்து விலகியுள்ளனர். 18 வீரர்கள் உள்ளடக்கிய சிம்பாப்வே அணிக்கெதிரான இலங்கை குழாமில் துடுப்பாட்ட வீரர்களான அஞ்சலோ மெத்தியூஸ் சுழற்பந்து வீச்சாளர்களான அகில தனஞ்சய, லக்ஷான் சந்தகன் உள்வாங்கப்படவில்லை. கடைசியாக இலங்கை அணிக்கு விளையாடிய கமிது மெண்டிஸ், பினுர பெர்னாண்டோ, நுவன் பிரதீப், லஹிரு மதுஷங்க, புலின தரங்க ஆகியோரும் உள்வாங்கப்படவில்லை. கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்த தசுன் சானகவும், வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீரவும் வைத்திய ஆலோசனையின் பின் அணியில் இடம்பெறவுள்ளனர். நீண்டகால இடைவெளிக்குப் பின் சுழற்பந்துவீச்சாளர் ஜெப்ரி வெண்டர்ஸே இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். மேற்படி குழாமில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் அவிஷ்க பெர்னாண்டோ மற்றும் அறிமுக வீரர் ஜனித் லியனகே ஆகியோர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதால் அவர்களுக்குப் பதிலாக கடந்த வருடம் போட்டித் தடைக்குட்பட்டு அண்மையில் விடுவிக்கப்பட்ட குசல் மெண்டிஸ், நிரோஷன் திக்வெல்ல, தனுஷ்க குணதிலக்கவுக்கு விளையாடும் 11 அணியில் இடம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த திங்களன்று இலங்கை வந்த சிம்பாப்வே அணியின் தலைவராக கிரேக் எர்வின் செயற்படுகிறார். இவர்கள் கடந்த 14ம் திகதி கண்டியில் தமது பயிற்சிகளை ஆரம்பித்தனர். உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் சுற்றுக்காக நடைபெறும் இத்தொடரில் பங்குகொள்ளும் சிம்பாப்வே அணி 4 வருடங்களுககுப் பின் இலங்கை மண்ணில் விளையாடவுள்ளது. அவ்வணி கடைசியாக 2017ம் ஆண்டு இலங்கைக்கு சுற்றுப் பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட அத்தொடரை 3-2 என்ற வகையில் கைப்பற்றி வரலாறு படைத்தது.

சுமார் 40 வருட கால வரலாற்றைக்கொண்ட இலங்கை-சிம்பாப்வே ஒருநாள் போட்டி வரலாற்றில் இதுவரை 57 போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இதில் 44 போட்டிகளில் இலங்கை அணியும், 11 போட்டிகளில் சிம்பாப்வே அணியும் வெற்றிபெற்றுள்ளன. 2 போட்டிகள் கைவடப்பட்டுள்ளன. ஒரு அணி பெற்ற கூடிய ஓட்டமாக 2011ம் ஆண்டு பல்லேகல மைதானத்தில் இலங்கை அணி பெற்ற 372 ஓட்டங்களே பதிவாகியுள்ளது. குறைந்த ஓட்டங்களாக 2004ம் ஆண்டு கொழும்பு எஸ். எஸ். சி. மைதானத்தில் சிம்பாப்வே அணி பெற்ற 35 ஓட்டங்களே பதிவாகியுள்ளது. இதுவரை நடைபெற்ற போட்டிகளில் ஒரு வீரர் பெற்ற கூடிய மொத்த ஓட்டங்களாக சிம்பாப்வே அணி வீரர் அன்றூ பிளவர் 28 போட்டிகளில் பெற்ற 919 ஓட்டங்ளே பதிவாகியுள்ளது. கூடிய மொத்த விக்கெட்கள் சாய்த்தோரில் இலங்கை அணியின் சுழற்பந்துவிச்சாளர் முத்தையா முரளிதரன் 31 போட்டிகளில் 59 விக்கெட்டுகளை வீழ்த்தி முதலிடத்திலுள்ளார்.

தனிநபர் கூடிய ஓட்டங்களாக 2011ம் ஆண்டு பல்லேகல மைதானத்தில் திலக்கரத்ன டில்ஷான் பெற்ற 144 ஓட்டங்களே பதிவாகியுள்ளது. ஒரு போட்டியில் சிறந்த பந்து வீச்சாக 2001ம் ஆண்டு சிம்பாப்வே ஹராரே மைதானத்தில் சமிந்த வாஸ் 19 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்கள் கைப்பற்றியதே பதிவாகியுள்ளது. ஒரு தொடரில் அதிக ஓட்டங்களாக தனுஷ்க குணதிலக்க 2017ம் ஆண்டு 5 போட்டிகளில் 323 ஓட்டங்கள் பதிவாகியுள்ளது.

இவ்வருட இறுதியில் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ரி20 உலகக் கிண்ணத்துக்கான ஆயத்தங்களை செய்யும் வகையில் பல அணிகளும் ரி/20 தொடர்களும், சர்வதேச டெஸ்ட் உலகக் கிண்ணத் தொடர் போட்டிகளும் நடைபெற்றுவருவதுடன் 2023ம் ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ள சர்வதேச ஒருநாள் உலகக் கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதிபெறும் அணிகள் எவை? தகுதிச் சுற்றுத் தொடரில் பங்குபற்றி சுப்பர் சுற்றுக்குத் தெரிவாகும் அணிகள் எவை என்பதைத் தீர்மானிப்பதற்கான இரு நாடுகளுக்கிடையிலான சர்வதேச ஒருநாள் போட்டித் தொடர்களும் நடைபெற்று வருகின்றன.

கடந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெற்ற நெதர்லாந்து-தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் தொடருக்குப் பின் இம்மாதம் முதல் பல நாடுகள் பங்குகொள்ளும் ஒரு நாள் போட்டித் தொடர்கள் உலகக் கிண்ணத் தொடருக்கு தெரிவு செய்யப்படுவதற்கான போட்டிகளாகவே நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இன்று ஆரம்பமாகும் இலங்கை-சிம்பாப்வே அணிகளுக்குடையிலான தொடரும் உலகக்கிண்ணத்துக்கான தெரிவு போட்டியில் முன்னிலை பெறுவதற்கான முக்கியமான ஒரு தொடராக அமைந்துள்ளது.

அடுத்த வருட இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கு 8 அணிகள் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவதற்காக 13 அணிகள் போட்டி போடுகின்றன. புள்ளிப்பட்டியலில் முதல் 8 இடங்களில் வரும் அணிகள் நேரடியாகத் தெரிவாவதுடன் ஏனைய நான்கு அணிகளைத் தெரிவு செய்வதற்காக 2023ம் ஆண்டு நடுப் பகுதியில் சிம்பாப்வேயில் நடைபெறும் தகுதிச் சுற்றில் பங்குகொள்ள வேண்டிய நிலை ஏற்படும். போட்டியை நடாத்தும் நாடு என்ற வகையில் இந்திய அணி ஏற்கனவே தெரிவாகியுள்ளது. தற்போது புள்ளிப்பட்டியலில் 42 புள்ளிகளுடன் 6வது இடத்திலிருக்கும் இலங்கை அணிக்கு இவ்வருடத்தில் இன்னும் மூன்று போட்டித் தொடர்களில் ஒன்பது போட்டிகள் உள்ளன.

இப்புள்ளிப்பட்டியலின் பிரகாரம் இதுவரை அதிக போட்டிகளில் விளையாட்டியுள்ள அணிகளில் இங்கிலாந்து, அயர்லாந்து, இலங்கை அணிகள் முன்னிலை பெறுகின்றன. இவ்வணிகள் 15 போட்டிகளில் விளையாடியுள்ளதுடன் இதில் இங்கிலாந்து அணி 09 வெற்றிகளைப் பெற்று முதலிடத்துள்ளது. அத்துடன் பங்களாதேஷ் அணியும் இதுவரை 12 போட்டிகளில் விளையாடி 8 வெற்றிகளுடன் இரண்டாவது இடத்திலுள்ளது. எனவே இவ்விரண்டு அணிகளும் இறுதி 8 அணிகளுக்குள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவுள்ளன.

6வது இடத்திலுள்ள இலங்கை அணிக்குப் பின்னாலுள்ள பாகிஸ்தான், மேற்கிந்தித்தீவுகள், நியூலாந்து, தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான் போன்ற அணிகள் இலங்கையை முந்திச் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. எனவே இலங்கை மீத முள்ள 9 போட்டிகளின் முடிவுகளிலேயே அவ் அணியின் உலகக் கிண்ணத்துக்கான நேரடி வாய்ப்புத் தங்கியுள்ளது.

கடந்த வருடத்தில நடைபெற்ற போட்டித் தொடர்களில் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக 0-3, பங்களாதேஷுக்கு எதிராக 1-2, இங்கிலாந்துக்கு எதிராக 0-2, இந்தியாவுக்கு எதிராக 1-2 என்ற கணக்கில் தோல்வியுற்றதுடன் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் மாத்திரமே 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. இதுவரை 15 போட்டிகளில் 04 வெற்றிகளை மாத்திரமே பெற்றுள்ளது.

இலங்கை அணி இவ்வருடத்தில் மூன்று தொடர்களில் மோதவுள்ளன. அதில் முதலாவது தொடர் இன்று சிம்பாப்வேயுடனான மூன்று போட்டிகள் கொண்ட தொடரும், அடுத்து ஆப்கானிஸ்தானுடனான 3 போட்டிகள் கொண்ட தொடரும் இலங்கையில் நடைபெறவுள்ளதால் அத்தொடர்கள் இலங்கை அணிக்கு சாதகமாகவே உள்ளது. ஆனால் பலம் வாய்ந்த நியூசிலாந்து அணியுடனான 3 போட்டிகள் கொண்ட தொடர் இலங்கைக்கு மிகவும் கடினமான தொடராகும். அத்தொடர் நியூசிலாந்தில் நடைபெறவுள்ளமை மேலும் சிக்கலானது என்றே கருதப்படுகிறது.

ஒருநாள் தொடர் விதிகளுக்கு அமைய ஒரு போட்டியை வென்றால் 10 புள்ளிகளும், முடிவுகள் கிடைக்காத போட்டிக்கு 5 புள்ளகளும் வழங்கப்படும். எனவே இலங்கை அணிக்கு மூன்று தொடர்களிலும் 9 போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றி பெற்றால் 90 புள்ளிகள் கிடைக்க வாய்ப்புள்ளது. தற்போதுள்ள 42 புள்ளிகளுடன் மொத்தமாக 132 புள்ளிகள் கிடைக்கும்.

இதேபோல் இவ்வருட ஆரம்பம் முதல் ஏனைய நாட்டு அணிகளும் பல தொடர்கள் நடைபெறவுள்ளதால் இப்புள்ளிப் பட்டியலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆப்கானிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகள் இதுவரை தலா மூன்று போட்டிகளிலேயே விளையாடி அம்மூன்றையும் வெற்றி பெற்றுள்ளது. எனவே அவ்வனிகளுக்கு இன்னும் ஐந்தாறு தொடர்கள் மீதமுள்ளதால் சுப்பர் சுற்றிக்குத் தெரிவாகும் அணிகளுக்கிடையில் கடும் போட்டி நிலவுகின்றது.

புள்ளிப் பட்டியல்

அணி	போட்டி	வெற்றி	தோல்வி	மு.இ	புள்ளி
இங்கிலாந்து	15	09	05	01	95
பங்களாதேஷ்	12	08	04	00	80
அவுஸ்திரேலியா	09	06	03	00	60
அயர்லாந்து	15	04	09	02	50
இந்தியா	09	05	04	00	49
இலங்கை	15	04	10	01	42
பாகிஸ்தான்	09	04	05	00	40
மே.இ. தீவுகள்	09	04	05	00	40
தென்னாபிரிக்கா	10	03	05	02	39
நியூசிலாந்து	03	03	00	00	30
ஆப்கானிஸ்தான்	03	03	00	00	30
நெதர்லாந்து	04	02	01	01	25
சிம்பாப்வே	09	02	06	01	25

எம்.எஸ்.எம்.ஹில்மி...✍

அதிவேக வீதி சைக்கிள் ஓட்டப் போட்டி:

ஒரே நேரத்தில் போட்டியை நிறைவு செய்த 10 போட்டியாளர்கள்

மீரிகம முதல் குருநாகல் வரையிலான மத்திய அதிவேகப் பாதையின் இரண்டாம் கட்டம் திறப்பு விழாவுடன், விளையாட்டு அமைச்சு மற்றும் சைக்கிள் ஓட்ட சம்மேளனத்தின் பூரண மேற்பார்வையில் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து எலைட் ஆண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டியின் முதல் பத்து போட்டியாளர்கள் தொலைக்காட்சி ரீப்ளே சோதனைக்குப் பிறகு வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.அதன்படி, எலைட் ஆண்கள் பந்தயத்தை 1: 51.35 மணி நேரத்தில் நிறைவு செய்த 10 வீரர்களில், அதிவேக நெடுஞ்சாலை சைக்கிள் ஓட்டுதலின் வெற்றியாளராக இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த நிரன் பசிந்து தெரிவு செய்யப்பட்டார். அதேநேரம், இலங்கை விமானப்படையைச் சேர்ந்த சஞ்சு தீமந்த இரண்டாவதாகவும், குருநாகல் ஃபன் பீ விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சாமிக்க சந்துன் குமார மூன்றாவதாகவும் தெரிவாகினர்.அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம நுழைவாயிலில் ஆரம்பமான இப்போட்டியானது குருநாகல் வரை

சென்று மீரிகம வரை 80 கிலோமீற்றர் தூரம் சென்றது. எலைட் ஆண்கள் சைக்கிள் ஓட்டுதல் பந்தயத்தின் சராசரி வேகம் மணிக்கு 43.11 கிமீ ஆகும், அதே தூரத்தில் எலைட் பெண்கள் பந்தயமானது மணிக்கு சாரசரியாக 30.50 கிமீ ஆகும்.இலங்கை இராணுவத்தின் நிமேஷா தில்ருக்ஷி மற்றும் விமானப்படையின் இமல்கா சமோதினி ஆகியோர் முறையே 2:37.34 நிமிடங்களில் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களை பெற்றனர். பெண்களுக்கான போட்டியில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மதுமாலி பெர்னாண்டோ 2: 46.39 நிமிடங்களை கடந்து மூன்றாவது இடத்தைப் பெற்றார்.போட்டியாளர்கள் ஆரம்பம் முதலே அணியில் இருந்து விடுபட்டு, போக்குவரத்து நெரிசல்கள் இன்றி அதிகபட்ச வேகத்தில் போட்டியிட்டது இதுவே முதல் முறையாகும், இலங்கையில் நெடுஞ்சாலையில் சைக்கிள் ஓட்ட நிகழ்வு நடத்தப்படுவது இதுவே முதல் முறை.இலங்கை சைக்கிள் ஓட்ட சம்மேளனத்தினால் உரிமம் பெற்ற அனைத்து பந்தயப் பிரிவுகளின் போட்டியாளர்களும் 5 நாட்களுக்குள் இந்த நிகழ்வுகளில் பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டது.

சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு பொதுவாக உதவக்கூடிய இரண்டு வாகனங்கள் தொடக்கத்திலிருந்து இறுதி வரை பயணித்தன, வேறு எந்த வாகனமும் பந்தயத்துடன் பயணிக்க வாய்ப்பில்லை.இலங்கையின் முன்னணி சைக்கிள் ஓட்டுநர்கள் உட்பட 270 போட்டியாளர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், ஒவ்வொரு போட்டியும் ஆரம்பம் முதலே அனல் பறந்தது. முதல் 10 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு முதலிடம் பெறுவோருக்கு 100,000 ரூபாயும், இரண்டாமிடத்திற்கு 75,000 ரூபாயும், பத்தாம் இடம் வரை மூன்றாம் இடத்துக்கு 50,000 ரூபாயும் பரிசாக வழங்கப்பட்டன.

வெற்றி பெற்றவர்கள் விபரம்

எலைட் ஆண்கள் சைக்கிள் ஓட்டம் (80 கிமீ):

1. நிரன் பசிந்து இராணுவம், 2. சஞ்சு தீமந்த விமானப்படை, 3. சாமிக சதுன் குமார ஃபன் பீ ஸ்போர்ட்ஸ் கொம்., 4. சாமோத் டி சில்வா துறைமுகம், 5. மதுபா அகேஸ் இராணுவம், 6. ஜீவன் ஜயசிங்க விமானப்படை இராணுவம் , 7. ரந்திக ரணசிங்க இராணுவம், 8. சுபுன் பிரதீப் குமார இராணுவம், 9. அவிஷ்க மடோன்சா இராணுவம், 10. பசிது லக்ஷான் கடற்படை.

(இந்த 10 வீரர்கள் பந்தயத்தை 1:51:35 இல் முடித்தனர்.)

எலைட் பெண்கள் சைக்கிள் ஓட்டம் (80 கிமீ):

1. நிமேஷா தில்ருக்ஷி இராணுவம் (2:37:34 மணி), 2. இமல்கா சாமோதினி விமானப்படை (2:37. 34 மணி), 3. மதுமாலி பெர்னாண்டோ இராணுவம் (2: 46.39 மணி), 4. சுதாரிகா பிரியதர்ஷனி விமானம் படை (2:46.39 மணி), 5. ஷாலிகா தில்ஹானி இராணுவம் (2: 46.39 மணி), 6. அன்னே ஷெனாலி தி பிரண்ட்ஸ் (2: 46.39 மணி), 7. ஆகாஷா சண்டமாலி இராணுவம் (2: 46.41 மணி)), 8 நிலுகா ஷியாமலி சிவில் பாதுகாப்பு (2: 46.41 மணிநேரம்), 9. உதேஷினி குமாரசிங்க இராணுவம் (2: 46.41 மணிநேரம்), 10. எச்எம்டி ஹேரத் இராணுவம் (2:46.41 மணி).

ஜுனியர் சைக்கிள் ஓட்டம் (80 கிமீ):

1. தரங்க பெர்னாண்டோ கோல்டன் ஸ்போர்ட்ஸ் கழகம் (2: 09.01 மணி), 2. எல்.டி. தவிந்த ஃபன் பி ஸ்போர்ட்ஸ் எஸ். (2:09.01), 3. உதிதா ருமேஷ் கதிரானா விளையாட்டு (2:09.01), 4. ருவன் ஸ்ரீ பண்டார ஸ்டான்லி லெபோ ஸ்போர்ட்ஸ் கோ. (2:09.01), 5. சச்சின் உமேஷ் கதிரானா விளையாட்டு (2: 09. 01), 6. சமத் அபிஷேக் இலவச விளையாட்டு (பிற்பகல் 2:09.01), 7 மீமனகே பெரேரா விங் வீல் ஸ்போர்ட்ஸ் கோ. (பிற்பகல் 2:09.01), 8. சங்கீத் பிரியஷாந்த் கட்டான ஃப்ரீடம் ஸ்போர்ட்ஸ் கோ. (2: 14.26 மணி), 9. ஷேக்கிம் ஹவன் ஸ்பீடு அரோ ஸ்போர்ட்ஸ் சி. (2 மணி: 14.26), 10. ஜனக ரவீந்திர வெனுபுர ஸ்பீட் ஸ்போர்ட்ஸ் கழகம். (2:14.26 மணி).

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

மஞ்சரி களஞ்சியம்

தினகரன் வாரமஞ்சரி

வாழ்வாதாரமா சேதாரமா 206

தமிழ்க் கவி பேசுகின்றார்

இயற்கை வகுத்து தந்திருக்கும் வாழ்வியல்

வாழ்க்கைக்கு மூலாதாரமாக இருப்பது வழிபாடுகள்தான். வழிபாடு என்றால் வணங்குதல் என்று அர்த்தமல்ல. பண்பாடு, செயற்பாடு உடன்பாடு என்பதுபோல வழிபாடு என்பதும் வழிவழி வந்த எமது வழக்கங்களைக் குறிக்கிறது.

அது எப்படியோ வணக்கத்தை குறிப்பதாக எம்முள் அர்த்தத்தை கொண்டுவந்து விட்டது. எந்த மதமாயினும் வழிபாடுகளும் சடங்குகளும் அந்தந்த நாடுகளின் காலநிலை சுவாத்தியம், பண்பாடு, பழக்க வழக்கங்களை அண்டியதாகவே உருவாகியோ உருவாக்கப்பட்டோ உள்ளது. பெரிய சித்தர்களாயினும், சிந்தனையாளர்களாயினும் மகான்களாயினும் அந்த நெறிமுறைகளிலிருந்து விலகியிருக்கவில்லை.

காய், கனி, கிழங்குகளை உணவாகவும் காலையில் எழுந்து நீராடி உயர்ந்த குன்றுகளிலும் மலைகளிலும் உருவாக்கப்பட்ட கோவில்களில் படியேறி தரித்தும் பூஜை செய்தும் வந்தபோது அவர்களது உடலுக்கு தேவையான தேகப்பயிற்சி. ஆன்மசக்தி இரண்டையும் ஏற்றிக் கொண்டார்கள். அந்த அடிப்படையில்தான் மாடிவீடு கட்டியவர்களும் அன்றாடம் படியேறி இறங்கும்போது அவர்களுக்கு அது தேகப் பயிற்சியாகிறது. ஆனால் இப்போது நடப்பதென்ன? இயற்கையான காற்றை அது தெருவெங்கும் வீசினாலும் நாம் அவற்றை தவிர்த்து கதவுகளைப் பூட்டி மூடிவிட்டு குளிர்மெசினால் இல்லங்களையும், வாகனங்களையும் சில்லென்று வைத்துக் கொள்கிறோம். ஒரு நீண்ட பயணத்தில் அந்த பிரதேசங்களின் தோப்புகள், வயல் வெளிகள், ஆற்றுப்படுகைகள் ஊடாக வரும் அபரிமிதமான ஆரோக்கியம் தரவல்ல இயற்கைக் காற்று அவர்களுக்கு கிடைக்காமல் போகிறது. நாம் விரல் நுனிகளைப் பார்ப்போம்.

கைகுலுக்கிக் கொள்வதுபோல, கைகூப்பிக் கொள்வதும் ஒரு வைத்தியமுறைதான். இவைபற்றி கண்ணதாசன் தன் நூல்களில் மிக அழகான விளக்கங்களை தந்திருக்கிறார். 'போகம் யோகம் ரோகம்' என்றொரு புத்தகம் ஆயிரத்து தொளாயிரத்து எழுபதுகளின் நடுப்பகுதியில் வந்தது. ஒரு சித்தர் எழுதிய புத்தகம். இவை இரண்டும் இந்துமத தத்துவங்களை விஞ்ஞான ரீதியாக விளக்கியிருந்தன. இவற்றைப் படித்துவிட்டு அவற்றை பரீட்சை செய்தும் பார்த்திருக்கிறேன். அதில் பல விடயங்கள் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருந்தன.

அக்குபஞ்சர் எல்லோரும் அறிந்ததுதான். அக்கியூ பிறசர் என்றொரு வைத்தியமுறை பற்றிய ஒரு பெண் வைத்தியர் எழுதிய நூல் எனக்குக் கிடைத்த அடுத்த பொக்கிஷம் எனலாம். அதில் வழிபாடு செய்வதாக நினைத்துக் கொண்டு நாம் கைகூப்பி வணங்குவதில் உள்ள தாத்பரியம் என்ன எனக் குறிக்கப்பட்டிருந்தது. ஒருதடவை வாரியார் சொன்னார். கைகளைக் கூப்பும்போது நமது கைகளில் எதுவும் இல்லை எல்லாம் நீதான் என அர்த்தப்படுத்துகிறோம் என்று. இறைவனின் முன் கைகளை விரித்துக்காட்டி அதைக் கூப்புகிறோம் என்று. கைகளுக்குள் எதையும் வைத்திருக்கக் கூடாது என்பதுமுறை.. இன்று யார் கும்பிட்டாலும் கைகளுக்குள் செல்போனை வைத்திருப்பது வழக்கம். கைகளின் இடையே போனை வைத்திருப்பதை தவிர்க்க முடியவில்லை.

எமது பத்துவிரல்களின் நுனிகளையும் ஒன்றோடொன்று இணைத்து நுனிவிரல்களுக்கு அழுத்தம் கொடுக்கும் போது நமது மன அழுத்தம் குறையும். சுமார் ஐந்து நிமிடம் அழுத்தம் கொடுத்தாக வேண்டும்.

கைகளோ கால்களோ அதன் விரல்களும் விரல் நுனிகளும் அபாரசக்தியுடன் இருப்பதை எம்மில் பலர் அறிவதில்லை. யோகியரும் ஞானியரும் கைக்கொள்ளும் சின் முத்திரை அபாரசக்தியுடையது.

இந்து, கிறிஸ்தவ, மக்கள் தமது வணக்க நிகழ்வில் கையில் வைத்து உருட்டும் செபமாலை, உருத்திராட்சமாலை என்பவற்றை தமது பெரு விரலுக்கும் ஆட்காட்டி விரலுக்கும்

இடையில் வைத்து உருட்டும்போது அந்த இரு விரல்களின் உராய்வு பாரிய மனவலிமையை கொடுக்கும் என்பதை அந்த நூலில் நான் படித்தேன். இன்னும் இந்த விரல்களில் நாம் செய்யும் பலவித அபிநயங்கள் அதாவது முத்திரைகள் பலவித நோய்களைத் தீர்க்கும் மருந்தாகிறது என்பதை, 'தேகம் சிறக்க யோகம்' என்ற நூலில் மிக அழகாக விளக்குகிறார் ஒரு அறிஞர். இது இப்போது ஒரு தொலைக்காட்சி அலைவரிசையிலும் பார்க்கக் கூடியதாக உள்ளது. பயங்கரமான மூட்டுவலியில் நான் நடக்கமுடியாமல் கஸ்டப்பட்டபோது ஒரு முத்திரையை நாற்பத்தெட்டு நாட்கள் செய்து பூரண குணமடைந்தேன் என்றால் நம்பமாட்டீர்கள். வாழ்க்கைமுறைகளை எமக்கு இயற்கை வகுத்தே தந்திருக்கிறது. நாம் அதை எப்போது மீற ஆரம்பிக்கிறோமோ அப்போது அது நமக்கு நோயாக மாறுகிறது.

மனிதன் புதிதாக எதையும் உருவாக்கவில்லை. ஏற்கனவே உலகத்தில் உள்ளவைதான். அதை அவன் தேடிக் கண்டுபிடிக்கிறான் அவ்வளவுதான். நெருப்பைக் கண்டுபிடித்ததும், மின் சாரத்தை கண்டுபிடித்ததும் உலகின் கண்டுபிடிப்புகளில் முதன்மையானது என கூறப்பட்டாலும் சக்கரமே மிக பயன்தரும் கண்டுபிடிப்பாக கருதப்படுகிறது. பின்னுள்ள கண்டுபிடிப்புகளுக்கும் சக்கரம் இல்லாமல் வெறும் அணுத்துகள்களின் உதவியுடன் கருவிகள் இயங்குகின்றன. தொலைபேசி, கைக்கடிகாரம் எல்லாம் நவீன வளர்ச்சியை கண்டுவிட்டன. முற்காலத்தில் வானொலிப் பெட்டியின் உள்ளே வைத்திசாலையில் அடுக்கி வைத்திருப்பது போன்ற கண்ணாடி சாடிகள் வரிசையாக நிற்கும். அதைவால்வ் என்பர். இப்போது வைத்தியசாலையிலும் அப்படி பெரிய சாடிகளோ தண்ணி மருந்தோ கிடையாது. வானொலிப் பெட்டிக்குள்ளும் வேறு விஷயங்கள் வந்துவிட்டன. இவற்றையெல்லாம் போன நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞர்கள் சொல்லாமல் இல்லை.

காசியிலே வரும் புலவனின் உரையை காஞ்சியிலே கேட்க ஒரு கருவி வேண்டும் என்ற பாரதியின் கனவு செல்போனாக வந்ததுபோல மகாபாரதம் ராமாயணம் போன்ற காப்பியங்களில் வந்த அஸ்திரங்கள் ஏவுகணைகளாக வந்ததுபோலும். இப்போது புதிதாக மண்ணில் உலவும் மர்மங்கள் என நாம் நினைத்ததெல்லாம் தொலைக்காட்சி, வானொலி, கைபேசிகள் இன்னும் ஏராளமான வடிவங்களில் வந்துகொண்டிருப்பது போலவும் விரல்நுனிகளில் வரும் விந்தையை உலகறியும். இப்போதும் பெரியவர்கள் பேசும்போது சொல்வார்களே அவனிடம் எதைக் கேட்டாலும் விரல் நுனியில் பதில் வைத்திருப்பான் என்று! ஏன் மூக்குநுனி என்று சொல்லக்கூடாது? விரல் நுனிகளின் சக்தி மர்மம் துலங்கிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக ஆன்மீக சக்கரம் மூலாதாரத்தை விஞ்சி கால் கட்டைவிரலில் தான் தொடங்குகிறது என்பது ஞானியர் அறிந்த உண்மை. அதிலிருந்துதான் சைவ, பௌத்த, சமண மதங்களெல்லாம் நாகவழிபாட்டை மேற்கொண்டன என்பதும் துலங்காத பெரும் ரகசியம். நாகம் மனித உடலின் ஒரு குறியீடு மட்டுமே அதை வழிபடும் பொருளாக கொள்வதில் ஆன்மீக காரணம் எதுவுமே இல்லை. அதுவும் விரல் நுனியின் சக்திதான். கடஉள்ளே இருப்பது கடவுள் என்பதும், கோயிலாவதே தடாகுளங்களாவதே தடாகோவிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே என்பதும் சித்தர் வாக்கு.

திகன வனத்து சின்னப்பர் ஆலயத்தின் 125 ஆம் ஆண்டு பெருவிழா

திகன, புனித வனத்து சின்னப்பர் ஆலயத்தின் 125 ஆம் ஆண்டு பெருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று (09) ஆலய பங்குத்தந்தை கிறிஸ்டி போல் தலைமையில் கொண்டாடப்பட்டது. இப்பெருவிழாவுக்கான திருப்பலி அதி வணக்கத்திற்குரிய ஆயர் வியானி பெர்னாண்டோ ஆண்டகையினால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. அன்று புனித வனத்து சின்னப்பரின் திருச்சுரூப பவனி ஆலய வீதியில் இடம்பெற்றது. இவ்விழாவில் ஆண்டகை வியானி பெர்ணன்டோ மற்றும் பௌத்த குரு உட்பட இந்து, இஸ்லாம் என பெருமளவிலானோர் பங்கேற்றியிருந்தனர். அத்துடன் கண்டி மறை மாவட்ட பங்கு தந்தைகள் உள்ளிட்ட அனைவரும் ஆண்டகை வியானி பெர்ணன்டோவின் ஆசியை பெற்றுக்கொண்டனர்.

ஆ. ரமேஸ் ...✍

சலூன் கடை

பிரதான வீதியிலிருந்து பிரியும் இடத்தில் வலது கைப்பக்கம் கிழக்கைப் பார்த்த வீடு. தெற்குப் புற வாசல் இருந்தும்கூட ஏதோ அங்கு சா மூலை அடிப்பதாகப் பேசிக் கொள்வார்கள். அந்த வழியால் தொடர்ந்து பயணித்தால் நோய் நொம்பலம் தொற்றிவிடும். ஆதலால் அதைத் திறக்க வேண்டாமென்று எங்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

மேற்கு, வடக்கு முறையே பரந்து, தென்னந்தோப்பும் பள்ளிக் கூடமுமாக வகிடெடுத்ததுபோல் தெரிந்தது. அந்தத் தாழ்நிலத்தின் பாதையின் ஓரத்தில் ஒட்டியதாக அங்கொரு கொழுந்தன் சலூன் கடை இருந்தது.

சுற்றிலும் திறந்த வெளி. அங்கு இறைக்கும் வெயிலுக்குப் பெண்கள் தலையில் வேடு கட்டிக் கொண்டு நெல் அவித்துக் காயப் போடுவார்கள். அடிக்கடி இந்தத் கடைசியிலிருந்து அந்தக் கடைசிவரை கைகளால் திலாவிக் கொண்டிருப்பது சலூன் கடையிலிருந்து பார்த்தால் செப்பமாகத் தெரியும்.

அந்தக் குடியிருப்பிலும் தெருவிலும் தொழிலாளர்கள்தான் அதிகம். கிராமப்பெருக்கத்தின் காரணமாக நாவிதர் வண்ணார்களின் தேவையும் அதிகரித்திருந்தது. மரம் தறிப்போர், தெங்கு பறிப்போர் எந்நேரமும் கூவித் திரிவர்.

கூடுதலாகத் தென்னை, மா மரங்களின் சிலுசிலுப்பும் அசைவும் மனத்தைக் கிறங்க வைக்கும் ஒவ்வொரு வீட்டுக்குமிடையில் ஒரு இருக்கை போன்ற சமமான கல் "நானும் இருக்கேன்" என்று காட்டிக் கொண்டிருக்கும்.

அதில்தான் நடக்க இயலாத முதியவர்களை அமரச் செய்து அவர்களுக்கு முடி சிரைப்பார்கள்.

சிகையை அலங்காரமாக வெட்டி வில்லுக் கரத்தையில் பயணிக்கும் ஒருவர் எனது கிராமத்திலும் வாழ்ந்திருக்கிறார். அவரை மக்கள் அன்றைய நாளில் சிலுப்பாக்காரர் என்று அழைத்திருக்கிறார்கள். காக்கி அரைக்கால் சட்டையில் எண்ணெய் முழுக்காட்டியதுபோல் வேர்வை சொர சொரவென்று ஊற்ற, முகம் சுண்டி வேகமாய் சலூனுக்குள் எட்டு வைக்கும் வயல்கார மாமா தலைப் பாகையை அவிழ்த்து கொழுந்தன் கையில் கொடுக்கும்போது வாங்கில் முடி வெட்டக் காத்திருக்கும் வதக்குப் போடி பெரிய மயிராண்டி என்று மெல்லி முணுமுணுப்பார்.

குடுமி வைத்துக் கொண்டு முன் மண்டையைச் சிரைத்துக் கொள்ளுதல் அந்நாளில் புழக்கத்தில் இருந்தது.

ஆனால் மீசையை மட்டும் மழிக்க வேண்டுமாம். அப்படி மீசை வைத்துக் கொள்ள விரும்பினால் வரி கட்டும் வழக்கம் பேணப்பட்டதாம். மீசையை அடகு வைத்துப் பணம் பெறுபவர்களும் வாழ்ந்திருக்கிறார்கள்.

இந்த மீசை அதிகாரக் குறியாக மாறிப் பல்வேறு பரிணாமங்களைக் கடந்து செல்கிறது. அருவா மீசை, கொடுவா மீசை, கொடுக்கு மீசை, துள்ளு மீசை, துடி மீசை, கடா மீசை, கீரி மீசை, முண்டு மீசை, பூச்சி மீசை, மொசுக்கொட்டான் மீசை, குண்டு மீசை, ஹிட்லர் மீசை என்பதான வடிவங்களில் ஒதுக்கப்பட்ட இந்த மீசைகள் பார்ப்போரை அச்சமூட்டுவதாக இருந்தன. அரும்பு, ஒத்த மீசை, குறும்பு, பக்கடா, அய்யனார் மீசை, செண்டு, குச்சி எனப் பெருகிப் பெயர் போன உதட்டின் மேல் மீசைகள் கிளுகிளுப்பூட்டுவதாகவும் இலகுவாகப் பிடித்து பிய்த்துப் பிடுங்கி எறியும் பூனை ரோமங்களாகவும் சிலருக்கு வளர்கின்றன.

இவைபோல இன்னும் நிலவில் கிடக்கின்ற சிறு கறுப்பு அழகு சேர்ப்பது மாதிரி, சிலர் தலை முடிகளும் வளர்ந்துபோய் தொட்டவன் பழியில் நிற்கும். கோபம் கொண்ட கடாயின் வளைந்த கொம்பு போன்ற கேசம், தாறு மாறாய் தலையில் அஞ்சாறு மயிர், திருகுமுடி இவை பதின் பருவ உடலுக்கு நகைச்சுவை உணர்வைப் பறை சாற்றும் மெல்லிய அடையாளங்களாகும்.

சிலருக்கு இது அடர்த்தியாகி ஆண்மைக்குரிய மிடுக்கைக் கொடுக்கும். தசை இறுக்கமாகி இளமைப் பொலிவு கூடும். குரலும் மாறி விடும்.

வீடுகளுக்குச் சென்றும் ஆற்றோரங்களில் இருந்தும் முடி களைந்த முறை மாறிப் பின்னர் சலூன் கடைகள் உருவாக்கம் பெற்றன. மழிக்கும் செயலும் கத்தரிக்கும் தொழிலும் மயிர் என்ற மையத்திலிருந்துதான் தொடங்குகிறது.

அழகிய முடியுடையவளைக் குண்டல கேசி, நீல கேசி என்கின்றோம்.

கருங்கூந்தலை வண்டார் குழலென்றும், நீண்ட நெடிய சுருண்ட முடியினைக் கூந்தல், கதுப்பு எனவும் பல பதிலிப் பெயர்களுடன் அழைக்கின்றோம். உரோமம் என்பது வட மொழிச் சொல்லாகவும் இவைகளுள் 'மயிர்' என்ற பதம் மட்டுமே சுத்தமான தமிழாகவும் விரிந்துள்ளது. இதற்கு மேலும் பல திருமுடிப் பெயர்கள் இருக்கலாம்.

மயிர் ஒரு கௌரவம் என ஒருமுகப்படுத்தப்பட்டிருக்கும் சமூகத்தின் மத்தியில் சமணர்களும் பௌத்தர்களும் நாடிமுடி, தலை முடியினை மழிப்பதால் கெட்ட ஆவிகள் வெளியேறுகின்றன என்று நம்பினர்.

வெண்மையான ஆடை அணிந்து உச்சியில் குடுமிவைத்து இதர பகுதிகளைச் சிரைத்து வெறும் தலையில் எண்ணெய் தடவி எங்கள் வீட்டுக்கு வெள்ளை வெளுக்க மாராப்புத் தூக்கிவரும் பெரியண்ணன் அன்று முதல் என் நினைவில் பதிந்திருக்கிறார்.

மற்றவர்களிடமிருந்து தன்னைத் தனித்துக் காட்டவே முஸ்லிம்கள் தாடியினை வளர்த்துக் கொண்டு மீசையினைக் கத்தரித்துக் கொள்வதை, மீசையை ஒட்டக் கத்தரியுங்கள். (மஜூசி நெருப்பு வணங்கிகள்போல் அல்லாது) தாடியை வளர விடுங்கள் என்று அறிவிப்பவர் அபுஹுரைரா (ரலி).

"ஒரு மயிரும் புடுங்க ஏலாது", "நீ வழிச்சது போதும்", "மயிரப் புடுங்கின கதை", "என்ன மயிருக்கு", "அந்த மயிரெல்லாம் எனக்குத் தெரியும்", "சிரைக்கப் போக வேண்டியது தான்", "ஆசை நரைக்கல்ல" இந்த மான்மியத் தொடர்களை எங்கள் கிராமியச் சண்டை, வாய்த் தர்க்கங்களில் கேட்டிருக்கிறேன்.

அன்றைய தர்மப் பள்ளிகளில் முடி வழிப்புச் சட்டம் இருந்தது. பருவமடைந்த மாணவர்கள் மீசையினை வைத்துக் கொள்ளல் கூடாது எனும் நிலையில் முடி அதிகம் வைத்திருந்தவர்களை அழைத்துவந்து எண்ணெய் பூசி வெயிலில் நிற்க வைப்பதோடு நாவிதர்கள் சுற்றிநின்று வெட்டுவார்கள்.

இடையிடையே வாத்திமார் பிரம்பினால் பின் புறத்தில் இழுத்துவிட, வலியில் நெளியும் கொண்டைக் குபேரர்கள் தலைகள் பளபளப்பாய் இலங்கும்.

மரபுவழிப் பரம்பரையில் மருத்துவர்களான நாவிதர்கள் பல பிரிவினர்களாக அம்பட்டர், பண்டிதர், நாசுவர், பரியாரி, பண்டுவர், குடிமகன் என அறியப்பட்டனர்.

எங்கள் அயல் கிராமம் ஒன்றிற்கு நாவிதன் வெளி என்னும் பெயர் இருக்கிறது.

திருமணத்துக்கு முந்திய நாள் மணமகன் மயிர் வெட்டி முகச் சவரம் செய்ய அவ்வூருக்குப் போய் வருவது வழக்கம். இதனை அன்றைய நாளில் மாப்பிள்ளைச் சவரம் என்று அழைத்தனர்.

அந்த உயரமான கதிரையில் அமர்வதென்றால் விருப்பம்தான். கழுத்துவரை வெள்ளைத் துணியால் போர்த்தி நிலைக் கண்ணாடிமுன் இருத்தப்படுவேன். தலையில் ஆங்காங்கே ஊர்ந்து ஊர்ந்து பயணிக்கும் சீப்பும் கத்தரிக்கோலும் எந்த இம்சையையும் தருவதில்லை. இடை நடுவில் நுழையும் நட்டுவக்காலி கை மெஷின் அதன் மேல்தான் எனக்குக் கோபம். புடுப்புடுவென்று தலை முடியை நோண்டி இடுங்கி விடும்போது சுள் என்ற நோவுக்கு அதிகம் அஞ்சுவேன்.

சவரக்கத்தி பிடரி மயிரை வழித்துச் சீர்படுத்தும்போது, கூச்சம் உடலெங்கும் பரவும்.

உள்நாட்டு பொருளாதாரத்துக்கு றைனோவின் பங்களிப்பு: தெற்காசியாவுக்கு 1,000 கொள்கலன் கூரைத்தகடுகள் ஏற்றுமதி

கூரைத்தகடுகள் உற்பத்தியில் முன்னோடியாகத் திகழும் றைனோ, தெற்காசிய பிராந்திய நாடுகளுக்கு முதல் 1000 கொள்கலன் கூரைத்தகடுகளை ஏற்றுமதி செய்வதை பூர்த்திசெய்துள்ளது. இதைக் குறிக்கும் விசேட நிகழ்வு நிதி அமைச்சர் பசில்ராஜபக்சவின் பங்கேற்புடன் கொழும்பில் கடந்த டிசம்பர் 14 ஆம் திகதியன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் றைனோ ரூ.்.பிங் புரொடக்ட்ஸ் லிமிடெட் முகாமைத்துவ பணிப்பாளர் ஈ.ஜே.ஞானம், நிறுவனத்தின் சிரேஷ்ட நிர்வாக அங்கத்தவர்கள் மற்றும் விருந்தினர்களும் கலந்துகொண்டனர்.

அண்மையில் இடம்பெற்ற 24ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் 2020/21 இல் பெறுமதி சேர்க்கப்பட்ட தாதுப்பொருட்கள் பிரிவில் சிறந்த ஏற்றுமதியாளராக றைனோ ரூ.்.பிங் புரொடக்ட்ஸ் லிமிடெட் தெரிவுசெய்யப்பட்டிருந்தது. அதனூடாக தேசத்தின் பொருளாதாரத்துக்கு பங்களிப்பு வழங்கும் பிரதான நிறுவனம் எனும் தனது நிலையை மேலும் உறுதிசெய்துள்ளது.

றைனோ ரூ.்.பிங் புரொடக்ட்ஸ் லிமிடெட் முகாமைத்துவ பணிப்பாளர் ஈ.ஜே. ஞானம் இந்நிகழ்வில் உரையாற்றுகையில், "நுகர்வோருக்கு பெறுமதி சேர்க்கும் உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பங்களில் தொடர்ச்சியாக முதலீடுகள் மற்றும் சுய மேம்படுத்தல்களை மேற்கொண்டிருந்தமையினூடாக, சவால்கள் நிறைந்த இக்காலப்பகுதியில் இந்த மைல்கல்லை எய்துவதற்கு றைனோவினால் முடிந்திருந்தது. 100% இலங்கையின் நிறுவனம் எனும் வகையில், பல தசாப்தகாலமாக சிறந்த தரத்திலமைந்த தயாரிப்புகளை சந்தையில் விநியோகிக்கின்றோம். தரமான கூரைத்தகடுகள் தயாரிப்புகளுக்கான கேள்வியை தோற்றுவித்து, சர்வதேச செயற்பாட்டாளர்களுடன் போட்டியிடக்கூடிய வகையில் எம்மை தந்திரோபாய ரீதியில் மீளமைத்துள்ளோம் என்றார்.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தவிசாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சுரேஷ்டிமெல் இலங்கை முதலீட்டுச்சபை பணிப்பாளர், பசண் வணிகசேகர் இலங்கைக்கான பாகிஸ்தானின் உயிர்ஸ்தானிகர் (இடைக்கால), தன்வீர் அஹமட் அரசாங்க தகவல் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் மிலிந்த ராஜபக்ஷ் வணிகத் திணைக்களத்தின் வணிகப்பிரிவுப் பணிப்பாளர் மற்றும் வணிக ஊக்குவிப்புத் தலைவர் ஜி.எல். ஞானதேவ மற்றும் இலங்கை பாகிஸ்தான் வியாபார சம்மேளனத்தின் தலைவர் சோமசுந்தரம் தெய்வநாயகம் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தவிசாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சுரேஷ்டிமெல், றைனோ ரூ.்.பிங் புரொடக்ட்ஸ் லிமிடெட் பணிப்பாளர் ஜுட்பெர்னான்டோவுக்கு நன்றி தெரிவித்து அடையாளச் சின்னமொன்றை பரிசளித்திருந்தார். பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள் பிரிவில் நிறுவனத்தின் சாதனையை பாராட்டும் வகையில் இது வழங்கப்பட்டிருந்தது.

செலான் வங்கி முன்னெடுக்கும் 'Tikiri Save the Moment' டிஜிட்டல் புகைப்படப் போட்டி

முன்னணி சிறுவர் சேமிப்புக் கணக்கான செலான் டிக்கிரி, 'Tikiri Save the Moment' புகைப்படப் போட்டியை முன்னெடுத்துள்ளது. சிறுவர்கள் மத்தியில் தமது வாழ்க்கையின் சிறந்த தருணங்களை புகைப்படமெடுப்பதை ஊக்குவிக்கும் வகையில் இப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த இருவருடகாலமாக, கொவிட்-19 தொற்றுப்பரவல் காரணமாக மக்களின் நடமாட்டம் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ள நிலையில், பல சிறுவர்களுக்கு புகைப்படக்கலை மிகவும் நேசிக்கப்படும் அம்சமாக மாறியிருந்தது.

அவர்களை கவரும் தருணங்களை புகைப்படம் எடுப்பதனூடாக, அவர்களிடம் காணப்படும் ஆக்கத்திறன் மேம்படுத்தப்பட்டு, பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும். இதனை புரிந்துகொண்டு, செலான் டிக்கிரி, டிக்கிரி கணக்குதாரர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து, முதலாவது டிஜிட்டல் புகைப்பட போட்டியை ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கையில் அதிகளவு நேசிக்கப்படும் சிறுவர் சேமிப்புக் கணக்காக செலான் டிக்கிரி கணக்கு அமைந்துள்ளது. சர்வதேச போக்குகளை பின்பற்றுவது மற்றும் சிறுவர்களுக்கு களத்தை ஏற்படுத்திக்கொடுப்பது போன்றன செலான் டிக்கிரியின் இலக்குகளாக அமைந்துள்ளன. சிறுவர்களுக்கு கல்வியறிவூட்டுவது, ஈடுபாட்டை பேணுவது மற்றும் ஊக்குவிப்பது போன்றவற்றில் பல புத்தாக்கமான வழிமுறைகளை இனங்காணும் நடவடிக்கைகளை வங்கி தொடர்ச்சியாக இனங்கண்ட வண்ணமுள்ளது. இத்திட்டத்தினூடாக, தமது இளம் வாடிக்கையாளர்களை ஊக்குவித்து. தமது இனிய தருணங்களை படமெடுத்து, அவற்றை நினைவாக வைத்திருந்து, தமது குடும்பத்தார் மற்றும் அன்புக்குரியவர்களுடன் மகிழ்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இந்தப் போட்டியின் வெற்றியாளர்களுக்கு பெறுமதிவாய்ந்த பணப்பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் போன்றன வழங்கப்பட்டதுடன், தெரிவு செய்யப்பட்ட புகைப்படங்கள் 2022 ஆம் ஆண்டின் செலான் வங்கியின் நாட்காட்டியில் பிரசுரிக்கப்பட்டன.

இப்போட்டி இரு பிரிவுகளை உள்ளடக்கியிருந்தது. பங்குபற்றுநர்களிலிருந்து வெற்றியாளர்கள் தெரிவு இடம்பெற்றதுடன், 'Most Popular Photographs' இல் ஐந்து வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இந்தப்பிரிவில் செலான் வங்கியின் உத்தியோகபூர்வ சமூக ஊடக கட்டமைப்பில் அதிகளவு டமைநளஇ ளாயசநள மற்றும் சநளிழளெநள அடிப்படையில் சந்தனி அலஹகோன், ஹமெத்கெம்சிலு, ஜே. ஹிருஷன், மினுதிவிதுன்யா மற்றும் செனுலிநெதும்சா ஆகியோர் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். "டீநளவ ீாழவழபசயிாள" பிரிவில் உள்ளக நடுவர் குழுவினால் ஆதில் வீரக்கொடி, மொஹமட் பயாஸ் ஆதி.்வ், எம். டபிள்யு. பமதி சசென்யா, சமீஹா ச.்.வாஸ் மற்றும் ரஷித் ஆகியோர் வெற்றியாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

SLT-Mobitel இற்கு 'CALLER TUNES' வசதியை வழங்கும் EVOKE

தொலைத்தொடர்பு சேவை வழங்குனர்களுக்கு பெறுமதிசேர் சேவைகளை வழங்குவதில் கவனம் செலுத்திவரும் இலங்கையின் பொழுதுபோக்கு வர்த்தக முன்னோடியான நுஏழுமுநு ஐவேநுசுயேவுஐழுயேடு டுஐஆஐவுநுனு ஆனது, ளுடுவு - ஆழடிவைநட உடன் இணைந்து தொலைபேசி அழைப்பு ஒலிக்கான பின்னணி இசை "ஊயுடுடுநுசு வுருநே" சேவையை வழங்குகிறது. இச் சேவையானது ளுடுவு-ஆழடிவைநட நிலையான வீட்டு தொலைபேசி வாடிக்கையாளர்கள், மாதாந்தம் ரூ. 30 மற்றும் வரிகள் செலுத்தி, தாங்கள் விரும்பும் இசையை அல்லது பாடலை அழைப்பாளர் ஒருவர் அழைப்பை மேற்கொள்ளும்போது அவருக்கு கேட்கும் வகையில் அமைத்துக் கொள்ளமுடியும். பதிவுக் கட்டணமாக முதல்தடவை ரூ. 40 மற்றும் வரியை செலுத்தி இந்த சேவையை செயல்படுத்தலாம்.

இச்சேவை அனைத்து நிலையான வீட்டுத் தொலைபேசி இணைப்புகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன், 1259 எனும் உடனடி தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் (சிங்களம், தமிழ், ஆங்கிலத்தில் அமைந்த தன்னியக்க குரல் ஐஏசு சேவை) மூலம் அதனை எளிதாக செயல்படுத்தலாம். வாடிக்கையாளர்கள் மாதத்திற்கு ரூ. 90 மற்றும் வரியை செலுத்தி"துருமுநுடீழுஓ" (பாடல் பட்டியல் - ீடுயுலுடுஐளுவு) எனும் தெரிவையும் மேற்கொள்ளமுடியும். இதன்போது, தெரிவுசெய்யப்பட்ட பட்டியலில் உள்ள பாடல்கள், உள்வரும் ஒவ்வொரு அழைப்புகளின்போதும் மாறிமாறி ஒலிக்க விடப்படும்.

இந்த கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த நுஏழுமுநு ஐவேநுசுயேவுஐழுயேடு நிறுவனத்தின் ஸ்தாபக பிரதம நிறைவேற்று அதிகாரியும் அதன் பணிப்பாளருமான லஹிரு விக்ரமசிங்க, ளுடுவு-ஆழடிவைநட உடன் கைகோர்ப்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இந்த கூட்டாண்மையானது, இதில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் ஒரு வெற்றிகரமானதாகும். ளுடுவு -ஆழடிவைநட நிலையான வீட்டுத் தொலைபேசி வாடிக்கையாளர்களும் அவர்களின் அழைப்பாளர் கேட்கும் இசையை அவர்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் முதற்தர இணைப்பு வழங்குநரான ளுடுவு-ஆழடிவைநட - பொழுதுபோக்கின் முன்னணி வர்த்தகநாமமான நுஎழமந உடன் இணைந்து, மில்லியன் கணக்கான இலங்கையர்களுக்கு நன்மையளிக்கும் வகையிலும், மகிழ்விப்பதற்குமான சேவையை வழங்குமென எதிர்பார்க்கிறோம் என்றார்.

இலங்கை பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த பங்களிப்பு செய்யும் DFCC வங்கி

DFCC வங்கியானது, கறுவா ஏற்றுமதி மற்றும் அவர்களின் வழங்கல் சங்கிலியின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை அங்கீகரித்து, நாட்டிற்கு வரும் அந்நியசெலாவணியை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம், DFCC வங்கி கறுவா ஏற்றுமதியாளர்களின் தேவைகளை நன்கு புரிந்துகொள்வதற்காக சிலகாலம் அவர்களுடனான ஈடுபாட்டிற்குப்பிறகு பிரத்தியேகமயமாக்கப்பட்ட ஏற்றுமதி நிதியியல் தீர்வுகளை வழங்கியுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் கறுவா உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் தொழிற்துறையில் பல முக்கிய பங்குதாரர்களை உள்வாங்கியுள்ளதைத் தொடர்ந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகளால் தொடர்ச்சியான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. DFCC வங்கி வழங்கியுள்ள தீர்வுகள் இதுவரை நன்கு பயன்படுத்தப்பட்டு, துறையின் வணிக அளவு மட்டங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு இடமளித்துள்ளது. வங்கியின் பிரத்தியேகமயமாக்கப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்துறைக்கான நிதியியல் சேவை வழங்கல், சிறந்த உற்பத்தித்திறன் மற்றும் பலாபலனை உறுதி செய்வதற்காக, ஏற்றுமதி வாடிக்கையாளர்களின் வழங்கல் சங்கிலியை இலக்காகக் கொண்டு கறுவா தொழிற்துறையிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த DFCC வங்கியின் கடல்கடந்த வங்கிச்சேவை, வாணிபம் மற்றும் சர்வதேச வர்த்தக அபிவிருத்திக்கான துணைத்தலைமை அதிகாரி அன்டன் ஆறுமுகம், "DFCC வங்கியானது, முக்கிய கறுவா ஏற்றுமதியாளர்களுக்கு அதன் விரிவான ஏற்றுமதி நிதித்தீர்வுகளை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறது. அந்நியச் செலாவணி வரவை முன்னெடுப்பதன் மூலம் தேசிய பொருளாதாரத்தின் மீளெழுச்சி மற்றும் வளர்ச்சியைப் பேணிப்பாதுகாக்க இடமளிக்கின்றது. இந்த அங்கீகாரத் திட்டம் நம்முடன் தொடர்புபட்ட தரப்பினரின் வளர்ச்சி மற்றும் சுபீட்சத்திற்கு பங்களிக்கும் DFCC வங்கியின் நீண்டகாலப் பயணத்தின் ஒரு பகுதியாகும் என்றார்.

கோலாகலமாக நடைபெற்ற Business World International விருது விழா

The Business World International Organization ஏற்பாடுசெய்த டீரளனெளள றுழசடன ஐவெநசயெவழையெட விருது விழா அண்மையில் கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் கோலாகலமாக நடைபெற்றது. ஆசிய பசுபிக் வலயத்தில் சிறந்து விளங்கும் தொழில் முயற்சிகளை கௌரவிக்கும் டீறுஐழு விருதுவிழா சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுள்ளது. சர்வதேச வர்த்தக உலகில் மிகச்சிறந்த முறையில் தொழில் முயற்சிகளை முன்னெடுக்கும் நிறுவனங்களை இனங்கண்டு பாராட்டி கௌரவிக்கும் நோக்கத்துடன் செயற்படும் The Business World InternationalOrganization அமெரிக்காவை தளமாககொண்டு இயங்குமொரு அமைப்பாகும். மிகச்சிறந்த மற்றும் சீரான நிர்வாக நடைமுறைகளுடன் இயங்குகின்ற தொழில் முயற்சிகளை கௌரவிப்பதன் மூலம் சிறந்த தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பணியை BWIO விருதுவிழா மேற்கொண்டு வருகிறது. புதிய தொழில்முயற்சிகள், சிறிய மற்றும் பாரியளவிலான தொழில் முயற்சிகள், சேவைகள் மற்றும் உற்பத்தி தொழில் முயற்சிகள், சமூக நலனோம்புகை மற்றும் நிலைத்தகுபேண் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற தொழில்முயற்சிகள் என 30 பிரிவுகளின் கீழ் BWIO விருதுகள் வழங்கப்படுகின்றன.

BWIO விருது விழாவில் அரசமற்றும் தனியார் துறைகளின் உயர்நிர்வாக மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்கள், முன்னணி தொழில் அதிபர்கள் மற்றும் பல்வேறு தொழில் வல்லுனர்கள் கலந்துகொண்டார்கள். இவ்விருது விழாவில் பிரதம விருந்தினர்களாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ஆசிய, ஆபிரிக்க வணிக மற்றும் கைத்தொழில் சபையின் தலைவர் கலாநிதி ஜீ.டீ சிங்ஹாவும் கௌரவ விருந்தினர்களாக அமைச்சர்களான சமல் ராஜபக்ச, செந்தில் தொண்டமான் முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, பிரதிபொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

BWIO International Chapter தலைவர் கலாநிதி டெக்ஸ்டர் பர்னாந்து, கலாநிதி தரிந்து விஜேநாயக்க (உப தலைவர் - USA International Chapter) fyhepjp vk;.V.V [ghu; (cg jiytu; - SL Chapter) ஆகியோர் விருந்தினர்களை வரவேற்றனர். விழாவின் பிரதான உரையை Asia German SportsExchange பிரதம நிறைவேற்று அதிகாரியும் BWIO ஆலோசனைக் குழு அங்கத்தவருமான பேராசிரியர் டியட்மர் டோரிங் ஆற்றினார்.

சைபர் திறனை உலகத் தரத்துக்கு கொண்டு செல்லும் மாபெரும் கேமிங் சமூகத்துடன் கைகோர்க்கும் சிங்கர்

இலங்கையின் மாபெரும் கேமிங் சமூகமான Maximum Esports உடன் சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சி அண்மையில் உடன்படிக்கையொன்றில் கைச்சாத் திட்டிருந்தது. அதன் மூலம், இலங்கையின் கேமிங் துறையின் ஒட்டு மொத்த நியமங்களை மேம்படுத்தி திறன் விருத்திக்கு ஆதரவளிக்கும் வகையில் பிரதான அனுசரணையை வழங்க முன்வந்துள்ளது. போட்டிகரமான, ஒழுங்கமைக்கப்பட்ட வீடியோ கேமிங் துறையில் இலங்கையின் வளர்ந்து வரும் கேமிங் சமூகத்தின் வளர்ச்சிக்கு கைகொடுக்கும் வகையில் சிங்கரின் இந்த அனுசரணை அமைந்துள்ளது.

சிங்கர் Esports Premier League நிகழ்வுக்கு அண்மையில் சிங்கர் அனுசரணை வழங்கியிருந்தது. இப்போட்டியில் 12 இளம் அணிகள் ஒரு மில்லியன் ரூபாய் பரிசுக்காக போட்டியிட்டிருந்தது. தேசிய ஒலிம்பிக் சம்மேளனம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் இலங்கையின் உத்தியோகபூர்வ விளையாட்டுக்களில் ஒன்றாக நளிழசவள பிரகடனம் செய்யப்பட்டுள்ள நிலையில், 2022 ஆசிய கேம்ஸ் விளையாட்டுகளில் பங்கேற்பதற்கு சிங்கரின் அனுசரணை அதியுயர் பங்களிப்பை வழங்குவதாக அமைந்திருக்கும். இந்தப் போட்டிகளில் எட்டாவது பதக்கப் பிரிவு போட்டியாக esports அறிமுகம் செய்யப்படும்.

சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சியின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஷனில் பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "Maximum Esports உடன் பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதையிட்டு சிங்கர் பெருமை கொள்கின்றது. உள்நாட்டு விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் கிரிக்கட், ரக்பி மற்றும் இதர விளையாட்டுக்களைச் சேர்ந்த வீரர்களுக்கு வலுவூட்டி அனுசரணை வழங்குவதில் சிங்கர் முன்னணியில் திகழும் நிலையில், மெய்நிகர் விளையாட்டு உலகில் எமது உத்தியோகபூர்வ அனுசரணை பிரவேசத்தை முன்னெடுப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இலங்கையின் இளைஞர்களுடனான எமது புதுப்பிக்கப்பட்ட நோக்கத்தை வலிமைப்படுத்தும் வகையில் இந்த பங்காண்மை தொடர்ந்தும் அமைந்திருப்பதுடன், நுகர்வோர்களின் தேவைகளை உணர்ந்து செயலாற்றும் முன்னோடியான வர்த்தக நாமமாக அமைந்திருப்பதுடன், அவ்வாறான ஊக்குவிப்புகளினூடாக எமது வர்த்தக நாம சன்னாமத்தை பேணி முன்னெடுத்துச் செல்லக்கூடியதாகவும் உள்ளது.

Maximum Esports ஸ்தாபகரும் இணை உரிமையாளருமான ஷிஹான் மொராயஸ் கருத்துத் தெரிவிக்கையில், "அடுத்த ஆண்டில் சிங்கர் ஸ்ரீலங்காவின் அனுசரணையில் நளிழசவள களில் பங்கேற்க வாய்ப்புக் கிடைத்துள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். உலகளாவிய ரீதியில் நளிழசவள பிரபல்யமடைந்து வருகின்றது. பல சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளில் esports ஐயும் உத்தியோகபூர்வ பதக்கத்துக்கான விளையாட்டாக பிரகடனம் செய்துவரும் நிலையில், உள்நாட்டில் எமது திறமைகளை மேம்படுத்தி, சர்வதேச மட்டத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்கக்கூடியதாக இருக்கும். எமது திறமைகளை ஊக்குவிக்க சிங்கர் எம்முடன் கைகோர்த்துள்ளமைக்காக நாம் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம் என்றார்.

வாரபலன்*

16.01.2022 - 22.01.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

மேஷம்

(அஷ்வினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம்)

ஜனவரி 11 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார் . எனவே, புத ஆதித்ய யோகம் ஏற்படும். கல்வி சம்பந்தமாக நீங்கள் எடுத்த முயற்சிகள் கைக்கூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். பெற்றோர் வழியில் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கும். பங்காளிகளின் பகை மாறும். பிள்ளைகளை நெறிப்படுத்தி வைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு திறமைக்கேற்ற அங்கீகாரம் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். நடராஜர் வழிபாடு நன்மை அளிக்கும் . அதிர்ஷ்ட திகதி : 17, 18

ரிஷபம்

(கார்த்திகை 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1 ஆம் 2 ஆம் பாதம்)

ஜனவரி 11 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார் . மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு. எனவே, தொழில்வளம் சிறப்பாக இருக்கும். துணிவும் தன்நம்பிக்கையும் கூடும். குடும்பத்தில் மங்கள ஓசை கேட்பதற்கான சூழ்நிலை உருவாகும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். பங்காளிப்பகை மாறும். புதிய வாகனம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். துர்க்கை வழிபாடு நன்மை தரும்.அதிர்ஷ்ட திகதி : 20 , 22

மிதுனம்

மிதுனம் (மிருகசீரிடம் 3 ஆம் 4 ஆம் பாதம் , திருவாதிரை, புனர்பூசம் 1 ஆம் 2 ஆம் 3 ஆம்; பாதம்)

ஜனவரி 11 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார் . இராசிநாதன் சப்தமஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் ராசியை பார்ப்பது யோகம் தான். வீட்டில் மங்கள ஓசை கேட்க வழிபிறக்கும். செய்யும் தொழிலில் புதிய மாற்றங்களை கொண்டு வருவீர்கள். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான வாய்ப்பு ஒருசிலருக்கு உண்டு. பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புக்களும் பதவிகளும் கிடைக்கும். குருவழிபாடு மேற்கொள்வது நன்மையாகும். அதிர்ஷ்ட திகதி : 18 , 20

கடகம்

(புனர்பூசம் 4 ஆம் பாதம் , பூசம், ஆயிலியம்)

ஜனவரி 11 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 12 இக்கு அதிபதி 6 இல் சஞ்சரிக்கும்போது கெட்டவன் கெட்டில் கிட்டிடும் இராஜயோகம் என்பதற்கேற்ப நல்ல வாய்ப்புக்களும் இல்லம் தேடிவரும். செலவுகள் குறைந்து சேமிக்க ஆரம்பிப்பீர்கள். வியாபாரம் வெற்றிநடைபோடும். குறைந்த விலையில் என்றோ வாங்கிய நிலம் இப்போது கூடுதல் இலாபத்தோடு விற்க நேரிடும். இம்மாதம் ஆஞ்சநேயர் வழிபாடு நன்மை தரும். அதிர்ஷ்ட திகதி : 16 , 22

சிம்மம்

(மகம் , பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)

ஜனவரி 11 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். தனலாபாதிபதி புதன் 5 இல் சஞ்சரிக்கும் இந்நேரம் பிள்ளைகள் வழியில் வருமானம் கிடைக்கும். அவர்களின் வேலை தொடர்பாக நீங்கள் எடுத்த முயற்சிகள் கைக்கூடும். வீட்டுக்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஊதிய உயர்வும் பதவி உயர்வும் கிடைக்கலாம். பொதுவாழ்வில் புதிதாக ஈடுபட்டிருப்பவர்களும் புதிய திருப்பங்கள் ஏற்படலாம். தென்முக கடவுள் வழிபாடு நன்மை தரும். அதிர்ஷ்ட திகதி : 20, 21

கன்னி

(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)

ஜனவரி 11 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிநாதன் வக்கிரம்பெறும்போது ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படலாம். இருப்பினும் புத ஆதித்ய யோகம் இருப்பதால் கல்வியில் நீங்கள் எடுத்த முயற்சிகளின் வெற்றி கிடைக்கும். இல்லம் கட்டி குடியேறும் வாய்ப்பு ஏற்படலாம். வருமானம் சீராக இருந்தாலும் அதற்கேற்றாற்போல் செலவுகளும் இருக்கும். செய்யும் தொழிலில் இடமாற்றம் செய்யலாமா என யோசிப்பீர்கள். நண்பர்களிடம் பகை வளர்க்காமல் இருப்பது நல்லது. பெருமாள் வழிபாடு நன்மை தரும். அதிர்ஷ்ட திகதி : 19, 21

துலாம்

(சித்திரை 3 ஆம் 4 ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்) ஜனவரி 11 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். விரயாதிபதி புதன் 3 இல் சஞ்சரிக்கும்போது சகோதர வழியில் விரயங்கள் ஏற்படலாம். உடன்பிறப்புக்களின் திருமணம் தொடர்பில் எடுத்த முயற்சிகள் கைக்கூடும். அவர்களுக்கு உத்தியோகம் கிடைத்து வருமானமும் வரலாம். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு மேலிடத்தில் நல்ல பெயர் கிடைக்கும். அத்தோடு, புதிய பதவிகளும், பொறுப்புக்களும் வந்துசேரும். இழந்த பதவிகள் மீண்டும் வரலாம். அம்பிகை வழிபாடு நன்மை தரும். அதிர்ஷ்ட திகதி : 16, 17

விருச்சிகம்

(விருச்சிகம் (விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

ஜனவரி 11 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கு அஷ்டலாபாதிபதியானவர் புதன். அவர் தனஸ்தானத்திற்கு வரும்போது தனவரவு தாராளமாக இருக்கும். பணப் புழக்கம் அதிகரிக்கும். கூட்டு முயற்சியில் இருந்து தனித்து இயங்க முற்படுவீர்கள். வாடகை கட்டிடத்தில் இடம்பெற்ற தொழிலை சொந்த கட்டிடத்துக்கு மாற்றுவீர்கள். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். விநாயகர் வழிபாடு வெற்றிதரும். அதிர்ஷ்ட திகதி : 17 ,22

தனுசு

(மூலம் , பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

ஜனவரி 11 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே, தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். நண்பர்களால் நன்மை உண்டு. உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவார்கள். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். குடும்பத்திற்கான செலவுகள் அதிகரிக்கும். தொழில் போட்டிகள் அகலும். உங்கள் மேற்பார்வையில் உள்ள நிறுவனங்கள் விருத்தியடையும். துள்ளிச்சென்ற வாய்ப்புக்கள் தானாக வந்துசேரும். சூரிய வழிபாடு செய்வதால் நன்மை உண்டாகும். அதிர்ஷ்ட திகதி : 21, 22

மகரம்

(உத்தராடம் 2 ஆம் 3 ஆம்; 4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1 ஆம் 2 ஆம் பாதம்)

ஜனவரி 11 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கு 6 , 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் வக்கிரம் பெறுவதால் எதிலும் மிகுந்த கவனம் தேவை. பங்காளி பகை உருவாகலாம். மற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிடாதிருப்பது நல்லது. முன்கோபத்தினால் முன்னேற்றத்துக்கு பாதிப்புக்கள் ஏற்படலாம். கோபத்தை குறைத்துக்கொண்டால் மன அமைதி ஏற்படும். சந்தர்ப்பங்கள் சாதகமாக இருந்தாலும் அதனை பயன்படுத்திக்கொள்ள இயலாது.

பகவானை வழிபாடு செய்வதால் நன்மைகள் உண்டு. அதிர்ஷ்ட திகதி : 19, 20

கும்பம்

(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம்,சதயம்,பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)

ஜனவரி 11 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கு அஸ்டமாதிபதியான புதன் வக்கிரம் பெறுவது யோகம்தான். பிள்ளைகளின் பிடிவாத போக்கில் மாற்றம் ஏற்படும். பெரியவர்களின் தொடர்பினால் நல்ல வாய்ப்புக்களை வரவழைத்துக் கொள்வீர்கள். ஆரோக்கியத்தில் இதுவரை இருந்த குறைபாடுகள் நீங்க மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. அரசியல்வாதிகள் மேலிடத்தில் இருப்பவர்களின் ஆதரவை பெற்று புதிய பொறுப்புக்களை ஏற்பர். பயணங்களால் அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயம் திருப்தியாக இருக்கும். நந்தி வழிபாடு நலம் தரும். அதிர்ஷ்ட திகதி : 19, 22

மீனம்

(புரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி,ரேவதி)

ஜனவரி 11 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே, பெற்றோரின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பச்சுமை கூடும். கட்டிடம் கட்டியும் வாடகைக்கு கொடுக்கமுடியாத நிலை ஏற்படும். வாழ்க்கைத்துணை வழியே பிரச்சினைகள் ஏற்படலாம். பிள்ளைகளின் திருமண காரியங்களில் தடை காணப்படலாம். பொறுமையாக இருப்பது நல்லது. முருகப்பெருமானை வழிபாடு செய்வது நன்மை தரும். அதிர்ஷ்ட திகதி : 18, 19

தமிழில் புத்தகக் கலாசாரம் :

க்ரியா ராமகிருஷ்ணன் நினைவுக் கட்டுரைகள்

தமிழ்ப் பதிப்புலகில் தரமான நூல் தெரிவிலும், நேர்த்தியான நூல் தயாரிப்பிலும் முன்னோடியாகச் செயற்பட்டவர் க்ரியா ராமகிருஷ்ணன் (1944 / 2020). தமிழ்ப் பதிப்புலகின் நட்சத்திரமாக அவர் நோக்கப்படுகிறார். தமிழகத்தில் புத்தகக் கலாசாரம் பற்றிப்பேசி, இயங்கி வந்தவர்.

க்ரியா பதிப்பகத்தை 1974இல் நிறுவி, பல்துறை சார்ந்த நூல்களைத் துணிவோடு வெளியிட்டவர். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மூலமொழிகளில் இருந்தே தலைசிறந்த படைப்புகளை தமிழில் கொண்டுவந்தவர். ராமகிருஷ்ணனின் பெரும் ஈடுபாட்டில் உருவான 'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி' நவீன தமிழ் உலகிற்குக் கிடைத்த அருங்கொடையாகும்.

அமரர் க்ரியா ராமகிருஷ்ணன் நினைவாக ஏப்ரல் 2021இல் பேராசிரியர் இ. அண்ணாமலையின் முன்னெடுப்பில் நடைபெற்ற இணையவழிக் கருத்தரங்கில், தத்தம் துறைகளில் தலைசிறந்த பதினான்கு பேர் அனைத்துலக அளவில் கலந்துகொண்டு, தமது உரைகளைச் சமர்ப்பித்திருந்தனர். இக்கருத்தரங்கு உரைகள் தொகுக்கப்பட்டு, 'தமிழில் புத்தகக் கலாச்சாரம்: க்ரியா ராமகிருஷ்ணன் நினைவுக் கட்டுரைகள்' என்ற தலைப்பில் க்ரியா வெளியீடாக அண்மையில் வெளியாகியுள்ளது. க்ரியாவிற்கே உரிய பதிப்பு முத்திரையுடன் பளபளப்பான தாளில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் அமைந்த கட்டுரைகளைக் கொண்டு நூல் அற்புதமாக வெளியாகியிருக்கிறது.



இந்நூலின் 382 பக்கங்களில் அகராதி சார்ந்த கட்டுரைகள் 40 வீதத்தையும், எடிட்டிங், வடிவமைப்பு, மொழி சார்ந்த கட்டுரைகள் 30 வீதத்தையும், மொழிபெயர்ப்பு சார்ந்த கட்டுரைகள் 30 வீதத்தையும் கொண்டுள்ளன.

தமிழில் புத்தக கலாசாரம் என்பது இல்லை என்பது ராமகிருஷ்ணன் அடிக்கடி வெளிப்படுத்தும் வருத்தங்களில் ஒன்று" என்று ஆசைத்தம்பி இந்த நூலில் மிகச்சரியாகவே கூறிச் செல்கிறார். புத்தகம் என்பது நமது அன்றாடப் பிரக்ஞையினுடைய ஒரு வெளிப்பாடாகவும், ஒரு பகுதியாகவும், நமக்குச் சக்தி கொடுக்கக்கூடிய பல விஷயங்களில் ஒன்றாகவும் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இந்த உணர்வுதான் என் உழைப்புக்கெல்லாம் அடிப்படை" என்று ராமகிருஷ்ணன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருக்கிறார்.

சென்னையில் நவம்பர் 28, 1977இல் நடைபெற்ற கருத்தரங்கில் 'சிறு பதிப்பாளர்களின் பிரச்சினைகள் ' என்ற தலைப்பில் உரையாற்றிய க்ரியா ராமகிருஷ்ணன் பின்வருமாறு குறிப்பிட்டார்:

எல்லாவற்றிற்கும் அடிப்படைக்காரணம் தமிழ்நாட்டில் இன்னும் புத்தகக் கலாச்சாரம் தோன்றவில்லை என்பதுதான். பெரும்பாலோர் இதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். வருடத்திற்கு எத்தனை புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன, எத்தனை பதிப்பாளர்கள் இருக்கிறார்கள் என்று கணக்குக் காட்டுவார்கள். ஆனால் புத்தகம் என்ற சாதனத்தைப் பற்றியும், அறிவு வளர்ச்சியின் தன்மை பற்றியும், இவற்றோடு இணைந்த மற்ற எல்லா விஷயங்களைப் பற்றியும் இன்று நிலவும் மனப்போக்கு புத்தகக் கலாச்சாரத்தை உருவாக்கவோ, ஆதரிக்கவோ போதுமானதில்லை. இம்மாதிரி நிலைமையில் சிறு பதிப்பாளர்கள் தோன்றுவார்கள், மறைந்து விடுவார்கள். ஆனால், ஒரு சிறு பதிப்பாளர் வெளியீட்டுத்துறையை விட்டகன்றால் இன்னொருவர் வருவார். இது ஒன்றுதான் தமிழ்ப் புத்தகத்துறையின் பெரிய நம்பிக்கை.

அகராதி என்ற தலைப்பில் தங்க ஜெயராமன் சமர்ப்பித்துள்ள தற்கால தமிழ் அகராதி : கலாசாரம் சார்ந்த சில பிரச்சினைகள் என்ற கட்டுரை முக்கியமானது. தமிழ்க் கிராமியச் சொல்வழக்கின் காவல் தெய்வமாகத் தலைநிமிர்கிறார் தங்கஜெயராமன். தமிழர் வாழ்வின் கிராமியச் செழுமைகளை, தொன்மைகளை, சமய நம்பிக்கைகளை, கலாசார நடைமுறைகளை, சமூகவாழ்வியலின் சீர்மைகளை பலர் முன்வைத்துள்ளனர். அவ்வகையில், இன்றைய அகராதிகள் ஆங்கில அகராதிக் கருத்தமைவுக்கு இசைவாக, எழுத்துத் தமிழ் ஆட்சியையே முதன்மைப்படுத்தி, கிராமிய வழக்குகளைப் புறந்தள்ளும் போக்கினைக் கைக்கொள்வது பற்றிய கரிசனையைத் தனது கட்டுரையில் தங்க ஜெயராமன் வலிமையாக முன்வைத்திருக்கிறார். சுவரொட்டி, அறை, குணவடை, கடைமடை, குறாள், கழனி, காரிக்கன், சடங்கு, நடவாள், குடியானவன், குடிபடை போன்ற கிராமத்தில் வழக்கிலுள்ள அர்த்தச் செறிவுமிக்க சொற்களுக்குத் தங்க ஜெயராமன் தரும் அகராதியியல் விளக்கங்கள் செழுமையானவை.

தங்க ஜெயராமனின் கருத்தியலுக்கு இசைவாக டேவிட் ஹுல்மன் தந்திருக்கும் மொழியின் இரட்டை வழக்கும், பன்மை வழக்கும் அதன் எழுத்துருவாக்கத்திலும் இலக்கியவாக்கத்திலும் என்ற கட்டுரை அமைந்திருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலிருந்தே தமிழில் பேச்சுவழக்கினை இலக்கியப் படைப்புகளில் கொணரும் போக்கு காணப்படுவதாகக் கூறப்படுகிறது. புதுமைப்பித்தன், பிற்காலத்தில் ஜி.நாகராஜன், ந.முத்துசாமி, தி. ஜானகிராமன், இமையம் போன்றோரை இந்த நவீன இலக்கியச் செல்நெறிக்கு உதாரணப்படுத்துவதையும் காண்கிறோம். ஆனால், தமிழ் இலக்கியச் சொல்லாடலில் பேச்சுவழக்கு கையாளப்பட்டதற்கு நீண்ட வரலாறு இருக்கிறது என்கிறார் டேவிட் ஹுல்மன்.

சிங்கன்: பார்க்கிலதிசயந் தோணுது சொல்லப்
பயமாயிருக்குதடி சிங்கி
சிங்கி: ஆர்க்குப்பயமினித் தோணின காரியம்
அஞ்சாமற் சொல்லடா சிங்கா

என்று திருக்குற்றாலக் குறவஞ்சியில் "சிங்கனுக்கும் சிங்கிக்கும் சம்வாதம்" என்ற பகுதியிலிருந்து டேவிட் ஹுல்மன் காட்டும் உதாரணங்கள் 17ஆம் 18ஆம் நூற்றாண்டிலேயே பேச்சுவழக்கு இலக்கிய வாக்கத்தில் இடம்பெற்றிருப்பதை விளக்குகிறது. சிற்றிலக்கியம் எனப்படும் நொண்டி நாடகம், பள்ளு, விறலிவிடுதூது போன்ற இலக்கியங்களிலும் வெவ்வேறு வகையிலான சமூக, புவியியல்சார் பேச்சுவழக்குகள் கையாளப்பட்டிருப்பதை ஹுல்மன் குறிப்பிடுகிறார்.

பேச்சுமொழியை இலக்கிய ஆக்கத்தில் கையாளும் முறை கன்னடம், தெலுங்கு, மலயாளம் ஆகிய மொழிகளில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே காணப்படுவதற்கு, தெலுங்கு பிரபந்த இலக்கியங்களிலிருந்தும் ஹுல்மன் ஆதாரம் காட்டுகிறார்.

தங்கஜெயராமன் முன்வைக்கும் அகராதியியல் கருத்தியலுக்கு வலுச்சேர்க்கும் கட்டுரையாக ஹுல்மனின் கட்டுரை அமைந்துள்ளது.

அகராதி மீதான ஒரு பயனாளியின் பார்வை எப்படி உருவாகிறது, அகராதியின் நம்பகத்தன்மை எப்படி வலுப்பெறுகின்றது என்பது பற்றி பா.ரா. சுப்பிரமணியன் தனது அகராதி மீதான பார்வையும் நம்பிக்கையும் என்ற கட்டுரையில் பேசுகிறார். க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி க்கான தளத்தினை நிர்மாணித்து, அவ்வகராதிக்குப் பூரண வடிவம் தந்தவர் பா.ரா. சுப்பிரமணியம் ஆவார்.

உயிரிழந்துபோன சொற்களைப் பதனப்படுத்தி வைக்கும் அரும்பொருட் காட்சியகமாகவே அகராதி பார்க்கப்படுகிறது. நடைமுறையில் மொழி எவ்வாறு பாவிக்கப்படுகிறது என்பதைவிட, மொழியை எவ்வாறு செம்மையாகப் பயன்படுத்துவது என்று அதிகாரபூர்வமாக விதி செய்யும் ஓர் ஏற்பாடாகவே அகராதி நோக்கப்படுகிறது என்று இக்கட்டுரையின் ஆரம்பத்திலேயே க்ரெகரி குறிக்கிறார்.

ஆங்கில மரபுச் சொற்றொடரின் அர்த்தத்தை நிர்ணயம் செய்தலும் அதன் தூய்

மு. நித்தியானந்தன் ...✍

மையைப் பேணுதலுமே அகராதியின் பிரதான நோக்கம் என்ற சாமுவேல் ஜோன்சன் கொண்டிருந்த கருத்து அகராதியியலில் பெரும் செல்வாக்கு செலுத்திய வண்ணமே இருந்தாலும், இதற்கு மாற்றான கருத்துகளும் எழுந்தவண்ணமே உள்ளன.

ஒரு சொல் எந்தச் சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது என்று தெரியாதபட்சத்தில், ஒரு வார்த்தைக்கு எந்த அர்த்தமுமில்லை என்று பிலிப்ஷரூபின் கூறுவதைக் ரெகரி ஜெம்ஸ் மேற்கோள் காட்டுகிறார்.

தக்காளி பழவகையைச் சேர்ந்ததா, காய்கறி வகையினத்தைச் சேர்ந்ததா என்ற கேள்வி அமெரிக்காவில் பெரும் சட்டப்பிரச்சினையை எழுப்பியது.

தக்காளி என்பதற்கு அகராதி தரும் வரைவிலக்கணங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. தக்காளி இறக்குமதிக்கு வரி விதிப்பது தொடர்பான வழக்கில், அமெரிக்க உயர்நீதிமன்றம், தக்காளி என்பது பொதுமக்களின் வழக்கின் பேரில் காய்கறி என்று தீர்மானித்துத் தீர்ப்பளித்தது.

அதேபோன்று மீன்குட்டையில் அலங்கார மீன்கள் வளர்ப்பு, வரி விதிப்பிற்கு உட்படுத்தப்பட்டபோது கால்நடை வளர்ப்பில் மீன்கள் விலங்கின வகைக்குள் வரமாட்டாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இங்கிலாந்தில் பிரசித்திபெற்ற ஜாஃபாகேக் (Jaffa Cake) வழக்கில் ஜாஃபாகேக்கிற்கு எயவவரி விதித்தல் பற்றிய பிரச்சினையில் அது கேக் வகையினமா? பிஸ்கட் வகையினமா? என்ற கேள்வி எழுந்தது.

இந்த வழக்கில் ஆங்கில அகராதிகள் கேக், பிஸ்கட் என்பனவற்றிற்கு தந்த வரைவிலக்கணங்களை க்ரெகரி ஜேம்ஸ் தனது கட்டுரையில் விரிவாக ஆராய்கிறார்.

ஜாஃபாகேக் கேக்கின் குணாம்சங்களையும் பிஸ்கட்டின் குணாம்சங்களையும் ஒருசேரக் கொண்டிருந்தபோதும் அது கேக்கின் குணாம்சங்களையே பெருமளவு கொண்டுள்ளது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அவ்வாறு முடிவுக்கு வருவதற்கு ஒரு முக்கிய வேறுபாடு நீதிமன்றின் கருத்தில் கொள்ளப்பட்டது. அதாவது புதிய ஒரு கேக் நாட்பட்டுப் பழசாகிப் போனதும்தடிப்பாகிப்போகிறது. ஆனால், பிஸ்கட் நாளாகிப்போனதும் மெதுவாகிப் போகிறது.

கேக்கையும் பிஸ்கட்டையும் வேறுபடுத்தும்போது இவற்றிற்கிடையே காணப்படும் வேறுபாடுகள் பற்றிய தகவல்களில் எந்தளவு விபரங்களை ஓர் அகராதி எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற கேள்வி எழுகிறது.

நுணுக்கமான விபரிப்பிற்கும் உள்ளடக்க வேண்டிய தகவல்களின் எல்லைப் பரப்பிற்கும் இடையே அகராதி சமரசம் காணவேண்டி ஏற்படுகிறது. ஜாஃபாகேக் என்பதற்கு ஓர் அகராதி தரக்கூடிய சாதாரண விளக்கம் என்ன? என்று வினா எழுப்புகிறார் க்ரகெரி ஜேம்ஸ்.

அகராதியியலைப்பற்றிய விழிப்புணர்வையும் அறிவையும் ஏற்படுத்தும் வகையில் ஆறாம் வகுப்பு முதற்கொண்டே பாடத்திட்டத்தில் 'அகராதியை அறிவோம்' என்னும் பாடத் தலைப்பைச் சேர்க்கும் தமிழ்நாடு அரசின் திட்டத்தினை கிரகெரி ஜேம்ஸ் முன்மொழிகிறார்.

அகராதியியலை விடவும் எடிட்டிங், வடிவமைப்பு, மொழிபெயர்ப்பு குறித்த கட்டுரைகள் இந்த நூலிற்கு பெரும் வளம் சேர்த்துள்ளன.

தமிழில் முன்னுதாரணமில்லாத ஒரு எடிட்டர் என்று க்ரியா ராமகிருஷ்ணனைப் பற்றி இந்துதமிழ் நாளிதழில் பணியாற்றும் ஆசைத்தம்பி எழுதியுள்ள கட்டுரை பதிப்புலகில் ராமகிருஷ்ணனிடம் இருந்த எடிட்டிங் திறமையை அருகிருந்து பார்த்த அனுபவத்திலிருந்து கிளைத்திருக்கிறது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலப் பேராசிரியையாகத் திகழ்ந்த சி.டி. இந்திரா இந்நூலுக்கான அறிமுகத்தை அற்புதமாக எழுதியிருக்கிறார்.

யேல் பல்கலைக்கழகம், சிகாகோ பல்கலைக்கழகங்களின் ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியரான இ.அண்ணாமலை இந்த ஆய்வரங்கினை ஒழுங்குபடுத்தி, இந்நூலின் ஆக்கத்தில் முக்கியபங்கு வகித்ததுடன், அரிய முத்தாய்ப்பாக ஒரு பின்னுரையினை நல்கியுள்ளார்.

தமிழில் புத்தகக் கலாச்சாரம் பற்றிய துறையில்ஒரு பொக்கிஷத்தைத் தந்திருக்கிறார் அண்ணாமலை.

11

கொழும்பின் கதை

என். சரவணன்

கொட்டாஞ்சேனையில் இலங்கையின் முதல் மதக்கலவரம் 1883



கொட்டாஞ்சேனையின் வரலாற்றைப் பேசும்போது கொட்டாஞ்சேனை கலவரம் பற்றி பேசாமல் இருக்க முடியாது.

ஒரு நூற்றாண்டுக்கு முன் அதாவது 1883இல் இலங்கையில் முதலாவது வகுப்புவாத கலவரம் நடந்தது. முதலாவது மதக் கலவரமாகவும் அதனைக் குறிப்பிடுவார்கள்.

கொட்டாஞ்சேனை கலவரம் ஆங்கிலேய ஆட்சிக்கால அரச பதிவுகளில் 'Kotahena Riots' என்றே அழைக்கப்படுகிறது. இந்த கலவரம் நிகழ்ந்து முடிந்த பின்னர் இதனை விசாரிப்பதற்காக ஆங்கிலேய அரசினால் அமைக்கப்பட்ட குழு The Kotahena Riots என்கிற ஒரு அறிக்கையையும் வெளியிட்டது.

19 ஆம் நூற்றாண்டில் வடக்கில் சைவசமயத்தினரும் தெற்கில் பௌத்த சமயத்தினரும் தமக்கெதிரான கிறிஸ்தவ பிரச்சாரங்களை எதிர்த்து எதிர்ப்பிரச்சாரங்களிலும், பகிரங்க விவாதங்களிலும் ஈடுபட்டார்கள். அப்படி தென்னிலங்கையில் நடந்த பஞ்சமகா விவாதங்கள் மிகவும் பிரசித்தி வாய்ந்தவை. அவற்றில் ஒன்று 1873 இல் பாணந்துறை நகரில் நடந்த விவாதம். இந்த விவாதம் பிரபல பௌத்த பிக்கு மீகெட்டுவத்தே குணானந்த தேரரின் (மொஹட்டிவத்தே குணானந்த என்றும் அழைப்பார்கள்) தலைமையில் ஹிக்கடுவ சிறீ சுமங்கல தேரர் போன்றோருடன் இணைந்து கிறிஸ்தவ மதப் போதகர்களுடன் நடந்தது. அந்த விவாதத்தின் உள்ளடக்கம் பல நூல்களாக வெளிவந்துள்ளன.

மிசனரி மதமாற்ற நடவடிக்கையை முறியடிக்க பௌத்த பாடசாலை இல்லாததும் பெரிய குறைபாடாக பௌத்தர்கள் கருதினர். 1880 இல் பிரம்மஞான சங்கத்தைச் (Theosophical Society) சேர்ந்த கேணல் ஒல்கொட் இலங்கைக்கு வரும் வரையில் இந்த நிலைமைகளில் அதிகம் மாற்றம் ஏற்படவில்லை. 1873 இல் பாணந்துறையில் நடைபெற்ற பிரபலமான பகிரங்க விவாதமே கேணல் ஒல்கொட் இலங்கை வருவதற்கான முக்கிய காரணமாக அமைந்தது. அவர் இலங்கை வந்ததும் நேராக கொட்டாஞ்சேனை தீபதுத் தமாறாமய விஹாரை வந்து குணானந்த தேரரை சந்தித்தார். கூடவே அவர் பௌத்த மதத்தை தழுவவும் செய்தார்.

கிறிஸ்தவ சக்திகளை எதிர்கின்ற எதிர்ப்பியக்கங்கள் ஒருபுறம் பலமடையத் தொடங்கின. ஆரம்பத்தில் காலனித்துவ



பாணந்துறை விவாதம்

எதிர்ப்பின் சாயலைக் கொண்டிருந்தாலும் அதன் உள்ளடக்கம் பௌத்த மறுமலர்ச்சியும் கிறிஸ்தவ எதிர்ப்புமே என்று குமாரி ஜெயவர்த்தனா தனது நூலில் குறிப்பிடுகிறார். மேலும் தொழிற்சங்க ஆர்ப்பாட்டங்கள், மது ஒழிப்பு உட்பட பல்வேறு பொது பிரச்சினைகளையும் கையில் எடுத்தார்கள். சில இடங்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகளும் இடம்பெற்றன.

இலங்கையின் போக்கை இனவாத திசையில் வழிநடத்தியதில் அநகாரிக தர்மபாலவின் வகிபாகம் என்னவென்பது அனைவரும் அறிந்ததே. அந்த அநகாரிகவை உருவாக்கியது இந்த கொட்டாஞ்சேனைக் கலவரமே.

இத்தகைய பின்னணியில் வளர்ச்சியடைந்த பௌத்த மறுமலர்ச்சியின் உந்துதலால் பௌத்தர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் விரிசல் அதிகரித்ததுடன், பரஸ்பர சந்தேக உணர்வும், ஆங்காங்கு முறுகல் நிலையும் வளரத் தொடங்கின. பௌத்த வணிகர்கள், அரச உத்தியோகத்தர்கள், எழுத்தாளர்கள் போன்றோர் பௌத்த எழுச்சியை ஆதரிக்கத் தொடங்கியதுடன் கிறிஸ்தவ மேலாதிக்கத்தை எதிர்த்து செயல்பட்டனர்.

கொட்டாஞ்சேனை தீபதுத்தாமாறாமயவில் தலைமை மதகுருவாக இருந்த மீகெட்டுவத்தே குணானந்த தேரர் அந்த விகாரையில் உள்ள புத்தர் சிலைக்கு கண்களை வைப்பதற்கான வைபவத்தை 1883 பெப்ரவரி மாதம் நடத்த திட்டமிட்டிருந்தபோது பிரதான அரச வைத்திய அதிகாரி ஒரு அறிக்கையை அனுப்பி வைத்திருந்தார். அதன்படி கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் பரவி வரும் நோயொன்றின் காரணமாக இந்த வைபவத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி அந்த அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. மார்ச் 31 வரை நிறுத்தி வைக்கப்படுவதற்கு குணானந்த தேரர் ஒப்புக்கொண்டபோதும் இந்த செய்தியின் பின்னணியில் சதி இருப்பதாக அவர் சந்தேகித்தார்.

இதற்கு முன்னரும் 1872இல் கொச்சிக்கடையிலும் 1880இல் மாதம்பிட்டியிலும் பௌத்த பெரஹரவின் போது கல் எறிந்து குழப்ப முயற்சித்ததையும் முகத்துவாரத்தில் பாதையை மறித்த சம்பவத்தையும் அவர் நினைவில் கொண்டார். சிலைகளுக்கு கண் வைக்கும் வைபவத்துக்கு ஊர்வலமாக வந்து பூஜைகளை செய்யும்படி பௌத்தர்களைக் கேட்டுக்கொண்ட குணானந்த ஹிமி, அதற்கான பொலிஸ் ஒப்புதலையும் பெற்றிருந்தார். அதனைத் தொடர்ந்து பலர் தீபதுத்தமாறாமய விகாரைக்கு சென்றார்கள். அந்த விகாரையின் ஒரு பகுதியில் கந்தசுவாமி கோவில் ஒன்று இருந்ததாகவும் அதற்கும் பௌத்த துறவிகள் திருவிழா நடத்தியதாகவும் 1887இல் வெளிவந்த 'ரிவிரெச' பத்திரிகை கூறுகிறது.

பௌத்தர்கள் இவ்வாறு அணிதிரள்வது தம்மை சீண்டும் நடவடிக்கையாக கிறிஸ்தவர்கள் சந்தேகித்தனர். ஏற்கெனவே பாணந்துறை விவாதத்தில் குணானந்த தேரர் தலைமையிலான பௌத்த தரப்பே வென்றிருந்ததும் அதிருப்தி நிலையை உருவாக்கியிருந்தது.

கொட்டாஞ்சேனை புனித லூசியா தேவாலயம் கட்டப்பட்டுகொண்டிருந்த காலம் அது. தீபதுத்தமாறாமய விகாரைக்கும் புனித லூசியாஸ் தேவாலயத்திற்கும் ஏறத்தாழ ஒரு கிலோமீட்டருக்கும் குறைவான தூரமே இருந்தது.

அன்றைய மிசனரி திருத்தூதர் ஜே. மாசிலாமணி இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு 6ஆம் திகதியே சில எச்சரிக்கையை எழுத்து மூலம் செய்திருந்தார். ஈஸ்டர் பண்டிகைக் காலத்தில் பெரிய வெள்ளி மற்றும் குருத்தோலை ஞாயிறு ஆகிய தினங்களில் பௌத்த பெரஹரவுக்கு அனுமதி வழங்குவது முறுகலை ஏற்படுத்தும் என்றும் சில அசம்பாவிதங்கள் நடக்கவிருப்பதாக கதைகள் உலவுவதாகவும், வழமைபோல ஈஸ்டர் காலத்து புனித ஊர்வலத்தை இடையூறு இல்லாமல் நடத்திமுடிக்க ஒத்துழைக்குமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த கடித விபரங்கள் The Kotahena Riots அறிக்கையில் இடம்பெற்றிருக்கிறன.

பெரிய வெள்ளிக்கு முன்னர் நடந்த பெரஹர நிகழ்வுகளுக்கு பொலிசார் பாதுகாப்பு வழங்கியிருக்கிறார்கள். சில கத்தோலிக்கர்கள் கல்லெறிந்தார்கள் என்கிற சந்தேகத்தின் பேரில் கைதும் செய்யப்பட்டிருந்தார்கள். இதனைத் தொடர்ந்து பெரிய வெள்ளியன்று நடத்தப்படவிருந்த புனித ஊர்வலத்துக்கான அனுமதியும் ரத்து செய்யப்பட்டது. மார்ச் 25 குருத்தோலை ஞாயிறன்று மதியம் 12 வரை தேவாலய பூஜைகளுக்குப் பின்னர் பெரஹரவுக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

இந்த சமயத்தில் பல்வேறு வதந்திகள் பரப்பப்பட்டிருந்தன. இலங்கையில் எந்த மூலையிலும் எந்த நேரத்திலும் பௌத்த பெரஹர நடத்துவதற்கான அனுமதியை பிரித்தானிய இராணியிடமிருந்து குணானந்த தேரர் பெற்று வந்திருப்பதாகவும் நாடு முழுதும் வதந்தி பரப்பப்பட்டதுடன் அது பத்திரிகையிலும் வெளிவந்திருந்தது.

கலவரம்

அன்று இரவு பொலிஸ் பாதுகாப்புடன் பெரஹர பொரல்லையிலிருந்தும் கொள்ளுப்பிட்டியிலிருந்தும் வந்த ஊர்வலங்கள் மருதானையில் இணைந்துகொண்டு கொட்டாஞ்சேனை தீபதுத்தமாறாமய விகாரையை நோக்கி நகர்ந்தது. இதனை தடுத்து நிறுத்த கத்தோலிக்க தரப்பு மேற்கொண்ட சகல முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

குணானந்த தேரர் இந்த பெரஹரவில் பலவித ஆட்டங்களை சேர்த்துக்கொண்டார். தாள வாத்திய அணி, சாட்டையடி, புலியாட்டம், மரபான பேயாட்டம், தீ விளையாட்டு, வில் அம்பு தரித்தவர்கள், பெரிய உருவப்பொம்மை என பலதும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தன.

இதற்கிடையில் பெரிய உருவபொம்மை குறித்து மின்னல் வேகத்தில் ஒரு வதந்தி பரவியது. அதாவது ஒரு குரங்கொன்றை சிலுவையில் அறைந்து ஊர்வலமாக கொண்டு வருகிறார்கள் என்பதே அந்த வதந்தி. அன்னை மரியாளைக் கேலி செய்யும் பொம்மைகள் உள்ளன என்றும் பிழையான வதந்தி பரப்பப்பட்டிருந்தது. அதே சமயம் பெரஹரவைத் தாக்குவதற்காக கொட்டாஞ்சேனையில் கத்தோலிக்கர்கள் தயாராக இருந்தார்கள் என்று ஊர்வலத்தில் ஒரு புரளி கிளப்பிவிடப்பட்டிருந்தது. உடனடியாக பெரஹரவில் கலந்துகொண்டிருந்த பெண்களும் சிறுவர்களும் அகற்றப்பட்டார்கள். ஊர்வலத்தில் கற்களையும். பொல்லுகளையும் தாங்கியவர்கள் இடையில் இணைந்து கொண்டார்கள்.



IV.—1883.

THE KOTAHENA RIOTS.

REPORT

OF A

COMMISSION APPOINTED BY THE GOVERNOR

TO INQUIRE INTO

THE CAUSES WHICH LED TO THE RECENT RIOTS AT KOTAHENA.

Ordered by His Excellency the Governor to be Printed.

Colombo:
FRANK LUKER, ACTING GOVERNMENT PRINTER, CEYLON.
1883.

பெரஹர கொட்டாஞ்சேனையை நெருங்கியபோது திடீரென்று புனித லூசியாஸ் ஆலயத்தின் மணிகள் பலமாக அடிக்கத் தொடங்கியதும் அனைவரும் குழம்பிப்போனார்கள்.

பலர் தேவாலயத்தை சூழ்ந்தனர். அந்த மணியை யார் எதற்காக அடித்தார்கள் என்பதை பற்றி போலீசாரால் இறுதிவரை கண்டுபிடிக்க முடியவில்லை. அனால் அந்த ஒலி ஒரு பெரிய கலவரத்தையே உண்டு பண்ணியிருந்தது.

பரஸ்பர சந்தேகங்கள், ஊகங்கள், வதந்திகள், பய உணர்ச்சி, தூண்டுதல், எதிர்பாரா திடீர் சம்பவங்கள் எல்லாம் சேர்ந்து ஆளையாள் கொலைவெறிகொண்டு தாக்கிக்கொள்ளச் செய்தது. கட்டுப்படுத்துவதற்காக அழைக்கப்பட்டிருந்த இராணுவத்தினர் வந்து சேர்ந்த போது அனைத்தும் ஓய்ந்திருந்தன. இந்த கலவரத்தில் பௌத்த தரப்பை சேர்ந்த ஜூவன் நைதே என்பவர் கொல்லப்பட்டார். 30 பேர் மோசமான காயத்துக்கு உள்ளானார்கள். அதே நாள் பலாங்கொட, கண்டி போன்ற இடங்களிலும் அசம்பாவிதங்கள் நடந்திருக்கின்றன. அன்றைய தேசாதிபதி கொட்டாஞ்சேனை விகாரைக்கு விரைந்து வந்து குணானந்த தேரருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் விளைவாக தொடர்ந்தும் 30ஆம் திகதி வரை பெரஹர நடத்த அனுமதி வழங்கப்பட்டது.

சம்பவம் நடந்த அடுத்தடுத்த நாட்களில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்த சிறு தேவாலயங்கள் தீயிடப்பட்டன. அதுபோல பௌத்த பெரஹரக்களும் குழப்பப்பட்டன. தீபதுத்தமாறாமய விஹாரையை கொளுத்தி குணானந்த தேரரை கொல்வதற்காக நீர்கொழும்பிலிருந்து 3000 பேர் வந்து கொண்டிருக்கிறார்கள் என்கிற வதந்தியும் வேகமாக பரப்பப்பட்டிருந்தது. இந்த சம்பவத்தை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட குழு அறிக்கையை வெளியிட்டதோடு சரி. இந்த சம்பவத்துக்காக எவரும் கைது செய்யப்படவோ தண்டிக்கப்படவோ இல்லை. குணானந்த தேரர் பௌத்தர்களை மத ரீதியில் தூண்டுவதற்கு எப்படிப்பட்ட பிரசாரங்களை எல்லாம் மேற்கொண்டார் என்பதற்கு அதன் பின் வெளிவந்த அவரது வெளியீடுகளே சாட்சி.

கொட்டாஞ்சேனை சந்தியில் சில வருடங்களுக்கு முன்னர் குணானந்த தேரருக்கு சிலை அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

புலமைப் பரிசில் மாணவர்களை ஊக்குவிக்கும் கொழும்பு கல்வி அபிவிருத்தி மன்றம்

கொழும்பு கல்வி அபிவிருத்தி மன்றம் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் இரு அதிகாரிகளின் எண்ணக்கருவாக முகிழ்ந்து நாடளாவிய ரீதியாக விரிந்த ஒரு மாணவர்களுக்கு உதவும் அமைப்பு. புலமைப் பரிசில் தேர்வில் மாணவர்களுக்கு கைகொடுக்கும் அமைப்பாகத் தோன்றி வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்த அமைப்பு சமீபத்தில் காத்தான்குடியில் அமர்வொன்றை நடத்தியது. மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் இரண்டு சிரேஷ்ட அதிகாரிகள்தான் சமூகத்தைப் பற்றி அன்று கலந்துரையாடினர். அதில் ஒருவர் இன்று நம் மத்தியில் இல்லாவிட்டாலும் அவரைப்பற்றி பெருமையாக பேசப்படுகிறது. அவர்தான் இம்மன்றத்தின் செயலாளராக பணியாற்றிய மர்ஹூம் எஸ்.எம். அமீர்தீன். அவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டவர்கள்தான் இன்றைய இம்மன்றத்தின் தலைவராக பணியாற்றிக் கொண்டிருக்கும் அண்மையில் குடிவரவு குடியகல்வு திணைக்கள சேவையில் இருந்து ஓய்வுபெற்ற கலாநிதி எஸ்.எல். மன்சூர். சிறுவர், சிறுமியர்களின் நலன்கருதி இவ்வமைப்பு அன்று 2000 ஆம் ஆண்டில் எஸ்.எல். மன்சூர், எஸ்.எம். அமீர் தீன், எம்.இஸட். அஹமட் முனவ்வர், முஹம்மது ரபீக், ஏ.எம். அன்ஸார் போன்றவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது என்று மட்டக்களப்பு அரச அதிபர் குறிப்பிட்டார்.

(படங்கள் : மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

இவ்வமைப்பின் முதல் கௌரவிப்பு விழா 2000 ஆம் ஆண்டில் 137 மாணவர்களுக்காக கொழும்பில் சிறப்பாக நடைபெற்றது. கல்வி அபிவிருத்தி மன்றம் கொழும்பு நகரில் வசிக்கும் மாணவர்களுக்காக அதன் சேவையை ஆரம்பித்து வருடத்திற்கு ஒரு கருத்தரங்கு, ஒரு மாதிரிப் பரீட்சை என்பவற்றை மாத்திரம் நடத்தி அதன் பணியை ஆரம்பித்தது. அது கௌரவிக்கும் மாணவர் தொகை 2008 இல் 1450 ஆக உயர்ந்து அது 2010 இல் இரண்டாயிரத்தை தாண்டியது. கடந்த 17 ஆண்டுகளில் சுமார் 30,000 ஆயிரம் மாணவர்களை பாராட்டி பரிசளித்து, பதக்கம் அணிவித்து கௌரவித்துள்ளது இம்மன்றம். ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்காக தொடரான ஒரு சேவையை செய்துவரும் ஒரு அமைப்பாக இந்த கல்வி அபிவிருத்தி மன்றத்தை குறிப்பிடலாம். இம்முறை கல்வி அபிவிருத்தி மன்றம் அதன் பரிசளிப்பு நிகழ்வுகளை ஹட்டன், மடவல பஷார், ரம்புக்கனை, பாணந்துறை, கொழும்பு, அக்கரைப்பற்று, பதுளை, சாய்ந்தமருது, காத்தான்குடி ஆகிய இடங்களில் சிறப்பாக நடத்தி மாணவர்களை உற்சாகப்படுத்தி கௌரவித்தது.

எம்.கே.எம். அஸ்வர் ...✍

2022 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல் மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் முகாமைச்சபை

2022 ஆம் ஆண்டிற்கான ''வழங்குநர்களை பதிவு செய்வதற்காக'' விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக தகவலுக்காக கீழே வழங்கப்பட்டுள்ள இணைப்பை தயவு செய்து பார்வையிடவும்.

மூடும் திகதி: 2022.01.26 ஆம் திகதியாகும்.

https://www.moj.gov.lk/images/2022/sccbm.pdf

மார்ஷல்,
மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் முகாமைச்சபை,
த.பெட்டி 223, ஹல்ஸ்டோர்ப் வீதி,
கொழும்பு-12.

தொலைபேசி இல.: 011-2437501

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

குருநாகல் மாவட்டத்தில் முன்மொழியப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகத்தினைத் தாபிப்பதற்காக கட்டடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு

விலைக்கோரல் இலக்கம்	FMD/MTN/T2 /2022/01
விலைக்கோரல் விபரம்	குருநாகல் மாநகர எல்லைக்குள் ஏறத்தாழ 5,000 சதுர அடியைக் கொண்ட அலுவலகக் கட்டடமொன்றையும் குருநாகல் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து 10 கிலோமீற்றர் தொலைவினுள் ஏறத்தாழ 1,750 சதுர அடி கொண்ட பிரதேச முகாமையாளரின் வதிவிட இல்லமொன்றினையும் வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு
ஆர்வத்தை வெளிப்படுத்துதலை மூடுதல்	**மூடும் திகதி:** 2022 சனவரி 26 **மூடும் நேரம்:** 1500 மணி **முகவரி :** பணிப்பாளர், வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல.30, சரணங்கர மாவத்தை, கொழும்பு 01
ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பிற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல்	ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பின் பெறுபேறுகள் 2022 சனவரி 26 அன்று 1500 மணிக்கும் பிற்றாது fmd@cbsl.lk மற்றும் proc.fmd@cbsl.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யப்படவேண்டும்.

மேலதிகத் தகவல்களுக்கு, **https://www.cbsl.gov.lk/en/tenders** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும் அல்லது 011-2477208 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பராமரித்தல் மற்றும் கருத்திட்டப் பொறியியலாளரைத் தொடர்புகொள்ளவும்.

பணிப்பாளர், வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி

பெருந்தோட்ட அமைச்சு
இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

தேயிலை வைன் உற்பத்திக்காக ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள்

தேயிலை ஆராய்ச்சி நிறுவனமானது (TRI) இலங்கையின் தேயிலை கைத்தொழிலுக்கான ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரே அரச நிறுவனமாகும்.

தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பெறுமதி சேர்க்கப்பட்ட புதிய உற்பத்திகளுக்கிடையில் பேடன்ட் உரிமத்தைப் பெற்ற தேயிலை வைன் உற்பத்தி செயற்பாட்டை (பேடன்ட் இல. 13621) வர்த்தகமயப்படுத்துவதற்கு வாய்ப்பு உருவாகியுள்ளது.

Ceylon Tea Wine a dry red which contains 12% (V/V alcohol is rich in its unique taste with medium body and soft tannins carrying pronounced tea aroma with sweet smell of delicate black BOP.

இதற்கான இயைபுடைய விண்ணப்ப மாதிரிகள் மற்றும் சகல விபரங்களை உள்ளடக்கிய EOI ஆவணங்களுக்கு https://www.tri.lk/tenders எனும் இணைய தளத்திற்குப் பிரவேசித்து இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

விசாரணைகளுக்கு: முகாமையாளர், தொழில்நுட்ப பரிமாற்ற அலுவலகம் +94 718501298/ +94 777248011
இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், சென் கூம்ஸ் தோட்டம், தலவாக்கலை.
techtransfer.tri@gmail.com

இலங்கை துறைமுக அதிகாரசபை

பதவி வெற்றிடங்கள்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் (ECT) 11 ஆம் கட்ட முகாமைத்துவ செயற்றிட்ட அலகிற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையின் மீது வேண்டப்படும் தகைமைகளையுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி : சிரேஷ்ட்ட ஒப்பந்த நிருவாக மற்றும் உரிமை கோரல் முகாமைத்துவ பொறியியலாளர்
(SENIOR CONTRACT ADMINISTRATION AND CLAIM MANAGEMENT ENGINEER)

(அ) சம்பளம்
பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

(ஆ) தகுதித்திறன்

(1) கல்வி மற்றும் தொழில் சார் தகைமைகள்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் BSc (சிவில்) பட்டமொன்று.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் துறையில் BSc பட்டத்திற்கு சமனான தகைமைகள்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட குறித்த துறை சார்ந்த அங்கத்துவம் / அதற்கு சமனான தொழில்சார் தகைமை.

அத்துடன்

அனுபவம்
ஒப்பந்த மேற்பார்வை/ உரிமை கோரல் முகாமைத்துவ பொறியியலாளரொருவராக சேவையாற்றி பெற்றுக் கொண்ட இரண்டு (02) வருட முனைப்பான அனுபவம் உட்பட தகைமைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஆகக் குறைந்தது பன்னிரண்டு(12) வருட முகாமைத்துவ மட்டத்தின் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(11) கல்வி மற்றும் தொழில் சார் தகைமைகள்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் BSc (சிவில்) பட்டமொன்று.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் துறையில் பட்டத்திற்கு சமனான தகைமைகள்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட குறித்த துறை சார்ந்த அங்கத்துவம் / அதற்கு சமனான தொழில்சார் தகைமை.

மற்றும்

குறித்த துறையில் பட்டப்பின் படிப்பு அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பட்டய அங்கத்துவம் அல்லது அதற்கு சமமான தொழில்சார் தகைமைகள்.

அத்துடன்

அனுபவம்
ஒப்பந்த மேற்பார்வை / உரிமை கோரல் முகாமைத்துவ பொறியியலாளரொருவராக சேவையாற்றி பெற்றுக் கொண்ட இரண்டு(02) வருட முனைப்பான அனுபவம் உட்பட தகைமைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஆகக் குறைந்தது ஒன்பது(09) வருட முகாமைத்துவ மட்டத்தின் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு: பொறியியலாளர் பதவி தொடர்பில் பொறியியல் சார்ந்த (A Eng) வகையீடு அல்லது அதற்கு மேற்பட்ட வகையீட்டின் கீழ் இலங்கை பொறியியல் கவுன்சிலில் (ECSL) பதிவு செய்திருத்தல் கட்டாயமாகும்.

2. பதவி : வடிவமைப்பு பொறியியலாளர் (சிவில்)
(DESIGN ENGINEER (CIVIL))

(அ) சம்பளம்
பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

(ஆ) தகுதித்திறன்

(1) கல்வி மற்றும் தொழில் சார் தகைமைகள்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் BSc (சிவில்) பட்டமொன்று.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் துறையின் பட்டத்திற்கு சமனான தகைமைகள்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட குறித்த துறை சார்ந்த அங்கத்துவம் / அதற்கு சமனான தொழில்சார் தகைமைகள்.

குறிப்பு:
1. பொறியியலாளர் பதவி தொடர்பில் பொறியியலை சார்ந்ததான வகையீடு (A Eng) அல்லது அதற்கு மேற்பட்ட வகையீட்டின் கீழ் இலங்கை பொறியியல் கவுன்சிலில் (ECSL) பதிவு கட்டாயமாகும்.
2. வடிவமைப்பு அலுவலகமொன்றில் வடிவமைப்பு பொறியியல் பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஒரு (01) வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. இரண்டாம்(02) ஆம் வகுப்பில்(உயர்) அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியுடன் சிவில் பொறியியல் பட்டமொன்று பெற்றிருத்தல் விஷேட தகைமையொன்றாக கருதப்படும்.

3. பதவி : பொறியியலாளர் (சிவில்) (ENGINEER (CIVIL))

(அ) சம்பளம்
பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

(ஆ) தகுதித்திறன்

(1) கல்வி மற்றும் தொழில் சார் தகைமைகள்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் BSc (சிவில்) பட்டமொன்று.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் துறையின் பட்டத்திற்கு சமனான தகைமைகள்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட குறித்த துறை சார்ந்த அங்கத்துவம் / அதற்கு சமனான தொழில்சார் தகைமைகள்.

குறிப்பு: பொறியியலாளர் பதவி தொடர்பில் பொறியியலை சார்ந்ததான வகையீடு (A Eng) அல்லது அதற்கு மேற்பட்ட வகையீட்டின் கீழ் இலங்கை பொறியியல் கவுன்சிலில் (ECSL) பதிவு கட்டாயமாகும்.

4. பதவி : பொறியியலாளர் (மின்சாரம்/ முறைமைக் கட்டுப்பாடு)
(ENGINEER (ELECTRICAL / SYSTEM CONTROL)

(அ) சம்பளம்
பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

(ஆ) தகுதித்திறன்

(1) கல்வி மற்றும் தொழில் சார் தகைமைகள்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் BSc (மின்சாரம்) பட்டமொன்று.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மின்சார பொறியியல் துறையின் பட்டத்திற்கு சமனான தகைமைகள்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட குறித்த துறை சார்ந்த அங்கத்துவம் / அதற்கு சமனான தொழில்சார் தகைமைகள்.

குறிப்பு: பொறியியலாளர் பதவி தொடர்பில் பொறியியலை சார்ந்ததான வகையீடு (A Eng) அல்லது அதற்கு மேற்பட்ட வகையீட்டின் கீழ் இலங்கை பொறியியல் கவுன்சிலில் (ECSL) பதிவு கட்டாயமாகும்.

5. பதவி : அளவையியலாளர் (SURVEYOR)

(அ) சம்பளம்
பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

(ஆ) தகுதித்திறன்

(1) கல்வி மற்றும் தொழில் சார் தகைமைகள்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அளவை விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்று.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அளவை விஞ்ஞானம் பட்டத்திற்கு சமனான தகைமைகள்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பதிவு தொடர்பான அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் அளவையியலாளரொருவராக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

அனுபவம்
தகைமைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் நீரியல் அளவை ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பில் ஆகக் குறைந்தது ஒரு (01) வருட முனைப்பான அனுபவம் உட்பட உரிய துறையில் ஆகக் குறைந்தது எட்டு(08) வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

6. பதவி : படவரைஞர் (DRAUGHTSMAN)

(அ) சம்பளம்
பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

(ஆ) தகுதித்திறன்

(1) கல்வி மற்றும் தொழில் சார் தகைமைகள்
மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழினுட்ப / தொழில் சார் பயிற்சி நிலையமொன்றினால் வழங்கப்பட்ட படவரைதல் தொடர்பாக ஏழாம்(07) மட்டத்திற்கு குறையாத தேசிய தொழிற் தகைமை (NVQ 7) சான்றிதழ்.

அல்லது

(11) கல்வி மற்றும் தொழில் சார் தகைமைகள்
மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழினுட்ப / தொழில் சார் பயிற்சி நிலையமொன்றினால் வழங்கப்பட்ட படவரைதல் தொடர்பாக ஆறாம் (06) மட்டத்திற்கு குறையாத தேசிய தொழிற் தகைமை (NVQ 6) சான்றிதழ்.

மற்றும்

அனுபவம்
உரிய துறையில் ஆகக் குறைந்தது நான்கு(04) வருட அனுபவம் நிறைவு செய்திருத்தல்.

அல்லது

(111) கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்
மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழினுட்ப/ தொழில் சார் பயிற்சி நிலையமொன்றினால் வழங்கப்பட்ட படவரைதல் தொடர்பாக ஐந்தாம் (05) மட்டத்திற்கு குறையாத தேசிய தொழிற் தகைமை (NVQ 5) சான்றிதழ்.

அத்துடன்

அனுபவம்
பதவிக்குரிய துறையில் ஆகக் குறைந்தது ஒன்பது(09) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

குறிப்பு:- படவரைஞரொருவராக சிவில் உட்கட்டமைப்பு வசதிகள் செயற்றிட்டங்களில் ஒரு(01) வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

7. பதவி : தொழினுட்ப அலுவலர் (சிவில்/ மின்சாரம்) (TECHNICAL OFFICER (CIVIL/ELECTRICAL)

(அ) சம்பளம்
பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

(ஆ) தகுதித்திறன்

(1) கல்வி மற்றும் தொழில் சார் தகைமைகள்
மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழினுட்ப/ தொழில் சார் பயிற்சி நிலையமொன்றினால் வழங்கப்பட்ட பதவிக்குரிய தொழினுட்ப துறையில் ஏழாம் (07) மட்டத்திற்கு குறையாத தேசிய தொழிற் தகைமை (NVQ 7) சான்றிதழ்.

அல்லது

(11) கல்வி மற்றும் தொழில் சார் தகைமைகள்
மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழினுட்ப/ தொழில் சார் பயிற்சி நிலையமொன்றினால் வழங்கப்பட்ட பதவிக்குரிய தொழினுட்ப துறையில் ஆறாம்(06) மட்டத்திற்கு குறையாத தேசிய தொழிற் தகைமை (NVQ 6) சான்றிதழ்.

அத்துடன்

அனுபவம்
உரிய துறையில் ஆகக் குறைந்தது நான்கு (04) வருட அனுபவம் நிறைவு செய்திருத்தல் விஷேடமாகும்.

அல்லது

(111) கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்
மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழினுட்ப / தொழில் சார் பயிற்சி நிலையத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழினுட்ப / தொழில் சார் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட பதவிக்குரிய தொழினுட்ப துறையில் ஐந்தாம்(05) மட்டத்திற்கு குறையாத தேசிய தொழிற் தகைமை (NVQ 5) சான்றிதழ்.

அத்துடன்

அனுபவம்
பதவிக்குரிய துறையில் ஆகக் குறைந்தது ஒன்பது(09) வருட அனுபவம் நிறைவு செய்திருத்தல் விஷேடமாகும்.

கவனிக்க

மேலே பதவி தொடர்பில் விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளும் 45 வயதை விட குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை அரச துறை அல்லது அரச கூட்டுத்தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல.)

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் ''பிரதான மனிதவள முகாமையாளர், இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13'' என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2022.01.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சலில் (**chrm@slpa.lk**) அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.

சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்த அறிவித்தல் www.slpa.lk என்ற இணையத் தளத்திலும் பிரசுரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்களம் / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலே பதவிகளுக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் திணைக்களம் / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்

வேப்பிலைத் தோரணம்

எழில் கொஞ்சும் மலையகத்தின் எழிலுக்கு இலக்கணமாக அந்த தோட்டம் இயற்கை அழகில் செழிப்பாக காட்சியளித்தது. நான்கு புறங்களிலும் எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென தேயிலைச் செடிகள். இடையிடையே சவுக்கு மரங்கள். அம்மரங்கள் செழித்து வளர்ந்து படர்ந்து பூத்துக் குலுங்கி அழகாகக் காட்சியளித்தது. மதிய நேரக் கடும் வெயில் தகதகவென ஜொலித்தாலும் செடிகளிலும் இலைகளிலும் தண்டுகளிலும் மலர்களிலும் பட்டுத்தெறிக்கும் வெயில் பெரிதாக வெப்பத்தைக் காட்டவில்லை.

மதிய நேர சாப்பாட்டு வேளைக்காக வீட்டுக்குத் திரும்பிய சிவகாமி முன் கதவு திறந்து கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டாள். ஒரு சந்தேகத்தோடு வீட்டுக்குள் நுழைந்தவளுக்கு கணவன் பொன்னையா கண்மண் தெரியாமல் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். கவ்வாத்து மலைக்கு காலையில் வேலைக்குப் போன கணவன் உடல் அலுப்பால் தூங்குவதைக் கண்டு சிவகாமிக்கு வருத்தமாக இருந்தது.

"பாவம் ..... அசந்து தூங்குகிறாரு... தூங்கட்டும்.... சரக்குப்பொடி போட்டு ரசம் வச்சுக் கொடுக்கணும்... இல்லாட்டி அலுப்புக் காய்ச்சல் வந்திடும்" என்று தனக்குள்ளே கூறிக்கொண்டு சமயலறைக்குள் நுழைந்தாள். அடுப்பை மூட்டி விட்டு பாத்திரங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு பீலியடிக்குச் சென்றாள். பகல் நேரத்தில் தண்ணீர் பிடித்துக் கொள்ளாவிட்டால் அந்தி வரை காத்திருக்க வேணும். பீலிக்கரையில் ஒரே கூட்டமாய் பெண்கள் குழுமி நின்றார்கள். எல்லோருக்கும் இதுதானே தண்ணீர் நிரப்பிக் கொள்ளும் நேரம், சிவகாமியும் ஒருவாறு தனது பாத்திரங்களையும் கழுவிக் கொண்டு குடத்திலும் நிரம்பிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள். அடுப்பில் வைத்திருந்த தண்ணீர்க் கேத்தல் கொதித்து கொட்டி விட அடுப்பு முழுமையாக நனைந்து கிடந்தது.

ஒருவாறு அடுப்பையும் சரிசெய்து விட்டு தானும் தேநீர் ஊற்றிக் குடித்துவிட்டு சமைக்கத் தொடங்கினாள். அத்தோடு கணவனுக்கு ரசமும் வைத்தாயிற்று. "என்னங்க... என்னங்க எழுந்திருங்க.... இந்தாங்க இந்த ரசத்தைக் குடிச்சிட்டு காலு மேள அலம்பிக்கிட்டு டவுனுக்கு ஒருக்கா போயிட்டு வாங்க... நாளைக்கு பொங்கல் வருதில்ல... பொங்க வைக்கணுமில்ல..." என்றவாறு கணவனிடம் ரசக் கோப்பையை நீட்டினாள்.

சோம்பல் முறித்தவாறு எழும்பிய பொன்னையா... சரியான கஸ்டமா இருக்குபுள்ள சின்னதொரையும் பெரிய தொரையும் பின்னுக்கே நின்னாங்க. புதுமல கவ்வாத்து புள்ள... உனக்குத் தான் தெரியுமே. இடுப்பு ஒடஞ்சிப் போச்சு." ..

"சரி சரி ரசத்தைக் குடிங்க. அலுப்பு மருந்து போட்டிருக்கேன்.. எல்லாம் சரியாப் போயிடும்".

சிவகாமி இப்படிச் சொல்ல, "அது சரி புள்ள பொங்கல் எட்வான்சு பத்தாதே... மத்த மத்த சாமான்கள எப்படி வாங்குறதாம்?". பொன்னையா புருவத்தை உயர்த்த "உங்க அம்மாவூட்டு கடுக்கனையும்.. என்னோட தோடையும் மூக்குத்தியையும் கழட்டி சுத்தி வச்சிருக்கேன்.. அதுகள ஈடு வச்சிட்டு மத்த சாமான்களை வாங்கிட்டு வாங்க.. என்ன எந்த நாளுமா பொங்கல கொண்டாடப் போறோம்.... நாளைக்கு மட்டுந்தானே.. அதுதான் அடுத்தடுத்த மாசத்துல போனஸ்சு காசும் வருமே, அப்போ எல்லாத்தையும் திருப்பிக்குவோம்" சிவகாமி சொன்னது அவனுக்கும் சரியாகத்தான் பட்டது.

இந்த மலையகத்தைப் பொருத்த வரை என்னதான் கஸ்டங்கள் இருந்தாலும் தமிழர்களின் பாரம்பரிய கொண்டாட்டங்களை இவர்கள் கைவிடுவதே இல்லை. இங்கு இது ஒரு சிறப்பு, தோட்டத்தில் இதற்காக முற்பணம் கூட வழங்கப்படுகிறது. இருந்தாலும் இன்றைய விலைவாசியைப் பொருத்த வரை இந்தச் சொச்சம் அவர்களுக்குப் போதாது. ஆகையால் நகை நட்டுகளை ஈடுவைத்தாவது அல்லது வட்டிக்கு பணம் வாங்கியாவது, அல்லது ஏதாவது ஒரு வகையால் கடன்பட்டாவது இந்தக் கொண்டாட்டங்களை கொண்டாடி மகிழ்வார்கள்.

தோட்டத் தொழிற்சாலையிலிருந்து ஒரு மணிக்கு சங்கு ஊதப்பட்டது. சங்கு நாதத்தின் மூலம் தான் தொழிலாளர்களுக்கு வேலை நேரம் அறிவிக்கப்படுவது வழக்கம். சிவகாமி கணவனுக்கும் தேவையான அலுவல்களை தயார் செய்து விட்டு மீண்டும் கொழுந்துக் கூடையோடு வெளியேறி விட்டாள். பொன்னையா பகல் உணவை உண்டு விட்டு கடைக்குப் போக ஆயத்தமான போது பிள்ளைகள் மூவரும் பாடசாலை விட்டு வீடு திரும்பினார்கள்.

"அப்பா... அப்பா.. கடைக்காப்பா போகப் போறீங்க.. நானும் வாரேன் அப்பா..." சின்னவன் ரமேஸ் சொல்ல "நானும் வாரேம்பா..." உங்களுக்கு மட்டும் சாமான்கள தூக்கிட்டு வர கஸ்டமா இருக்குமில்ல..." பெரியவன் சுரேஷும் சொன்னான். "சரி சரி சாப்பிட்டுவிட்டு பயணமாகுங்க என்றவன் மகளைப் பார்த்து ஏம்மா நீ பேசாம இருக்க. நீ வரல்ல?". என்றான்.

"முடியாதப்பா... எனக்கு ஸ்கூல் வேலை நிறைய கெடக்கு. தம்பிகளை கூட்டிக்கிட்டுப் போங்க" என்றாள் மகள் பிரியா.

பொன்னையா இதே தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவன். இவன் மட்டுமல்ல; இவன் அப்பா, தாத்தா என்று இவர்கள் பரம்பரைக்கே இங்குதான் பிறப்பிடம். குடும்பத்தில் பொன்னையா மட்டுந்தான் ஆண் பிள்ளை. அவனோடு கூடப் பிறந்த சகோதரிகள் மூவர். அவர்கள் மூவரும் வேறு வேறு இடங்களுக்கு திருமணம் முடித்து போய் விட்டார்கள். இவனுக்கு பதினெட்டு வரும்போதே தோட்டத்தில் பேர் பதிந்து விட்டார். அவன் தந்தை வீராசாமி. தோட்டத் தொழிலுக்கு அனுப்புவதை 'பேர் பதிதல்' என்றுதான் கூறுவது வழக்கம். ஒரு வருடம் தான் வேலை செய்திருப்பான். மறுவருடமே அவனுக்கு கலியாணமும் நிச்சயிக்கப்பட்டது. அவன் அப்பா வீராசாமியின் உறவுப் பெண்ணான சிவகாமியை நிச்சயித்தார்கள்.

ஆரம்பத்தில் அவன் அதை விரும்பவில்லை. அதே தோட்டத்தில் சின்ன காலத்திலிருந்து வாழ்ந்து வந்த அடுத்த வீட்டு சுகுமாரியைத்தான் அவன் விரும்பினான். அவளையே காதலித்தான். சுகுமாரி கறுப்பு என்றாலும் எழிலானவள், எடுப்பானவள். ஆனால் அவளை அவன் பெற்றோருக்கு பிடிக்கவில்லை. அவர்களை எதிர்த்து நிற்க முடியாமல் வேறு வழியின்றி சிவகாமியை மனைவியாக ஏற்றுக்கொண்டான். கால ஓட்டத்தில் மூன்று பிள்ளைகளுக்கு தந்தையானான் பொன்னையா. மூத்தவள் ப்ரியா. ரமேஷும் சுரேஷும் இளையவர்கள். மூவரையும் தோட்டப் பாடசாலைக்கே படிக்க அனுப்பினான். இப்போதெல்லாம் பிள்ளைகளின் சந்தோசமே தம் சந்தோசம் என இருவரும் நினைத்தார்கள். பிள்ளைகளை நல்ல இடத்துக்கு கொண்டு வரவேண்டுமென்று கடுமையாக பாடுபட்டு உழைத்தார்கள். தோட்ட வேலைகளோடு மாடு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு என்று எதையுமே விட்டு வைக்கவில்லை. பன்னிரண்டு காம்பறா லயம் என்றாலும் தன் வீட்டை மிகவும் அழகாக வைத்திருந்தான் பொன்னையா.. அதே போல் மனைவிக்கும் மகளுக்கும் நகை நட்டுகளையும் செய்து வைத்திருந்தான். அவனது உழைப்பையும் முன்னேற்றத்தையும் கண்டு ஏனையோர் பொறாமைப்பட்டார்கள்.

மாலைப் பொழுது மங்கி இரவு நேரத்தை கவ்விக் கொண்டிருந்தது. வேலை முடித்து வீடு திரும்பிய சிவகாமிக்கு பெருமையாக இருந்தது. அவள் வருவதற்கிடையில் பாதி வேலைகளை மகள் முடித்து வைத்திருந்தாள்.

"எங்கம்மா தம்பி ரெண்டு பேரும்?" ..

"அப்பாவோட கடைக்கு போயிட்டாங்க"..

அப்போ உங்கப்பாவுக்கு திண்டாட்டம் தான்... சரி நீ போயி ஸ்கூல் வேலைகளைப் பாரு..." என்று மகளை அனுப்பிவிட்டு வீட்டு வேலைகளில் மூழ்கிப் போனாள்.விடிந்தால் தைப் பொங்கல். அந்த தோட்டமே களைகட்டும். முப்பது நாள் பஜனை வேறு, நாளை இராம பிரானை ஏந்திய சப்பரமும் வலம் வரும். ஒரே கொண்டாட்டம் தான். சற்று நேரத்தில் கணவனும் பிள்ளைகளும் வீட்டுக்குள் நுழைந்தார்கள், "அம்மா.. அம்மா பொங்கல் இல்லையாம்.." பிள்ளைகள் இருவரும் சலிப்போடுச் சொல்ல சிவகாமி ஆச்சரியத்தோடு கணவனைப் பார்த்தாள்.

"என்னங்க... சிவகாமி என்னங்க என்னாச்சி... ஏன் ஒரு மாதிரியா வாரீங்க... ஏதாவது பிரச்சினையா...?"

"இல்ல புள்ள நாம் பொங்கலைக் கொண்டாடக் கூடாதாம்... கொரோனா கூடிப் போச்சாம். நம்ம தோட்டத்துல விசேசமா கொண்டாடப் போறாம்னு யாரோ சுகாதார கந்தோருக்கு பெட்டிசன் வேற போட்டிருக்காங்கலாம். நாளைக்கு சுகாதார அதிகாரிகளும், பொலிசும் நம்ம தோட்டத்துக்கு வருதாம்.. டவுனுல பேசிக்கிட்டாங்க..." பொன்னையா கூறியதை ஆச்சரியத்தோடு கேட்டுக்கொண்டிருந்த சிவகாமி,

"என்னங்க இப்படி ஒரு கல்லத்தூக்கி போட்டுட்டீங்க" என்றாள்.

"இல்ல புள்ள... இது நமக்கு மட்டுமில்ல.. எல்லோருக்கும் தான். சரி விடு புள்ள... பொங்கல இந்தமுறை இல்லாட்டி அடுத்த முறையாவது கொண்டாடிக்கலாம்.. சரி சரி.. நீ வீட்ட துப்புறவு பண்ணிட்டு மஞ்சத்தண்ணி தெளி... நான் மேட்டு லயத்துக்கு போய் குப்புசாமி அண்ண வீட்டுல கொஞ்சம் வேப்பிலை ஒடிச்சுக்கிட்டு வாரேன்.." என்று பொன்னையா புறப்பட்டுச் செல்ல சிவகாமி அப்படியே அசந்து போய் நின்றாள்...

"அம்மா... அம்மா விடுங்கம்மா... அடுத்த வருசமாவது பொங்கல பொங்குவோம்... இப்போ இந்த கொரோனாவை வெறட்டப் பாப்போம்" என்று மகள் பிரியா சொல்ல. ரமேஷும் சுரேஷும் அதை ஆமோதிப்பது போல் தலையசைக்க அவளுக்கு கண்ணீர் பீறிட்டு வந்தது. "அம்மா மாரியாத்தா 16 தான் எல்லோரையும் காப்பாத்தனும்" என்று தனது பிள்ளைகள் மூவரையும் அப்படியே அணைத்துக் கொண்டாள்.

வீட்டுக்கு முன்னால் மாவிலை தோரணம் போட்டு அலங்கரிப்பதற்கு பதிலாக வேப்பிலைக் கொத்து உள்ளேயும் வெளியேயும் கட்டப்பட்டது. மாக்கோலம் போட இருந்த நேரத்தில் மஞ்சள் தெளிக்க வேண்டியதாயிற்று. வெட்டி வைக்கப்பட்டிருந்த செங்கரும்பு வாடிப்போய் எறும்புகள் மொய்க்கத் தொடங்கின.

பசறையூர்
ஏ.எஸ். பாலச்சந்திரன் ...✍

மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 06



திரு/திருமதி.செல்வி .....
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி .....
.....
.....
....
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :06

இடமிருந்து வலம்
(01) காலைக்கதிரவனின் தோற்றம்.
(06) அன்புசார்ந்த இரக்க உணர்வு.
(07) பாடல்.
(08) சௌக்கியம்.
(10) எரியூட்டல்.
(12) நிலத்தில் காணப்படுவது.
(14) உயரத்தில் குறைந்தவரை இப்படியும் சொல்வர். (குழம்பியுள்ளது)
(15) இசையுடன் தொடர்புடையது. (குழம்பியுள்ளது)
(17) பிறரை கவரும் தன்மை. (குழம்பியுள்ளது)
(20) முன்னேற்றம் அல்லது உயர்வு.
(21) இது ஒரு வெற்றித் திரைப்படம்.
(23) வலி நிவாரண பூச்சு மருந்து.
(24) இதுவும் ஒரு பறவை

மேலிருந்து கீழ்
(01) நுட்பம்.
(02) அதிர்ஷ்ட நிலை என்றும் சொல்லலாம்.
(03) துணையின்மை.
(04) இரக்கத் தன்மை. (குழம்பியுள்ளது)
(05) வட்டத்தின் குறுக்களவு. (குழம்பியுள்ளது)
(07) பொன்.
(09) ஓர் உறுப்பு.
(11) அங்காடி.
(13) சேர்த்து ஒன்றாக்கியிருந்தாலும் குழம்பிக் காணப்படுகிறது.
(15) மன இயல்புத் தன்மை. (குழம்பியுள்ளது)
(16) சிசுவின் தோற்றம் இங்கேதான். எழுத்தாளனுக்கும் இது தேவை. (தலைகீழ்)
(17) அறம், நல்லொழுக்கம். (குழம்பியுள்ளது)
(18) பாம்பு வகைகளுள் ஒன்று. (தலைகீழ்)
(19) ஊதியம்.
(20) அறிஞன்.
(22) ஒருவகை மீன்.

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 05

விடைகள்

இடமிருந்து வலம்

01. தைமாதம்	03. சோகம்	06. மாரி
07. ஆறுதல்	08. சவால்	10. பலி
11. கபடம்	14. மதம்	15. துப்பு
16. சம்பவம்	18. பனை	19.விடுமுறை
22. பாண்	23. மாசு	24. குடை

மேலிருந்து கீழ்

01. குயில்	02. சாரதி	03. உன்
01. தைரியம்	02. மாமா	03. சோறு
04. கதலி	05. புலம்பல்	07. ஆல்
08. சபதம்	09. வாசகம்	12. மண்டபம்
13. தேனு	16. பாவனை	17. பவிசு
20. முடை	21. குறை	

பாராட்டு பெறுவோர்

1. ஹலீமா சித்தீக்கா அக்பர்,
25, சீத்தாகம (2),
குடாகம வீதி, அவிசாவளை.
2. திருமதி நிரோஜினி தனுஷியன்,
இல. 100/1, உடையார் வீதி,
காரைதீவு 02.
3. என்.கே. வேணி,
இல. 25/10, விஹாரை வீதி, பலாங்கொடை.
4. எம்.எஸ். மொஹமட் லியாவுதீன்,
இல. 12/6, சென். பீற்றர்ஸ் ஒழுங்கை,
நிந்தெனி,
புத்தளம்.
5. எம்.ஆர்.எப். அஸ்மா,
18/1, பதுர்லேன்,
கல்பொக்க,
வெலிகம.

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 04

பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு
சித்தி ஆயிஷா,
இல. 11/26A ரத்வத்த மாவத்தை,
பதுளை.

இரண்டாம் பரிசு
செ. கனகரெத்தினம்,
975, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

மூன்றாம் பரிசு
மல்லிகாதேவி பத்மநாதன்,
டெமேரியா குறூப்,
முதலாம் பிரிவு, பசறை.

பெண்கள் மது அருந்துவதற்கு காரணம் மன அழுத்தமே!

உடல்நலப் பிரச்சினைகளைத் தாண்டி மனநலப் பிரச்சினைகள் இன்று அதிகம் பேசப்படுபவையாக மாறியுள்ளன. மன அழுத்தத்தால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மன அழுத்தம் அதிகரிப்பதன் காரணமாக உடல் பருமன், நீரிழிவு நோய், இதய நோய்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அதிலும், குறிப்பாக கொரோனா காலத்தில் பெண்களுக்கு மன அழுத்தம் அதிகரித்துக் காணப்பட்டதாக பல்வேறு ஆய்வுகளிலிருந்து தெரியவருகின்றன.

இந்நிலையில் பெண்கள் அதிகமாக மது அருந்துவதற்கான காரணம் குறித்து அமெரிக்க ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் தொடர்பாக சைக்காலஜி ஆஃப் அடிக்டிவ் பிஹேவியர்ஸ்(Psychology of Addictive Behaviors) என்ற இதழில் வெளியிடப்பட்டுள்ளன.

அதில், பெண்கள் மது அருந்துவதற்கும், அதிகமாக மது அருந்துவதற்கும் காரணம் அவர்களின் மன அழுத்தம் மட்டுமே காரணம் என அந்த இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக ஆண்கள்தான், அதிக மன அழுத்தத்தில் இருந்தால் மதுவைத் தேடிச் செல்வார்கள். ஆனால், தற்போது பெண்களும் மன அழுத்தத்தில் இருந்தால் மது பழக்கத்தை நாடுவது அதிகரித்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சாதாரண பெண்களைவிட மன அழுத்தம் அதிகமாக இருக்கும் பெண்கள் அதிகமான மதுவைக் குடித்ததும், மன அழுத்தத்தை சரிசெய்யவே அதிகம் மது குடிப்பதாக அவர்கள் கூறியதும் குறிப்பிடத்தக்கது.

கசப்பு

கடந்த ஞாயிறு பொழுதில்,

வடபகுதித் தமிழ் வார இதழ்களைத் தவிர்த்து தலைநகரில் வெளியாகும் அனைத்து வெளியீடுகளையும் புரட்டிக்கொண்டிருந்த பொழுது **ஒரேயொரு இதழில் மட்டும்** இலக்கியப் பிரியர்களுக்கு இனிப்புச் செய்தி ஒன்று இருந்தது. ஒருவேளை இன்றைய ஞாயிறு வெளியாகி இருக்கலாம்.

எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவை நாடளவிய ரீதியில் **கவிதை மற்றும் சிறுகதை** போட்டியை நடத்த திட்டமிட்டுள்ளது.

அந்த வகையில்,

15வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இந்தப் போட்டிகளில் பங்கேற்க முடியும்.

தங்களது சொந்த படைப்பாகவும் முன்னர் வேறு எதிலும் வெளிவராததாகவும் இருக்க வேண்டும். பெண்களை மையக் கருவாகக் கொண்டு கவிதை மற்றும் சிறுகதை எழுதப்பட வேண்டும்.

சிறுகதை 1000 சொற்களுக்குள் அமைய வேண்டும். (ஏ4 பத்து பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.)

கவிதை 40 அடிகளுக்குள் அமையலாம். (ஏ4 மூன்று பக்கங்களுக்குள்)

தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கவிதை மற்றும் சிறுகதைகளை எழுத முடியும்.

முடிவுத் திகதி : பெப்ரவரி 15

போட்டி ஒருங்கிணைப்பாளர், முஸ்லிம் சேவை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், த.பெ.இலக்கம் 574, கொழும்பு 7 அல்லது slbcmuslimservice@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

மேலே காணப்படும் செய்தியில் நிறைய இனிப்புகள். இருந்தாலும் கசப்புகளும் உள்ளனவே!

★ஒரு போட்டி என்று ஏற்பாடு செய்தால் செய்தி வெளியிட்டால், பரிசு விவரங்கள் தெரிவிப்பது கடமை அல்லவா? அதாவது, எத்தனை பரிசுகள், பணமாகவா? பாடசாலை அப்பியாசப் புத்தகங்களா? அல்லது வேறெதுவும் பொருட்களா?

போட்டியை நடத்துவது வானொலி முஸ்லிம் சேவை. அது தமிழில் மட்டுமே ஒலிபரப்பாகிறது.

அப்படியானால் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் படைப்புகளை அனுப்பலாம் என்று கூறப்படுகிறது. இது ஏன்?

★ '15 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் பங்கேற்க முடியும்' என்றால் ஆண் வாலிப சிங்கங்கள் அம்போவா? இப்படி ஒரு நிபந்தனையைப் போடுவதால் ஆண்கள் பங்கேற்க இயலாது என்று அர்த்தப்படுகிறதே...? "15 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் பங்கேற்கலாம்" என்று பதித்திருந்தால் பளிச்! மண்டைப்பாரம் ஏற்படாதே...!?

கடைசியாகக் குறிக்கப்போவது தான் மிகுந்த கவலையைத் தருகிறது.

போட்டி நடத்தப்போகிற முஸ்லிம் சேவை, கவிதையையும் கதையையும் மட்டும் சேர்த்துக் கொண்டு **நாடகத்தை மட்டும் கைகழுவி விட்டது புதிரோ புதிர்!** அந்தத் துறை 'ஹராம்' (விலக்கப்பட்டது) என மறைமுகமாகத் தெரிவிக்கப்படுகிறதா? அதுவும், நாடக ஆர்வலர்கள் சிலர் ஐம்பதாயிரம் ரூபாய் வரையில் பரிசுத் தொகை வழங்குவதாக பரிசுத் தொகை வழங்குவதாக நேரில் தெரிவித்த பிறகும்...? நாடக எழுத்தாளர்கள், கலைஞர்களின் கண்ணீரே காணிக்கை!

இனிப்பு 1

தமிழக இந்துப் பெருமக்களுக்கு இந்த ஆங்கில ஜனவரி பிறந்தாலே தைப் பொங்கலும், பழனி முருகன் தரிசனமும், மலையாளக் கரையோர சபரிமலை ஐயப்பன் தரிசனமுமே இனிப்பு

இனிப்பாக சுவைக்கும்.

இம் மூன்றிலும் ஒன்றில் தொக்கி நிற்கும் இன்னுமொரு இனிப்பை இங்கே ருசியுங்கள்.

சுவாமி ஐயப்பனைத் தரிசிக்கச் செல்வோர் முதலில் தரிசிப்பது எருமேலிப் பேட்டை **'வாவர் தர்ஹா'**வையே!

இது, ஒரு முஸ்லிம் மகானின் அடக்கத் தலத்தைக் கொண்டுள்ள சிறு பள்ளிவாசல்.

இங்கே, 'வாவர்' என்ற பெயர் கொண்ட ஒரு முஸ்லிம் ஞானி (அவுலியா' அறபு மொழியில்) நிஷ்டையில் உள்ளார். அதாவது, நிரந்தரமான ஓய்வுறக்கம்.

இந்தப் பள்ளிவாசல் பாதை வழியே தான் மலையேறி ஐயப்ப சுவாமிகளைத் தரிசிக்கவேண்டும்.

தனது ஆயிரமாயிரம் பக்த சிகாமணிகளுக்கு ஐயப்ப சுவாமிகள் இட்டிருக்கும் கட்டளை" என்னைக் காண்பதற்கு முன் வாவர் மகானைக் கண்டு விட்டே வர வேண்டும்!"

இது கற்பனையே அல்ல. வரலாற்றுப் பதிவு.

பாரம்பரியமாகப் பக்த கோடிகள் கடைப்பிடித்துத் தொழுவது.

இதற்காக அவர்கள் "வாவர் பள்ளிவாசல்" நீர்த்தடாகத்தில் ('ஹவுள்' என அறபு மொழில் சொல்லப்படுகிறது) கை – கால் முகம் சுத்தம் செய்து கொண்டு, (இதை, அறபில் 'உலூ' என்பர்) அங்கே நிரந்தர நிஷ்டையில் (ஓய்வுறக்கத்தில் இருக்கும் வாவர் மகானுக்கு நினைவஞ்சலி செலுத்தி விட்டுப் சபரிமலை செல்லப் படியேறுவர்.

மேற்குறித்த நீர்த்தடாகத்தில் கை, கால் முகம் சுத்தம் செய்வதற்கும் காரணம் ஒன்றுண்டு.

இஸ்லாமிய மார்க்கத்தில் முதற்படிப்பினை தூய்மை. இறைவணக்கத்திற்கு (தொழுகை) முன் தூய்மைப்படுத்தல் அத்தியாவசியமாக்கப்பட்டுள்ளது.

அது போலவே பள்ளிவாசல் (மசூதி) ஒன்றில் நுழைய முன் தன் உடல் அவயங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

ஆகவே ஐயப்பப் பக்தர்களும் அதைச் செய்து கொண்டு தான் வாவர் மகானுக்கு அஞ்சலி செலுத்துகின்றார்கள்.

அம்புலப்புழை, ஆழங்காடு ஊர்களின் சங்க அங்கத்தவர்களும் பக்தர்களும் வாவர் பள்ளிவாசல் முன்றலில் கொடியேற்று வைபவம் நடத்தி மகானுக்கு நினைவேந்தல் அஞ்சலி செய்து சிறப்பிப்பார்கள்.

அதன்பின் பாரம்பரியப் பெருவழிப் பாதையான எருமேலி வாவர் பள்ளிவாசல் வழியில், களைகட்டி, அழுதாமலை, முக்குழி, கரிமலைக் காட்டுக் கிராமங்களைக் கடந்து சபரிமலை சந்நிதானம், நோக்கி மேலே... மேலே...!

மத நல்லிணக்கக் கோட்பாட்டுக்கு சபரிமலை ஐயப்பனும், வாவர் மகா ஞானியும் நல்ல உதாரணப் புனிதர்கள்!

இங்கே அபிமானிகள் பார்க்கும் "வாவர் பள்ளிவாசல்" நிழற்படமும், சில தகவல்களும் நாகர்கோவில் கோட்டார் பேரெழுத்தாளர் "அபூ ஹாஷிமா" உதவியால் பெற்றவை. நன்றி.

இனிப்பு 2

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடர் நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!!
வாழ்த்துதுமே!!!"

மேலே காணப்படும் வரிகளை வெறுமனே வாசித்தாலே உள்ளத்திலும் உடம்பிலும் உணர்ச்சிப்பிராவகம் ஏற்பட்டு விடும்.

ராகம் இட்டுப் பாடினோலோ, கேட்டாலோ மெய்சிலிர்த்துப் போவோம்.

எனக்கு அந்த அனுபவம் கொழும்புத் தமிழ் சங்க மண்டபத்திலே பலவேளைகளில் ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டவர் அனைவருக்கும் அப்படியொரு சிலிர்ப்பும் உணர்வும் ஏற்பட வேண்டுமென்பதற்காக தமிழக முதல்வர் ஓர் அதிரடிக் கட்டளையை இட்டிருக்கிறார்.

"இனி, அனைத்து, அரச நிகழ்ச்சிகளில் 'நீராரும்'கடலுடுத்த தமிழன்னை வாழ்த்து மோகன ராகத்தில் 55 வினாடிகளில் துல்லியமாகப் பாடப்பட வேண்டும். கூடியிருப்போர் எழுந்து நின்று மரியாதை செய்யவேண்டும்!"

ஆஹா! கட்டளை கூட உணர்வலைகளைத் தூண்டி என் பேனையை என்னவோ செய்கின்றது.

அத்தோடு, "தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்து கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படவேண்டும். முக்கியமாக பாடலை இசை தட்டுகள் கொண்டு இசைக்கப்படுவதை தவிர்த்து. பயிற்சி பெற்றவர்களால் வாய்ப்பாட்டாக பாடவேண்டும்." என்ற பணிப்பும் வழங்கியுள்ளார். பாடலுக்கு ஒரு பின்னணி வரலாற்றுத் தகவலும் உள்ளது.

இந்த வாழ்த்து நூற்றாண்டு வரலாறு கொண்டது. இயற்றியவர் **மனோன்மணியம் சுந்தரனார்.** முதன் முதல், தஞ்சாவூர் கரந்தைத் தமிழ் சங்கத்தின் 1913ஆம் ஆண்டறிக்கையில் இப்பாடல் வெளிச்சமிடப்பட்டுள்ளது. தொடர்ந்து 1914ஆண்டு முதல் கரந்தைத் தமிழ் சங்கத்தாரின் அனைத்து நிகழ்வுகளும் இந்த வாழ்த்தைக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டன.

பேரறிவுர் அண்ணாதுரை 1967களில் தமிழக முதல்வரான பொழுது மேற்குறித்த சங்கத்தார் உத்தியோகபூர்வ விழாப் பாடலாக அரசாணைப் பிறப்பிக்க கோரிக்கை விடுத்தனர். அதனை நிறைவேற்றுவதற்குள் நிரந்தர ஓய்வுறக்கம் கொண்டார் அண்ணா.

1970 நவம்பரில் கலைஞர் முத்துவேல் கருணாநிதி பதவி ஏற்றதும் "நிறைவேற்றுவேன்" என்றார். விஸ்வநாதன் சௌந்தரராஜன் சுசீலாவைக் கொண்டு பதிவான பாட்டு அரசு விழாக்களின் ஆரம்பமாக அமைந்தது.

அப்புறம், எம்.ஜி.ஆர், ஜெயா அம்மு, எடப்பாடியார் காலங்களில் வாழ்த்துக்கு மௌசு குறைந்தது என்பதோடு பழைய வரலாற்றை நிறுத்திக் கொள்கிறேன். இப்பொழுது மீண்டும் தமிழன்னையை அரியாசனத்தில் ஏற்றி வைத்திருக்கும் முத்துவேலர் கலைஞரின் இரத்தத்திற்கு "நன்றி நன்றி" என நவில்கின்றது மூத்த பேனை! எவ்வாறாயினும், அடக்க முடியாத ஓர் ஆசை. தமிழக அனைத்து விழாக்களிலும் ஆரம்ப வாழ்த்தாக அமைகின்ற நேரத்தில், கலந்து கொண்டிருக்கிற அனைவருமே ஒரு சேரப்பாடி குதூகலிக்க வேண்டும்! எப்படி இருக்கிறது நம்ம தமிழ் நேயர் விருப்பம்?

குறிப்பு – இச்சித்திரம் 'தினத்தந்தியில் வெளியானது மறுபிரசுரம் நன்றி.

11

இனிமேல்தான் ஆரம்பம் புதிய திருப்பம் அதுதானே இப்போது உங்கள் விருப்பம்!

ஒருநாள் காலை,

இன்ஸ்பெக்டர் ராகவனும் சார்ஜன் வசந்தனும்,

தாங்கள் சேகரித்த தகவல்களை எல்லாம்,

துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்பராஜிடம் சமர்ப்பித்தார்கள்.

சிறிது நேரம் வரையில்

அந்தத் தகவல்களில்

தனது விழிகளை மேயவிட்டார் துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்,

இருவரும் அமைதியாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அதில்,

சில தகவல்கள்,

அவருக்குத் தேவையானதாக இருந்தது,

மெல்ல நிமிர்ந்து,

இன்ஸ்பெக்டர் ராகவனைப் பார்த்தார்.

"ம்.... ராகவன்... தீபிகாவிற்கு இரண்டு தோழிகள் இருப்பதாக உங்கள் தகவல்களில் இருக்கிறது இல்லையா?"

"ஆமாம் சேர்... ஒருத்தியின் பெயர் ஜீவிதா.... மற்றவள் பெயர் மல்லிகா!"

"இவர்கள் இருவரிடமும் இன்னும் விசாரணை செய்யவில்லையல்லவா?"

"இன்னும் இல்லை சேர் தேவை என்றால் அவர்கள் இருவரிடமும் வாங்குமூலத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

"ஆமாம் யாரையாவது அனுப்பி சரி அவர்கள் இருவரிடம் விசாரணை செய்யுங்கள். ஏனென்றால் அவர்கள் இருவரும் அந்த கிராமத்தில் உள்ளவர்கள். இதனால் புதிய தகவல்கள் ஏதும் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது!"

"ஆகட்டும் அதை நான் செய்கிறேன்... ம்... சேர் இந்த தீபனின் கை எழுத்தைப் பற்றி எனின் நினைக்கிறீர்கள்?"

"இந்த நான்கு கை எழுத்துக்களிலும்... தீபிகா எழுதிய இந்த கடிதத்தில் இருக்கும் கை எழுத்துக்கு இடையே நிறையவே வித்தியாசம் இருக்கிறது ராகவன்!" அந்த கை எழுத்துக்களைப் பார்த்த படியே சொன்னார் இன்பராஜ்.

"ஆமாம் சேர் சார்ஜன் வசந்தனும் அதைத்தான் சொன்னார்!"

"இந்தக் கடிதத்தில் உள்ள கை எழுத்தைப் போட்டிருப்பது தீபனே இல்லை... இன்னும் சொல்லப்போனால், இப்படி ஒரு கடிதம் எழுதப்பட்டிருப்பது தீபனுக்கே தெரியாது. தற்கொலை செய்து கொள்ளப்போகும் விஷயமே தீபனுக்கு தெரியாது!"

"இன்னுமொரு விஷயத்தையும் சாஜன்ட் வசந்த் சொன்னார் சேர்!"

"அது என்ன அது?"

இதை எல்லாம் வைத்து பார்க்கும் போது தீபா எழுதியதாக சொல்லப்படும் கடிதத்தைக் கூட அவள் எழுதியிருக்க வாய்ப்பில்லை என்று அவர் சொன்னார் சேர்!"

இன்ஸ்பெக்டர் ராகவன் இப்படிச் சொன்னதும்,

துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்,

சிந்தனையுள் மூழ்கினார்.

பிறகு,

இன்ஸ்பெக்டர் ராகவனைப் பார்த்து,

"இல்லை ராகவன்... நான் ஒரு விஷத்தைப் பற்றி யோசிக்கும் போது பத்துத் தடவைக்குமேல் அதைப் பற்றி யோசிப்பேன்... அப்படி யோசித்த எழுத்து முடிவில் எந்த மாற்றமும் இருக்காது. இதுவும் அப்படித் தான் அந்தக் கடிதத்தை, எழுதியது தீபிகா தான் ஆனால் கவரில் இருந்த முகவரியை எழுதியது தீபா இல்லை... இந்த விஷயத்தில் நான் உறுதியாகவே இருக்கிறேன்" என்று உறுதியுடன் சொன்னார்.

"இப்போது எங்களுக்கு இருக்கும் சந்தேகம் என்ன வென்றால்... இந்தக் கடிதத்தை தீபிகா எழுதியிருந்தாலும் அதை தீபனிடம் காட்டவோ அவனிடம் கை ஒப்பம் வாங்வோ அவளால் முடியாமல் போயிருக்கிறது. அப்படியானால் தீபனுக்கு பதிலாக அவனுடைய கை ஒப்பத்தைப் போட்டது யார்... அவன் தான் கொலைகாரன் அவனைத்தான் நாம் இப்போது கண்டு பிடிக்க வேண்டும் சேர்!"

"உண்மைதான் ராகவன் இதில் உள்ள கை எழுத்து தீபனுடையது இல்லை என்பதினால் அப்படி எண்ணத்தோன்றுகிறது. ஆனால் இப்போதுள்ள பிரச்சினை அது இல்ல ராகவன்...!'

இன்பராஜ் இப்படிச் சொன்னதும்,

ராகவன் வியப்பினுள் விழுந்தார்.

"என்ன சேர் சொல்றீங்க?"

"இந்தக் கடிதத்தை தீபிகா எழுதியிருந்தாலும்... வட்டவலை வளைவில் உள்ள பாதாளத்தில் பாய்ந்து அவன் தற்கொலை செய்து கொள்ளவில்லை.... அந்தபாதாளத்திற்குள் அவளை யாரோ தள்ளிவிட்டிருக்கிறார்கள்! கொலைகாரன்யாராக இருந்தாலும் தீபிகா எழுதிய இந்தக் கடிதம் அவனுக்கு உதவியாக இருந்திருக்கிறது. இப்போது இருக்கும் கேள்வி என்னவென்றால் தீபன் இந்த விஷயத்தில் எப்படி சம்பந்தப்பட்டான் என்பதுதான்.. தீபன்தான் முதலில் தீபிகாவைதள்ளி விட்டானா அல்லது வேறுயாரோ ஒருவன் இரண்டு பேரையும் பாதாளத்தில் தள்ளி விட்டானா தீபிகா எழுதிய அந்தக் கடிதம் கொலைகாரனின் கைக்கு எப்படிச் சென்றது? அந்த அதிகாலை வேலையில் தீபிகாவையும் தீபனையும் எப்படி அங்கே அழைத்துச் சென்றார்கள்....ம் இந்த மாதிரியான கேள்விகளுக்கு நாம் பதில் கண்டு பிடித்து விட்டால் கொலைகாரனை மிக எளிதில் நாம் நெருங்கி விடலாம்!"

"உண்மைதான் சேர்... நீங்கள் சொன்ன விஷயங்கள் எனக்குத் தோன்றியது... இந்த விஷயத்தில் நாம் கொஞ்சம் சிரமப்பட வேண்டியதிருக்கும்."

"சரி... பரவாயில்லை... இப்போது ராகவன் அடுத்து என்ன செய்யவேண்டும் என்று நான் இப்போது சொல்லுகிறேன்!'

"ஆகட்டும் சேர்... நீங்கள் சொல்லும் எந்த காரியத்தையும் செய்து முடிப்பதற்கு நாங்கள் இருவரும் தயாராகவே இருக்கிறோம்!"

"சரி... அப்படியானால் கேட்டுக் கொள்ளுங்கள்... ராகவன்... நீங்கள் கொடுத்தரிப்போட்டில் ஜீவிதா மல்லிகா என்ற இரண்டு பெண்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளீர்கள் அவர்கள் பற்றி நாம் நிறையவே விசாரிக்க வேண்டும்!"

"ஆமாம் சேர் அவர்கள் இருவரும் தீபிகாவின் ஊரிலேயே உள்ள பெண்கள்!" ம்... சரியாகச் சொன்னீங்க... எனக்கு இவர்களைப் பற்றிய முழுவிபரமும் வேண்டும். தீபிகாவும் தீபனும் ஊரில் இருந்துதான் காதலிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதானால் இவர்கள் இருவருக்கும் அவர்களைப் பற்றிய நிறைய விஷயங்கள் தெரிந்திருக்கும்... அந்த விஷயங்கள் தான் எனக்கு இப்போது வேண்டும்!"

"சரி... சேர்... நான் நாளைக்கே அந்தக் காரியத்தில் ஈடுபடுகிறேன்..

"ம்... ஆரம்பியுங்கள்... ஆனால் எதற்கும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருங்கள்... ஆபத்து எந்த ரூபத்திலும் வரலாம்..."

"ஆகட்டும் சேர்!"

"சரி... இப்படி செய்யுங்கள் ஜீவிதாவைப்பற்றி வசந்தும் மல்லிகாவைப் பற்றி நீங்களும் உங்கள் விசாரணைகளை ஆரம்பியுங்கள்.. எவ்வளவு விரைவாக அந்த விசாரணைகளை என்னிடம் சமர்ப்பியுங்கள்... சரி இப்போது நீங்கள் போகலாம்!"

இருவரும் விடை பெற்றுச் சென்றார்கள்.

மதுமிதா!

23வயதுடைய,

அழகிய தோற்றம் கொண்ட ஒரு மங்கை.

செல்வந்தர் செல்வராகவனின்,

ஒரேமகள்!

செல்லமகள்!

A/L படித்து முடித்துவிட்டு,

மேற்கொண்டு படிக்க விரும்பாமல்,

தந்தையின் தொழிலில் பங்கேற்பதற்காக பெரும் ஆவல் கொண்டதினால் அவரும் அதற்கு சமதித்துவிட்டார்.

மதுமிதாவின் 23ஆவது பிறந்த தினத்தன்று,

புதிய கார் ஒன்றை அவளுக்கு பரிசளித்தார் செல்வராகவன்.

மேல் நாட்டு நாகரிகத்தில் மோகம் கொண்ட அம்பிகாவும் மதுமிதாவின் பிறந்த தினத்தன்று,

'ப்யூட்டி பாளர்" ஒன்றை ஏற்பாடு செய்து கொடுத்தாள்.

வழக்கமாகவே,

தினமும் காலையில் 7.30 மணிக்கெல்லாம் வீட்டை விட்டு வெளியே சென்று விடுவாள்.

காலை ஆகாரமெல்லாம் கோல்பேஸ் ஓட்டலில்தான்.

சரியாகி எட்டுமணிக்கு தினமும் அங்கே வந்து விடுவாள் மதுமிதா இதனால், ஓட்டல் சேவர்களுக்கு அவள் பழகிய முகமாகிவிட்டது.

வழக்கம் போல்,

அன்றும் சரியாக எட்டுமணிக்கு ஓட்டலுக்கு வந்தாள்.

அப்போதுதான்,

அந்த சம்பவம் நடைபெற்றது!

(இளமை வளரும்)

நெஞ்சோடு நெஞ்சம்

பொங்கலோ பொங்கல்! பொங்கும் நல்வாழ்த்துக்கள்!!

உழைக்கும் தமிழ் மக்கள் தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாக பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது. இது உழைக்கும் மக்கள் இயற்கைத் தெய்வமாகக் கருதப்படும் சூரியனுக்கும், மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாகவும் இது அமைகிறது.

பொங்கல், போகி பண்டிகை, தைப்பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என நான்கு நாள் கொண்டாட்டமாக இடம்பெறுவது விசேடமாகும்.

போகி பண்டிகை பொங்கலுக்கு முதல்நாள் வருகிறது. தைமாத முதல்நாள் தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் ஆவினத்திற்கு நன்றி கூறும் நிகழ்வே மாட்டுப் பொங்கல். காணும் பொங்கல், இக்கொண்டாட்டங்களில் நான்காம் நாள் இடம்பெறும். இந்நாளில் மக்கள் தங்கள் உற்றார் உறவினரைச் சென்று சந்தித்து தங்கள் அன்பையும் உணவுப் பண்டங்களையும் பகிர்ந்து கொள்வர்.

இவ்வாறு தமிழர்களின் கொண்டாட்ட, பண்டிகைக் காலமாக இக்காலம் சிறப்பிடம் பெறுகிறது. இத்திருநாளில் பொங்கலை சிறப்பாக, மகிழ்ந்து கொண்டாடும், உலகமெங்கும் வாழ்கின்ற தமிழ் அன்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நாம் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

பிரிந்தார் பெருமை

கலைஞர்களின் தோழர் கே. அரசரட்ணம்

கலைஞர்களின் தோழர், இலக்கியவாதிகளின் இதயம் கவர்ந்தவர், நகைச்சுவை ததும்பும் தனது மேடை பேச்சினால் எண்ணற்றோரை விசிறியாய் பெற்றவர், முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபராகத் திகழ்ந்த கே. அரசரட்ணம், இம்மண்ணுலக வாழ்விலிருந்து விடைபெற்றார். பொலிஸார் என்றாலே கடுமையான முகத்துடன்தான் இருபார்கள் என்ற பொதுவான என்னத்துக்கு மாற்றமாக எப்போதும் இன்முகத்துடன் காணப்பட்டவர் கே. அரசரட்ணம்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தமிழ் பேசும் மக்களுக்கும், சிங்களம் பேசும் பொலிஸாருக்குமிடையே சுமுகமான உறவை மேம்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளில் குறிப்பிடத்தக்கவராக திகழ்ந்தவர் இவர். இலங்கையில் வீதிப் போக்குவரத்தில் நிலவும் நடைமுறைச் சிக்கல்கள் பலவற்றுக்கு நவீன தொழில்நுட்பங்களின் மூலம் தீர்வு காண்பதற்கும் பல முயற்சிகளை மேற்கொண்டவர்.

கொழும்பு ரோட்டரி கழகத்தின் தலைவராக இருந்தபோது பல்வேறு மாவட்டங்களுக்கும் விஜயம் செய்து சமூக சேவைகள் செய்தமை விசேடமாக குறிப்பிடத்தக்கது. புத்தக வெளியீடு உட்பட இலக்கிய நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள், நடன அரங்கேற்றங்கள், நாடக நிகழ்வுகள், கவியரங்குகள், பட்டிமன்றங்கள் என கலை இலக்கிய நிகழ்வுகள் அனைத்திலும் அதிதியாக கலந்து சிறப்பித்தவர் எங்கள் கே. அரசரட்ணம். கூடவே நன்கொடைகளையும், நிதியுதவிகளையும் தாராளமாக வாரி வழங்குபவர். இதனாலேயே கலை இலக்கியவாதிகளின் உள்ளத்தில் குடிகொண்டவர் அவர்.

கரவெட்டியில் பிறந்து, மருதானை சென். ஜோன்ஸ் கல்லூரியில் கற்று, மனிதநேய பொலிஸ் அதிகாரியாக வாழ்ந்து, தனது 69வது பிறந்த தினத்துக்கு மூன்று தினங்கள் இருக்கையில் 2021.12.29ம் திகதி கொழும்பில் காலமான கனகலிங்கம் அரசரட்ணம் என்றும் மக்கள் நெஞ்சங்களில் வாழ்வார்.

வலம்புரி கவிதா வட்டத்தின் 52வது பௌர்ணமி கவியரங்கில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டபோது பொலிஸ்காரரான என்னை கலையுலகுக்கு அழைத்து வந்தவர் பொன்மனச் செம்மல் தாஜ்மஹான் என்று கூறிய கே. அரசரட்ணம் அவர்களைப் பற்றி தாஜ்மஹான் எழுதிய இரங்கல் கவிதையின் சில வரிகள் இங்கே, அவருக்கு அஞ்சலியாக!

நட்பு கை நழுவியது !
நேசம் முள்ளாகியது !
நெஞ்சம் கல்லாகியது !

மாபெரும் அதிகாரி!
இலங்கை அரசின் இரத்னபூபதி!
பொலிஸ் படையின் பேரதிபதி!

உலகுக்கு விடை கொடுத்து
உறவெல்லாம் விட்டு, விட்டு
திரும்பாத பயணத்துக்கு யாரும்
விரும்பாமலே போனாரே!

இவர்போல் ஒரு இனியவர்
எங்கே என்ற வினா என்
இதயத்தை தட்டுகிறது!

நண்பரே!
நீங்கள்தான் கலைஞர்களின் நிஜப்புரவலர் !
உங்கள் ஆத்மா சாந்தி பெறட்டும்.....!

புது வரவு

நாப்பாவள ஐ.எல்.எம். ரபீக் தரும் 'திரு நபி வரலாறு'

ஆசிரியராகவும், அதிபராவும் பணிபுரிந்து, அகவை 92ல் கால் பதித்திருக்கும் நாப்பாவள ஐ.எல்.எம். ரபீக், 1972ல் இயற்றிப் பாடி, கேகாலை மாவட்ட மீலாத் விழா நிகழ்ச்சியில் முதல் பரிசு பெற்ற கவிதை "திரு நபி வரலாறு". ஐம்பது வருடங்களின் பின் அவரது மகன் எம்.ஆர்.எம். நவ்பல் முயற்சியினால் சிறு நூலாக வெளிவந்துள்ளது. ஐ.எல்.எம்ரபீக் அவர்களின் வாழ்க்கை வரலாறும் சுருக்கமாக இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், தனது வாழ்த்துரையில் இவரைப்பற்றி இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொண்ட ஐ.எல்.எம்ரபீக் இயல்பாகவே கவிதைகள் இயற்றும் ஆற்றலைப் பெற்றிருப்பதோடு, இனிமையான குரலில் பாடுகின்ற திறமையையும் தன்னகத்தே கொண்டிருக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். ஐ. எம். அமீன், ஆசியுரையில், இவரது கவிதைப் பற்றி கூறும்போது, இலகு நடையில் அவர் அறிமுகப்படுத்தும் நபிகளாரின் ஓரிறைக்கொள்கை, கொடுங்கோலரின் கடுமையான எதிர் நடவடிக்கைகளின் முன்பும் தளராத அவரது துணிவு என்பவற்றை எடுத்துக் காட்டும் பான்மை நயக்கத்தக்கதாகும் எனத் தெரிவித்துள்ளார். கவிஞர் அல்அஸுமத்தின் கவி வாழ்த்தும் இதில் இடம்பெற்றுள்ளது.

"திரு நபி வரலாறு" கவிதையிலிருந்து ஆறு வரிகள் இங்கே சிறு பதமாக.

பாழ்குழியில் தவிதவித்த மக்கள் குலம் தழைத்தது.
சூழ் இருளை நீக்க ஒளிவிளக்கிஸ்லாம் நிலைத்தது.
வாழ்முறையைத் திட்டமுடன் திருக்குர்ஆன் அளித்தது.
ஆழ்கடலில் புவி விசும்பில் அதனாணை ஒலித்தது.
தாழ்நரகால் உய்யுநெறி தரணியெலாம் செழித்தது.
ஏழ் ஒன்பதாண்டினிதே நபி வயதிற்கழிந்தது.

இந்நூலின் மின்னணு பிரதிகளை பெற விரும்புவோர் 0776633240 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

சிந்தனை செய் மனமே

எது வியாபாரம்? எது தர்மம்??

ஒரு பெண் வீதியொன்றில் கீரை விற்றுக் கொண்டு செல்கிறாள். வீட்டு வாசலில் மகனோடு அமர்ந்திருந்த தாய், கீரை வாங்க அவளை கூப்பிடுகிறாள்.

"ஒரு கட்டு கீரை என்ன விலை...?"
"ஐந்து ரூபாய் அம்மா"
ஐந்து ரூபாயா! மூன்று ரூபாய் தான் தருவேன். விருப்பம்டா நாலு கட்டு கொடுத்திட்டு போ"
"இல்லம்மா வராதும்மா"

அதெல்லாம் முடியாது. மூன்று ரூபாய் தான் பேரம் பேசுகிறாள் அந்த தாய்.

அந்த விலைக்கு ஒத்துக்கொள்ளாத அந்த பெண் கூடையை எடுத்துக்கொண்டு சிறிது தூரம் சென்று விட்டு, மீண்டும் திரும்பிவந்து மேல ஒரு ரூபாய் போட்டுகொடுங்கம்மா என்கிறாள். முடியவே முடியாது. கட்டுக்கு மூன்று ரூபாய்தான் தருவேன் என்று பிடிவாதம் பிடித்தாள். கீரைக்காரி சிறிது யோசனைக்கு பிறகு, "சரிம்மா உங்க விருப்பம்" என்று கூறிவிட்டு நாலு கட்டு கீரையை கொடுத்துவிட்டு பன்னிரண்டு ரூபாயை வாங்கி கொண்டு கூடையை தூக்கி தலையில்வைக்க போகும்போது கீழே சரிந்து விழப்பார்த்தாள்.

"என்னடியம்மா. நீ காலையில ஏதும் சாப்பிடலயா?" என்று அந்த தாய் கேட்க, "இல்லம்மா போய்தான் கஞ்சிகாய்ச்சி குடிக்கணும்" என்றாள் கீரைக்காரி.

"சரி, இரு. இதோ வர்றேன்." என்று கூறிவிட்டு வீட்டுக்குள் சென்றவள். திரும்பும்போது ஒரு தட்டில் ஆறு இட்லிகளை, சட்னியோடு கொண்டு வந்தாள். "இந்தா சாப்பிட்டு போ" என்று கீரைக்காரியிடம் கொடுத்தாள். எல்லாவற்றையும் பார்த்துகொண்டிருந்த மகன்." ஏம்மா ஐந்து ரூபாய்க்குபேரம் பேசுனிங்க. ஒரு இட்லி ஐந்து ரூபாய்ன்னு வச்சுகிட்டாக்கூட ஆறு இட்லிக்கு முப்பது ரூபாய் வருதும்மா! என்று கேட்டான்.

அதற்கு அந்த தாய்கூறினாள், "வியாபாரத்துல தர்மம் பார்க்க கூடாது, தர்மத்துல வியாபாரம் பார்க்க கூடாதுப்பா"

உண்மையில் மனித நேயம் என்பது இதுதானோ?

கைவண்ணம் காணீர்

வெறும் கற்களால் ஒரு வயோதிப மனிதனை
எம் கண் முன் நிறுத்தும்
கலைஞனின் அபூர்வ ஆற்றலுக்கு
ஒரு சபாஷ் போடலாமா?

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

மறுக்கப்படும் மறுமணமும் சமுதாயத்தின் பிற்போக்குச் சிந்தனையும்

ஒவ்வொரு தனிமனிதனும் இணையும்போது அது சமூகமாகிறது. ஆனால் தனி ஒருவன் சிந்திக்கும் தன்மை ஒட்டுமொத்த சமூகத்திலிருந்தும் வேறுபட்டுதான் நிற்கிறது. சில சமயங்களில் தனி ஒருவனாக யோசிக்கும்போது மிகச்சரியாகவும் சமூகத்தோடு ஒத்து யோசிக்கும்போது வேறாகவும் ஆகிவிடுகிறது. இது முரண்பாடுகளுக்கு காரணமாகிறது. பெரும்பான்மையானவர்களின் சிந்தனையே சமூகத்தின் சிந்தனையாகப் பார்க்கப்படுகிறது. ஆனால் எம்முடைய சிந்தனைகள் அடுத்தவரின் வாழ்க்கையையும் மனநிலையையும் எவ்விதம் பாதிக்கும் என்பதை கணம்கூட சிந்திப்பதில்லை.

இன்றைய சமுதாயம் தன்னை எவ்வாறு செப்பனிட்டுள்ளது என்று நோக்கினால் எவ்வித மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. குறிப்பாக சமுதாயத்தின் மனோநிலை மற்றும் எண்ணத்தில் எதுவித முன்னேற்றமும் இல்லை. இதற்கு நல்ல உதாரணம் போரிற்குப் பிற்பட்ட காலத்தில் எம்சமூக மனநிலையைச் சொல்லலாம்.

போர்க்கால சூழலில் சிக்குண்ட ஒவ்வொரு மனிதனின் எண்ணம் எல்லாம், எந்தநேரம் உயிர் போய்விடுமோ?, வயிற்றுப்பசிக்கு உணவு கிடைக்குமா?, உயிரைப் பாதுகாக்க ஒரு இடம் கிடைக்குமா?, காலை இழந்தவனும் கையை இழந்தவனும் தன்னை எப்படி காப்பாற்றிக் கொள்ளப்போகிறார்கள் என்பதாகவே இருந்தது. தாங்கமுடியாத துயரத்தை கடந்து வந்தும் இன்னமும் சற்றும் பக்குவப்படாத மனோநிலையில் இச்சமூகம் இருப்பதுதான் விசித்திரம். பட்டும் திருந்தாது என்ற வாக்கு யாருக்கு பொருந்துகிறதோ இல்லையோ எமது தமிழ்ச்சமூகத்திற்கு சாலப்பொருந்தும். அத்தனை வலிகளை கடந்துவந்த பின்னும் இன்னமும் அடுத்தவனின் வாழ்க்கையை குறிவைத்து தாக்குவதில் இச்சமூகம் முதலிடம் பெறுகிறது.

போர்க்காலச்சூழலின் பின் எம்முடைய சமூகம் இன்றும் மகளிரை வஞ்சித்து வருகிறது. போர்க்காலச்சூழலில் இடம்பெற்ற இளவயது திருமணங்களுக்கு அளவே இல்லை. அதைக்கூட பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் திருமணம் செய்து கொண்டவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் போரின் முடிவில் கணவனை இழந்தும்

மனைவியை இழந்தும் ஒற்றை உயிராய் தப்பியநிலை ஜீரணிக்க முடியாத ஒன்று.

கணவனை இழந்த பெண்ணாகட்டும் அல்லது மனைவியை இழந்த ஆணாகட்டும் இருவருக்குமே எதிர்காலம் என்ற ஒன்று உண்டு. தம் மனநிலையைப் பொறுத்து இன்னோர் வாழ்க்கையைத் தேடிக்கொள்ளும் அவர்களின் முடிவில் இன்னமும் தடையாக இருப்பது எம் சமூகம்தான். அதிலும் குறிப்பாக ஒரு பெண் மறுமணம் செய்ய எண்ணும்போதோ அல்லது செய்துகொண்டாலோ அதனை ஏற்றுக்கொள்ளும் மனநிலை ஏன் இல்லை என்பது விடைகாண வேண்டிய கேள்வி. இளவயதில் திருமணமாகி ஒருசில மாதங்களிலேயே கணவனை இழந்த பெண்கள் இங்கே அதிகம்.

இலங்கையில் நடைபெற்ற போரில் 90 ஆயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். கிழக்கில் சுமார் 49 ஆயிரம் பெண்களும் வடக்கில் 40 ஆயிரம் பெண்களும் போரினால் கணவன்மாரை இழந்துள்ளனர். அவர்களை சமூகம் விதவை என்ற அடையாளத்துடன் ஒருபடி கீழே தள்ளிவைக்கின்றது. இவர்களில் அதிகமானவர்கள் இளவயதில் கணவனை இழந்தவர்கள்.

இவ்வாறான பெண்கள் தனியாக வாழ்ந்தால் அதனை தவறான கண்ணோட்டத்தில் சித்தரிக்கும் தன்மை இன்னமும் உண்டு. அதேசமயம் மறுமணம் செய்துகொண்டால் அதனையும் தவறாகப் பார்க்கும் தன்மையும்உண்டு. இன்றும் கணவனை இழந்து தனியாக இருக்கும் ஒரு பெண் தன் தொழில் நிமித்தமோ அல்லது சொந்தத் தேவைகளுக்காகவோ சுதந்திரமாக வெளியில் நடமாட முடிவதில்லை. அவ்வாறு திரிந்தால் அவளுக்கு ஒரு பட்டத்தைச்சூட்டி வேடிக்கை பார்க்கும் நிலைதான் இன்றும் பரவிக்கிடக்கின்றது. அதையும் தாண்டி பாலியல் சீண்டல்களை எதிர்நோக்க வேண்டிய இக்கட்டான நிலையும் ஏற்படுகிறது. உதவி செய்வது போன்று வந்து தம் இச்சைக்கு உட்படுத்த எண்ணும் எண்ணம் கொண்டவர்களும் இதில் விதிவிலக்கல்ல.

மனைவியை இழந்த ஒரு ஆண் மறுமணம் செய்துகொண்டால் அதை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் ஒருபெண் மறுமணம் செய்துகொண்டால் ஏற்படுவதில்லை. அதில்கூட பால்நிலை பாரபட்சம். அதற்காக கணவனை இழந்த எல்லாப் பெண்களும் மறுமணம் செய்துகொள்ள வேண்டும் என்று அர்த்தமல்ல. அது அவர்களினுடைய தனிபட்ட விருப்பு. அவர்களின் மனநிலையைப் பொறுத்து அவர்களின் முடிவு அமையலாம். மறுமணம் செய்ய முடிவெடுக்கும்போது அதற்கு தடையாய் இருப்பதும் செய்தபின் வஞ்சிப்பதுமே இங்கே பிரச்சினை. சாதாரண பெண்கள் இப்பிரச்சினைக்கு முகங்கொடுப்பதைவிட முன்னாள் பெண் போராளிகள் எதிர்கொள்ளும் வீதம் என்பது சற்றே அதிகம்.அவர்களுக்கு மறுவாழ்வு என்பது ஒருவரம். ஆனால் அந்த வரத்தையும் கெடுத்துவிடுவதில் பலருக்கு ஆத்மதிருப்தி.

இவ்வாறான பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளை மட்டும் செய்தால் போதுமானது என்ற எண்ணம் பலருக்கு உண்டு. வாழ்வாதாரம் வழங்கப்பட வேண்டியது அவசியம்தான். எத்தனையோ நிறுவனங்கள், அமைப்புகள், மதகுழுக்கள், புலம்பெயர்ந்தோர் என பலர் கணவனை இழந்த பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளனர். இன்னமும் வழங்குகின்றனர். ஆனாலும் வாழ்வாதாரம் மட்டுமே வாழ்க்கையாகிவிடாது. உரியமுறையில் கௌரவம் வழங்கப்படும்போதுதான் பெண்களுக்கு முறையான மரியாதை கிடைக்கப்பெறுகிறது. கணவனை இழந்த பெண்ஒருத்தியை சடங்கு சம்பிரதாயங்களில் இருந்து தள்ளிவைப்பதில் தொடங்குகிறது அவர்களுக்குச் செய்யப்படும் அவமரியாதை.

சுமங்கலி மட்டும்தான் நல்ல காரியத்தில் முன்நிற்க வேண்டும் என்பது அறியமையின் ஒரு வெளிப்பாடு. நல்ல நிகழ்வுகளிற்கு முன்நிற்பதை விரும்பாத சிலரின் முகங்கோணத்தக்க செயற்பாடுகள் வாழ்தலின் மீதான வெறுப்பை ஏற்படுத்தும் தன்மைகொண்டவை. ஒருபெண் மறுமணம் செய்தபின் பொது இடங்களில் பல்வேறு கேலிப்பேச்சுக்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

பார்வையாலே ஏளனம் செய்யும் தன்மையும் அதனை சகித்துக்கொள்ள வேண்டிய நிலையும் மிகவும் கொடுமையானது. இதற்கு நல்ல உதாரணம் அண்மையில் என் நண்பியின் திருமணத்திற்குச் சென்றிருந்தவேளை, என் நண்பியின் அக்கா சடங்குகளில் கலந்துகொள்ளாமலும் முன்னிற்கு வராமலும் ஒதுங்கியே இருந்தார். ஏன் அவ்வாறு என்று கேட்டாதற்கு அவர் கணவனை இழந்த பெண் அதனால் நல்லகாரியத்துக்கு முன்னால் நிக்ககூடாது என்கிறார்கள். அந்த கணம் மனது ரணமாகியது. இப்படிப்பட்ட ஒரு சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நினைக்க வெட்கம்தான் வருகிறது. போரின் பின் 12 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்றும் மாறாத எம்சமுதாயம் தன்னை எல்லா வழிகளிலும் தரப்படுத்திக்கொள்ள வேண்டும் எனில் அடிப்படை விடயங்களில் தன்னை செதுக்கிக்கொள்ள வேண்டும். அவ்வாறு நடக்க வேண்டுமெனில் ஒவ்வொரு தனிமனிதனிலும் சிந்தனை மாற்றம் நிகழவேண்டும்.

ஒருவரினுடைய வாழ்வின் அடுத்தகட்ட முன்னேற்றத்திற்கு ஆதரவாக இல்லாவிடினும் என்றும் உபத்திரமாக இருக்கக்கூடாது என்பது அடிப்படையில் விதைக்கப்பட வேண்டியது அவசியம். மறுமணம் செய்வதென்பது, செய்யக்கூடாத தப்பை செய்துவிட்டதாக ஒரு தவறான பார்வை சமூகத்தில் உள்ளது. ஒவ்வொருவரும் அந்த நிலையுடன் தன்னைப் பொருத்திப்பார்த்தால் அவர்களின் மனநிலையைப் புரிந்துகொள்வது சுலபமாகிவிடும்.

மாற்றத்திற்கான முதல்அடி என்னுடையதாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொருவருள்ளும் வந்தாலே சமுதாயத்தின் முன்னேற்றமும் மெல்லமெல்ல தலைதூக்கும் என்பதில் ஐயமில்லை.

இ. டியனுதா
4ம்வருடம்,
இடைகுகுற்கைகள்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 16 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2022 ஜனவரி 16 ஞாயிற்றுக்கிழமை

அருந்ததி நிறுவனம் நடத்திய "மாற்று மோதிரம் மணமகள் வடிவலங்கார கண்காட்சி"யில் மணமகளாக அலங்கரிக்கப்பட்ட பெண்.

கொடிய தந்தையின் கதை

ஜோசப் பிரிட்சில் தனது வீட்டில் தனியாக ஒரு அறை ஒன்றை கட்டிக்கொண்டிருந்தார். அது பார்க்க சிறைக் கூடு போல் தான் இருந்தது. அதற்கு அவரது மகள் எலிசபெத்தும் உதவி செய்தாள். அது தனக்காக் கட்டும் கூடு என்று அந்த யுவதிக்கு அப்போது தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை.

அப்போது 18 வயதாக இருந்த எலிசபெத் அடுத்து 24 ஆண்டுகள் அந்த சிறையிலேயே கழித்தாள். தனது தந்தையால் சிறை வைக்கப்பட்டாள்.

ஆரம்பத்தில் அவள் இரும்புச் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தாள். ஆனால் சில மாதங்கள் கழித்து அந்த சங்கிலியை அவளது தந்தை அகற்றிவிட்டார். ஏனென்றால், தனது மகளுடனான பாலியல் செயற்பாட்டுக்கு அது தொந்தரவாக இருந்ததாக பின்னர் கூறப்பட்டது.

எலிசபெத் சிறை பிடிக்கப்பட்டிருந்த காலத்தில் பல நாட்கள் இருண்ட அறையில் தனிமையில் வைக்கப்பட்டிருந்தாள். தப்பிச் செல்ல முயன்றால் மின்சாரம் பாய்ச்சுவதாக அச்சுறுத்தப்பட்டாள். குழந்தைகள் வரத் தொடங்கிய உடன் அந்தக் குழந்தைகளுக்கும் அதே எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஆம், பிரிட்சுக்கு தனது மகள் வழியாக ஏழு குழந்தைகள் பிறந்தன. 2008 ஆம் ஆண்டு தான் இந்த கொடூரங்கள் எல்லாம் வெளிச்சத்துக்கு வர ஆரம்பித்தன. ஒரு குழந்தை சுகவீனமுற மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டி ஏற்பட்டது. அப்போதே எலிசபெத் எல்லா உண்மைகளையம் கூறினாள்.

கைது செய்யப்பட்ட பிரிட்சில் கற்பழிப்பு, முறையற்ற பாலுறவு என பல குற்றச்சாட்டுகளில் குற்றவாளியானார். அவரது ஒரு குழந்தை கருவில் சிதைந்தது நிர்வாகத்திற்கு தெரிந்த பின்னர் அவர் மீது கொலைக் குற்றச்சாட்டும் நிரூபிக்கப்பட்டது. தான் செய்த குற்றங்களை பிரிட்சில் ஒப்புக்கொண்டார்.

கேத்தலில் முடிந்த போர்

கேத்தல் யுத்தம் 1784 ஆம் ஆண்டு ஒக்டோபர் 8ஆம் திகதி இப்போதைய ஆஸ்திரியா மற்றும் நெதர்லாந்துக்கு இடையே நடந்த போர். ஆனால் பெரிய போர் ஒன்று வெடிக்கப்போகிறது என்று நம்பி இருந்தவர்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது. ஒட்டு மொத்தப் போரும் ஒரே ஒரு சூட்டு சம்பவத்தோடு சப்பென்று முடிந்துவிட்டது. சூப் நிரப்பி வைத்திருந்த கெண்டி ஒன்றே தாக்குதலுக்கு இலக்கானது. அத்தோடு போர் முடிந்து விட்டது தான் பெரும் ஏமாற்றம்.

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

யார் மகன்? மருமகன்?

"என்னுடைய அப்பா யாருக்கு மாமனாரோ அவருடைய மகன் எனக்கு மருமகன் என்றால் அவருக்கும் எனக்கும் என்ன உறவு?" என்பது அபூர்வ ராகங்கள் என்ற பழைய திரைப்படத்தில் இருக்கும் அவிழ்க்க முடியாத ஒரு புதிர். இங்கிலாந்து இசைக்கலைஞர் பில் வைமனின் கதையும் இந்தப் புதிர்போல் தான். வெயின் 1989 ஆம் ஆண்டு தனது 52 ஆவது வயதில் 18 வயது மெண்டி ஸ்மித் என்ற பொப் பாடகியை திருமணம் முடித்தார். ஆனால் ஒரு ஆண்டிலேயே விவாகரத்தாகிவிட்டது. அதற்கு பின் பில்லின் 30 வயது மகன் ஸ்டீபன், 46 வயதான மெண்டி ஸ்மித்தின் தாயை திருமணம் செய்தார். அப்போது பில் மற்றும் மெண்டி தொடர்ந்து திருமண பந்தத்தில் இருந்திருந்தால் அவருக்கு தனது சொந்த மகனே மாமனார் ஆகி இருப்பார். இப்போது ஆரம்பத்தில் சொன்ன புதிரை மீண்டும் வாசித்து விட்டு விடை தேடப்பாருங்கள்.

அமெரிக்காவின் தாராள மனம்

பனிப்போர் காலத்தில் அமெரிக்கா ஆப்கான் மாணவர்களுக்காக பாடப் புத்தகங்களை அள்ளி வழங்கியது. அதற்காக டொலர்களை வீசி எறிந்தது. ஆனால் அந்தப் பாடப் புத்தகங்களில் பெரும்பாலும் போர் செய்யும் படங்கள், பீரங்கிகள் மற்றும் டாங்கிகளின் காட்சிகள் தான் இருந்தன. இஸ்லாமிய போராட்டம் பற்றி அந்தப் புத்தகங்களில் இஷ்டத்திற்கு அள்ளிவிடப்பட்டது. மாணவர்கள் இலக்கங்களை கற்பதற்குக் கூட துப்பாக்கிகள், கத்தி, வெடி குண்டு படங்கள் தான் காண்பிக்கப்பட்டன. அப்போது ஆப்கானிஸ்தான் சோவியட் படையின் ஆக்கிரமிப்பில் இருந்தது. எனவே, அதற்கு எதிராக போராடுவதற்கு தூண்டவே அமெரிக்கா இந்த தான தர்மத்தை செய்தது. ஆப்கானின் எஞ்சிய வரலாற்றை இதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.



பாரிஸை காத்த நாஜி தளபதி

நாஜி ஜெர்மனியின் இராணுவ ஜெனரல் டியெட்ரிச் வான் சொல்டிச் இல்லாவிட்டால் இன்று பாரிஸ் நகரே இருந்திருக்காது. ஏதோ முன்னுக்குப் பின் முரணானது போல் தெரியலாம், ஆனால் அது தான் உண்மை. இல்லாவிட்டால் அவரை பாரிஸின் ரட்சகர் என்று அழைப்பார்களா?

1944இல் நாஜி ஆக்கிரமிப்பில் இருந்து பாரிஸுக்கு தளபதியாக இருந்தவர் ஜெனரல் டியெட்ரிச். இரண்டாம் உலகப் போர் முடியும் காலமது. பிரான்ஸும் நாஜிப் படையிடம் இருந்து பறிபோகும் சூழலில் இருந்தது. அப்போது, பாரிஸ் நகரை முற்றாக அழித்துவிடும்படி ஹிட்லரிட் இருந்து டியெட்ரிச்சுக்கு உத்தரவு கிடைத்தது.

"இடிபாடுகள் தவிர்த்து, பாரிஸ் எதிரிகளின் கைகளுக்குச் செல்லக்கூடாது" என்று ஹிட்லரின் உத்தரவு கடுமையாக இருந்தது. உத்தரவுப்படி அந்த நகரில் இருக்கும் பாலங்கள், முக்கிய தளங்களில் குண்டுகள் வைக்கப்பட்டன.

நேச நாட்டுப் படைகள் நகரின் எல்லையை நெருங்கி விட்டன. அப்போது டியெட்ரிச்சுக்கு குண்டுகளை வெடிக்கச் செய்வதற்கு உத்தரவு போடுவது தான் பாக்கி இருந்தது. ஆனால் டியெட்ரிச் அதனை செய்யவில்லை. பதிலாக ஓகஸ்ட் 25 அன்று சுதந்திர பிரான்ஸ் படையிடம் சரணடைந்தார்.

பிரான்ஸ் தலைநகர் மீது அதிக காதல் கொண்ட அவர் ஹிட்லருக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்று கூறினார்.

மனைவியின் நகைகளை விற்று எழுத்துப்பணி செய்த கறுப்புக் கண்ணாடியார்!

அந்தப் புத்தகத்தின் பெயர் அல்வாத்துண்டு, ஆயிரம் பிரதிகளுக்கு மேல் அச்சடித்து விற்பனையாகாமல் மற்றொரு நண்பருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மனம் உடைந்து போய் விட்டார் அவர். இருவரும் சிறு வயதிலிருந்தே நெருங்கிய நண்பர்கள். ஒரு நாள் எழுத்தாளர் தனது 'அல்வாத்துண்டு' புத்தகப் பிரதிகளைத் தூக்கி பாழுங்கிணற்றில் போட்டுவிட்டார். நண்பர் பதறிப போய் 'என்ன காரியம் செய்தீங்க?' என்று ஆடிப்போய் விட்டார். உடனே எழுத்தாளர் நண்பர் பொறுமையாக 'இனிமேல் தான் இந்தப் புத்தகத்திற்குக் கிராக்கி வரப்போகும் பாருங்கள்' .... என்று சொன்னார்.

இருவரும் அலுவலகம் வந்து சேர்ந்தர்கள். உடனே தினசரி பத்திரிகைக்கு ஒரு விளம்பரம் செய்தார் எழுத்தாளர். 'அல்வாத்துண்டு' புத்தகம் முதல் பதிப்பு விற்றுத் தீர்ந்துவிட்டது. இப்போது இரண்டாவது பதிப்பு குறைந்த பிரதிகளே தயாராகின்றன. வேண்டுவோர் உடனே மணிஓடர் அனுப்பவும்' என்று மறுநாள் பத்திரிகையில் விளம்பரம் வெளிவந்தது. ஏகப்பட்ட ஓடர்கள் வந்து குவிந்துவிட்டன. இப்படிப்பட்ட அதிரடி மார்க்கெட் உத்தியை அந்தக்காலத்தில் கடைப்பிடித்த எழுத்தாளர் தமிழ்வாணன் அவரது நண்பர் வானதி திருநாவுக்கரசு தமிழ் துப்பறியும் நாவலின் தந்தை என்று அவரைச் சொல்லலாம்.

சங்கர்லால் என்பவர் துப்பறிவதாக அவரது நூல்கள் அமைந்திருக்கும். தமிழ்வாணன் வாழ்ந்த காலத்தில் சங்கர்லால் என்ற பெயர் மிகவும் பிரசித்தம். தமிழ்வாணன் வெறும் துப்பறியும் நாவல்களை மட்டும் எழுதிக்குவித்தவர் அல்ல. அவர் தொடாத துறையே இல்லை என்று சொல்லலாம். நல்ல பேச்சாளர். பல மருத்துவ நூல்களையும் எழுதினார். எழுதுவதைத் தவிர 'தமிழ் பல்பொடி' என்ற பெயரில் பல்பொடி தயாரித்து வியாபாரம் செய்தார். சேற்றுப்புண்ணுக்கு 'கால் காவலன்' என்ற மருந்தையும் தோல் சம்பந்தப்பட்ட வியாதிக்கு 'தோல் தோழன்' என்ற மருந்தையும் தயார் செய்து விற்பனையில் இறங்கினார். இன்சுவை என்ற பழச்சாறும் தயாரித்து விற்றார். 'புலித்தேவன்' என்ற நாடகத்தை எழுதி மேடையேற்றினார்.

திரைப்படமும் எடுத்தார். "காதலிக்க வாங்க' என்ற படம் இவருக்கு வெற்றியை ஈட்டிக்கொடுத்தது. கைரேகைக் கலையை முழுமையாக அறிந்துகொண்டு கைரேகை பார்த்து பலன் சொல்லும் நிபுணராகவும் இருந்தார் தமிழ்வாணன். அவரது கேள்வி பதில்" பகுதிக்கும் தனியிடம் உண்டு. "கல்கண்டு' வார இதழில் ஆசிரியராக இருந்து வாரா வாரம் வாசகர்களின் கேள்விகளுக்கு அவர் பதில் சொன்ன விதம் எல்லோரையும் கவர்ந்தது. பல விஷயங்களை ஆணித்தரமாகவும், கேலியாகவும் யோசிக்க வைக்கும் விதமாகவும் அவரது பதில்கள் இருக்கும். எம். ஜி. இராமச்சந்திரனுக்கு புரட்சி நடிகர், புரட்சித் தலைவர், பாரிவள்ளல், நிருத்திய சக்கரவர்த்தி எனப்பல

பெயர்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் தமிழ்வாணன் வழங்கிய 'மக்கள் திலகம்' என்ற பெயரே இன்று வரையும் நிலைத்து நிற்கிறது.

தமிழ்வாணனுக்கு சொந்த ஊர் தேவக்கோட்டை, பெற்றோர் வைத்த பெயர் ராமநாதன். அவரது பாடசாலை நண்பர்கள்தான் வானதி திருநாவுக்கரசு இருவருக்கும் தமிழ்ப்பாடம் பிடித்திருந்ததே தவிர கணிதம் கசத்தது. அதனால் பாடசாலை வகுப்பில் பின்னடைவு. மனம் தளரவில்லை. நண்பர்கள் பாடசாலையில் 'தமிழ் மணம்' எனற கையெழுத்து பத்திரிகை நடத்திய அனுபவம் இருந்ததால், திருச்சிக்கு வந்து அங்கு வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகையில் வேலை தேடினார்கள். தமிழின் மேல் உள்ள பிடிப்பால் ராமநாதன் தமிழ்வாணன் என்று மாறினார். ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற பொறி உள்ளுக்குள்

எரிந்து கொண்டே இருந்தது. 'என்ன செய்வது' எனறு யோசித்து, இறுதியில் ஒரு பதிப்பகம் துவங்கலாமே என்று முடிவுக்கு வந்தார்கள். 'ஜில் ஜில் பதிப்பகம்' ஆரம்பித்தனர். முதலில் போட்ட புத்தகத்தின் தலைப்பு 'சிரிக்காதே'

'ஜில் ஜில் பதிப்பகம் போட்ட புத்தகங்கள் ஓஹோவென்று போகாவிட்டாலும் வாழ்க்கையைச் சந்திக்கவும் சமாளிக்கவும் பெரிதும் உதவியாக இருந்தன. நேரு சென்னைக்கு வந்த போது அவரது வாழ்க்கை வரலாற்றைப் புத்தமாகப் போட்டு தெரு சார்பாக வெளிவந்த புத்தகங்களைப் பார்த்த குமுதம் ஆசிரியர் எஸ். ஏ. பி. அண்ணாமலைக்கு தமிழ்வாணன் மீது ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. 'கல்கண்டு' இதழ் ஆசிரியராகினார். ஆசிரியர் பொறுப்பேற்றுக்கொண்டதும், கேள்வி பதில், துப்பறியும் நாவல்கள், மருத்துவ கட்டுரைகள் என்று எழுதிக் குவித்தார் அவர் 1955ஆம் ஆண்டு மனைவியின் நகைகளை விற்று அவர் துவங்கியதுதான் மணிமேகலை பிரசுரம்.

அவர் வாழ்ந்த காலததில் 500க்கும் மேற்பட்ட புத்தகங்கள் அவரால் எழுதப்பட்டு வெளிவந்தன. 'வாழ்வியல்' நூல்கள் நன்றாக விற்பனையாகின. கைரேகை, ஜாதகம், அதிர்ஷ்ட எண் ஆகியவை குறித்த புத்தகங்களையும் போட்டிருக்கிறார் தமிழ்வாணன். இவரின் "எவ்வழி நல்வழி அவ்வழி நம்வழி" என்ற பொன்மொழி இன்று வரை விதந்து பேசப்படுகிறது. "துணிவே துணை" என்பது அவர் அறிமுகப்படுத்திய கோஷம்தான்.... தன் எழுத்தாலும், எண்ணத்தாலும் சிலர் வித்தியாசமானவராக அணிந்தார். தலையில் தொப்பி, கறுப்புக் கண்ணாடி, டை, ஷூ என்று அட்டகாசமாகக் காட்சியளிப்பார். அவர் வெறும் கறுப்புக்கண்ணாடியைத் தபால் அட்டையில் வரைந்து அனுப்பினாலே கடிதங்கள் அவருக்கு வந்து சேர்ந்துவிடும். என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். "அநீதிகளை எதிர்த்துப் போராடத் தயங்கக்கூடாது" என்று பேசியும் எழுதியும் வந்தவர்தான் தமிழ்வாணன்!

"கல்லொளுவை பாரிஸ்"

ஔவன் கவிதை

ஞெகிழி

வெஞ்சினப் பாடலென அடர்
வனத்தொரு
அனல் பறவை
கருகுமிலைச் சாம்பலில்
சிறகுலர்த்தும்
பெருவன எரியின் சிறு சுடரேந்திய
பொழுது
நெஞ்சில் மதர்த்த ஞெகிழிப் பூ

கிழ காலத்தீ படர
நினைவூர்ந்த சிறு பறவையின் சிறகு
நான்
இல்சொல்லில் புதைவுறு வரலாற்றின் வரள் குறிப்புகள்
குருதி யுறைந்து உக்கி மண்டின பெருஞ்சூறையன் முகம்
மலர்த்திலன்

பன்னூற்றாண்டு காலத் தோற்றத்தின் மீயலைவு
முழுமையுறா வடிவங் கொண்டதொரு கூத்து
கூரலகு வன்மம் சொல் குத்திய ரணம்
வன்மத்திலிருந்து சிறு பொறியென தெறித்து வானத்தெழுந்த
வெஞ்சினப்பாடலை கோடிச்சிறகிலொட்டி
எண்பான் திசை யடங்கக் கூவிற்று மென் ஆன்மா

எவண் திசையுமுறாப் பாடல்
எவண் செவியுமுறாப் பாடல்
இதயக்கொதிப்பில் மீள் துளிர்த்து
ஆயிரம் அடர்வனம் கடந்தொளிர் பொறிக்கீற்று

வேறுபாடெனும் பிரி கோட்டுத்தழும்பில்
ஒரு பிடி ஒத்தடமிடுக
மீச் சொல்லெடுத்து வரைந்திடும் பேரவா
பூப்பதெனக் கனவு வளர் நீ

ஞெகிழி

கவிதை மானுடத்தின் விமோசனம்

நமக்குத் தொழில் கவிதை என்றான் பாரதி. இந்தத் தொடர் குறித்து நிற்கும் அர்த்தம் கவிஞன் தொடர்ச்சியான கவி சொல்லி அல்லது கவிதையை உழைப்பின் வழியாக கருதும் படைப்பாளி என்பதல்ல, கவிதை இன்றியமையாத சமூகச் செயலாக்கத்தின் கருவி என்பது.

உண்மையில் கவிதை என்பது சொல்லடுக்குகளின் தொகுப்போ வார்த்தை ஜாலமோ அல்ல, அது வொரு அற்புதமான கலை. கவிதைக் கலை. உணர்வுகளின் கலவை; உரத்த சொல்லின் மௌனப் பிடிமானம்; ஓர் உள்மன உரையாடல்; அழுத்திப் பேசும் சம்பாசனை; ஒருவகை நிகழ்த்து கலை; வாழ்வனுபவத்தின் வெட்டு முகம்; உள் மனசின் காயவலி; கவிதையில் அமைவது வெறும் சொற்கள் அல்ல; அவை உயிர்ச் சொற்கள்; உறு சொற்கள்; மறு சொற்கள்.

பெரு நாட்டின் பெருங்கவி வியர் ஹெராட் கவிதை பற்றிய கவிதைக்கலையை எழுதியுள்ளார். கவிஞன் கவிதையை தன் பாட்டிற்கு வனைந்தெடுக்க முடியும் அதனை அழகிய பாத்திரமாக உருவாக்கவும் முடியும் என்பதனை ஹெராட் உணர்த்துகிறார். கவிதைதான் மானுடத்தின் விமோசனம்.

இலக்கியம் : சஞ்சிகையின் விரிதளம்

சிறு சஞ்சிகைச் சூழல் இலக்கிய பாட்டின் விரி தளங்களைத் திறந்துவிட்ட சூழல் தமிழிலக்கிய நெடும் பயண வழிப்பாட்டில் அழியாச் சுவடு காட்டி நிற்கிறது.

உலகம் முழுவதும் தமிழிலும் சிறு சஞ்சிகைகள் அல்லது சிற்றிதழ்கள் தோன்றி நின்று ஒரு காலகட்டத்தின் எழுத்தின் வீரியத்தை பதிவேற்றி வந்துள்ளமை வரலாறு. இந்த வரலாற்றுத் தொடுகையையும் தொடருகையையும் ஈழத்து சிறு சஞ்சிகைச் சூழலிலும் காணுகிறோம். இத்தகைய சிறு சஞ்சிகைப் பரவலின் வரலாற்றைத் தொகுத்தலும் அவற்றின் காத்திரத்தை ஆராய்தலும் காலகட்டத்தின் வெட்டு முகமாக அவை நின்றிலங்குவதை நிறுவுவதும் சிறு சஞ்சிகை ஆய்வாளர்களின் பணியுமாகும். இத்தகைய பணிகள் செப்பங்காணும் ஈழத்தில் சிறு சஞ்சிகை ஒன்றின் கனதியும் கணிப்பும் மேலும் மெருகு பெறும்.

இந்தப் பின்புலத்தில் அரச இலக்கிய ஆலோசனைக்குழு கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வெளியிட்ட இலக்கியம் விசேட மலர் 2020.20.21இந்தச்சூழலை உருவாக்கியுள்ளது.

இலங்கையில் வெளிவந்த இலக்கிய இதழ்கள் பற்றிய 14 கட்டுரைகளில் தொகையாக இலக்கியம் வளர்ந்துள்ளது. சிற்றிதழ்கள் குறித்த வாசிப்பை ஒருசேர நிகழ்த்துவதற்கான வாய்ப்பை இலக்கியம் மலர் வழங்குகிறது. இதனூடாக ஒரு மறுவாசிப்பு நிகழ்த்தவும் முடிகிறது. மரபுநிலை இலக்கியப் போக்கு நவீன நிலைபேற்றைப்பெறுவதற்கு இலங்கையில் சிற்றிதழ்களும் வழியமைத்தது என்பது அவதானிப்புக்குரியது. படைப்பை உலக மயப்படுத்தல், பழைய புதிய படைப்பாளிகளை ஒரு தளத்தில் நிறுத்துதல், படைப்புகளின் பரிணாமத்தை அல்லது வளர்ச்சிப் போக்கை இனங்காணுதல் என்பனவும் இத்தகைய இதழ்கள் வழியே நிகழ்ந்துள்ளன. இலங்கையில் இலக்கிய வரலாறு எழுதுகையிலும் அதனை பரவலாக்கம் செய்வதிலும் சிற்றிதழ்களின் பங்களிப்பு மகத்தானது என்பதனால் இதழ்கள் என்ற வகையில் இலக்கியம் விசேட மலர் இந்தப் பொருண்மையை முன்னிறுத்தியுள்ளது எனத் தோன்றுகிறது.

பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தனின் தொகுப்பும் பதிப்புமாக வெளிவந்துள்ள இந்நூலில் ஈழத்து சிற்றிதழ்கள் தொடர்பான அறிமுக குறிப்புகள் பொதுவாகவும், பிரதேச கள மையங்களான வடக்கு, கிழக்கு, மலையகம், புலம்பெயர் தேசம் என சிற்றிதழ் சூழல் குறித்த கட்டுரைகள் அமைகின்றன. அத்துடன் பாரதி, கலைச்செல்வி, மல்லிகை, அலை, சமர், தீர்த்தக்கரை, மூன்றாவது மனிதன் என முக்கிய சிற்றிதழ்கள் குறித்த சிறப்பான பார்வையும் கட்டுரைகளாக வந்துள்ளன.

சிற்றிதழ்களைத் தொகுத்து அவதானிக்கும் போது இலக்கியம் விசேட மலரை முன்வைத்து சிற்றிதழ் விடுபடல்கள், ஆழமான பார்வையின்மை,பரவலின்மை, அல்லது ஆய்வு அடர்த்தியின்மை, முழுமை மீது கவனம் கொள்ளாமை குறித்தெல்லாம் மறுவாசிப்பு செய்யலாமெனினும் சிறு சஞ்சிகையின் விரி தளங்களை இவை கோடிட்டு நிற்கின்றன என்பது முக்கியமானது.

எவ்வாறெனினும் இத்தகைய பொதுமைய இலக்கியப்பரப்பில் அல்லது குறித்த துறையில் நுண்பார்வை கொண்டதாக கட்டமைக்கப்படுவதென்பது கவனிப்புக்குரியது. இதுபோன்ற நுண் நோக்குகள். அடர்த்தியும் போது ஈழத்து இலக்கியச்சூழல் மற்றும் சிறு சஞ்சிகைச்சூழல் என்பன கனதியுறும்

தமிழிலக்கியத்தின் வரைபடம்

வரலாற்றுத் தொன்மையிலிருந்து தொடங்கும் தமிழ் இலக்கிய வரலாறு தொடருகை குறித்து பெருங்கதையாடல்கள் முன்னமே நிகழ்ந்திருக்கின்றன.தமிழ் கூறு தேசமெல்லாம் விரிந்த உலகின் திசையடங்கத் தமிழிலக்கியத்தின் வரைபடம் விரிநிலை கொண்டது.

இலக்கிய வரலாறு குறித்தும் தமிழ் இலக்கிய வரலாறு குறித்தும் ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு குறித்தும் நீட்சியுடைய கதையாடல்கள் நம் முன் உள்ளன. இத்தகைய வரலாறு எழுதுகை தொடர்பிலும், வகைப்படுத்தல் தொடர்பிலும், பல்வேறு கருத்து நிலைகள் உண்டு. அல்லது வெட்டுமுகப்பார்வை கொண்ட வரலாற்று எழுதுகை இன்னமும். வரலாறு எழுதுகை முடிவற்ற தன்மை கொண்டது ,வளர்ந்து செல்வது காய்தல் உவத்தலற்ற; ஆய்வு பூர்வமானது; உண்மை பூர்வமானது; ஆழமானது;

ஈழத்தில் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், திறனாய்வு என வடிவ வகையிலும், வடக்கு, கிழக்கு,மேற்கு, தெற்கு, மலையகமென பிரதேச வயிலும், புலம்பெயர் விதேச நோக்கிலும், மட்டுமல்லாது, சிறுவர்கள், பெண்கள் என்ற நோக்கிலும், நாட்டுப்புறவியல் சார்ந்தும், மொழிபெயர்ப்பு சார்ந்தும் மட்டுமல்லாது போரி லக்கியம்,போர்க் கால இலக்கியம், போர்க்கள இலக்கியம் என்றெல்லாம் அவ்வப்போது கால ஓட்டத்திற்கு ஏற்றவகையில் இந்த வகைப்பாடு பேசப்பட்டு வந்துள்ளது. இத்தகைய வரலாற்றியலை எழுதும் முறைமை உலகத்தில் எந்த அளவு நுணுக்கமாக வளர்ந்துள்ளது என்கின்ற கேள்வியும் உண்டு. ஈழத்து இலக்கிய வரலாற்றை பொதுப்படையாக ஆரியருக்கு முற்பட்ட, ஆரிய, போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய, தற்காலம் என்றெல்லாம் பலரும் பகுத்துள்ளனர். இந்த பகுத்தலிலுள்ள குறை நிறைகள் அலசலுக்கு உரியதாகும்.

மறுபுறம் காலம் என் தொடங்கி எதுவரை என்கின்ற கேள்வியும் உள்ளது. உட்படுத்தல் வேண்டும்.

இருபத்தியோராம் நூற்றாண்டில் இலக்கியத்தை தற்கால நிலையில் வைத்து தசாப்தகாலமாக வகைப்படுத்தி பகுத்து நோக்குதலூடாக நுண் பார்வையின் முழுமையை நோக்கலாம். இந்த வகையில் இருபத்தி யோராம் நூற்றாண்டில் மூன்றாம் தசாப்தத்தில் வெளிவந்த இலக்கியங்களை மேற்சொன்ன வகைமையில் நின்று தொகுப்பாகக்கத்து க்குட்படுத்துவது அவசியமுமாகும்.

இந்த முனைப்பு இலக்கிய எழுதுகை நோக்கின் இலகு தன்மையை மட்டுமன்றி விடுபடுதலற்றதும், விபரிப்பதுமான எழுதுகையை முக்கச் செய்யும் எனலாம். அவ்வாறு பார்க்கும்போது முதலாம் தசாப்தம்(2000 – 2010) இரண்டாம் தசாப்தம்(2011– 2020) மூன்றாம் தசாப்தம்(2021– 2030) என இந்நூற்றாண்டின் இலக்கிய வகைகளை கால அளவில் வகைப்படுத்தலாம். இலக்கியத் தேடல் மற்றும் தொகுப்பு நிலையில் அதன் இலகு தன்மை கருதி கீழ் இருந்தான அல்லது பின்னிருந்தான நோக்கு நிலை மூன்றாம் தசாப்தத்தில் தொடங்கப்படுகிறது. முக்கியமாக திறனாய்வு ,நாடகம், நாவல் ,சிறுகதை, கவிதை என்பவற்றுள் ஈழத்து தமிழ் கவிதை பரம்பலை நுணுகிப் பார்ப்பதற்கான வரைபடமாக இருபத்தியோராம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்த கவிதைகள் என்ற நுண் நோக்கு முக்கியம் பெறுகிறது. கவிதை எழுதுகையில் எவ்வாறான விடயப் பரப்புகள் அல்லது தலைப்புகள் அல்லது முறைமை கைக் கொள்ளப்பட வேண்டும் என்பது 2021 ஜனவரி 1, லிருந்து டிசம்பர் 31 வரையில் இலங்கைக் கவிதையின் வரவுகள் அவற்றுக்கான களங்கள் என்றவகையில் வெளியீடுகள், சிற்றிதழ்கள், மின்னிதழ்கள், வானொலி தொலைக்காட்சி முகப்பனுவல் என்பவற்றினூடாக பாடுபொருள் பகுப்பு மற்றும் தமிழில் மொழிபெயர்த்து வந்த கவிதைகள் எனவும் இந்த வரலாறு எழுதுகை மூலச் சான்றுகளாக அமைந்துவிடுகின்றன. இந்த திரட்சியை முழுமைப் படுத்துவதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட வேண்டும் இதற்கென கவிதை நூல்கள் மற்றும் வெளியீடுகள் ஊடகங்கள் குறித்தான பெயர் முதலில் தொடங்க வேண்டி உள்ளது இந்த பெயரிடல் ஒழுங்கு பட்டியல் வகையைச் சேர்ந்தது எனினும் இது விடுபடல், இருட்டடிப்பு, சார்பியல், என்பவற்றைத் தவிர்த்து பொதுமை நிலையை கண்டடைய உதவும் இந்த வகையான மூலங்களிலிருந்து கவிதை வரலாற்றை எழுதுவதற்கான எடுமானங்களை உருவாக்கி அல்லது அடையாளம் கண்டு எழுதுகையை நகர்த்த முடியும் .பெறுமானம் எனும்போது கவிதை பிரதேசம் விதேசம் எனவும், மற்றும் கவிதை உள்ளடக்க வகைமை, தனித்துவம், உரையாடல், குறித்த பிரதிகள் குறித்தான வெளிவந்த திறனாய்வுகள், அணிந்துரைகள், என்பவற்றையும் கூறலாம் .

மேலும் இக்காலப்பகுதி உலகடங்கட முடக்க காலமாக தடை காலமாக துயர் காலமாக வரலாற்றில் கொள்வதனால் இந்த வகைப்படு பொருளை மையமாகக்கொண்ட கவிதைகள் தனித்துவமாய் நோக்கப்படும். தவிரவும் ஈழத்து வரலாறு எழுதுகையில் இருபத்தியோராம் நூற்றாண்டில் மூன்று தசாப்தகால கவிதைகள் முழுவதுமாய் நோக்கப்படுதல் வரலாற்று புரிதலின் மைய அம்சம் எனக் கருதலாம்.

மாற்று மோதிரம் மணமகள் வடிவலங்காரக் கண்காட்சி

அருந்ததி நிறுவனம் ஒவ்வொரு வருடமும் "மாற்று மோதிரம் மணமகள் வடிவலங்கார கண்காட்சியினை யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நடத்திவருகின்றது. இக் கண்காட்சி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நிறுவனத்தின் பணிப்பாளர் கே.மேகலா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதமந்திரியின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ச பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இத்துறையில் திறமைகளை வெளிப்படுத்திய கலைஞர்களுக்கு விருதுகளையும் வழங்கினார். இங்கு இந் நிறுவனத்தின் திருமண பருவ இதழான அருந்ததி இதழும் திருமணம் சம்பந்தமான பாடல்கள் அடங்கிய இறுவெட்டு ஒன்றும் வெளியிடப்பட்டன.

அருந்ததி திருமண சேவையைப்பெற முகநூல் அருந்ததி www.arunthathee.com, facebook Arunthathee, /0777164524 whatsapp தொடர்பு கொள்ளமுடியும்.

படங்கள் **அஷ்ரப் ஏ. சமட், சுதத் மலவீர**

இலக்கியத்தில் பொன்விழாக் கண்ட மூத்த இலக்கிய ஆளுமை

● கவிஞர் கலாபூசணம் பாலமுனை பாறூக்

இலங்கையின் இலக்கியப்பரப்பில் தன்னை ஆழமாகத் தடம்பதித்து பொன் விழாக் கண்ட மூத்த இலக்கிய ஆளுமை கலாபூஷணம் கவிஞர் பாலமுனை பாறூக் அவர்கள். புன்னகையோடு எல்லோருடனும் மிகவும் அன்பாகப் பழகும் நல்ல பண்பைக் கொண்டவர். வளர்ந்து வரும் இளம் இலக்கிய ஆர்வலர்களுக்கு வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் இருந்து வருகின்றார். இவருக்கான பொன்விழா நிகழ்வு பாவேந்தல் பொன்விழாக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று பாலமுனை பிரதான வீதியில் அமைந்துள்ள பொறியியலாளர் மர்ஹூம் எம். சி.அமீர் மண்டபத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. இந்த விழாவில் கவிஞர் பாலமுனை பாறுக் அவர்களின் இலக்கியப் பணியைப் பாராட்டி 'பாவேந்தல் பொன்னேடு' என்ற பெயரில் மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

அத்துடன் விருதுகள். நினைவுச் சின்னங்கள், மற்றும் பொன்னாடைகள், வாழ்த்து பத்திரங்கள் பரிசுப்பொதிகள் என பெரும் கௌரவங்கள் வழங்கப்பட்டன. கவிஞர் பாலமுனை பாறூக்கின் வலைக்குள் மலர்ந்த வனப்பு. பாலமுனை பாறூக்கின் மூன்று நவீன காவியங்கள். மீளப் பறக்கும் நங்கணங்கள் ஆகிய புத்தகங்களும் வெளியிடப்பட்டன.

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்ட அட்டாளைச்சேனை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கிழக்கில் கடலாலும் மேற்கில் பச்சைப் பசுமையான வயல்வெளிக்கும் இடைநடுவே அமைந்த அனைத்து வளமும் கொண்ட ஒரு அழகிய கிராமம் பாலமுனை யாகும். இக்கிராமத்தில்



ஆரம்ப காலம் தொட்டே பல துறைகளிலும் பலர் தேர்ச்சி பெற்று தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பாலமுனை எனும் நாமத்தை ஒலிக்கச் செய்தனர். அந்த வகையில் தமிழ் இலக்கியத்துறையில் பாலமுனை கிராமத்தை சர்வதேசம் வரை உச்சரிக்கச் செய்த பெருமை என்றால் அது கவிஞர் பாலமுனை பாறூக் அவர்களையே சாரும். பாலமுனை பாறூக் எனும் பெயரால் அனைவராலும் அழைக்கப்படும் இவரது முழுப்பெயர் முகம்மதுலெவ்வை முகம்மது பாறூக். இவர் 1954.01.01 ஆம் திகதி மீராலெவ்வை மரைக்காயர் முகம்மதுலெவ்வை மற்றும் ஆதம்லெவ்வை முஹல்லம் அலிமானாச்சி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.

தனது ஆரம்பக்கல்வியை தரம் 01 தொடக்கம் 05 வரை பாலமுனை ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் (தற்போதைய அல்ஹிதாயா மகளிர் கல்லூரி) தரம் 06 தொடக்கம் சாதாரண தரம் வரை மட்டக்களப்பு மெதடிஸ்த கல்லூரியிலும், உயர் தரத்தை கல்முனை சாஹிரா கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார். பாலமுனையின் முதல் அரச வங்கிச் சேவை உத்தியோகத்தராக இலங்கை வங்கியில்1977 இல் கனிஷ்ட இலிகிதர் உதவிக் காசாளராக

நியமனம் பெற்று கடமையை ஆரம்பித்து பின்னர் பிரதி முகாமையாளர் வரை தரமுயர்ந்து 2013 வரை கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

இவர் 1987ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டுவரை பத்து புத்தகங்களை வெளியிட்டுள்ளார்.

அத்துடன் நூற்றுக்கணக்கான கவியரங்குகளுக்கு தலைமைதாங்கியதுடன் பல கவியரங்குகளில் பெரும் அளவில் கவிதைகளையும் பாடியுள்ளார்.

இவரின் இலக்கிய பயணம் பற்றி பார்க்கும் போது....

மேடை அறிவிப்பாளராகவும் நாடகக்கலைஞராகவும் அறிமுகமாகி 1970 களில் எழுத்துலகில் நுழைந்தார். அந்த வகையில் அக்காலத்தில் வெளிவந்த தினபதி பத்திரிகையின் ஞாயிறு பதிப்பான சிந்தாமணி சஞ்சிகைக்கு நகைச்சுவை எழுதி முதல் எழுத்திலேயே பரிசைப்பெற்றார். அதற்கடுத்து மீண்டும் ஒரு நகைச்சுவை எழுதி அதற்கும் பரிசு பெற இதனை கண்ணுற்ற அக்கால பிரசித்தி பெற்ற ஏனைய எழுத்தாளர்கள் அவர்களது நூல்களை இவருக்கு அனுப்பி வைத்ததனர். இது அவருக்கு மேலும் எழுத்துத் துறையில் உற்சாகமூட்டுவதாக இருந்தது.

அதனைத் தொடர்ந்து கவிதைகளை எழுதி பத்திரிகைகளில் பிரசுரிக்கத் தொடங்கினார். உண்மையில் அக்காலத்தில் பத்திரிகைகளில் கவிதைகளைப் பிரசுரிப்பதென்பது தற்காலத்தைப் போன்று இலகுவான காரியமல்ல. எழுதிய கவிதைகளை பிரசித்தி பெற்ற மூத்த கவிஞர்களுக்கு அனுப்பி வைத்து அவர்கள் சிபாரிசு செய்தால் மாத்திரமே அக்கவிதை பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். அதிலும் அவர் வெற்றி கண்டதோடு அவரது கவிதைகளை உள்ளடக்கிய முதலாவது நூலாக "பதம்" என்ற தலைப்பில் 1987 ஆம் ஆண்டு வெளிவந்தது. இதனை அம்பாறை மாவட்ட மக்கள் காங்கிரஸ் வெளியீட்டு வைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் இரண்டாவது படைப்பாக 2009 ஆம் ஆண்டு "சந்தனப்பொய்கை" எனும் கவித்தொகுப்பை வெளியிட்டார்.1970 களில் இலங்கை இலக்கிய உலகில் முற்போக்கு சிந்தனை முனைப்பாக இருந்த காலகட்டம் அது. இவரும் அச்சிந்தனையால் ஈர்க்கப்பட்டவர் என்பதில் ஐயமில்லை. இஸ்லாமியப்பற்றும், சமூக உணர்வும் மிக்க ஓர் இடதுசாரியாக நாம் இவரை அடையாளங் காணலாம். பதம், சந்தனப்பொய்கை ஆகிய இவரது முதல் இரு கவிதைத்தொகுதிகளும் இதற்குச் சான்றாக குறிப்பிடலாம்.

அதனைத்தொடர்ந்து தனது மூன்றாவது படைப்பாக 2010 ஆம் ஆண்டு கொந்தளிப்பு எனும் குறுங்காவியத்தை வெளியிட்டார். சுனாமியையும் அதன் தாக்கத்தையும் உணர்த்துவதாக அமைந்த இப்படைப்பானது இலங்கை அரச சாகித்திய மண்டல சான்றிதழையும் பெற்றுக் கொடுத்தது.அதன்பின்னராக 2011 ஆம் ஆண்டு வெளிவந்த அவரது நான்காவது படைப்பான "தோட்டுப்பாய் மூத்தம்மா "குறுங்காவியமானது முஸ்லிம்களின் வாழ்வியலையும் சம்பிரதாய சடங்கு முறைகளையும் கலை கலாசாரங்களையும் உணர்த்தி நின்ற இப்படைப்பானது இலங்கை அரச சாகித்திய மண்டல விருது,

கொடகே சாஹித்திய மகாகவி உரத்திர மூர்த்தி விருது மற்றும் இலங்கை இலக்கியப்பேரவையின்(யாழ்ப்பாணம்) சான்றிதழையும் பெற்று அவருக்கு தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பாராட்டையும் புகழையும் பெற்றுக் கொடுத்தது.மேலும் அவரது ஐந்தாவது படைப்பாக 2012 இல் யுத்த காலத்தில் இந்திய அமைதி காக்கும்படை வந்தசமயம் தமிழ் முஸ்லிம்களுக்கிடையிலான உறவில் ஏற்பட்ட மாற்றங்களை மையப்படுத்தியதாக எஞ்சியிருந்த_ பிரார்த்தனையோடு என்ற தலைப்பில் குறுங்காவியத்தை படைத்திருந்தார். இதனை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்சங்கத்தினர் வெளியிட்டு வைத்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

"பாலமுனை பாறூக்கின் குறுங்காவியங்கள் ஒரு ஆய்வு"(2014) அத்துடன் வலைக்குள் மலர்ந்த வனப்பு(2017)பாலமுனை பாறூக்கின் மூன்று நவீன காவியங்கள்(2020)"மீளப் பறக்கும் நங்கணங்கள்" (2020) என்பவற்றையும் வெயிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.அதனைத்தொடர்ந்து அண்மையில் பாலமுனை_ பாறூக்_ குறும்பாக்கள் எனும் படைப்பையும் எமக்கு வழங்கியதோடு நின்று விடாமல் அவரது இன்னுமொரு படைப்பும் மிகவிரைவில் வெளிவரவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

கவிதைகளையும் காவியங்களையும் உள்ளடக்கி ஒரு வெளிநாட்டவர் ஆய்வு நூலை தயாரிப்பதென்பது எமக்கும் எமதூருக்கும் மிகவும் பெருமை தரக்கூடிய ஒன்றாகும். அதனடிப்படையில் கே.சேகர் M.A, B.Ed அவர்கள் இந்தியா சென்னை பல்கலைக்கழகத்திற்குட்பட்ட புதுக்கல்லூரியில் இவரது நூல்களை உள்ளடக்கி "பாலமுனை பாறூக்கின் குறுங்காவியங்கள் ஒரு ஆய்வு" எனும் ஆய்வு நூலை சமர்ப்பித்து எம் பில் பட்டத்தை பெற்றார்.

மேலும் பல பட்டங்களுக்கும் விருதுகளுக்கும் சொந்தக்காரர்.

- 1999 இல் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னனியினால் கவிப்புனல் பட்டமும்,
- 2000 இல் கொழும்பு பிரிய நிலா கலை கலாசார பேரவையின் கவிஞர் திலகம் விருது,
- 2009 இல் இலங்கை அரசு கலைஞர்களுக்கு வழங்கும் உயர் விருதான கலாபூசன விருது,
- 2012 இல் கொழும்பில் இடம்பெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் சிரேஷ்ட கவிஞருக்கான விருது,
- 2012 இல் அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் சாமஸ்ரீ சிராஜுல் புனூன் விருது,
- 2012 இல் கல்முனை புதுமை கலை இலக்கிய வட்டத்தின் பா ஏந்தல் பட்டம்,
- 2014 இல் கிழக்கு மாகாண வித்தகர் விருது
- புலவர்மணி ஆ.மு .ஷரிபுத்தீன் சர்வதேசகவிதைப் போட்டியில் முதலாம் பரிசும் விருதும்,
- காத்தான்குடி நவ கலாமன்றத்தின் சர்வதேச கவிதைப் போட்டியில் விருதும் பணப் பரிசும்.
- வகவம் ஸ்தாபகக் குழுவின் சர்வதேச கவிதைப் போட்டியில் பணப்பரிசும் விருதும்.

ஞானம் இலக்கிய சஞ்சிகை,தென்றல் இலக்கிய சஞ்சிகை,ஒளி அரசி,தமிழ்நெஞ்சம் (பிரான்ஸ்) இதழ். சுடரொளி குழுமம் "வாசிப்போம் நேசிப்போம்" என்ற இவரின் கவிதையை பதாகையாக அச்சிட்டு இலங்கையிலுள்ள தமிழ் மொழிமூலப் பாடசாலைகளுக்கு இலவசமாக வழங்கி வகுப்பறைகளில் நிலைப்படுத்தியது.

தனது பெயருக்கு முன் கிராமத்தின் பெயரை அடைமொழியாக வைத்து உலகம் முழுதும் ஒலிக்கச் செய்தமையானது சமூகத்தினதும் கிராமத்தின்மீதும் இவர் கொண்டுள்ள அக்கறையை எமக்கு எடுத்துக் காட்டுகிறது. அதற்கேற்றாற் போல் கவிதையோடு மட்டும் நின்றுவிடாது ஊருக்காகவும், சமூகத்துக்காகவும் இவர் செய்து வரும் தொண்டுகள் அதிகம். அதற்கு இவர் வகித்த மற்றும் வகிக்கின்ற பதவிகளையும் குறிப்பிடலாம்.

அந்த வகையில் 17 வருடங்களாக பாலமுனையின் கிராமோதய சபையின் தலைவராக இருந்ததோடு மட்டுமல்லாது. பாலமுனை உதுமாபுரத்தில் தாருல் ஹஸனாத் பாடசாலை உருவாவதற்கு முக்கிய காரணகர்த்தாவாகவும் இருந்தார்.

- பாலமுனை ஜும்மா பெரிய பள்ளிவாசல் தலைவர்
- பாலமுனை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சபை தலைவர்
- அட்டாளைச்சேனை பிரதேச மத்தியஸ்த சபை கௌரவ உறுப்பினர்
- கல்முனை புதிய பறவைகள் கவிதா மண்டல ஸ்தாபக உறுப்பினர்
- அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னனி, YMMA ஆகியவற்றின் அம்பாறை மாவட்ட தலைவர்
- தென்கிழக்கு கலாசார பேரவையின் இணைச்செயலாளர்
- அகில இலங்கை சமாதான நீதவான்.
- பாலமுனை சமூக சேவை இயக்கங்கள் மற்றும் விளையாட்டுக்கழகங்களின் ஆலோசகர் என பலவற்றை குறிப்பிட்டுக் காட்டலாம்.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? என்பதற்கினங்க இவரது புதல்வர்களும் கவிதையில் நாட்டமிக்கவர்கள் என்பதை பத்திரிகைகளிலும் முகநூலிலும் வெளிவரும் அவர்களது படைப்புக்கள் சான்றாக உள்ளமையும் விஷேட அம்சமாகும்.

பாலமுனை_ பாறூக் என்று பெயர் தாங்கும் இக்கவிஞர் தனது பெயரால் கவிதை வாழும் தேசம் எங்கும் பாலமுனையின் மணம் பரப்பி மண்ணிற்கு என்றும் மகுடம் சூட்டுபவர் என்றால் மிகையாகாது. உள்நாட்டு பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சிகளில் கவிபாடியதோடு நின்று விடாமல் மலேசியா, இந்தியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளிலும் பங்குபற்றி, கவிதை பாடி சர்வதேசத்திலும் புகழ்பெற்றவர். அதுமட்டுமல்லாது தன் கிராமத்தில் உருவாகி வளர்ந்துவரும் இளம்தலைமுறைக் கவிஞர்களை ஊக்குவித்து ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார்.

எழுத்தாளர்கள் பொதுவாக தமது எழுத்துக்களில் அதிகமாக கற்பனை அம்சங்களையே பயன்படுத்துவர். ஆனால் இவரது படைப்புக்களில் அதிகமாக யதார்த்தமான பல உண்மை சம்பவங்களை காணமுடிகிறது. இச்சிறப்பானது இவரது படைப்புக்களை மேலும் வலுவடையச் செய்கிறது என்பது இலக்கிய வாதிகளின் பாராட்டாக அமைகிறது.

அத்தோடு தொடர்ந்தும் எழுதிக்கொண்டிருக்கும் இவர் விரைவில் இன்னுமொரு படைப்பையும் வெளியிடவுள்ளார் என்ற நற்செய்தியோடு இவரது இலக்கியப்பயணம் தொடர எமது வாழ்த்துக்களைத் தெரிவித்து பிரார்த்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

பொன்விழா கண்ட கவிஞர் பாலமுனை பாறுக் அவர்களை வாழ்த்துவதில் செந்தூரம் பெரு மகிழ்ச்சியடைகின்றது.

பி.எம்.எம்.ஏ.காதர்
(மருதமுனை தினகரன் நிருபர்)

சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணன்

யோசப் சின்னதம்பி,
கொட்டாஞ்சேனை.

கேள்வி: உலகம் ஆயிரம் சொல்லட்டுமே. உனக்கு நீ தான் நீதிபதி. மனிதன் எதையோ பேசட்டுமே. மனசை பார்த்துக்க நல்ல படி என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

பதில்: நான் ஏற்றுக்கொள்வது இருக்கட்டும்...முதலில் உங்களுக்கு உடன்பாடா என்று சொல்லுங்கள்.

கவிஞர் கண்ணதாசன் தனது வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களைத்தான் நிரைப்பட பாடல்கள் மூலம் நம்மோடு பகிர்ந்து கொள்கிறான். அதில் உண்மை இருந்தால் ஏற்றுக்கொள்ளலாமே.

எம்.மலர் ராணி,
கொழும்பு 13

கேள்வி: எனது அபிமான நடிகை ஜஸ்வரியா ராய் இப்போது படங்களில் நடிப்பதில்லையே....சினிமா உலகில் இருந்து விலகி விட்டாரா?

பதில்: இல்லையே...தற்போது பிரமாண்டமான

பொருட்செலவில் உருவாகிக் கொண்டிருக்கும் 'பொன்னியின் செல்வன்' நிரைப்படத்தில் நந்திநி என்ற கதா பாத்திரத்தில் ஐஸ்வரியா ராய் நடித்திருக்கிறார். இரண்டு பாகங்களாக தயாரிக்கப் பட்டு வரும் இந்தப்படத்தின் முதல் பாகம் இந்த ஆண்டு வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பெயரிடப்படாத ஹிந்திப்பட மொன்றில் மூன்று கதாநாயகிகளில் ஒருவராக ஐஸ்வரியா ராய் நடிப்பதற்கு சம்மதம் தெரிவித் துள்ளதாக பொலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வங்காள மொழிக் கவிஞரான ரவீந்திரநாத் தாகூர் எழுதிய நாவல்களில் ஒன்றான 'உமன்' என்ற கதையைத்தான் இந்தப் படத்தில் உபயோகப் படுத்த உள்ளனர். மூன்று பெண்களை மையமாகக் கொண்ட இந்த படத்தை,

பொலிவுட் நடிகை இஷிதா கங்குலி இயக்க உள்ளார்.

ஆர்.எம்.நவாஸ்,
புத்தளம்.

கேள்வி: நடிகை கீர்த்தி சுரேஷ் தனது சம்பளத்தை உயர்த்தி விட்டாராமே...?

பதில்: உண்மதான். தமிழ்,தெலுங்கு பட உலகில் முன்னணி கதாநாயகியாக உயர்ந்து இருப்பவர் கீர்த்தி சுரேஷ். மறைந்த பழம் பெரும் நடிகையான சாவித்திரி வேடத்தில் நடித்த பிறகு அவரது மார்க்கெட் அந்தஸ்தும் உயர்ந்தது. இந்த நிலையில் 'தசரா'என்ற தெலுங்கு படத்தில் நானி ஜோடியாகநடிப்பதற்கு கீர்த்தி சுரேஷை அணுகினர். அந்த படத்தில் நடிக்க கீர்த்தி சுரேஷ் அதிக சம்பளம் கேட்டதாகவும், இறுதியில் ரூ. 3 கோடிக்கு உடன்பாடு ஏற்பட்டு இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இதற்கு முன்பு அவர் ரூ. 2 கோடியில் இருந்து 2.5 கோடி வாங்கியதாக கூறப்படுகிறது.

எஸ் .பாலாஜி, கலஹா.

கேள்வி: 'இளைய 'புன்னகை அரசி என்று ஒரு காலத்தில் புகழப்பட்ட சிநேகா இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்..படங்களில் நடிப்பதை விட்டு விட்டாரா?

பதில்:சினிமா உலகத்திற்குள் வந்தவர்கள் அவ்வளவு எளிதில் வெளியே போய் விடுவார்களா என்ன...அருணாச்சலம் வைத்யநாதன் தாயாரித்து இயக்கும் 'ஷாட் பூட் த்ரீ' படத்தில் வெங்கட் பிரபுவுடன் நடித்துக் கொண்டிருக்கிறார். இது குழந்தைகளுக்காணபடம் என்று இயக்குனர் அறிவித்துள்ளார்.அதேநேரம்,மற்றைய குழந்தைகளுக்கான படங்களைப் போல் காதல் கீதம் எல்லாம் இந்தப் படத்தில் இல்லை..... என்றும் தெரிவித்துள்ளார்.

ஆர். எம். சுதாகர், வத்தளை.

கேள்வி:பழைய பாடல் போல புதிய பாடல் இல்லையே அது ஏன் மொழி..?

பதில்:அந்தகாலத்து 'இளைஞர்' களைப்போல் இந்த காலத்து 'இளைஞர்' கள் இல்லையே...ரசனை மாறி விட்டது.

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

மோசடி நபருடன் நெருக்கம்: ரசிகர்களுக்கு வேண்டுகோள் விடுத்த ஜாக்குலின்

சுகேஷ் சந்திரசேகருடன் ஜாக்குலின் நெருக்கமாக இருக்கும் புதிய புகைப்படம் ஒன்று வெளியாகி சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. இந்த புகைப்படத்தை பகிர வேண்டாம் என்று ரசிகர்களுக்கு ஜாக்குலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொழில் அதிபர்களை ஏமாற்றி ரூ.200 கோடி பணம் பறித்த புகாரில் கைதாகி ஜெயிலில் அடைப்பட்டு உள்ள சுகேஷ் சந்திரசேகருடன் இலங்கையை பூர்வீகமாக கொண்ட பிரபல இந்தி நடிகை ஜாக்குலின் பெர்னாண்டஸ் நெருக்கமாக இருக்கும் புகைப்படங்கள் ஏற்கனவே சமூக வலைத்தளத்தில் வெளியானது. ஜாக்குலினுக்கு ரூ.10 கோடி மதிப்புள்ள பரிசு பொருட்களை சுகேஷ் சந்திரசேகர் வழங்கி இருப்பதாகவும் சர்ச்சைகள் எழுந்தன. இதையடுத்து ஜாக்குலினுக்கு அமலாக்கத்துறையினர் சம்மன் அனுப்பி விசாரித்தனர்.

ஜாக்குலினும் சுகேசும் காதலித்து வந்ததாகவும் கூறப்பட்டது. இதனை ஜாக்குலின் மறுத்தார். இந்த நிலையில் தற்போது சுகேசுடன் ஜாக்குலின் நெருக்கமாக இருக்கும் புதிய புகைப்படம் ஒன்று வெளியாகி சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. இந்த புகைப்படத்தை பகிர வேண்டாம் என்று ரசிகர்களுக்கு ஜாக்குலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

''இந்த நாட்டு மக்கள் எனக்கு மரியாதையையும் அன்பையும் தந்துள்ளனர். இதில் ஊடகமும் அடங்கும். அவர்களிடம் இருந்து நிறைய கற்று இருக்கிறேன். இப்போது நான் கஷ்டமான சூழ்நிலையில் இருக்கிறேன். எனவே எனது தனிப்பட்ட புகைப்படங்களை வலைத்தளத்தில் பகிர வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நீதி வெல்லும்'' என்று கூறியுள்ளார்.

தனது பெயரில் போலி அறிக்கை – நடிகர் சூர்யா வழக்கு

சூர்யா பெயரில் வெளியானது போலி அறிக்கை என்றும் அந்த அறிக்கையைப் புறக்கணிக்குமாறும் போலியான அறிக்கையை வெளியிட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீட்டை உறுதி செய்துள்ள உச்ச நீதிமன்ற தீர்ப்பை பாராட்டி அரசியல் கட்சிகள் அறிக்கை வெளியிட்டுள்ளன. இந்த நிலையில் நடிகர் சூர்யா பெயரிலும் அறிக்கை ஒன்று வெளியாகி சமூக வலைத்தளங்களில் பரவியது.

அந்த அறிக்கையில், உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் இதற்காக முதல் அமைச்சருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் இந்தத் தீர்ப்பானது கொங்கு மண்ணைச் சார்ந்த பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களின் மருத்துவக் கல்விக் கனவை நனவாக்கும் என்றும் குறிப்பிடப்பட்டு இருந்தது. அறிக்கையில் சூர்யாவின் கையெழுத்தும் இடம்பெற்று இருந்தது. ஆனால் இந்த அறிக்கையை சூர்யா வெளியிடவில்லை என்றும் அவரது கையெழுத்துடன் போலியாக வெளியாகி உள்ளது என்றும் தெரிய வந்துள்ளது. இதையடுத்து போலி அறிக்கையை வெளியிட்டவர்கள் மீது வழக்கு தொடர சூர்யா முடிவு செய்துள்ளார்.

இதுகுறித்து சூர்யா சார்பில் அவரது 2டி பட நிறுவனத்தின் இணை தயாரிப்பாளர் ராஜசேகர பாண்டியன் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில், சூர்யா பெயரில் வெளியானது போலி அறிக்கை என்றும் அந்த அறிக்கையைப் புறக்கணிக்குமாறும் போலியான அறிக்கையை வெளியிட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதயக்கனி



ஒரு நடிகர் மக்களிடையே செல்வாக்கு பெற்று, ஒரு அரசியல் தலைவராய் உருவாகவும், முதலமைச்சராகவும் முடிந்ததென்றால் அது மகத்தான சாதனைதான்.

அந்தச் சாதனை நிகழ்த்தியவர் எம்.ஜி..ஆர் என்று அறியப்படும் எம்.ஜி. ராமச்சந்திரன் தான். அவர் ஒரேநாளில் அந்தச் சாதனையை நிகழ்த்தி விடவில்லை. பல்லாண்டு காலகடின உழைப்பு அதன் பின்னணியில் இருந்திருக்கிறது.

மக்கள் திலகம்', 'புரட்சித் தலைவர்', 'பொன்மனச் செம்மல்' 'புரட்சி நடிகர்', 'காவியத் தலைவன்', 'இதய தெய்வம்' என மக்களால் இன்றும் போற்றப்படும் பெருமைக்குரியவர் எம்.ஜி.ஆரின் 105வது பிறந்தநாள் நாளையாகும்.

எம் ஜி ஆர் பிறப்பு

1917ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் நாள் கண்டி (இலங்கை) நகரில் பிறந்தார் எம். ஜி.ஆர். தந்தை கோபால மேனன், தாய் சத்யபாமா ஆவர்.

குடும்பத்தில் கடைக்குட்டி (ஐந்தாவது பிள்ளை) எம்.ஜி.ஆர். இலங்கையில் பிறந்தாலும், மலையாளி எனக் கருதப்பட்டாலும் அவருடைய பூர்விகம் கோவை மாவட்ட காங்கேயம் என்று தெரிய வருகிறது.

எம்.ஜி.ஆருக்கு இரண்டரை வயதானபோது அவ ருடைய தந்தையும், அண்ணன் ஒருவரும், தமக்கைகள் இருவரும் அடுத்தடுத்து இறந்துவிட்டிருந்தனர். தந்தை யின் காலத்தில் வசதியாக இருந்த குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கியது.

அன்னை சத்யா குழந்தைகள் இருவருடன் (சக்கர பாணி, எம்.ஜி.ஆர்) தமிழகம் திரும்பினார். அங்கே கும்பகோணத்தில் தம்முடைய சகோதரர் நாராயணன் நாயர் ஆதரவில் குடியேறினார். அவர் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் பின்பாட்டுப் பாடுகிறவர்.

அன்னை சத்யா குழந்தைகளை பள்ளிக் கூடத்தில் சேர்த்துப் படிக்க வைத்தார். அஞ்சாமை, நேர்மை, வாய்மை என்று அருங்குணங்கள் பலவும் வாய்க்கப் பெற்ற பெண்மணி அவர். அதனால்தான் வாழ்வின் அத்தனை பிரச்சனைகளையும் ஒற்றை ஆளாய் நின்று அவர் சமாளிக்க முடிந்தது.

எம்.ஜி.ஆர் நாடக சம்பெனி

அன்னையின் வளர்ப்பில் எம்.ஜி..ஆர். சிறந்த பண்பாளராய் உருவானார். சகோதரியின் குடும்பம் வறுமையில் படும் துயர், கண்டு பொறுக்க முடியாத நாராயணன் நாயர் குழந்தைகளைத் தாம் பணியாற்றும் நாடகக் கம்பெனியில் சேர்த்துவிடுமாறு யோசனை கூறினார்.

எம்ஜீஆரின் பிறந்த தின நிகழ்வு நாளை

அகில இலங்கை எம்ஜீஆர் மன்றம் நடத்தும் எம்ஜீஆரின் 105ஆவது பிறந்த தின நிகழ்வு நாளை மாலை 6 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டை பழைய நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு அகில இலங்கை எம்ஜீஆர் மன்றத்தின் தலைவர் எஸ். எச். எம். இத்ரீஸின் தலைமையில் நடைபெறும். இதில் கலைஞர்கள், அரசியல் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

மூன்று வகுப்பு படித்ததோடு எம்.ஜி..ஆரின் படிப்பு நின்று போனது. மதுரை ஸ்ரீ ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் சகோதரர்கள் இருவரும் நடிகர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

காளி என். ரத்தினம் என்ற நடிகர் எம். ஜி.ஆருக்கு நடிப்புப் பயிற்சி அளித்தார். அந்த நாடகக் கம்பெனி வாத்தியாராக (கதை வசனம் எழுதுகிறவர்) இருந்தவர் நடிகர் எம். கே. ராதாவின் தந்தை எம். கந்தசாமி முதலியார் ஆவார்.

பி.யூ. சின்னப்பா, டி.எஸ். பாலையா போன்றவர்கள் அந்தக் கம்பெனியில் நடித்துக் கொண்டிருந்தனர். நாடக நடிகருக்குத் தேவையான நடிப்பு, வசனம், பாட்டுப் பயிற்சிகளுடன் நடனம், வாள், சிலம்புப் பயிற்சியும் பெற்றார் எம்.ஜி..ஆர். பயிற்சிகள் முடிந்ததும் பாலபார்ட் (குழந்தை நடிகர்) வேடங்களில் நடிக்கத் தொடங்கிய எம்.ஜி..ஆர் பெற்ற முதல் சம்பளம் ஐந்தே ரூபாய்கள்.

தாமும் ராஜபார்ட் (கதாநாயக வேடம்) நடிகராகி நிறையப் பணம் சம்பாதித்து நல்ல உடைகள் அணிந்து, தாயாரை சௌகர்யமாய் வாழ வைக்க வேண்டும் என்று கனவு கண்டார் அவர்.

எம்.ஜி..ஆர் நடித்த முதல் நாடகம் மகாபாரதம். பி.யூ. சின்னப்பா, எஸ்.ஜி. கிட்டப்பா, என்.எஸ். கிருஷ்ணன் ஆகியோர் அப்போது எம்.ஜி..ஆருக்கு சீனியர்கள். ஆனாலும் அவரிடம் பிரியமாய் நடந்து கொண்டனர்.

ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி வாத்தியார் எம். கந்த சாமி முதலியார் ஒரு நாடகக் குழுவை ஒப்பந்த அடிப்படையில் இரங்கூனுக்கு (பர்மா) அழைத்துச் சென்ற போது எம்.ஜி..ஆரும் அந்தக் குழுவில் இடம் பெற்றார்.

அப்போது அவருக்கு வயது 14. இந்தியா திரும்பியதும் மீண்டும் பழைய கம்பெனியிலேயே நடிப்பு தொடர்ந்தது. தமிழகத்தில் அப்போது பேசும் படம் தயாரிக்கத் தொடங்கியிருந்தார்கள்.

நாடக நடிகர்களில் பலரும் சினிமா வாய்ப்புக்குப் படையெடுத்தார்கள். எம்.ஜி. ஆரும், சக்கரபாணியும் சினிமாவில் நடிக்க விரும்பினர். அன்னையின் அனுமதியும் கிடைத்தது. குடும்பம் சென்னைக்கு இடம் பெயர்ந்தது.

வாத்தியார் கந்தசாமி முதலியார் தம்முடைய செல்வாக்கில் மகன் எம். கே. ராதாவை சில படங்களில் நடிக்கச் செய்திருந்தார்.

எம்.ஜி.ஆரும் சக்கரபாணியும்

எம்.ஜி..ஆரும் சக்கரபாணியும் வாய்ப்பு தேடி சிரமப்பட்டார்கள். தினமும் வாத்தியார் எம். கே. முதலியாரைப் பார்த்து வணங்கிச் செல்வார்கள் அப்போது எம்.ஜி..ஆருக்கு வயது பதினெட்டு கதர் வேட்டி சட்டை அணிந்து, உயர்ந்த குடி வைத்த செருப்புடன் நடந்து செல்வார்.

பார்க்கவே கம்பீரமாய் இருக்கும். வாத்தியார் எம். கே. முதலியார் சிபாரிசில் 'சதிலீலா வதி' படத்தில் இன்ஸ்பெக்டர் வேடம் கிடைத்தது எம்.ஜி..ஆருக்கு. சிவாஜிராவில் அவர் பெற்ற முதல் சம்பளம் நூறு ரூபாய்.

இடையில் கொஞ்ச நாள் வாய்ப்பில்லை. பிறகு 'இரு சகோதரர்கள்' என்ற படத்தில் நடித்தார். அதனைத் தொடர்ந்து சிறு சிறு வேடங்கள். எம்.ஜி..ஆர் கதாநாயகனாக நடித்த 'வீரஜகதீஷ்' படம் 1938ல் வெளியானது. அவருடைய திருமணம் பார்கவி என்ற பெண்ணுடன் நடந்தது. அப்போது எம். ஜி..ஆருக்கு வயது 21.

எம்.ஜி.ஆர் மனைவி இறப்பு

பட வாய்ப்பு இல்லாததால் குடும்பம் நடத்தவே சிரமம். அப்போது இரண்டாம் உலகப் போர் மூண்டது. ஜப்பான்காரன் சென்னையிலும் குண்டு வீசுவான் என்று அஞ்சப்பட்டது.

சகோதரர்கள் தத்தம் மனைவியரை பிறந்தகத்துக்கு அனுப்பி விட்டனர். சொந்த ஊரான பாலக்காட்டில் இருந்தபோது பார்கவி மாரடைப்பால் இறந்துவிட்டார். மனைவியை இழந்த சோகத்தில் எம்.ஜி..ஆர். தற்கொலை வரை போய் விட்டார்.

எம்.ஜி.ஆர் இரண்டாவது திருமணம்

எம்.ஜி..ஆர் குடும்பத்தினர் வற்புறுத்தலுக்காக சதானந்தவதி என்ற பெண்ணை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார்.

ஆனால் அந்தப் பெண் கருச் சிதைவு, காசநோய் பாதிப்புகளில் படுத்த படுக்கையானார். 1962ல் இயற்கை எய்தினார் எம்.ஜி..ஆர். வாழ்க்கை வரலாறு mgr history in tamil language.

எம்.ஜி.ஆர் திரையுலக பயணம்

1940களில் அரிச்சந்திரா போன்ற படங்களில் அவர் சில்லறை வேடங்களில் நடித்தார். 1945 ல் ஜுபிடர் பிக்சர்ஸ் தயாரிப்பான 'ராஜகுமாரி' படத்தில் எம்.ஜி..ஆர். கதாநாயகனாய் நடித்தார்.

அதன் பிறகு அவர் நடித்த அபிமன்யு, ராஜமுக்தி, ரத்ன குமார், மோகினி படங்களில் அவருக்குக் கிடைத்தது இரண்டாவது கதாநாயக வேடந்தான். சின்னப்பா, பாகவதர், டி..ஆர். மகாலிங்கம், கே.ஆர். ராமசாமி, எம். கே. ராதா ஆகியோர் புகழ் பெற்றிருந்தனர்.

எம்.ஜி..ஆர் அப்போது அவர்களுடன் ஒப்பிடப்படக்கூடிய நிலையை அடைந் திருக்கவில்லை. 1949ல் கலைஞர் வசனமெழுதிய 'மந்திரிகுமாரி' படத்தில் நடித்ததன் மூலம் எம்.ஜி..ஆர். முக்கிய நடிகர்களில் ஒருவரானார்.

1950 – 53 காலகட்டத்தில் எம்.ஜி..ஆர் நடித்த மர்மயோகி, சர்வாதிகாரி, அந்தமான் கைதி, என் தங்கை, ஜெனோவா, நாம் என்று அத்தனை படங்களும் வெற்றி பெற்றன. 1952 ல் மலைக்கள்ளன் மகத்தான வெற்றி

எம்.ஜி.ஆர் அரசியல் பயணம்

1952ல் அறிஞர் அண்ணாவை சந்தித்த எம். ஜி..ஆர். அரசியலிலும் சடுபாடு கொண்டார். 1953 ல் ராயப்பேட்டை லாயிட்ஸ் ரோடு பங்களாவை விலைக்கு வாங்கிய எம்.ஜி..ஆர். தமது தாயின் நினைவாக 'சத்யா இல்லம்' என்று பெயரிட்டார்.

எம்.ஜி..ஆரும் சிவாஜியும் இணைந்து நடித்த ஒரே படம் கூண்டுக்கிளி. அப்போதிருந்து எம். ஜி..ஆர். தி.மு.க விலும், சிவாஜி காங்கிரசிலும் நிலைத்துவிட்டனர். எம்.ஜி..ஆர். தி.மு.க. கூட்டங்களில் கலந்து கொண்டு, தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

1962ல் தி.மு.க வெற்றி பெற்ற போது எம். ஜி..ஆரை எம்.எல்.ஏ ஆக்கினார் அண்ணா. எம். ஜி..ஆர். தேர்தலில் வென்று (பல்லாவரம் தொகுதி) எம்.எல்.ஏ ஆனார்.

எம்.ஜி..ஆர் தயாரிப்பாளராக கண்டறியப்பட்டார் எம்.ஜி..ஆரின் வாள் வீச்சுக்காக ஓடிய படம் குலேபகாவலி. அவரை வசூல் சக்ரவர்த்தியாக்கிய படம் 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும். தொடர்ந்து வெற்றி முகத்தான், வெள்ளிவிழாப் படங்கள்தான். சின்னப்ப தேவரின் படங்கள் பலவற்றிலும் எம்.ஜி..ஆர் தான் கதாநாயகன். 1958 ல் எம்.ஜி..ஆரின் சொந்தத் தயாரிப்பான நாடோடி மன்னன் அமோக வெற்றி பெற்றது. அதன் மூலம் அவர் டைரக்டராகவும் அறியப்பட்டார். 1959 மதுரை நகரத்து மக்கள் அவருக்கு அன்புப் பரிசாக 110 சவரனில் தங்கவாள் வழங்கிப் போற்றினர். எம்.ஜி..ஆர். 136 படங்களில் நடித்திருக்கிறார். அவருடைய சினிமாப் புகழ் அரசியலிலும், அரசியல் செல்வாக்கு சினிமாவிலும் அவருக்குக் கை கொடுத்தது.

எஸ். எச். எம். இத்ரிஸ்
அகில இலங்கை எம். ஜீ. ஆர் மன்றத் தலைவர்

"பாடுவோர் பாடலாம்" தேர்வு நிகழ்வு இன்று கொழும்பில்

இலைமறைக் காயாய் ஒளிந்திருக்கும் புதிய பாடக பாடகிகளை இனங் கண்டு அவர்களுக்கு ஒரு இசைமேடை ஏற்படுத்திக் கொடுக்கும் உயரிய எண்ணத்தில் கலை ஸ்ரீகலை மன்றத்தின் ஏற்பாட்டில் கவியும் கலையும் இணைந்து வழங்கும் "பாடுவோர் பாடலாம்" மாபெரும் இசை நிகழ்ச்சி எதிர்வரும் 23ஆம் திகதி கொழும்பு ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் அமைந்துள்ள புதிய நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னோடியாக . பாடகர்கள் மற்றும் பாடகிகளை தெரிவு செய்யும் ஒத்திகையும் தேர்வும் இன்று 16ஆம் திகதி காலை 10மணி முதல் புறக்கோட்டை பழைய நகர மண்டபத்தில் நடைபெற உள்ளது. பாடுவதில் ஆர்வமுள்ள பாடக பாடகிகள் இந்தத் தேர்வு நிகழ்வில் கலந்து கொண்டு மாபெரும் போட்டியில் பங்கு கொள்ளும் வாய்ப்பை பெற்றுக் கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் கவிக்கமலாும் கலை ஸ்ரீயும் தெரிவித்துள்ளார்கள்.

வளர்ந்து வரும் இளம் எழுத்தாளரும் இளம் ஊடகவியலாளருமான நிவேதா ஜெகநாதன் பதுளை அப்புத்தளை பிற்றத்மலை எனும் இடத்தில் வசித்து வருகிறார். இவர் க. பொ. தராதர சாதாரண தரத்தை தொட்டுலாகலை தமிழ் கனிஷ்ட வித்தியாலயத்தில் கற்று பின்னர் காலச்சூழ்நிலையால் குடும்பத்தோடு கொழும்பில் இடம்பெயர்ந்து க. பொ . தர உயர்தரத்தை விவேகானந்தா கல்லூரியில் கற்றார்.

அதன் பின்னர் மதுரை காமராஜன் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பை பூர்த்தி செய்து தற்போது தனியார் தொலைக்காட்சியான U TV இல் செய்தி வாசிப்பாளராக கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

இலக்கியத்தில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது என வினவிய போது பாடசாலைக்காலங்களில் விரும்பியும் விரும்பாமலும் ஆசிரியர்களின் கட்டாயத்தில் கட்டுரைப் போட்டி , பேச்சு போட்டி, பாவோதல் போட்டி என எல்லா போட்டிகளிலும் பங்கு பற்றி அதிலே முதலிடங்களை பெற்ற போது இலக்கியத்தில் ஆர்வம் ஏற்பட்டதாக கூறினார்.

அதன் பிறகு எந்த போட்டிக்கு விண்ணப்பிக்க கேட்டாலும் முதலாவதாக தனது பெயர் தான் பதிவில் இருக்கும், விலைமதிக்க முடியாத காலங்களும், அனுபவங்களும் ,வெற்றிகளும், தோல்விகளும் பாடசாலைக்காலத்தில் தான் ஆரம்பமாகின எனக் கூறினார்.

இப்போது இப்படியொரு இடத்தில் இருப்பதுவும் பாடசாலையில் இடப்பட்ட அடித்தளம் தான் எனக் கூறுவதோடு அதற்கு முதலில் தன்னை வளர்த்துவிட்ட ஊக்கப்படுத்திய அனைத்து ஆசிரியர்களுக்கும் தனது பெற்றோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறார்.

இவர் இதுவரை ஆறு நூல்களை வெளியிட்டிருக்கிறார். அவற்றில் ஐந்து நாவல்களும் ஒரு சிறுகதை தொகுப்பும் உள்ளடங்குகின்றன. இந்த ஆறு நூல்களும் சமூகத்தின் மக்களின் வாழ்வுநிலை தொடங்கி போராட்டம் வரையிலும் அனைத்தையும் உள்ளடங்கியிருப்பதாகவும் பெண்கள் சார்ந்த விடயங்கள் அதிகமாக இந்த நூல்களில் பேசப்பட்டிருப்பதாகவும் , சமூகத்தில் கணவனை இழக்கும் போதும், பெற்றோரின் அரவணைப்பில் இருந்து சமூகத்தில் ஒரு பெண் பிள்ளை தனியே போராட முயற்சிக்கின்ற போது எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் எவ்வளவு பாரதூரமானது என்பவற்றையும் அவற்றையெல்லாம் கடந்து சாதனைப் பெண்களாக திகழும் போது சமூகம் அவர்களை தாங்கிக் கொள்வதும், குழந்தையின்மையால் சமூகத்தில் பெண்கள் எவ்விதத்தில் வஞ்சிக்கவும் பழி சொற்களால் கொடுமை செய்யப்படுகின்றார்கள் இந்த விடயத்தினை இன்றைய சமூகம் எவ்வாறு பார்க்கின்றது இவ்வாறான பல்வேறு விடயங்களை தனது கதைகளில் உள்ளடக்கியுள்ளதாக கூறினார்.

மேலும் இவர் சமூகத்திற்கு தனது எழுத்துக்கள் மூலம் கூற விளைவது யாது எனக் கேட்ட போது

திறமைகள் பல இருந்தும் பலர் இன்னும் இலைமறை காய்களாகவே இருக்கின்றார்கள். சுலபமாக எதனையும் பெற்று விடலாம் என எண்ணுவது முட்டாள்தனம், அதனையும் தாண்டி பெண் தனியாளாக இருந்தாலும் எதனையும் சாதிக்க கூடிய வல்லமை கொண்டவள். துணிச்சல் மிக்கவள் அவள் சரியான பாதையினை தெரிவு செய்து ஓட ஆரம்பிக்கும் அந்தத் தருணத்தில் அல்லது அவள் இயலாமையாக உணரும் சந்தர்ப்பங்களில் அவளை தட்டிக்கொடுத்து பெண்களின் வளர்ச்சிக்கு பெற்றோர்கள் பங்காளர்களாகவும் , பக்க பலமாகவும் இருப்பார்களாயின் சமூகத்தில் மிக உன்னதமான நிலையில் சாதனை பெண்களாக வீட்டில் ஒவ்வொரு பெண்ணும் திகழுவாள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை எனக் கூறுகிறார்.

எதிர்காலத்தில் எவ்வாறான இலக்கிய படைப்புக்களை உங்களிடம் எதிர்பார்க்க முடியும் என வினவிய போது இவ்வாறு பதிலளித்தார்.

இதுவரை சமூகத்திற்கு தன்னால் கொடுக்கப்பட்டதைப் போன்று கடந்த கால வாழ்க்கை முறை, கடந்து வந்த பாதை பற்றிய கதைகளை வருங்கால சந்ததிகளுக்கு இட்டுச்செல்ல வேண்டும். எதிர்கால சந்ததிகளுக்கு நாமும் நம் முன்னோர்களும் கடந்து வந்த பாதைகளை கதைகளாக கொடுக்கும் சந்தர்ப்பத்தில் அது அவர்களின் மனதில் படிப்பினையாகவும் இருக்கும். எனவே எதிர்கால நூலாக்கங்களும் வெறும் கதைகளாக இல்லாமல் பயனுள்ள விடயங்களைத் தர வேண்டும் என்பது தனது அவா எனக் கூறுகிறார்.

மேலும் இவர் கூறுகையில் கலைத்துறையில் மட்டுமன்றி உயர்தரம் முடித்த பிறகு ஊடகத்துறைக்குள் சென்று விட வேண்டும் என்ற ஆசையில் தொடர்ந்து வேலை வாய்ப்புக்காக முயற்சித்துக் கொண்டிருந்தார். தன்னைத்தவிர வீட்டில் உள்ள யாருக்கும் இந்த வேலையில் ஈடுபாடு இல்லை. அதனாலேயே கிடைத்த பல வாய்ப்புக்களை தவற விட நேர்ந்தது. போராட்டத்தின் பயனாய் ஒருவாறு வீட்டில் உள்ளவர்களின் மனதை மாற்றி வேலைக்கு சம்மதம் வாங்கியவுடன் வேலையும் கிடைத்தது யூ டீவி எனும் அரிய பொக்கிசத்தில். ஏ.எல். இர்பான் அண்ணா மற்றும் மிஸ்பா அண்ணா ஆகியோரின் உதவியுடன் யூடிவியில் செய்தி வாசிப்பாளினியாகும் வாய்ப்புக்கிடைத்தது.

U TV இல் செய்தி வாசிப்பதனை தவிர ஊடகம் சார்ந்த வேலைகள் எதனையும் கற்றிருந்திராத தனக்கு ஒரு செய்திப் பிரிவில் நடக்கும் அத்தனை வேலைகளையும் துல்லியமாக கற்றுத்தந்த தாய் வீடு அது என்கிறார். அங்கே தனக்கு கிடைத்த நட்புக்களும் அப்படித்தான் முகம் சுளிக்காமல் கேட்டவுடன் எத்தனை தடவையும் சொல்லித்தரும் இலகிய மனம் கொண்டவர்கள். இந்த துறைக்குள் வந்தவுடன் பல்வேறு விடயங்களை கற்றுக் கொண்டதோடு கற்றவற்றை செயற்படுத்திக் கொண்டும் இருப்பதாகவும் கூறுகிறார். நான்கு வருட ஊடகப் பயணத்தில் பல்வேறு போட்டிகள் சவால்கள் என சளைக்காமல் எல்லாவற்றிற்கும் முகம்கொடுத்து போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தில் புன்னகையோடு ஓடிக்கொண்டிருப்பதாக பதிலளித்தார்.

மேலும் ஒரு பெண்ணாக எதிர்கொண்ட சவால்களாக

ஊடகத்துறையில் இருந்து கொண்டு இலக்கியத்துறையில் சாதிப்பதென்பது சவால் தான். நேரப்பற்றாக்குறை , பொருளாதாரம் படைப்புக்களை நம் நாட்டை விட்டு வெளிநாட்டு இலக்கிய ஆர்வலர்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பது போன்ற விடயங்கள் தான் தன் கண் முன்னே சவால்களாக இருக்கின்றதென கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்திற்கும் தனது பதில்களை இவர் வழங்கியுள்ளார்.

மஜினா உமறு லெவ்வை
மாவடிப்பள்ளி.

மனைவி: கணவனுக்கு இலக்கணம் சொல்லி கொடுக்கிறாள். மனைவி: நான் ரொம்ப அழகு... இது என்ன காலம்? கணவன்: அது ஒரு இறந்த காலம்....

ஒரு சிறுவன் தனது செல்லில் சார்ஜ் செய்ய ஒரு கடைக்கு சென்றான். கடைக்காரரிடம் கேட்டான் "அண்ணா, 10 ரூபாய்க்கு ரீசார்ஜ் செய்தால் எவ்ளோ ரூபாய்க்கு பேசலாம்?". அவர் சொன்னார் "6 ரூபாய்க்கு பேசலாம் தம்பி". அந்த சிறுவன் கேட்டான் "அப்ப மீதி 4 ரூபாய்க்கு முறுக்கு தாங்க".

ஆசிரியர்: எவன் ஒருவனால் ஒரு விசயத்தை மற்றவர்களுக்கு புரிய வைக்க முடியவில்லையோ அவன் ஒரு முட்டாள்... மாணவர்கள்: புரியல சார்...

பஸ் ஸ்டாண்ட்ல பஸ் நிக்கும். ஆட்டோ ஸ்டாண்ட்ல ஆட்டோ நிக்கும்.. சைக்கிள் ஸ்டாண்ட்ல சைக்கிள் நிக்கும். ஆனா... கொசுவத்தி ஸ்டாண்ட்ல கொசு நிக்குமா?? யோசிக்கனும்...!!

சே!சே! வர வர செல்போனை எதெதுக்குத்தான் யூஸ் பண்றதுன்னே இல்லாம போயிடுச்சு! ஏன் என்ன சலிப்பு உனக்கு? கல்யாண பந்தியில கடைசில உக்காந்துருக்கறவரு முதல்ல ஒக்காந்தவருக்கு ஃபோன் பண்ணி பாயாசம் அங்கேயே தீந்துடுமா இல்ல கடைசி இலை வரைக்கும் வருமான்னு கேக்கறாரு. இது எப்படி இருக்கு

நம்ம அய்யாச்சாமி நடு ஆற்றில் படகில் போய்க் கொண்டிருக்கிறார்... அப்போது தூரத்தில் ஒரு போர்டு உள்ளதைப் பார்த்து அதில் என்ன எழுதி இருக்கிறது என்று படிக்க முயல்கிறார். ஆனால் அவரால் படிக்க முடியவில்லை... எனவே அவர் படகிலிருந்து குதித்து நீந்தி சென்று படிக்கிறார்... "இங்கு முதலை உள்ளது...யாரும் இங்கே நீந்த வேண்டாம்."

மிருகக் காட்சி சாலையில் புலி ஒன்று, பார்வையாளரில் ஒருவனைக் கொன்றுவிட்டது. அதைக் கண்டு பக்கத்து கூண்டில் இருந்த குரங்கு புலியைப் பார்த்துக் கேட்டது குரங்கு: ஏன் அவனைக் கொன்னே... புலி : அந்தப் பரதேசி நாய் மூணு மணி நேரமா என்னைப் பார்த்துச் சொல்றான் "எவ்ளோ பெரிய பூனைன்னு.

நீதிபதி : நகையைத் திருடிட்டேன்னு உன் மேல் உள்ள வழக்கில் நீ குற்றவாளி இல்லைன்னு நிரூபணம் ஆகிடுச்சு, நீ போகலாம்.
குற்றவாளி : அப்டீன்னா திருடின நகைகளை நானே வச்சுக்கட்டுமா சாமி...

பொலிஸ்: பஸ் எப்படி விபத்தில் சிக்கியது? சாரதி: அதான் எனக்கும் புரியல சார்... நான் நல்ல தூக்கத்தில இருந்தேன்.

7 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





வழிகாட்டுங்கள்



தொடர்புபடுத்துங்கள்

பன்மைச் சொற்களை எழுதுங்கள்

மீன்	-	_____
பேனா	-	_____
சொல்	-	_____
வாகனம்	-	_____
நாள்	-	_____
பொம்மை	-	_____
புத்தகம்	-	_____
வாக்கியம்	-	_____
மலை	-	_____
கதை	-	_____
பறவை	-	_____
தேனீ	-	_____
பூ	-	_____

இடை வெளிகளை நிரப்புங்கள்

சரியான நேரத்தை கணக்கிட்டு எழுதுங்கள்

கடந்தவார தொடர்ச்சி...

சினிமாவில் வில்லன்களின் ஆளுமை....

தெய்வத் திருமகள் போன்ற படங்களில் கதாநாயகனாக நடித்த அசோகன் தொடர்ந்து கதாநாயகன் வாய்ப்புகள் அற்ற நிலையில் வில்லனாக வியாபிக்க ஆரம்பித்தார். நான், மூன்றெழுத்து, பட்டிக்காட்டு ராஜா போன்ற படங்களில் நகைச்சுவையுடன் கூடிய வில்லன் வேடத்தில் நடித்து அசத்தியிருப்பார் அசோகன். இவர் வில்லன் வேடத்தில் மக்கள் திலகம் எம்ஜியாருடன் இணைந்து நடித்த படங்கள் தான் அதிகம். தாயைக் காத்த தனயன், தாய் சொல்லைத் தட்டாதே, காஞ்சித் தலைவன், பெரிய இடத்துப்பெண்,தொழிலாளி,

அன்பே வா, ரகசிய பொலிஸ் 115, ஒளி விளக்கு, அடிமைப்பெண், நம் நாடு ,தேடிவந்த மாப்பிள்ளை, குமரிக்கோட்டம்,ரிக்ஷாக்காரன்,

நீரும் நெருப்பும், உலகம் சுற்றும் வாலிபன் போன்ற படங்கள் முக்கிய இடம் கொண்டவை.

சிவாஜி கணேசனுடன் நடித்த படங்களில் படிக்காத மேதை, கப்பலோட்டிய தமிழன்,கர்ணன்,முரடன் முத்து,கந்தன் கருணை, இரு மலர்கள், உயர்ந்த மனிதன் போன்ற படங்கள் பிரதானமாவை.

இவற்றில் கப்பலோட்டிய தமிழனில்

"ஹேஷ் துரை" என்ற வெள்ளையன் வேடமும்,

கந்தன் கருணையில் சூரபத்மன் வேடமும்,உயர்ந்த மனிதனில் டொக்டர் வேடமும் அசோகனுக்கு நல்ல வரவேற்பளித்தது. பின்னாளில் சிவகுமார், ஜெய்சங்கர் ரஜினிகாந்த்,கமலஹாசன் படங்களில் நகைச்சுவை கலந்த வில்லத்தமான வேடங்களில் நடித்தார். ஜெய்சங்கருடன் வண்டிக்காரன் மகன், வரவேற்பு, எங்க பாட்டன் சொத்து, காலம் பதில் சொல்லும், வைரம், ஜக்கம்மா, ரத்தத்தின் ரத்தமே, மேளதாளங்கள் உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். அலாவுதீனும் அற்புத விளக்கும் படத்தில் "அமீன்" என்ற பூதவேடத்தில் "ஆலம்பனா நான் உங்கள் அடிமை"எனக்கூறிக் கொண்டு அசோகன் தோன்றும் காட்சிகள் பிரமாதம்.இவரின் குரலில் தொணியும்,வசனங்களை உச்சரிக்கும் வித்யாசமான பாணியும் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றன.

08.ஆர்.எஸ்.மனோகர்..

"ராஜாம்பாள்"என்ற திரைப்படத்தில் அறிமுகமானார் மனோகர். சினிமா மட்டுமன்றி நாடகங்கள் என இரட்டைக் குதிரைகளில் சவாரி செய்து கலைத்துறையில் பல சாதனைகளை ஆற்றியவர் இவர். இவரின் கூரிய பார்வை கொண்ட அகண்ட விழிகளும், கம்பீரம் கொண்ட குரல் வளமும்,ஆஜானுபாகுவான தோற்றமும்,வசனங்களை தெளிவாக சிம்மக்குரலில் உச்சரிக்கும் பாணியும் இவரின் வெற்றிக்கு கட்டியம் கூறின.வண்ணக்கிளி,

கைதி கண்ணாயிரம், வல்லவன் ஒருவன், எதிரிகள் ஜாக்கிரதை,

நான், வல்லவனுக்கு வல்லவன், இரு வல்லவர்கள், ஆயிரத்தில் ஒருவன், அடிமைப்பெண் பெண், உலகம் சுற்றும் வாலிபன், இதயக்கனி, பல்லாண்டு வாழ்க,சொர்க்கம், என்னைப் போல் ஒருவன், எங்கள் தங்க ராஜா,தங்கப்பதக்கம், ராஜா, தங்கச்சுரங்கம், அகத்தியர், ராஜ ராஜ சோழன், ராஜரிஷி, கிருஷ்ண லீலை போன்ற படங்கள் இவருக்கு நற்சான்றிதழ் அளித்தன.

"நாடகக் காவலர்"என்ற பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது. இவரின் இலங்கேஸ்வரன், சிசுபாலன், சுக்ராச்சாரியார், திருநாவுக்கரசர், சூரபத்மன், சாணக்கிய சபதம், இந்திரஜித் போன்ற நாடகங்கள் பல மேடைகள் கண்டன.

09.எஸ்.வி.ராம்தாஸ்...

கொஞ்சும் சலங்கை, வீரத்திருமகன்,

ஆயிரத்தில் ஒருவன், கர்ணன், புன்னகை,

ராஜபார்ட் ரங்கதுரை, ரிக்ஷாக்காரன், நம் நாடு, நாளை நமதே,என்னைப் போல் ஒருவன், படகோட்டி, வசந்தமாளிகை,கந்தன் கருணை போன்ற படங்களில் வில்லனாக தோன்றி நடித்தவர் ராம்தாஸ். வீரத்திருமகன், கர்ணன், புன்னகை போன்ற படங்கள் ராம்தாஸுக்கு நற்சான்றிதழ் அளித்த படங்களாகும்..

10.கவர்ச்சி வில்லன் கண்ணன்..

இவர் கண்கள் இயற்கையாகவே பயங்கரமாக அமைந்திருக்கும். இதுவே இவர் வில்லனாக பரிமளிக்க வாய்ப்பாக அமைந்தது. இவர் பெரும் பாலும் எம்ஜியார் படங்களில் வில்லனாக நடித்துள்ளார்.

மதுரைவீரன், காவல்காரன்,

நாளை நமதே,உழைக்கும் கரங்கள், ஊருக்கு உழைப்பவன், பல்லாண்டு வாழ்க, மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் போன்ற படங்களிலும்,சிவாஜியுடன் அருணோதயம்,இமயம் போன்ற சில படங்களில் நடித்தார். ஸ்ரீ காஞ்சி காமாட்சி, தசாவதாரம் போன்ற படங்கள் இவருக்கு நல்ல வரவேற்பளித்தன.

11.ஓ.ஏ.கே.தேவர்...

சிவாஜி கணேசன் பாராட்டிய கம்பீரம் மிக்க கலைஞர் ஓ.ஏ.கே. தேவர்.மாமன் மகள் படத்தில் அறிமுகமானார். தெளிவான சிம்மக்குரலில் கம்பீரமாக பேசி நடித்தவர். கர்ணன் படத்தில் கனகன் வேடத்தில் சிவாஜி கணேசனுடன் பேசும் வசனங்கள் அனல் பறக்கும். அகத்தியர் படத்தில் விந்தியனாக சிறு கட்டத்தில் தோன்றினாலும் தேவரின் நடிப்பு பலே. சாது மிரண்டால் படத்தில் இவரது வில்லத்தமான நடிப்பு பிரமாதம். பிணமாக காரில் கிடக்கும் நடிப்பு இப்படத்தில் சிறப்பு கொண்டது. ஆதிபராசக்தி படத்தில் "சும்பன்" என்ற அசுரன் வேடம் இவருக்கு நற்சான்றிதழ் வழங்கியது. பூம்புகாரில் பாண்டிய மன்னன் வேடம்,வீரபாண்டிய கட்டபொம்மனில் ஊமைத்துரை பாத்திரம், திருவிளையாடலில் தட்சன் வேடம், மதுரை வீரனில் திருமலை நாயக்கர் வேடம், பாக்தாத் பேரழகியில் காட்டு வாசித் தலைவன் வேடம்,மகாதேவியில் வேதநாயகம் வேடம்,தங்கச்சுரங்கத்தில் மிஸ்டர் போல் கனகசபை வேடம்,நான் ஆணையிட்டால் கொள்ளையர் கூட்டத் தலைவன் வேடம் போன்ற பாத்திரங்களில் தனது உன்னத நடிப்பை பதித்து பாராட்டு பெற்றவர் ஓ.ஏ.கே.தேவர் அவர்கள்.

இடைக்காலங்களில்...

12.பிரகாஷ்ராஜ்..

கே.பாலச்சந்தரின் "டூயட்"படத்தில் அறிமுகமானார். தனது வித்யாசமான நடிப்பால் குறுகிய காலத்தில் ரசிகர்களின் மனதில் இடம்பெற்றவர்.தன் உருட்டும் விழிகளினாலே நடிப்பின் உச்சம் தொட்டவர்.

கல்கி,கில்லி,ராசி,பீமா,எம்.குமரன் சன் ஓஃப் மகாலட்சுமி,வில்லு, ஆசை,வானம்,சிவகாசி,

ஐயா,போக்கிரி,அப்பு,தயா,ஆதி போன்ற படங்களில் பிரகாஷ்ராஜின் நடிப்பு அட்டகாசம்.

13.ரகுவரன்...

ஏழாவது மனிதன் படத்தில் அறிமுகமானார்.

ஒரு ஓடை நதியாகிறது, மைக்கேல் ராஜ்,கூட்டுப் புழுக்கள், கைநாட்டு படங்களில் கதாநாயகனாக நடித்தவர். பின்னர் எதிர்மறை வேடங்களில் நடித்து ரசிகர்களை பெரிதும் கவர்ந்தார். பாட்ஷாவில் மார்க் எண்டனி, முத்துவில் திவான், அமர்க்களம் துளசிதாஸ், ஆஞ்சலி சேகர், தொட்டா சினுங்கி கோபால், புரியாத புதிர் சைக்கோ, காதலனால் மல்லி, ரட்சகனில் ஈஷ்வர், முதல்வனில் அரங்க நாயகம் வேடங்களில் பின்னியெடுத்தவர் ரகுவரன் இவரின் இடத்தை நிரப்ப இன்னும் எந்த கலைஞனாலும் முடியவில்லை. உடல்மொழி நடிப்பாலும்,தனது உருக்கிய பார்வையாலும் அதிக வசனங்களின்றி படத்தின் போக்கையே திசை திருப்பும் ஆற்றல் கொண்ட வீரியம் மிக்க கலைஞர் ரகுவரனாவார். இவரின் வில்லத்தமான நடிப்பை சிவாஜி கணேசன் வெகுவாகப் பாராட்டினார்.

14.மன்சூர் அலிகான்..

கெப்டன் பிரபாகரன் படத்தில் அறிமுகமானார்.

இவரது முக அமைப்பு நிஜத்திலே வில்லத்தனமானது.குறுகிய காலத்தில் பல படங்களில் நடித்து நல்ல வரவேற்பு கொண்ட நடிகர். முதல் படத்திலேயே அதிரடியாக கலக்கியவர். நிஜவாழ்விலும் அச்சமின்றி சர்ச்சையான கருத்துக்களை நடிகவேள் எம்.ஆர்.ராதாவைப் போல் தைரியமாக கூறக்கூடியவர். கெப்டன் பிரபாகரன், மக்களாட்சி, செம்பருத்தி, நாளைய தீர்ப்பு,தேவா, மாண்புமிகு மாணவன், மின்சாரக் கண்ணா, சுயம்வரம், ராஜ்ஜியம்,பேரரசு போன்ற படங்கள் இவரின் வில்லத்தமான நடிப்பிற்கு வரவேற்பளித்தவைகள்.

15.எஸ்.ஜே.சூர்யா...

குஷி,வாலி படங்களை இயக்கி குறுகிய காலத்தில் ரசிகர்களின் மனதில் இடம் பிடித்த கலைஞர். ஒவ்வொரு படத்தையும் வித்தியாசமான கோணத்தில் சித்தரிப்பதில் கைதேர்ந்தவர். பின் கதாநாயகனாக களம் கண்ட நியூ,கள்வனின் காதலி,வியாபாரி,

அன்பே ஆருயிரே, நியூட்டனின் 3ஆம் விதி, நெஞ்சம் மறப்பதில்லை, திரு மகன், மான்ஸ்டர், இசை போன்ற படங்களில் கதாநாயகனாக நடித்தவர் எஸ்.ஜே.சூர்யா. "ஸ்பைடர்"படத்தின் வெற்றிக்கு ஸ்பைடராக இருந்தவரும் இவரே. நீண்ட தலை முடியால் ஒரு கண்ணை மறைத்து மறு கண்ணால் பார்க்கும் பார்வையுடன் நடித்த நடிப்பு அபாரம். எந்த படத்திலும் பார்க்க முடியாத ஓர் சைக்கோ பாத்திரம் "ஸ்பைடரி"ல் இவரின் நடிப்பின் மூலம் காண முடிந்தது. இறந்தவர்களைப் பார்த்து மற்றவர்கள் அழும் போது அவர்களைப் பார்த்து நையாண்டியாக இவர் சிரிக்கும் காட்சிகள் படு ஜோர். விஜயின் "மெர்சல்" படத்தின் வெற்றியில் இவருக்கும் சம பங்குண்டு.சமீபத்தில் வெளியான "மாநாடு"படத்தில் இவர் ஏற்ற "தனுஷ்கோடி "பாத்திரம் இப்படத்தில் கதாநாயகனாக நடித்த சிம்புவை ஓரங்கட்டியது. சமீபத்தில் ஒரு வில்லனின் நடிப்பிற்காகவே ஒரு படம் வெற்றி பெற்றுள்ளதென்றால் அது கண்டிப்பாக "மாநாடு "படத்தில் எஸ். ஜே.சூர்யாவின் நடிப்பிற்கானதாகும்.

சிம்பு பாத்திரத்தில் வேறெந்த நடிகரும் நடிக்கலாம். மாநாடு படத்தில் தனுஷ்கோடி பாத்திரத்தை எஸ். ஜே.சூர்யாவைத் தவிர வேறு யாராலும் செய்திருக்க முடியாது என்பது உண்மை நிலை. "நா எதுக்குடா திரும்பத்திரும்ப எந்திரிக்கனும்"எனக் கூறி நடிக்கும் கட்டம் அருமை. இந்திய சினிமாவில் எஸ். ஜே.சூர்யாவிற்கு நல்லதோர் எதிர்காலம் கண்டிப்பாக உண்டு.

ஆக்கம்:எஸ்.கணேசன்
ஆச்சாரி சதீஷ் கம்பளை

அம்னா பாரிஸ்
வெலிகம

மொஹமட் ரொசான் அக்தர் –
ஜெஸ்னாதுல் இஷ்மாவின் புதல்வன்
அப்துல் ரஹீம் நேற்று இரண்டாவது
பிறந்த நாள். ரிஸ்மி ரவுப் எவனியூ,
பன்னில, பேருவளை

சருமத்தில் ஈரப்பதத்தை தக்க வைக்க சில வழிமுறைகள்

சரும வறட்சி பிரச்சினையால் நிறைய பேர் அவதிக்குள்ளாவார்கள். சிலரோ எண்ணெய் பசை தன்மை கொண்ட சருமத்தால் சிரமப்படுவார்கள். பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப உடலில் நீர்ச்சத்தை தக்கவைத்துக்கொள்ளாததே அதற்கு காரணமாகும். சருமம் எப்போதும்போல் பொலிவுடன் காட்சியளிப்பதற்கு செய்ய வேண்டிய வழிமுறைகள்:

வறண்ட சரும பிரச்சினை கொண்டவர்கள் சருமத்தில் ஈரப்பதத்தை தக்க வைத்துக்கொள்வது அவசியம். அதற்கு மாய்ச்சுரேஸர்களை பயன்படுத்தலாம். அப்படி பயன்படுத்தியும் சருமத்தில் மாற்றம் ஏற்படவில்லை என்றால் உடலில் நீர்ச்சத்தை அதிகரிக்க வேண்டியது அவசியம். போதுமான அளவு தண்ணீர் பருகி வர வேண்டும். அது சரும ஆரோக்கியத்திற்கு அவசியம். பகல் வேளையில் சருமம் எண்ணெய் பசை தன்மையோ, ஈரப்பதமான தன்மையோ கொண்டிருந்தால் மாய்ச்சுரேஸர் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

குறைந்த ஈரப்பதம் காரணமாக சருமம் வறண்டு பொலிவின்றி காணப்படும். ஈரப்பதத்தை தக்கவைப்பதற்கு ஏற்ற கிரீம்களை பயன்படுத்தலாம். எண்ணெய்யை பயன்படுத்துவதும் சருமத்திற்கு நல்லது. சருமத்திற்கு நறுமணம் சேர்க்கும் எண்ணெய் வகைகளை உபயோகப்படுத்தலாம். முதலில் சருமத்திற்கு உகந்த தேங்காய் எண்ணெய், ஆலிவ் போன்றவைகளை தடவிவிட்டு அதன்பிறகு நறுமண எண்ணெய்யை பயன்படுத்தலாம்.

வெயிலின் தாக்கம் குறைய தொடங்கியதுமே நிறைய பேர் சன்ஸ்கிரீனை தவிர்த்துவிடுகிறார்கள். கோடை காலங்களில் மட்டும்தான் சன்ஸ்கிரீனை உபயோகப்படுத்த வேண்டும் என்றில்லை. சருமத்தின் ஆரோக்கியம் காக்க எல்லா பருவ காலத்திலும் போதுமான அளவு சன்ஸ்கிரீனை உபயோகித்து வர வேண்டும்.

பருவ காலத்தில் உணவு விஷயத்திலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஆன்டி ஆக்சிடெண்டுகள் நிறைந்த சத்தான உணவுகளை அதிகம் சாப்பிட வேண்டும். அவை சருமம் பாதிப்புக்குள்ளாமல் காக்க உதவும். சருமத்திற்கு இயற்கையான பளபளப்பையும் ஏற்படுத்திக்கொடுக்கும். மழைக் காலத்தில் பழங்களையும் அதிகம் சாப்பிட வேண்டும். அவை சருமத்திற்கு தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்கும்.

சாமை அரிசியில் ரிப்பன் பக்கோடா

தேவையான பொருட்கள்

சாமை 2 கப் (வறுத்தது)
பொட்டுக்கடலை 2/3 கப் (வறுத்தது)
கடலை மாவு 1 தேக்கரண்டி
அரிசி மாவு 2 தேக்கரண்டி
உப்பு சிறிதளவு
பெருங்காயத்தூள் சிறிதளவு
மிளகாய்த்தூள் 2 தேக்கரண்டி
பூண்டு 6 பல்,
எள் சிறிதளவு
எண்ணெய் பொறிக்கத் தேவையான அளவு
வெண்ணெய் (காய்ச்சியது) கப்

செய்முறை

பூண்டை அரைத்து கொள்ளவும்.

பொன்னிறமாக வறுத்த சாமை மற்றும் பொட்டுக்கடலையை நன்றாக அரைத்து சலித்தெடுத்து அத்துடன் கடலை மாவு, அரிசி மாவு, உப்பு, பெருங்காயத்தூள், மிளகாய்த்தூள், அரைத்த பூண்டு, எள் ஆகியவற்றைச் சேர்த்து கலந்து கொள்ளவும்.

பின் அதில் காய்ச்சிய வெண்ணெயை ஊற்றி மாவை நன்கு கலந்து அத்துடன் தண்ணீரைச் சிறிது சிறிதாகத் தெளித்து சரியான பதத்திற்குப் பிசைந்து கொள்ள வேண்டும்.

வாணலியில் எண்ணெய் ஊற்றி சூடனாதும் அடுப்பை மிதமான தீயில் வைத்து மாவை முறுக்கு அச்சில் போட்டு ரிப்பன் பக்கோடாவாக பிழிந்து பொரித்தெடுக்க வேண்டும்.

கடைசி வரை அடுப்பை மிதமான சூட்டிலேயே வைத்திருக்க வேண்டும்.

பொரித்த ரிப்பன் பக்கோடா சூடு ஆறியதும் காற்றுப் புகாத டப்பாவில் வைத்து ஒரு மாதம் வரை சாப்பிடலாம்.

பூண்டு சேர்ப்பது மணமாக இருப்பதோடு வாயுத் தொல்லை ஏற்படுவதையும் தடுக்கும்.

சூப்பரான சாமை ரிப்பன் பக்கோடா ரெடி.

அவர் நட்ட மரங்களே அவரை நினைவு கூரும்

தமிழ் திரைப்படத்துறையில் சின்ன கலைவாணர் என அழைக்கப்படுபவர் விவேக். இவர் தமிழ் சினிமா உலகில் ஒரு புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர் ஆவார். இவரது நகைச்சுவைகள் வெறுமனே சிரிப்பதற்கு மட்டுமல்லாது சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும் கொண்டவை. அவர் எதிர்கால தலைமுறையினருக்கான விடயங்களை தமது சாமர்த்திய குணத்தோடு, நகைச்சுவையை கலந்து வெளிப்படுத்திய உன்னதமான கலைஞர் ஆவார். தமிழ் சினிமாவில் மட்டுமல்லாது திரைப்படத் துறையிலே நகைச்சுவை வாயிலாக சமூகத்திற்கான நல்ல கருத்துக்களைச் சொல்வதில் இவரை மிஞ்ச யாரும் இல்லை.

இவர், தான் நடித்த படங்களான ரன், சிவாஜி, அந்நியன், சாமி போன்ற பல திரைப்படங்கள் மூலம் சமூகத்திற்குத் தேவையாக இருக்கும் விடயங்களை யதார்த்தமான முறையில் மக்களுக்குக் கொண்டு போய் சேர்த்தார். சாதி குறைவானவர்களுக்கும் சமூகத்தில் சம வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற விடயத்தை சாமி படத்தின் மூலம் அழகாக வெளிக்காட்டி இருப்பார். அதுமாத்திரமன்றி லஞ்சம், மக்கள் தொகை பெருக்கம், சாதி, மூட நம்பிக்கை, அரசியல் ஊழல், நீர் பற்றாக்குறை போன்ற விடயங்களையும் தமது நகைச்சுவையின் கருப்பொருளாகக் கொண்டு பார்வையாளர்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தவர் இவரே.

திரைப்படத்துறையில் இவர் ஆற்றிய பங்களிப்புக்காகவே இந்திய அரசு இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்தது. இவர் சமூக நலனை குறிக்கோளாகக் கொண்டவர் ஆவார். இதனை எடுத்தியம்பும் விதமாகவே இவர் பல விடயங்களை சமூகத்திற்காகவும் தன் சக கலைஞர்களுக்காகவும் வாழும் காலம் முழுவதும் ஆற்றினார்.

நடிகர் விவேக் 2010 ல் முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் ஏபிஜே அப்துல் கலாம் அவர்களின் வழிகாட்டுதலுடன் "கிரீன் கலாம்" என்ற திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளை நட்டு வளர்க்க ஆரம்பித்தார். 2012ஆம் ஆண்டு புவி வெப்பமடைதலுக்கு எதிராக " பசுமை பூமி " என்ற திட்டத்தை முன்னெடுத்தார்.

2010இல் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து, மரக்கன்றுகளை தமிழ்நாடு முழுவதும் நாட்டுவதற்கு முன் வந்தார். இதன்போது அவர் கூறியதாவது

"நாட்டில் தண்ணீர் வேண்டுமானால் மழை வேண்டும். மழை வேண்டுமானால், மரங்கள் இருக்க வேண்டும்"

> **"சாதி குறைவானவர்களுக்கும் சமூகத்தில் சம வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற விடயத்தை சாமி படத்தின் மூலம் அழகாக வெளிக்காட்டி இருப்பார். அதுமாத்திரமன்றி லஞ்சம், மக்கள் தொகை பெருக்கம், சாதி, மூட நம்பிக்கை, அரசியல் ஊழல், நீர் பற்றாக்குறை போன்ற விடயங்களையும் தமது நகைச்சுவையின் கருப்பொருளாகக் கொண்டு பார்வையாளர்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தவர் இவரே."**

என்று கூறிய அவர் , தனது பேச்சை செயல்களிலும் காட்ட ஆரம்பித்தார்.

எண்ணற்ற தனிமனிதர்கள், தன்னார்வ அமைப்புகள், பள்ளிகள், கல்லூரிகள் ஒருங்கிணைந்து மரம் நடும் பணிகளில் ஈடுபட காரணமாகவிருந்தவர் இவரே. தமிழ்நாட்டில் இவ்வாறு வளர்த்த மரங்கள் மட்டும் முப்பத்து மூன்று லட்சத்து 23 ஆயிரம் ஆகும்.

இவர் சூழலை பாதுகாக்க வேண்டும் எனவும் பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்க்க வேண்டும் எனவும் தமது கருத்துக்களை பல இடங்களில் முன்வைத்தார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, புவி வெப்பமடைதல் போன்ற விடயங்கள் தொடர்பில் தன்னுடைய ட்விட்டர் பக்கத்தில் பல பதிவுகளை பதிவிட்டு வந்தார். "பசுமை விகடன்" பற்றியும் தன்னுடைய சமூக வலைத்தளத்தில் அதிக அளவில் பகிர்ந்து வந்தார்.

அது மட்டுமன்றி உலக வனநாள் தினம், சுற்றுச்சூழல் தினம் என எந்தநாள் வந்தாலும், அன்று மரம் வளர்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று ஏதாவது ஒரு சமூக நல விடயத்தை செய்து வருவார். சிறுதானியங்கள் சாப்பிடுதல், அதிகமான தொலைபேசி பாவனை கூடாது போன்ற உடல், உள ரீதியான பாதுகாப்பு விடயங்கள் பற்றியும் சமூகத்திற்கு கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மரம் நடுதல் மட்டுமன்றி விவசாயத்திலும் அதிக ஈடுபாடு செலுத்தி விவசாயத்தில் ஈடுபடுபவர்களுக்கு உதவிகளை செய்து வந்தார். இவருடைய நட்பு வட்டாரத்தில் இவருக்கு விவசாயம் செய்வதிலும் ஆர்வம் இருந்து வந்ததாக தெரிய வந்தது.

ஒரு கோடி மரங்களை நாடு முழுவதும் நட வேண்டும் என்ற குறிக்கோளை தொடுவதற்குள்ளே இயற்கை விவேக்கை அழைத்து விட்டது. சின்னக் கலைவாணர் விட்டுச் சென்ற பசுமை கலாம் என்ற திட்டத்தோடு செல்முருகன், தயாரிப்பாளர் லாரன்ஸ், ரு அசோக், நடிகர் ஹரீஷ் கல்யாண் மற்றும் தன்னார்வ அமைப்புக்கள், பள்ளி மாணவர்கள் , கல்லூரி மாணவர்கள் அந்தப் பணியினை செயல்படுத்திக் கொண்டு வருகின்றனர். இது வரவேற்கத்தக்க விடயமாகும்.

"இடம் இருந்தால் கூறுங்கள், அங்கேயும் மரம் நடலாம்". சின்னக் கலைவாணர் விவேக்

ரமேஷ் ரெஜீனா
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கவிஞர் மு.மேத்தாவை கௌரவிக்கும் நிகழ்வு 1998 ஆம் ஆண்டு பம்பலப்பிட்டிய சாந்திவிகாரில் நடைபெற்றது. தென்கிழக்கு கலாசார அலகு ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மு.கா ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப், முத்துமீரான், அன்புடீன் ஆகியோருடன் பொன்விழா நாயகன் பாலமுனை பாரூக்கும் காணப்படுகிறார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.